
# இளம் நெஞ்சே வா!



லட்சுமி பிரபா

CPL

1347/8

# "இளம் நெஞ்சே வா..."

CONNEMARA PUBLIC LIBRARY
20 FEB 2009
CHENNAI-600 008

லட்சுமி பிரபா

ஜீயே பப்ளிகேஷன்ஸ்
352, திருவல்லிக்கேணி நெஞ்சாலை,
சென்னை - 600 005.

1347/09
8
668383
894.8113
LAK

விலை: ரூ. 125.00

"இளம் நெஞ்சே வா" ♦ ஆசிரியர்: லட்சுமி பிரபா ♦ முதற் பதிப்பு: டிசம்பர் - 2008 ♦ மொத்த பக்கங்கள்: 192 ♦ வெளியீடு: ஜீயே பப்ளிகேஷன், 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 600 005. தொலைபேசி: 28544294, தொலை நகல்: 91-44-28410786 ♦அச்சுக்கோப்பு, அச்சாக்கம்: பத்மா என்டர்பிரைசஸ், 99,ஜீ.பி ரோடு, சென்னை - 600 002.

**ஜீயே பப்ளிகேஷன்ஸ் வெளியீடு**

Price: Rs. **125.00**

Ilam Nenjey vaa ♦ Author: Lakshmi Prabha ♦Language: Tamil ♦First edition: December 2008 ♦ Pages: 192 ♦Published by Geeye Publications, 352, Triplicane High Road, Chennai - 600 005. Phone: 28544294. Fax: 91-44-28410786 ♦Typesetting, Wrapper Printing: Padhma Enterprises, 99, G.P. Road, Chennai - 600 002.



CONNEMARA PUBLIC LIBRARY
20 FEB 2009
CHENNAI-600 008

## பதிப்புரை

எழுத்தாளர் லட்சுமி பிரபா - வளர்ந்து வரும் புதிய எழுத்தாளர். தனது ஒவ்வொரு படைப்புகளும் ஒன்றைவிட ஒன்று சிறப்பாக இருக்க வேண்டும் என தனக்குத் தானே போட்டியாக எழுதி அதில் வெற்றியும் பெற்று வருகிறார். 'தினத்தந்தி'யில் 'இளம் நெஞ்சே வா' தொடராக வந்த போது வாசகர்களின் மத்தியில் இதன் கதாசிரியர் 'யமுனா' பிரபலமானவள். அவளுக்கு என்று ஒரு ரசிகர் கூட்டமே உருவாகி விட்டது. இதைப் போன்ற சிறந்த படைப்புகளை எழுத்தாளர் 'லட்சுமி பிரபா'விடம் எதிர்பார்க்கலாம்.

அன்புடன்,

**ஜி.அசோகன்.**

CONNEMARA PUBLIC LIBRARY
20 FEB 2000
CHENNAI-600 008

# "இளம் நெஞ்சே வா..."

## 1

**வா**னம் மேகமெனும் தூரிகை கொண்டு மழையெனும் ஓவியத்தை பூமியின் மீது அழகாக வரைய ஆரம்பித்தது. மரம் செடி கொடிகளும், மலர்களும்.... அந்த ஓவியத்திற்கு வித விதமாய் வண்ணம் சேர்த்து பொலிவூட்டின.

பிரபலமான என்ஜினீயரிங் கல்லூரி வாசலருகே..... தடதடத்து வந்த அந்த ஸ்கூட்டர் ஒரு கணம் தயங்கி தன் மூச்சை நிறுத்தியது.

அப்பா நடேசனின் பின்னால் அமர்ந்திருந்த யமுனா..... பதினெட்டு வயது பருவச்சிட்டு..... மெல்ல இறங்கி படி தனது பார்வையால் கல்லூரி வளாகத்தை வருடிக் கொடுத்தாள்.

மழையின் வேகம் குறைத்து வானம் இலேசாய் பூத்தூவிக் கொண்டிருந்தது. நீல வண்ணச் சுடிதாரை முழுவதுமாக மறைந்திருந்த ரெயின் கோட்டை கழட்ட யத்தனித்த யமுனாவை.... அப்பாவின் குரல் பதற்றமாய் தடை செய்தது.

" யமுனா! கோட்டை கழட்டாதே... இன்னும் மழை நிக்கலை பாரு....கிளாசுக்குள்ளே போயி கழட்டிக்கோ.... பத்து நாளா டைபாயிட் காய்ச்சல்லே படுத்துட்டு இன்னிக்குத் தான்

முத முதல்லா காலேஜிக்கே வந்தே... பாத்து.... பத்திரமா இரும்மா "

" சரிப்பா... சாயந்திரம் நான் பஸ் புடிச்சு வீட்டுக்கு வந்துடறேன்.இங்கிருந்து மூனே ஸ்டாப் தானப்பா? நீங்க எனக்காக வந்து சிரமக் படாதீங்கப்பா.... ப்ளீஸ்"

" சரி.... சரி யமுனா..... செலவுக்கு காசு வச்சிருக்கே இல்லை? பஸ் வர லேட்டாச்சுன்னா.... ஆட்டோ புடிச்சு வந்திடு என்ன? பாத்து ஜாக்கிரதை வரட்டா? "

யமுனாவின் அழகிய இதழ்களில் ஒரு குட்டி முறுவல் பூத்தது. " வெற்றிகரமா அரை சதம் அடிச்சுட்டீங்கப்பா " புன்னகைத்த மகளை நெற்றி சுருங்க ஏறிட்டார் நடேசன்.

"என்னப்பா புரியலையா? கார்த்தால எழுந்ததிலேர்ந்து..... பார்த்து பத்திரம்..... ஜாக்கிரதை...... பஸ்சுக்காக வெயிட் பண்ணாம ஆட்டோவுல நேரத்தோட வந்திடுன்னு.... அம்பது தடவை சொல்ட்டீங்களே "

நான் என்ன சின்னக் குழந்தையா? பதட்டப் படாம போயிட்டு வாங்கப்பா...... வர வர வீட்டுலே இருக்கிற தாத்தா மாதிரியே புலம்ப ஆரம்பிச்சுட்டீங்க..... தங்கச்சியும் தம்பியும் வர்றதுக்குள்ளே..... நான் வீட்டுலே இருப்பேன் போதும்மா?

" சரிடா.... வயசுக்கு மீறின பொறுப்புணர்ச்சியோட நீ இருக்கிறதை பார்த்துட்டு எத்தையோ வாட்டி நா பெருமிதப் பட்டிருக்கேன் யமுனா.... ஆனாலும் பெத்த மனசு பரிதவிச்சுப் போகுது. அதான்..."

உணர்ச்சி வசத்தில் நடேசனின் குரலுடைந்து பிசிறு தட்ட— இலேசாய் தலையாட்டி ஸ்கூட்டரை உயிர்ப்பித்து அரை மனதாய் விருட்டென்று கிளம்பினார்.

குடும்பத்திற்காக தன்னை மெழுகாய் உருக்கிக் கொண்ட உத்தமர் அவர். தன்னலமற்ற தந்தைக்கு மகளாய் பிறக்க தான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்





என்ற எண்ணம்....... வழக்கம் போல் யமுனாவுக்குள் இன்றும் தலை தூக்கியது.

தூரத்தில் அவரது உருவம் ஒரு புள்ளியாய் மறையும் வரை.... அவர் சென்ற திக்கையே வெறித்துக் கொண்டு நின்றாள். கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்து இமைக்கரைகளைத் தாண்டி வழிந்து செல்லட்டுமா? என்று வினவியது.

" ஹாய் யமுனா! என்னடி இங்கேயே நின்னுட்டே ? ." தோழி சஹானாவின் இனிய குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது.

சட்டென்று திரும்பிப் பார்த்தாள் யமுனா. நாலைந்து மாணவிகள் புடை சூழ வாத நாராயண மரத்தடியில் புன்னகைத்தபடி நின்றிருந்தாள் சஹானா. நாலைந்து கார்களில் மாறி மாறி வலம் வரும் பணக்கார யுவதி.

கலகலப்பிற்கும் மறுபெயர் உண்டென்றால்..... அது சஹானாவாகத் தான் இருக்கும். இருவரும் ஆறாம் வகுப்பிருந்து ஒன்றாய் சேர்ந்து படித்து வந்த இணைபிரியாத் தோழிகள்.

குணாதியத்தைப் பொறுத்தவரையில் இருவரும் வெவ்வேறு துருவங்கள் தான் என்றாலும்....... நட்பு என்ற நேச வலைக்குள் சிக்கி இருவருமே கட்டுண்டு கிடந்தனர் என்பது நிஜம்.

சஹானா அசரவைக்கும் அழகுக்கு சொந்தக்காரி. கவர்ச்சி ததும்பும் கட்டுடலுடன் காண்போரை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைப்பாள்.

சஹானாவைப் போன்று யமுனாவிடம் கவர்ச்சி இல்லை..... கண்ணியம் இருந்துது. அசர வைக்கும் அழகுக்கு பதிலாக..... அமைதியான மனதிற்கு இதம் தரும் அழகு இருந்தது.

அவள் சலசலத்து ஒடும் காட்டருவி என்றால்..... இவள் தெளிந்த சலனமற்ற ஜீவ நதியாக இருந்தாள்.

தோழியைக் கண்டதும் யமுனாவின் முகத்தில் முன்பிருந்த இறுக்கம் தளர்ந்து முறுவல் முளைத்தது. மரத்தடியை நோக்கி நடந்தாள்.

∴பிரண்ட்ஸ்! இவ யமுனா...... நாங்க ரெண்டு பேரும் நகமும் சதையுமாஇருப்பபோம். படிப்புல இவளை யாரும் அடிச்சுக்கவே முடியாது. ஸ்கூல்ல மட்டுமில்ல..... மாவட்ட அளவில முதலாவதா வந்தவ...... இனி நம்ம கல்லூரி பேராசிரியர்கள் எல்லோருக்கும் இவ " பெட்" ஆயிடுவா

" சஹி....... சும்மா இரேன் " என்ற யமுனா மற்ற மாணவிகளைப் பார்த்து " ஹாய்" என்று சினேகமாய் சிரித்தாள்.

" சஹி....... பத்து நாள்லே தியரி நிறைய நடத்திப் போட்டுட்டாங்களா? நீ நோட்ஸ் எடுத்து வச்சிருக்கேல்ல? " அவளது குரல் ஆர்வமும் அக்கறையும் ததும்பி வழிந்தன.

" காலேஜ் ரீ ஒபன் ஆகி பத்து நாள் தானே ஆகுது. இன்னும் இவ கிளாசுக்கே அடியெடுத்து வைக்கலை. பாத்திங்களா ∴பிரண்ட்ஸ் ? சரியான புத்தகப் புழு இவ...... கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், அமைதி, நேர்மை இதையெல்லாம் மொத்தமா கலந்து பிசைஞ்சு....... பிரம்மன் இவளை உருவாக்கி இருப்பார்னு நா நெனக்கிறேன்.

காதல்ங்கிற வார்த்தையை மட்டும் இவ கிட்ட தப்பித்தவறி உளறிடாதீங்க.ஏதோ கெட்ட வார்த்தையைக் கேட்டுட்ட மாதிரி..... காத தூரம் ஒடிப் போயிடுவா........... "

மற்ற மாணவிகள் " கொல் " என்று சிரித்தும்...... புன்னகை மாறாமல் ரெயின் கோட்டை மெதுவாகக் கழற்றியபடி சஹானாவை ஏறிட்டாள் யமுனா.

" கலாய்ச்சு முடிச்சுட்டியா? வா..... கிளாசுக்குப் போகலாம்". " அதுக்கு முன்னாடி ஒரு அதியத்தைக்





காட்டறேன் பார்த்துட்டு அப்புறமா கிளாசுக்குப் போகலாம் வாங்க ∴பிரண்ட்ஸ்" என்று யமுனாவின் கையைப் பிடித்துக் கொண்டு விடு விடுவென்று நடந்தாள் சஹானா.

கல்லூரி வளாகத்தைச சுற்றிலும் ஏராளமான மரங்கள்..... சோலை போல் நிழல் பரப்பி " பசேல்" என்று குளிர்ச்சியாய் கண்களைக் கட்டி போட்டன.

முப்பது அடி தூரத்தில்...... புன்னை மாத்தடியிருந்த நீளமான சிமெண்ட் பெஞ்சில் கிட்டத்தட்ட பத்து மாணவர்கள் அமர்ந்து பேசிக் கலகலத்துக் கொண்டிருந்தனர்.

சஹானா அவர்களது கண்களில் பட்டது தான் தாமதம்... " சஹா...... னா... சாரல் தூவுதோ.... சஹா.....னா பூக்கள் பூத்ததோ? " என்று ராகத்தோடு ஒருவன் பாடினான்.

யமுனாவிற்கு திக்கென்றிருந்தது. " ஏய் சஹி ! கிளாசுக்குப் போகாம இதென்ன வெட்டி வேலை? வம்பை வீணா விலை கொடுத்து வாங்கற மாதிரி இருக்கு? " அடிக்குரல் அதட்டினாள். சஹானா எதையும் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

"குட்மார்னிங் சீனியர்ஸ்! இவ என்னோட ∴பிரண்ட் யமுனா. படிப்புலே சுட்டி.... எங்க ஸ்கூலுக்கே பெருமை தேடித்தந்தவ....ஆங் யமுனா! இவங்க எம்.. ∴பைனல் இயர் பண்றாங்க..... நம்ம சீனியர்ஸ் எல்லோர்க்கும் ரொம்ப டீசண்ட்... ராகிங் நம்ம காலேஜிலே கிடையாது. இன்டர் காலேஜ் காம்படிசன்லே... பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டு, டான்ஸ் எல்லாத்துலேயும் நம்ம காலேஜ் தான் வின் பண்ணிருக்கு... இதுக்கு யார் காரணம் தெரியுமா? நம்ம காலேஜ் ஸ்டுடண்ட் மிஸ்டர் முரளி... இதோ இவர் தான் " சுட்டு விரலை நீட்டனாள்.

சரேலென்று நிமிர்ந்து பார்த்தான் முரளி. " கிளாட் டு மீட் யூ" மரியாதை நிமித்தமாக வார்த்தைகளை உதிர்த்த யமுனாவின் இதயக் கூட்டிற்குள் புறா சிறகடித்தது.

# 2

"யமுனாவிற்கு உள்ளூர எரிச்சல் மூண்டிக் கொண்டு வந்தது வந்ததும் வராததுமாக இவள் எதற்கு இந்த வாலிபர்களிடம் நம்மை வம்பில் மாட்டி விடுகின்றாள்?" என்ற கேள்வி கொக்கியாய் முளைத்து மனதைப் பிறாண்டியது.

சஹானா முகம் கொள்ளாய் பூரிப்புடன் முரளியை அறிமுகப் படுத்தியதும் வேறு வழியின்றி வணக்கம் தெரிவித்து " கிளாட் டு மீட் யூ " என்று முணுமுணுத்தாள்.

யமுனாவை ஏறிட்டுப் பார்த்து " ஹேப்பி டு மீட் யூ " என்ற முரளி, மறு கணமே கையிலிருந்த ரெக்கார்ட்நோட்டை மும்முரமாகப் புரட்டத் தொடங்கினான்.

யமுனாவிற்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. தணல் மேல் நின்று கொண்டிருப்பதைப் போன்று தர்ம சங்கடமாக இருந்தது.

"வாவ்! இந்த வானவில்லோட மறுபெயர் யமுனாவா? சூப்பர்டா" அந்த கும்பலில் ஒல்லியாய் ஒடிசலாய் இருந்த மாணவன் வயிற்றை எக்கி கமெண்ட் அடித்தான்.

"மழையே..... மழையே.... இளமை முழுதும் நனையும் வரையில் வா___" ரோடு ரோலர் சைஸில் குண்டாய் இருந்தவன் கர்ண கடூரமாய் பாடத் தொடங்கினான்.

"டேய்....... சும்மாயிரு.... நேரம் காலம் தெரியாம பாடிக்கிட்டு? புதுசா காலேஜிக்கு வந்திருக்கிறவங்க நம்மளைப் பத்தி என்ன நினைப்பாங்க? சாரிங்க.... மிஸ் சஹானா! எங்க மேலே இல்லே நல்ல அபிப்பிராயம் வச்சீருக்கீங்க மிக்க நன்றி" முரளியின் குரலில் இடத்தை காலி பண்ணு என்ற தொனி!

"சகல கலா வல்லவர், மாணவர்களின் தலைவர், இந்த





கல்லூரியின் நாயகன், கட்டழகன், எல்லோருக்கும் ஓடி உதவற பரோபகாரி.... இப்படி உங்களுக்குப் பல பட்டங்கள் இருக்கறதா கேள்விப்பட்டேன்.

ஐ அப்ரிஷியேட் யூ மிஸ்டர் முரளி! நான் உங்களுக்குப் புதுசா ஒரு பட்டம் தரலாம்னு இருக்கேன்... ஜீனியர் ஸ்டுடண்ட்ஸ் சார்பா.... ஒரு வாரத்திற்கும் மேலாக உங்களை நோட் பண்ணிக்கிட்டிருந்தேன். கடைசியா இந்த முடிவுக்கு வந்திருக்கேன்"

"ச... சஹி! நான் கிளாசுக்குப் போறேன். நிதானமா நீ பேசிட்டு வா" என்று மெல்ல கழண்டு கொள்ள முற்பட்ட யமுனாவை இழுத்துப் பிடித்தாள் சஹானா.

"ஒரு நிமிடம் நில்லேன் யமுனா" அதட்டி விட்டு மீண்டும் திரும்பினாள். "சீக்கிரமா சொல்லேன் சஹானா" முரளியின் அருகில் அமர்ந்திருந்தவன் ஆலாய்ப் பறந்தான்.

"உங்க ஃபிரண்டுக்கு "முரளி"ங்கிற பேரை விட..... நரசிம்மரவ்னு பேர் வச்சிருந்தா ரொம்ப பொருத்தமா இருக்கும்னு நினைக்கிறேன். ஏன்னா... அவர் முகத்திலே மருந்துக்கக் கூட சிரிப்பை நான் பார்த்ததே இல்ல..... அதான்"

முகத்தைப் பரிதாபமாய் வைத்துக் கொண்டு அவள் பேசிய விதத்தைக் கண்டு "பக்" கென்று சிரித்து விட்டான் முரளி. அவனைத் தொடர்ந்து குபீர் என்று வெடிச் சிரிப்பு கிளம்பியது.

"பாத்தியா யமுனா? உம்மணாம் மூஞ்சி சிங்கத்தை சிரிக்க வைச்சப் பெருமை என்னைத் தான் சேருமாக்கும்" காலரை உயர்த்திக் கொள்ளாத குறையாகப் பெருமைப் பட்டவளைக் கண்டு.... யமுனாவிற்கு கோபம் தலைக்கேறியது.

பொங்கி வந்த ஆத்திரத்தை சிரமப்பட்டு அடக்கியபடி விடுவிடுடென்று நடந்தாள்.

"ஏனம்மா நீ... இதுக்குப் போயி சஹயை கோவிச்சுக்கிட்டியா? கல்மிஷம் இல்லாம ஏதோ விளையாட்டுத்

தனமா பண்ணிட்டா.... ஜா– டைப்... இதையெல்லாம் பெரிசு படுத்தக் கூடாது யமுனா."

சப்பாத்தியைப் பிய்த்து குருமாவில் அதை தோய்த்த படியே பேசினார் நடேசன்.

கூடத்தில்.. தங்கை உமா, தம்பி கிரி, யமுனா ஆகியோர் அரை வட்டமாக அமர்ந்து இரவு உணவுடன் அன்றாட சம்பவங்களை அப்பாவுடனும், தாத்தா சண்முகத்துடனும் பகிர்ந்து கொள்வது வழக்கம்

"என்ன இப்படி செல்–ட்டே? பொண்ணா பொறந்தவளுக்கு அடக்கம் வேணாம்? காலம் கெட்டுப் போச்சு நடேசா... அதான்..... பசங்களை வ–யத் தேடிப் போயி.... பொண்ணுங்க வம்பு பண்ணுதுங்க... இது மாதிரி விஷயமெல்லாம் யமுனாவுக்கு கட்டோட பிடிக்காதுன்னு தெரிஞ்சும் இப்படி அவளை கூட்டிட்டுப் போகலாமா?"

தாத்தா சண்முகத்திற்கு வயது எண்பதுக்கு மே–ருக்கும். ஒரு வாழைப்பழம், ஒரு டம்ளர் பால் என்று இரவு உணவை எளிமையாக முடித்துக் கொண்டு சாய்வு..... நாற்கா–யில் சாய்ந்து விட்டார்.

எப்போதாவது யமுனாவைப் பார்க்க சஹானா வீட்டிற்கு வந்து விட்டால் போதும். கிழவருக்கு பற்றிக் கொண்டு வந்து விடும். சஹானாவின் நவநாகரீக உடையும், பந்தயக் குதிரை போன்ற நடையும் பாவனையும்.... முதியவரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கச் செய்யும்.

"அந்த முரளி ஒரு புத்தகப் புழு.... சின்சியரான ஸ்டுடண்ட்.... உன்னை மாதிரியே இலட்சிய வெறியோட படிக்கிறவர்னு அதான் அறிமுகப் படுத்தினேன். இதுல என்ன தப்பு? அப்படின்னு சஹி ரொம்ப கேஷிவலா கேட்கிறாப்பா... அதுக்கு மேல நான் பேசாம மௌனமா இருந்துட்டேன்."

"அவ சகவாசமே வேணாம்னு ஒதுங்கிடு யமுனா. மனசுங்கிறது சண்டிக் குதிரை மாதிரி. தறி கெட்டுத் தாவப்





பார்க்கும். கடிவாளம் போட்டு அதை இழுத்துக் கட்டுக்குள்ளே வச்சுக்கனும். அப்பத்தான் நாம்ப வாழ்க்கையில ஜெயிக்க முடியும். பொண்ணுங்க மனசை இரும்பு மாதிரி வச்சுக்கனும் சரியாடா.

"சரிங்க தாத்தா"

"என்னப்பா இது? குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லைன்னு சொல்வாங்க. இத்தனை வருஷமா சேர்ந்து படிச்சிட்டு ஒதுங்கினா.... சஹி சங்கடப் படுவா.... யமுனா புத்திசா– நல்லது கெட்டது என்னன்னு இனம் பிரிச்சுக் பார்க்கத் தெரிஞ்சவ.... சூழ் நிலைக்குத் தகந்தபடி இணக்கமா நடந்துக்கட்டும். யாரையும் பகைச்சுக்க வேணாம்"

நிதானமாய் பேசிய அப்பா நடேசனை கண் கொட்டாமல் பார்த்தாள் யமுனா. அப்பாவுக்கு தங்கமான மனசு, யாரையும் பகைத்துக் கொள்ளவே மாட்டார்.

இதுவரை யார் மனதையும் நோகடித்ததே இல்லை. கஷ்டப்படும் உறவுத் தலைகளுக்கு வ–ய ஓடிச் சென்று உதவும் பரோகாரி அவர். அவருடைய தயாள குணத்திற்கு அத்தாட்சிகளாய் அமர்ந்திருந்த தங்கை உமாவின் மீதும் தம்பி கிரியின் மீதும் .... யமுனாவின் பார்வை படிந்தது.

யமுனாவிற்கு அப்போது ஐந்து வயதிருக்கும். அவளது ஒவ்வோரு வருட பிறந்தநாளின் போதும் நடேசன் தனது உறவுத் தலைகளைத் திரட்டி வேன் பிடித்து குல தெய்வம் கோவிலுக்குச் சென்று படையல் இடுவது வழக்கம்.

அவளது ஐந்தாவது பிறந்த நாள் வந்த போது தான் அந்தக் கோர சம்பவம் நடந்தது. கோவி–ல் படையல் வைத்து விட்டு கலகலப்பாக சிரித்தபடி வேனில் திரும்பிய போது எதிரே வந்த லாரி மோதி.. யமுனாவின் தாய் கற்பகமும், அவளது தங்கை செண்பகமும், அவளது கணவரும் கண நேரத்திர் துடிதுடித்து மாண்டனர். மற்றவர்கள் ஏராளமான காயங்களோடு அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

தமது வீட்டு விசேஷத்தில் கலந்து கொள்ள வந்திருந்த மைத்துனி செண்பகமும், அவளது கணவரும் அகாலமாய் மாண்டு போனதை எண்ணி,......குற்றவுணர்வில் பரிதவித்தார் நடேசன். மைத்துனியின் செல்வங்களான உமாவையும், கிரியையும், வாரியணைத்துக் கொண்டடு கதறினார் நடேசன்.

மனைவியை இழந்த துக்கம் ஒரு புறம், மைத்துனியின் குழந்தைகளையும் தான் பெற்ற மக்களாகவே வளர்த்து விட்டிருந்தார். குழந்தைகளின் நன்மையைக் கருதி மறு தல்யாணம் செய்து கொள்ளாமல் தாயுமானவராகவே வாழ்ந்து வரும் உத்தமர் அவர்.

அவரது ஆசைப்படி நன்றாகப் படித்து பெரிய வேலையில் அமர வேண்டும். உமாவையும் கிரியையும் பெரிய படிப்பு படிக்க வைத்து உயர்த்த வேண்டும். அப்பாவின் மனதை குளிர வைக்க வேண்டும். அது வரை.... இலட்சியத்தை எட்டும் வரை கவனம் சிதறாமல்.... இரும்பு போல் வைத்துக் கொள்ள வேண்டும் என்று யமுனா சங்கல்பம் செய்து கொண்டாள்.

அன்றிரவு படுக்கையில் சாய்ந்த போது.... முரளியின் களை சொட்டும் முகம் அவளது மனக் கண்ணில் தோன்றி மறைந்த போது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. இரும்பு இதயத்திற்குள் ஓசையின்றி நுழைந்த காதல்..... புல்லாங்குழல் இசைக்க ஆரம்பித்தது.

---

# 3

---

இரவு முழுவதும் மேகங்கள் குமுறி ஆக்ரோஷமாய் மழையைக் கொட்டித் தீர்த்திருந்தது. குளிர்த்து முடித்து விட்டு பரபரப்பாய் கொல்லைப் புற கதவை திறந்தாள் யமுனா.

பின்புறத் தோட்டத்தி-ருந்து நித்ய மல்-ப பூக்களின் மனத்தை சுமந்து கொண்டு வந்த காற்று சில்லென்று அவளது





முகத்தை ஸ்பரிசித்தது.

அம்மா அந்த பக்கம் போயிருக்கையில் மீண்டும் மீண்டும் பைப்பில் குளித்து லூட்டி அடிக்கும். விஷ மக்காரக் குழந்தைகளைப் போல செடிகளும்,கொடிகளும் உச்சியி-ருந்து அடி வரை நீர் சொட்ட நின்றன.

யாரோ வேலை மெனக்கெட்டு அருகில் உட்கார்ந்து பச்சை பெயிண்ட்டை அடித்த மாதிரி இலையும், காயும் பளபளத்தன.

வெண்டைக்காய்களைப் பறித்த கையோடு மண்ணுக்கு மேல் பருமனாய் தெரிந்த முள்ளங்கிகளைப் பிடுங்கினாள். நான்கு தக்காளி கொத்தமல்-த் தழையைப் பறித்துக் கொண்டு அடுப்பங்கரைக்கு விரைந்தாள் யமுனா.

குக்கரில் பருப்பு வெந்து கொண்டிருந்தது. "நான் காய் நறுக்கித் தரட்டுமா யமுனா?" ஒத்தாசை செய்ய வந்த நடேசனை ஏறிட்டாள் மகள்.

"வேணாம் அப்பா..... நேத்தைக்கே கேட்கனும்னு நினைச்சேன். உங்க முகம் வாட்டமா இருக்கே? என்னப்பா பிரச்சனை ?" தணிந்த குர-ல் கேட்டாள்.

"வியாபாரமே வர வர சரியில்லை... ரெண்டு மாசமா படுத்துக்கிச்சு" கவலையில் அவரது முகம் ஏகத்திற்கும் இருண்டிருந்தது.

மளிகை சாமான்கள் அடங்கிய காய்கறிக் கடையை நடத்தி வருபவர். "தன் கஷ்டம் தன்னோடு போகட்டும். வீட்டில் உள்ளவர்களாவது நிம்மதியாக இருக்கட்டும் என்று கவலையை மென்று விழுங்கி விடும் மனிதர்.....இன்றுவெளிப்படையாகப் பேசியதைக் கேட்டு புருவத்தை உயர்த்தினாள் யமுனா. "

"திடீர்னு வியாபாரம் சரிஞ்சிடுச்சி ? அதுக்கு என்னப்பா காரணம்?" . "ஜனங்க டிபார்டென்டல் ஸ்டோர்களைத் தேடிப் போக ஆரம்பிச்சுட்டாங்கம்மா...

காய்கறிகளும் ஃபிரஷ்ஷா அங்கேயே கிடைக்கறதால... மொத்த ஜனமும் திண்டாடுறோம்."

"வர - வர ரொம்ப இளைச்சு துரும்பாயிட்டே இருக்கீங்களேன்னு பார்த்தேன்.... இந்தக் கவலை தான் உங்க மனசை அரிக்குது போல..

அப்பா! நான் இனிமே சாயந்திரம் கம்ப்யூட்டர் சென்டருக்குப் பொறதை நிறுத்திடறேன். தம்பி தங்கச்சிக்கு வேறே கான்வென்ட்லே படிக்கிறாங்க.... ஃபீஸ் கட்டனும். குடும்ப பாரத்தை ஒண்டியா சுமக்கிறீங்களேப்பா?

பாசத்தில் யமுனாவின் மனம் பாகாய் கரைந்தது.

"மரத்தை வைச்சவன் தண்ணி ஊத்துவான் யமுனா. முட்டி மோதி முயற்சி பண்ணிக்கிட்டே இருக்கணும். எது வந்தாலும் போராடி சமாளிக்கணும். எதிர் நீச்சல் போடணும். கம்ப்யூட்டர் சென்டருக்குப் போறதை நிறுத்தாதே...

உலகமே கம்ப்யூட்டர் மயமாயிடுச்சு. கூடுதல் தகுதியா கம்ப்யூட்டர் கோர்ஸ்களை முடிச்சுக்கிட்டா..... உன் எதிர்காலத்துக்கு அது ரொம்பவே கை கொடுக்கும் சரியா?"

நானும் ரெண்டு வருஷமா கம்ப்யூட்டர் சென்டருக்கு போனேனே அப்பா. படிச்ச வரை போதும் அப்பா. இருக்கற கஷ்டத்தில... அவள் பேசி முடிக்கும் முன் இடைமறித்தார் நடேசன்.

"நீ இப்படி பேசறது தான் ரொம்பகஷ்டமா இருக்குடா. இதுக்குத்தான் நான் எதையும் சொல்றதே இல்ல... படிக்கிற பொண்ணு விசனப்பட்டா... கவனம் குறைஞ்சிடும். சாயந்திரம் வழக்கம் போல சென்டருக்குப் போகணும் சரியா?"

" சரிப்பா" என்ற யமுனாவின் விழிகளில் கண்ணீர்க் குளம் கட்டியது. தலை குனிந்தபடி காய்களை நறுக்க ஆரம்பித்தாள்.

"அக்கா! தலை சீவி விடறியா?" சீப்பும் கையுமாய் வந்து நின்றாள் தங்கை உமா.





"அஞ்சு நிமிஷம் பொறு உமா. சாம்பார் வச்சுட்டு வந்துடறேன்." அதற்குப் பிறகு அவளுக்கு நிற்க நேரமில்லை. பம்பரமாய் சுழன்றாள். சமைத்துப் பரிமாறி சாப்பாடு கட்டிக் கொடுத்து தானும் எடுத்துக் கொண்டு வேறு சுடிதாருக்கு மாறினாள்.

தலையை வாரிப் பின்னலிட்டு முடித்து சுவரிலிருந்த கண்ணாடியில் தன்னைஒரு முறை பார்த்துக் கொண்டாள். சற்றே நீள் வட்ட முகம் மானின் மருண்ட விழிகள். ரோஜா இதழ்களைப் பிய்த்து ஒட்ட வைத்தது போன்ற உதடுகள். தந்தத்தைக் கடைந்தாற் போன்ற நிறம்.

"முரளிக்கு என்னைப் பிடிக்குமா?" யமுனாவின் அடி மனதிலிருந்து இந்த எண்ணம் திடீரென்று எழும்பியது. முந்திரிக் கொட்டையாய் எழுந்த கேள்வி முற்றுப் பெறும் முன்னரே தலையில் தட்டி அடக்கினாள்.

மெல்லிய குற்றவுணர்வு மனசுக்குள் கோடு இழுத்தது.

"என்னது இது? என் கட்டுப் பாட்டையும் மீறி இப்படியொரு எண்ணம் தலை காட்டத் தொங்கி விட்டதே? இது எதில் போய் முடியும்?" பயம் உள்ளூர நடுக்கமாய் உடலெங்கம் ஓடியது.

சிறு பிள்ளையின் கையில் அகப்பட்ட தும்பியாய் மனம் சடசடத்தது.

அப்பா நடேசன் கையில் அவளுக்கு முன்னதே கடை திறக்கக் கிளம்பி விம்டிருந்தார். கூடத்திலிருந்த தாத்தாவை ஏறிட்டுப் பார்க்கத் தெம்பின்றி மெல்ல நடந்த யமுனா.... நடையிலிருந்த செருப்புகளை கால்களில் திணித்துக் கொண்டாள். அங்கிருந்த படியே.... "நான் கிளம்புறேன் தாத்தா" என்று குரல் கொடுத்து விட்டு தெருவில் இறங்கி நடந்தாள்.

"என்னப்பா முரளி? எதையோ சொல்ல வர்றே ஆனா சொல்லத் தயங்கிட்டு மென்னு முழுங்கற மாதிரி தெரியுது. அம்மா கிட்ட என்ன தயக்கம்?" மக னது முன் தட்டை வெங்காய

சாம்பாரால் இட்–களைக் குளிர்ப்பாட்டிய படியே பேசினார் ரங்கநாயகி.

"ஒரு முக்கியமான புக்கை வாங்கறத்துக்காக நேத்து நான் ஷாப்பிங் காம்பளெக்ஸிக்குப் போனேன் இல்லையா? அங்க.... அவங்க ரெண்டு பேத்தைப் பார்த்தேன்"

"யாரை?..... ஓ.... உங்க அப்பாவையும், அண்ணாவையும் பார்த்தியா? அதான்.... திரும்பி வர்றப்போ உன் முகம் பேணறைஞ்சாப்பல இருந்ததா? கேட்டதுக்கு தலை வ–க்குதுன்னு சொல்–ட்டு..... இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்துக்கிட்டியே?"

ரங்கநாயகியின் குர–ல் சுருதி இறங்கியிருந்தது. ரங்கநாயகி பாட்டு டீச்சராக ஒரு பள்ளியில் இன்றளவும் வேலை பார்த்து வந்தார். மாலையில் அக்கம் பக்கத்து குழந்தைகளுக்கு பாட்டு கிளாஸ் எடுத்தும் வந்தார்.

கௌரவத்துடன் சுயமரியாதையை விட்டுத்தராமல் வாழ வேண்டும் என்ற கொண்டவர் ரங்கநாயகி. பணத் திமிராய் ஆணவங்கொண்டு ஆடாத செயல் புரிந்த கணவர் கணவர் விஸ்வநாதனை, அவரால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

மலருக்கு மலர் தாவி தேனைப் பருகும் வண்டாகத் திரிந்த விஸ்வநாதனை திருத்தி விடப் போராடிப் பார்த்தும் அலுத்து விட்டார் ரங்கநாயகி. இரு மகன்களைப் பெற்ற ரங்கநாயகியால்.... தொடர்ந்து நதீக வேதனை அனுபவிக்கப் பொறுமை இருக்கவில்லை.

மூத்த மகன் முகேஷிக்கு அப்பாவின் மேல் ஒட்டுதல் அதிகம். கணவர் விஸ்வநாதனையும், முகேஷையும் உதறி விட்டு இளைய மகன் முரளியுடன் வெளி நடப்பு செய்து விட்டார் ரங்கநாயகி.

சொந்தக் கா–ல் நின்று சம்பாதித்து கண்ணும் கருத்துமாய் வளர்த்து ஆளாக்கினார். ஊரார் மூக்கின் மேல்





விரலை வைத்து ஆச்சரியப் படும் வகையில் முரளியை உருவாக்கி விட்டிருந்தார்.

ஆனால் மூத்த மகன் முகேஷின் நிலைமை தலைகீழாகத் தான் மாறி இருந்தது. பணத்திலே புரண்டு வளர்ந்த விதம், அதீத செல்லம், கண்டிப்பு இல்லாத வளர்ப்பு.... எல்லாமாகச் சேர்த்து அவனைத் தடம் புரள வைத்தது நிஜம்!

"நல்ல வேளையா அந்தக் கண்றாவி உங்க கண்ணுல படலை அம்மா. அப்பாவும், அண்ணாவும் ரொம்பக் கேஷீவலா பேசிக்கிட்டே சிகரெட் புடிச்சுசு புகை விட்டுட்டு இருந்தாங்க.... அண்ணனுக்கு எல்லாக் கெட்டப் பழக்கங்களும் இருக்காமே... கேள்விப்பட்டன். அப்பாதான் கெட்டழிஞ்சு போனார்னா..... அண்ணனையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி இருக்காரேம்மா" ஆதங்கப்பட்டான் முரளி.

"இதுக்கெல்லாம் பகவான் தான் கண்ணைத் திறந்து பார்க்கணும்.நம்ம கையில் எதுவுமே இல்லப்பா" மூத்த மகன் முகேஷின் நிலைமையை எண்ணும் போதே... அவரது பெற்ற வயிற்றில் அமிலம் சுரந்தது.

"சரிப்பா.... சாப்பிட்டுட்டு காலேஜீக்குப் புறப்படு... மனசைப் போட்டு குழப்பிக்காதே... மூணு நாள் முன்னாடி ஒரு கவிதை எழுதி வச்சிருந்தியே? அது ரொம்ப அருமையா இருக்குப்பா... சாயந்திரம் நீ வந்ததும் அதைநான் "சஹானா" ராகத்தோட பாடிக் காட்டறேன்" பேச்சை திசை திருப்பினார் ரங்கநாயகி. மவுனமாக தலைகுனிந்து சாப்பிடத் தொடங்கினான் முரளி.

"சஹானா .... அருமையான ராகத்தோட பெயர். சஹானா .... ! வேடிக்கையும் விளையாட்டும், குறும்பும், குதூகலமும், துணிவும், துடுக்கும் உருக் கொண்ட பெண்ணை... இது நாள் வரை அவன் சந்தித்ததே இல்லை! "சஹானா" முணுமுணுத்த முரளியின் நாடி நரம்பிகளில் சில்–ப்பு பரவி.... அவனை சி–ர்க்க வைத்தது."

# 4

தனக்கு தேவைப்பட்ட இரண்டு புத்தகங்களை வாங்கிக் கொண்டு பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்தான் முரளி. பேருந்து நிறுத்தத்தில் கூட்டம் அதிகமிருந்தது.

சூரியன் வேறு தன் பங்குக்கு அனலைக் கக்கிக் கொண்டிருந்தது. முகத்தில் கொப்பளித்த வியர்வைத் துளிகளை கைக்கட்டையால் ஒற்றியபடி எதிர் திசையில் பார்வையை ஓட்டிய போது...... பளிச்சென்று விழிகளுக்குள் சிக்கினாள் யமுனா.

இடைவிடாது வாகனங்கள் எதிரும் புதிருமாய் பறந்து கொண்டிருக்க... எதிர்புற சாலையிருந்து எழுபது வயது மதிக்கத் தக்க ஒரு பெரியவரை கைப்பற்றி இரு பக்கமும் பார்த்து கவனமாய் அழைத்து வந்தாள்.

பெரியவரை பேருந்து நிறுத்தத்தில் பத்திரமாய்ச் சேர்த்தாள். "ஒரு நிமிடம் இருங்க ஐயா" என்றவள் அருகே இருந்தக் கடைக்குச் சென்று தண்ணீர் பாட்டில் வாங்கி வந்து அவரிடம் தந்தாள்.

"இந்தாங்க ஐயா.... ரொம்ப வெயிலா இருக்கு. இனி எப்ப வெளிய வந்தாலும் தண்ணீர் பாட்டிலோடு வாங்க. நீங்க எங்கே போகணும்?"

"என்னது! முன் பின் தெரியாத ஒரு முதியவரையா இவ்வளவு சிரத்தையுடன் அழைத்து வந்தாள்?.. இரக்க சுபாவமும் உதவும் மனப்பாமையும் கொண்டவள் போருக்கிறதே....."

அவனது மனதிற்குள் மின்னல் கீற்றாய் இந்த எண்ணம் தோன்றி மறைந்தது. புருவங்கள் ஆச்சரியத்தில் மேலேற..... அவளையே நோட்மிட்டான்.



இளம் சிவப்பு வண்ணத்தில் சுடிதார்..... அடர்ந்த நீண்ட கூந்தலைத் தளரப் பின்னி காதோரத்தில் பன்னீர் ரோஜாவை செருகியிருந்தாள். அகன்ற விழிகளில் அன்பும் கனிவும் ஏகத்திற்கும் ததும்பின.

"ஐயா..... இதோ பஸ் வந்தாச்சு பத்திரமா போயிடுவீங்களா? இல்லே.... நானும் துணைக்கு வரட்டுமா?"

"இல்லம்மா..... நானே போயிடுவேன். யார் பெத்த பெண்ணோ? இவ்ளோ உதவி செஞ்சிருக்கே. நீ நல்லா இருக்கணும், நன்றிம்மா"

"நன்றியெல்லாம் எதுக்கு ஐயா? மனசருக்கு மனசர் இந்த உதவி கூட செய்யலைன்னா..... இந்த பூமியில நாம பிறந்ததுக்கே அர்த்தமில்லாம போயிடுமே... ஐயா சீக்கிரம் ஏறுங்க.... நல்ல காலம் நிறைய சீட் காயா இருக்கு.... பாத்து.... பத்திரம்."

பெரியவரை பேருந்தில் ஏற்றி விட்டு தற்செயலாய் திரும்பினாள். முரளியை ஏறிட்டதும் குப்பென்று அவளது முகம் குங்குமாய் சிவந்து போனது. சட்டென்று பார்வையைத் தழைத்துக் கொண்ட போது.... பெருங்குலுக்கலுடன் அந்த பேருந்து பெருமூச்சு விட்டபடி வந்து நின்றது.

முண்டியத்த கூட்டத்தில் பெரும் பிரயத்தனம் செய்து தன்னைப் பேருந்துக்குள் திணித்துக் கொண்டாள்.

"வாவ்! "டேய் மச்சி சூப்பர்.... ஃபிகருடா.... சட்டென்று பின்னால் திரும்ப பார்த்தாள் யமுனா.

"ரோட் சைடு ரோமியோக்கள்..... நாலைந்து தீவட்டி தடியன்கள் கூட்டத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு நெருக்கியடித்துக் கொண்டிருந்தார்கள்."

குப்பென்று சிகரெட் நாற்றம் அவளது அடி வயிற்றை குமட்டியது.

"டேய்! அசப்பில அசின் மாதிரியே இருக்காள்லே?"

"ஆமாண்டா மாமு!..... உன் விழியில் விழுந்தேன்.....

விண்வெளியில் பறந்தேன்...... கண் விழித்து சொப்பனம் கண்டேன்......

கர்ண கடூரமாய் ஒருவன் பாடிய போது..... அவனது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போ-ருந்தது. உள்ளூர பொங்கி வந்த ஆத்திரத்தை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

உடல் அருவருப்பில் கூசிப் போக..... நெருப்பு தண-ல் நின்று கொண்டிருப்பதைப் போன்று தவிப்புடன் நிமிர்ந்த போது..... முயன்ற தூரத்தில் கம்பியைப் பிடித்த படி முரளி நின்றிருப்பதைப் பார்த்து விட்டாள்.

இவள் படும் அவஸ்தையைப் புரிந்து கொண்ட தினுசில்.... கனல் கக்கும் விழிகளில் அந்த தடியர்களை முறைத்த முரளி, "இப்படி..... எனக்கு முன்னால வந்துடுங்க..... கமான்" என்று உரிமையாய் குரல் கொடுத்தது தான் தாமதம்.....

கூட்டத்தைக் கிழித்து நீந்தியபடி சென்று அவனுக்கு முன்னால் வந்து நின்று கொண்டாள் யமுனா.

"கூட்டம் இன்னமும் திமுலோகப் படுது இல்ல?"

"ஆ...... ஆமா" இலேசாய் தலையசைத்தாள். முரளியைப் பார்த்த மாத்திரத்திரேயே அவளுடைய அனுமதியின்றி அவளது இதய கதவுகள் அவனை சிறைப் படுத்திவிட்டன. அதை நன்கு புரிந்து கொண்டதலோ என்னவோ..... கல்லூரி வளாகத்திற்குள் அவனது தலையைக் கண்டாலே... வெகு தூரம் விலகிச் சென்று விடுவாள்.

மூன்று மாதங்களாக இதே கூத்து தான்! வெகு நாட்கள் கழித்து இவ்வளவு கிட்டத்தில் அவனை சந்தித்ததும் யமுனாவின் இதயத்திற்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் ஓசையின்றி சிறகடித்தன.

நெஞ்சுக்குள் ஐஸ் க்ரீம் மழை ஜிலு ஜிலுவென்று வழிந்தோடியது.





"அந்த தடியர்கள், கூட்டத்தில் என்னை இடித்தால் இவருக்கேன் இப்படி கோபம் வர வேண்டும்? இவரும் என்னை நேசிக்கிறாரோ?"

கேள்விகளைச் சுமந்த வண்ணம் எண்ண அலைகள் எழும்பி இதயத்தில் மோதின.

"தேங்க் யூ மிஸ்டர் முரளி"

"இதுல என்ன இருக்கு? ஆங்.... இன்னிக்கு சன்டே அதுமா வெயில்லே வெளியில தனியா எங்கே கிளம்பிட்டீங்க"

"அடையாறுல..... வீ. ஆர். ஹாஸ்பிடலுக்கு"

"மைகாட்! நானும் அங்க தான் போறேன். ஆமா.... ஹாஸ்பிடல்லே யாரைப் பார்க்க போறீங்க? உறவுக்காரங்க யாருக்காவது உடம்பு சரியில்லையா?"

"நோ.... நோ...! ஒரு பேஷண்ட்டுக்கு உடனடியா ரேர் குரூப் இரத்தம் தேவைப்படுதாம். பிளட் டோனர்ஸ் அஸோசியேஷனி-ருந்து.... எனக்கு ∴போன் வந்தது. இரத்த தானம் பண்ணினா புண்ணியம் கிடைக்கும்னு நம்பறவ நான் அதான்....."

"அட..... என்ன ஆச்சரியம் யமுனா..! எனக்கும் ரேர் குரூப் இரத்தம் தான்..! கார்த்தால தொலைக்காட்சியில அரிய வகை இரத்தம் உடனடியா தேவைன்னு அறிவிப்பு வந்ததைப் பார்த்துட்டு தான் நான் கிளம்பினேன். ஆமா.....அஸோசியேஷனி-ருந்து உங்களுக்கு போன் வந்திருக்கே.... அப்போ நீங்க ரெகுலர் பிளட் டோனரா?

"ஆமாம்"

"கங்கிராட்ஸ் மிஸ் யமுனா" சங்கோஜத்தில் மௌனித்த படி முன்னால் திரும்பிக் கொண்டாள்.

"இவரும் இரத்த தானம் அளிக்கத் தான்

கிளம்பியிருக்கிறார். என்னை போல் இவருக்கும் உதவும் மனப்பான்மை இருக்கிறதே.... இருவரது எண்ணங்களும் ஒரே அலைவரிசையில் இருப்பது ஆச்சர்யம் தான்"

இதை எண்ணும் போதே அவளுக்கு சி–ர்ப்பாக இருந்தது. மயி–றகால் சாமரம் வீசியதைப் போன்று சுகானுபவமாக இருந்தது.

இது நாள் வரை மனதிற்கு கடிவாளம் போட்டு கட்டுக்குள் தான் அவள் வைத்திருந்தாள். என்ன பிரயோஜனம்?

முரளியை இவ்வளவு அருகாமையில் கண்டதுமே.... அவளது மனம் தறி கெட்டுப் பாய்ந்ததுமில்லாமல்.... சந்தோஷம் தாளாமல் குரங்காட்டம் போட்டது நிஜம்!

"ஐயோ... என்னது இது? மனம் மகிழ்ச்சி தாளாமல் இவ்வளவு ஆர்ப்பரிக்கிறதே? இது எதில் போய் முடியும்? எனது காதல் தோல்வியடைந்து விட்டால்....என்ற பயம் உள்ளூர நடுக்கமாய் உடலெங்கும் ஓடியது.

சிறு பிள்ளையின் கையில் அகப்பட்ட தும்பியாய் மனம் சடசடத்தது. தவறியது. படாரென்று யமுனாவின் முதுகில் போய் மோதிக் கொண்டதுமில்லாமல்... அழுத்தமாய் பதிந்தது.

"மை காட்! சாரி.. சாரி யமுனா" மறுகணமே பதறி விலகினான். அவனது குர–ல் நிஜமான வருத்தம் தொனித்தது. அத்தனை கூட்டத்தில் நெருக்கமாய் நின்று கொண்டிருந்தாலும்.. கண்டு விரல் கூட அவள் மீது படாமல் சர்வ ஜாக்கிரதையாய் கண்ணியமாய் அவன் பேசிய விதம்... அவளது உள்ளத்தைக் கொள்ளை அடித்தது.

இவருடன் காலமெல்லாம் வாழும் பாக்கியம் எனக்கு கிட்டுமா? உள் மனம் ஏங்கியது. கூடிய விரைவில் அவளது உள்ளத்தைக் கவர்ந்த முரளி.... எத்தகைய ஆபத்தை சந்திக்கப் போகிறான் என்பது அப்போது அவளுக்கு எப்படித் தெரியும்





# 5

வெயில் உக்கிரமாக நெருப்பைக் கக்கியது. கூட்டத்தைப் பிளந்து முண்டியடித்து அந்த பஸ்ஸி–ருந்து உதிர்ந்தார்கள் யமுனாவும், முரளியும்.

"மிஸ். யமுனா! ஒரு உன்னதமான காரியத்துக்காக.... ஒரே எடத்துக்கு நாம்ப போறோம். ஆட்டோவில் சேர்ந்தே போலாமா? இ∴ப்யூ டோன்ட் மைன்ட்?" தயக்கமாய் அவளது விழிகளை ஊடுவினான்.

"உம்! போகலாமே" பதிலைக் கேட்டதுமே அவனது முகத்தி–ருந்த இறுக்கம் விலகி சட்டென்று ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் பரவியது.

இருவரும் ஒரே ஆட்டோவில் பயணித்த போது... யமுனாவுக்குள் மகிழ்ச்சி நீரூற்று பொங்கி உயர்ந்தது.

எதிர்க்காற்று அவளது முகத்தை வருடி... காதோரத்து முடிக் கற்றைக்ளுடன் செல்லாமல் கிச்சு கிச்சு மூட்டியது.

"நடப்பதெல்லாம் கனவா? அல்லது நிஜம் தானா?" உள்ளூர சந்தேகம் முளைவிட... முரளி அறியாமல் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

"நிஜம் தான்" உள்ளுக்குள் சிலுசிலுவென்று குற்றாலச் சாரல் அடித்தது. "வாழ்க்கைப் பாதையிலும் இவருடன் சேர்ந்து பயணிக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்க வேண்டும்" இஷ்ட தெய்வத்தை மனமுருகப் பிராத்தித்தாள்.

"என்னது இது? மனம் வரம்பு மீறி ஆசைப் படுவது தருமா? நன்றாகப் படித்து டிஸ்டிங்ஷனில் தேறி பெரிய பதவியில் அமர்ந்து... அப்பாவின் பாரத்தை இறக்கி தம்பி தங்கையைக் கரையேற்ற வேண்டாமா?... என்ற எச்சரிக்கை மணி பலமாய் ஒ–த்தது.

மனசாட்சி மணலாய் உறுத்தியது. ஆசையைத் தட்டி அடக்கினாள்.

"மிஸ். யமுனா! உ... உங்க க்ளோஸ் ஃபிரண்ட் சஹ்ரீனாவும்... உங்க மாதிரியே... ரெகுலரா பிளட் டோனேட் பண்ணுவாங்களா?"

"நோ... நோ! அவளுக்கு இதிலெல்லாம் இன்ட்ரஸ்ட் கிடையாது" முறுவ-த்தாள்.

"ஓஹோ" என்ற முரளியின் குர-ல் ஏமாற்றம் எட்டிப் பார்த்தது. ஆனா... உங்க

"உங்களைப் பார்த்தா.. ரிசர்வ்ட் டைப்பா தெரியுது. ஆனா... உங்க ஃபிரண்ட் அப்படியில்லை போ-ருக்கே?"

"அவ ஜா டைப்... அவ இருக்கற இடமே கலகலப்பாத்தான் இருக்கும்"

"ஆச்சர்யம் தான்... ரெண்டு பேத்துக்கும் எதிரும் புதிருமான குணங்க.... எப்படி ஃபிரண்ட்ஸ் ஆனீங்க ?"

"மனசுல எதையும் வச்சுக்க மாட்டா... வெளிப்படையா அதைக் கொட்டிவா... அந்த குணம் என்னை காந்தமா ஈர்த்துடுச்சு... அதான்!"

"ஓ..." அதன் பிறகு மவுனம் அவர்களிடையே கெட்டிச் சுவராய் எழும்பி நின்றது. வீ. ஆர். ஹாஸ்பிடலுக்குச் சென்று இரத்த தானம் அளித்து விட்டு சிறிது நேரம் ஆசுவாசப் படுத்திக் கொண்டு கிளம்பினார்.

"ஹாய் முரளி... எப்படிப்பா இருக்கே?" நடுத்தர வயது மனிதர் சிநேக பாவணையில் அவனது கரத்தைப் பிடித்துக் கொண்டார்.

"மிஸ். யமுனா! ஒரு ஃபைவ் மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க. நான் பேசிட்டு வந்துடறேன்." நாசூக்காக அந்த நபருடன் நகர்ந்து விட்டான் முரளி.

புற நோயாளிகள் அமரும் நீளமான பெஞ்சில் சோர்வாய் அமர்ந்தாள். "ஏய் தேவி! வெளிர் நீலக் கலர் சர்ட்டும், கறுப்பு





பேண்ட்டும் போட்டிருக்காரே? அது யாருன்னு தெரியுமா? வளைவு மேஜையின் பின்னால் அமர்ந்திருந்த ரிசப்ஷனிஸ்ட்டிடம்... அந்த குண்டு நர்ஸ் கேள்விக் கணையைத் தொடுத்தாள்.

எதேச்சையாக யமுனாவின் செவிகளில் விழுந்த சம்பாஷனை... அவளைத் திடுக்கிட வைத்தது. அந்த நர்ஸ் யாரைக் குறிப்பிடுகிறாள்? முரளியையா?

"ஓ.... அவரா ? அவருக்கு ரேர் குரூப்.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கூட பிளட் டோனேட் பண்ணியிருக்காரே... அவர் பேரு கூட... முரளி.. பெயரை நான் தான் பதிவு செஞ்சிருக்கேன். இதுக்கா இவ்ளோ பீடிகை போட்டீங்க சிஸ்டர்?"

"அட... அவசரப்படாதே தேவி! அவரு சாதாரண ஆள் கிடையாது. பெரிய பணக்காரர்.. குபேரக் குடும்பத்தை சேர்ந்தவருன்னு சொல்லலாம்"

"என்ன சிஸ்டர்.... பார்த்தா ரொம்ப சிம்ப்பிளா இருக்காரு.. என்னால நம்பவே முடியலையே?"

" இவரோட அம்மா ரங்கநாயகி.... எங்க அக்கா கூட தான் ஸ்கூல்லே வேலை பார்க்கிறாங்க... மானஸ்தி..... பணத்திமிருல அவங்க "மன்மத ராசா" ஆட்டம் போட்டதைக் தாங்க முடியாம.... இந்தப் பிள்ளையைக் கூட்டிட்டு தனியா வந்துட்டாங்க. வேலைக்கு போய் சம்பாதிச்சு இவரையும் என்ஜீனியராக்கிட்டாங்க.

இவருக்கு ஒரு அண்ணன் வேற இருக்காரு. அப்பனுக்குத் தப்பாம தலையெடுத்துருக்காராம். பிரபல தொழிலதிபருக்கு புள்ளையா பொறந்துட்டு...கவுரவத்தைப் பெரிசா மதிச்சு நடக்கிறவரு.... அப்பாவையும், அண்ணனையும் கால் தூசுக்கு சமமா நெனச்சு உதறிட்டு..... அம்மாவை தெய்வமா வணங்கிட்டு வர்றாராம். "

"என்ன சிஸ்டர் இது? இந்த காலத்துல இப்படி ஒருத்தர் இருக்காரே? காசு பணத்துக்காக பெத்தவங்களைக் கூட தூக்கி எறிஞ்சிட்டுப் போறவங்களுக்கு மத்தியில... தன்

மானத்தையும் நூய கவுரவத்தையும் பெரிசா நெனச்சு வாழ்ற இவருக்கு... எந்த குறையும் வராது. அமோகமா வரப் பேறார் பாருங்க"

"நல்ல வாக்கு தான்! அஷ்ட திக்குல இருக்கிற அஸ்வினி தேவதைகள்... உன் வாய் முகூர்த்தத்தைக் கேட்டுட்டு "ததாஸ்து" அப்படின்னு கையை உசத்தி ஆசிர்வதிக்கட்டும்", "க்ளுக்" என்று சிரித்து விட்டு வம்பு மூட்டையை அவிழ்த்து விட்ட திருப்தியில்... அந்த குண்டு நர்ஸ் திருவாரூர் தேர் போல் அசைந்து அசைந்து சென்றதையே இமை கொட்டாமல் பார்த்தாள் யமுனா.

மீண்டும் பார்வையை முரளியின் மீது பதித்தாள். ஆச்சர்யம் அவளது முகத்தில் தாண்டவமாடியது. 'இந்த காலத்தில் இப்படியொரு இளைஞரா? அவன் மீது இருந்த மதிப்பும், மரியாதையும் குபுகுபுவென்று காட்டாறு போல நிமிடத்திற்கு நிமிடம் கூடக் கொண்டே போனது.

"மிஸ் யமுனா! கிளம்பலாமா? ..... என்னது.... உங்ன முகமே சரியில்லையே? டயர்டா இருக்கா? கிறக்கமா இருக்கா?"

"இல்ல.... அப்ப டியெல்லாம் இல்ல... கிளம்பலாம்."

ஆஸ்பத்திரி வளாகத்தின் படிக்கட்டுகளில் இறங்கும் போது... யோசனையில் மூழ்கிப் போய் கவனக் குறைவால் ஒரு படி விட்டு ஒரு படியில் கால் வைத்து விட்டு தடுமாறி விழப் போனாள். சட்டென்று அவளது தோள்களைத் தாங்கிப் பிடித்தான் முரளி. சுதாகரித்து சங்கோஜமாய் விலகிக் கொண்டாள்.

"பீ கேர் ஃபுல் யமுனா! பிளட் டோனேட் பண்ணினதுலே உங்களுக்கு இலேசா கிட்டினஸ் வருதுன்னு நெனக்கிறேன். நாம்ப பேசாம இங்கிருந்தே ஆட்டோ புடிச்சுப் போயிடலாம். அவனது குரலில் பதற்றம் தொனித்தது."

"இல்ல... இது எனக்கு அடிக்கடி பழகிப் போன விஷயம் தானே ? கவனக் குறைவா கால் வச்சுட்டேன். அதான் ஸ்-ப்





ஆயிடுச்சு, தவிர... இங்கிருந்து ஆட்டோவிலேயே போனா... இருநூறு கேட்பாங்களே? வீண் செலவு வேணாம்"

"ஆத்திர அவசரத்துக்கு கணக்குப் பார்க்கக் கூடாது. வரும் போது பஸ்ஸிலே எவ்ளோ அவஸ்தைப் பட்டோம்? இன்னிக்கு என்னமோ..... எங்க பார்த்தாலும் கூட்டமா இருக்கு.... பேரண்ட்ஸ் குடுத்த பணத்தை தாம் தூம்னு செலவு பண்ற ஆசாமி நான் இல்ல.. இது என்னோட சம்பாத்தியத்துல வந்த பணம்..... பெருமிதமாய் அவளை ஏறிட்டான்

"என்ன சொல்றீங்க?"

"எங்கம்மாவுக்கு என் மேலே அளவு கடந்த பாசம். பாட்டு டீச்சர். பாடுபட்டு வளர்த்து என்னை ஆளாக்கினாங்க... கடந்த மூணு வருஷமா நான் கார்த்தால ஏழு மணியிலேர்ந்து எட்டரை வரைக்கும் ட்யூஷன் எடுக்கறேன். பள்ளிக் கூடத்துப் பசங்கள்..... நம்ம காலேஜில ஃபர்ஸ்ட் இயர் ஸ்டுடண்ட்ஸ்னு நிறைய பேர் வர்றாங்க... சாயந்தரத்துலே கம்ப்யூட்டர் கிளாசுக்குக் போவேன். அதை முடிச்சா... நேரா வீட்டுக்குப் போயிடுவேன். காபி, டிபன், சாப்பிட்டுட்டு ஆறு மணியிலேர்ந்து எட்டு மணி வரைக்கும் ட்யூசன் எடுப்பேன். என்னோட செலவை எல்லாம் நானே பார்த்துப்பேன். வெளியில போக வர ஒரு பைக் ஒண்ணும் வாங்கிட்டேன்.

ஸ்தம்பித்து போய் விட்டாள் யமுனா.

அதற்கு மேல் அவள் மறுப்பேதும் சொல்லவில்லை.

அடையாற்றில் பிரபலமான ஷாப்பிங் காம்ப்ளக்ஸில்... ஏராளமான அழகு சாதனப் பொருட்களை வாங்கிக் குவித்துக் கொண்டு ஹை ஹீல்ஸ் ஒலியெழுப்ப ஒயிலாய் நடை போட்டவள்... தற்செயலாய் திரும்பினாள். தனது ஸ்கூட்டியை பார்க்கிங் செய்த இடத்தை நோக்கி ஏராளமான வாகனங்கள் கர் புர்ரென்று உறுமியபடி தவம் கிடந்தன. அந்த ஆட்டோவில்... யமுனாவும், முரளியும் ஜோடியாய் அமர்ந்திருப்பதைப் பார்த்ததுமே.... தளபுளவென்று இரத்தம் கொதித்தது. முரளியின் உயிருக்கே இவள் உலை வைக்கத் துணிவாள் என்பதை

# 6

பருத்தி வெடித்தாற் போல், நீல வானத்தில் ஆங்காங்கே பஞ்சு பஞ்சாய் மேகங்கள் மெதுவாகத் தவழ்ந்துக் கொண்டிருந்தது. குறை நிலாவாயினும் பிரகாசத்திற்கு குடிறவின்றி மேகங்களுக்கிடையில் அவ்வப்போது நாணத்துடன் எட்டிப் பார்த்தது.

பால்கனியில் நின்றிருந்த சஹானாவின் அழகு முகம் ஏகத்திற்கும் டென்□னாகி இருந்தது. நெற்றியை விரலகளால் அழுத்தி விட்டுக் கொண்டாள்.

மண்டையை இலசாகப் பிளந்து பாறாங்கல்லை வைத்துத் தைத்து விட்டது போன்று தலை பாராமாக இருந்துது.

யமுனாவும், முரளியும் ஜோடியாக அமர்ந்து ஆட்டோவில் பயணித்ததை பார்த்ததி–ருந்தே... அவளுக்கு அடி வயிற்றில் விழிகள் தூக்கத்தைத் தொலைத்தன.

பள்ளி நாட்களி–ருந்தே யமுனாவுடன் நெருங்கிப் பழகினாலும்... உள்ளூர சஹானாவுக்கு எரிச்சலும், பொறாமை உணர்வும் மண்டிக் கொண்டு தான் இருந்தன.

சஹானா..... பிரபல தொழிலதிபர் குரு மூர்த்தியின் ஏக போக வாரிசு, ஒரு காலத்தில் நடுத்தர வர்க்கத்தில் பட்ஜெட் போட்டு வாழ்க்கை நடத்தியவர். அதிர்ஷ்ட தேவதை கண் திறந்து குரு மூர்த்தியைப் பார்க்க ஆரம்பித்தாள்.

அவர் மண்ணைத் தொட்டாலும் அது பொன்னாகியது. குரு மூர்த்தி குறுகிய காலத்திற்குள் மளமளவென்று உச்சிக்கு வந்து விட்டார். அதனால் தானோ என்னவோ... சஹானாவைப் பெற்றவர்கள், அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள்.

வீட்டில் அவள் வைத்தது தான் சட்டம்..... அதீத





செல்லமும் பணத்திலேயே புரண்டு வளர்த்த விதமும் அவளை சர்வாதிகாரியாக, சண்டி ராணியாக வலம் வர வைத்தன.

'வயதிற்கு வந்த பெண் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும். வரம்புக்கு உட்பட்டு கட்டுக்கோப்பாக நடந்து கொள்ள வேண்டும்' என்று யாராவது அவளிடம் கூறினால் அவ்வளவு தான்!

"என்னது இது? கட்டுப் பெட்டித தனமா இருக்கே... சுத்த கர்நாடகமான பேச்சா இருக்கே? பெண்கள் தான் அடங்கி ஒடுங்கி நடக்கணுமா? ஆண்களுக்கு எந்த விதமான சட்டதிட்டமும் கிடையாதா? நல்லா இருக்கே? ஆணுக்கொரு நியாயம்? பெண்ணுக்கொரு நியாயம்? " என்று பிலுபிலுவென்று சண்டை பிடித்து விடுவாள்.

பெற்றவர்கள் மருந்துக்குக் கூட அவளைக் கண்டித்ததே இல்லை. மாறாக... மகளை படு நாகரீகமாக நளினமாக வளர்த்து விட்டிருந்தனர். ராயல் சொஸைட்டியில் பிறந்த பெண் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று அவர்களுக்குள் ஒரு வரைமுறை வைத்துக் கொண்டினர் போலும்.

சினிமா நடிகை போன்று கண்ணைக் கட்டிப் போடும் அழகுடன் விர்த்த கூந்தல் காற்றில் பறக்க பவனி வரும் பெண்ணைக் கண்டு... அவர்களுக்கு உள்ளூர பெருமை பொங்கி வழிந்தது. அவளது கடைக்கண் பார்வைத் தன் மேல் படதா என்ற ஏக்கத்தில் வா–ப வட்டங்கள் கல்லூரி வாச–ல் பழியாய் காத்துக் கிடந்தனர். 'தான் ஒரு தன்னிகரற்ற அழகி ' என்ற கர்வம் அவளது இரத்தத்தில் ஊறிப் போயிருந்தது. எத்தனையோ இளைஞர்கள் அவளது தரிசனம் காண... மணிக்கணக்கிர் தவமிருந்து தவிப்பதை அவள் அறிவாள்.

படிப்பிலும் அவள் கெட்டிக்காரி தான். கொள்ளையழகு கொட்டிக்கிடக்கும் பணக்காரியாக இருந்தாலும்.... தன்னிடம் இல்லாத எதோ ஒரு பிளஸ் பாயிண்ட் யமுனாவிடம் இருப்பதை அவள் அறிவாள்.

படிப்பில் யமுனா 'நம்பர் ஒண்ணாகவே' திகழ்ந்தாள். பள்ளி ஆசிரியர்களாகட்டும்... கல்லூரி விரிவுரையாளர்களிடம் அவளைத் தாங்க தாங்கு என்று பாராட்டித் தட்டி கொடுப்பதை... சஹானாவால் சகதித்துக் கொள்ளவே முடியயவில்லை.

வார்தைதக்கு வார்த்தை "யமுனா..... யமுனா" என்று நக்கில் தேனை தடவிக் கொள்ளாத குறையாக இனிக்கப் பழகினாலும்... நெஞ்சம் முழுக்க வஞ்சம் கொண்டிருந்தாள் சஹானா.

சமீபகாலமாய்... இன்டர்நெட்டில் இளைஞர்கள் சார்டிங் செய்வதில் அவளுக்கு ஆர்வம் மங்கி மறைந்து கொண்டே வந்தது. காலேஜிக்கு காலடி எடுத்து வைத்ததி–ருந்தே.... அவள் மனதை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான் முரளி.

சகல கலா வல்லவனாய்..... அந்தக் கல்லூரியின் முடி சூடாத மன்னனாய் விளங்கிய முரளியின் கவனத்தை ஈர்ப்பதிலேயே குறியாக இருந்தாள். 'ஒட்டு மொத்த கல்லூரியும் தலை தூக்கி வைத்துக் கொண்டாடும் அளவுக்கு திறமைசா–யாக இருக்கிறானே? இவன் என் அழகைப் புகழ வேண்டும்.என்னை உருக உருக காத–க்க வேண்டும். அவனது அன்பில் நான் நனைவதை அனைவரும் பார்த்துப் பொறாமைப் பட வேண்டும்.' என்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.

இதற்காக வ–ய பல சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டு... அடிக்கடி முரளியை சந்தித்து பேச்சுக் கொடுத்து தான் பார்த்தாள். அவனது திறமையை மனதார ரசித்துப் பாராட்டுப் பத்திரமும் வாசித்தாள். ஆனால் அவனோ ரிஷ்ய சிருங்கனாய் இருந்தான். இவளது அசாடிக்கும் அழகும், இளமையும்.... அவனை இம்மியளவு கூட அசைத்துப் பார்க்கவில்லை. எத்தனையே இளைஞர்கள் இவளது கடைக்கண் பார்ர்வைக்காக ஏங்கித் தவிக்கும் போது... முரளி முற்றிலும் மாறுபட்டவனாய் பாரா முகமாய் இருந்தது.... அவளுக்கு மிக்க ஏமாற்றமாய் இருந்தது.





இந்த சூழ்நிலையில் யமுனாவும், முரளியும் ஜோடியாய் ஆட்டோவில் பயணித்த காட்சி.... அவளது கோபகக் கனலைக் கிளறி விசிறியும் விட்டது.

கோபமும் ஆங்காரமும் போட்டி போட்டுக் கொண்டு அவளது தலைக்கேற..... ஸ்கூட்டியில் விரந்து வீட்டிற்குச் சென்று..... ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் வாங்கிக் குவித்த அழகு சாதனப் பொருட்களை... தனது அறையில் கடாசி விட்டு... விருட்டென்று வெளியேறி ஸ்கூட்டியில் அமர்ந்து யமுனாவின் வீட்டிற்கும் பறந்தாள். உள்ளே பதற்றம் பந்தாய் மோதியலைந்தது. கூடத்தில் சாய்வு நாற்கா–யில் சாய்ந்தமர்ந்து குட்டித் தூக்கம் போட்ட தாத்தா சண்முகம்... சஹானாவின் ஹை ஹீல்ஸ் நடைச் சத்தம் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு நிமிர்ந்தார்.

உடலை இறுக்கிப் பிடித்த க்ரே கலர் டீ சர்ட், கறுப்பு கலர் டைட்ஸ் சாம்பூஷின் உபயத்தில் பளபளத்த விரித்த கூந்தல், ஹை ஹீல்ஸ், பந்தயக் குதிரை போன்று மதர்த்த உடம்பு.... 'குட்டித் தூக்கத்தைக் கலைத்த கிராதகி... யார் குடியைக் கெடுக்கப் போகுதோ? செருப்பைக் கூட கழட்டாம நடு வீட்டுலே வந்து நிக்கிறாளே? மட்டு மரியாதை தெரியாத ஜென்மம்'

கிழவருக்கு அவளது மென்னியைத் திருகிப் போட வேண்டும் போ–ருந்தது. சிரமப்பட்டு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார்.

"தாத்தா! யமுனா இருக்காளா?"

"உம்! கொல்லைப் புறத்துல போய் பாரு" அவரது விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன.

'டக டக' வென்று ஜகடை உருள.... கிணற்றி–ருந்து தண்ணீரை இறைத்து பித்தளை அண்டாவில் ஊற்றினாள் யமுனா. புதினா, முளைக்கீரை, பொன்னாங்கண்ணி, அரைக்கீரை என கீரை பாத்திகளும்.... தாக்காளி, வெண்டை, கத்தரி, மிளகாய் செடிகளும்.... அவளது அக்கறையான

கவனிப்பில் 'தள தள' வென்று விதவிதமான பச்சை வண்ணங்களில் கண்களைக் கட்டிப் போட்டன.

"யமுனா" கொல்லைப் புறக் கதவருகே நின்றபடியே குரல் கொடுத்தாள் சஹானா. "அட என்ன சஹி திடீர்னு?.... இரு... இதோ... வந்துட்டேன்" என்ற படியே முகத்தை அலம்பி விட்டு பூவாளியை கிணற்று மேடை மீது வைத்து விட்டு வந்தாள்.

"சும்மா தான், டைம் பாஸாகலை..... அதான்! நீயும் முரளியும் ஆட்டோவில ஜோடியா உட்கார்ந்து போனீங்களோ?. எங்க போயிட்டு வர்றீங்க?. என்ன விஷயம்?. நீ சாதாரணமா வீட்டை விட்டு எங்கேயும் வெளியில கிளம்ப மாட்டியே?. "

"பிளட் டோனர்ஸ் அஸோசியேஷனி–ருந்து எனக்கு அவசரமா... ∴போன் வந்தது. வீ. ஆர். ஹாஸ்பிடலுக்குக் பேனேன். அங்க... தற் செயலா மிஸ்டர் முரளியும் பிளட் டோனேட் பண்ண வந்தாரு..... இன்னிக்கு என்னமோ தெரியல பஸ்ஸில ஒரே ரஷ்.... ஆட்டோவிலேயே நம்ம ஏரியாவுக்குப் போயிடலாமான்னு அவர் கேட்டாரு... என்னால மறுக்க முடியலை.... நம்ம காலேஜ் மேட கூட்டத்துல கஷ்டப்படக் கூடாதுன்னு அக்கறை... ரிய– ஹி இஸ் எ ஜெம்"

பேருந்து நிலையத்தில் முரளியைப் பார்த்ததையும் கூட்ட நெரிச–ல் இருவரும் சேர்ந்து பயணித்ததையும்.... சஹானாவிடம் சொல்ல மனம் வரவில்லை. சமீப காலமாய்அவளது நடவடிக்கைகள் யாவும் நல்ல விதமாகப் படவில்லை.

ஆனால் சஹானாவின் மனம் சமாதானம் அடைந்து விட வில்லை. 'ஊகூம்' இவள் ஏதோ மறக்கிறாள்.... இதையும் தாண்டி வேறு ஏதோ இருக்கிறது. யமுனாவின் செம்மை படர்ந்த கன்னங்களும் முரளியைப் பற்றி பேசுகையில் நாணத்தில் பளபளத்த அழகிய விழிகளும்...... அவளுக்கு வேறு விதமான கதையை சொல்–ன.

"இவள் முரளியை நேசிக்கிறாள். என்னை நிராகரித்து





விட்டு இவளைக் காத–க்கிறானா முரளி?." நான் சும்மா விட மாட்டேன். உள்ளூர வெறி வெகுண்டு எழுந்தது. அவமானம் தாளாமல் காது நுனி ஜிவு என்று எரிந்தது.

---

# 7

---

அந்த ஆடிட்டோரியத்தில் ஏராளமான மாணவர்கள் குழுமியிருந்தனர். நடு நாயகமாக இருந்த சேரில் டான்ஸ் மாஸ்டர் அமர்ந்திருக்க... அவருக்கு அருகி–ருந்த சேரில் உட்கார்ந்திருந்த முரளி.... சீரியஸான முகபாவனையுடன் யோசனையில் மூழ்கியிருந்தான்.

கூட்டத்தி–ருந்து எழுந்த சலசலவென்ற பேச்சு சப்தம்.... அந்த பிரம்மாண்ட கட்டிடத்தையே அதிர வைப்பதாக இருந்தது. முன் வரிசையில் அமர்ந்திருந்த சஹானா வைத்த கண் வாங்காமல்.... முரளியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

டான்ஸ் மாஸ்டர் "டியர் ஸ்டுடண்ட்ஸ்" என்ற படி கைகளை உயர்த்தினார். மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது போன்று சலசலப்பு சப்தம் சட்டென்று அடங்கியது.

"இந்த வாட்டி நடக்கப் போற இன்டர் காலேஜ் காம்ப்ட்டிஷன்லே.... முரளி கலந்துக்கப் போறதில்லைன்னு முடிவு பண்ணிருக்காரு" என்று கூறிது தான் தாமதம்......

"ஏன்?."..... "எதுக்கு?."..... "என்ன காரணம்?."..... "ஐயோ." என்று விதவிதமான குரல்கள் கூட்டத்தி–ருந்து எழும்பி.... மாணவர்களின் அதிருப்தியை வெளிப் படுத்தின.

"ஒவ்வொரு வருஷமும் நம்ம காலேஜ் வின் பண்ணியிருக்கு. அதுக்கு மிஸ்டர் முரளி தான் காரணம்னு எல்லோரும் பேசிக்கிறாங்க.... இந்த வாட்டி அவர் கலந்துக்கப் போறதில்லைன்னா.... நம்ம காலேஜ் எப்படி சார் வின் பண்ண முடியும்? யு.ஜி. ஸ்டுடண்ட்ஸ் அத்தன பேரும் இதுக்கு

ஆட்சேபம் தெரிவிக்கிறோம் சார்". சஹானா எழுந்து நின்று படபடத்தால் " அப்படிப் போடு..... போடு.... போடு...." கூட்டத்திருந்த மாணவன் ஒருவன் சஹானாவை "சப்போர்ட்" செய்யும் வித்தில் உச்சஸ்தாயியில் உற்சாகமாக பாடினான்.

முதலாம் வருட மாணவியான சஹானாவின் துணிச்சலை வெகுவாய் ரசித்த டான்ஸ் மாஸ்டர் அவளைக் கையமர்த்தினார்.

"இதுக்கான பதிலை உங்க முரளியே சொல்லட்டும்."

"மை டியர் ஃபிரண்ட்ஸ்! நீங்க என் மேல வச்சிருக்கிற நம்பிக்கையக்கும் அன் புக்கும் என்னிக்கும் நா கடமைப் பட்டிருக்கேன். போட்டியில நாம்ப ஜெயிக்கணும்கிற வெறியும் உத்வேகமும் உங்க ஒவ்வொருத்தர் கிட்டேயும் இருக்கு. இந்த வருஷத்தோட என் படிப்பு முடியுது. நா வெளியில போயிடுவேன். நா போயிட்டாலும்.... நம்ம காலேஜ் வின் பண்ணனும். அதான் என் ஆசை! உங்களால கண்டிப்பா முடியும்"

"அது எப்படி?." "ஊகூம்."..... "ரொம்ப கஷ்டம்."..... "எங்களுக்கு நம்பிக்கை இல்ல." என்று மீண்டும் விதவிதமான குரல்கள் எழும்பின. அதில் ஏகத்திற்கும் நம்பிக்கையின்மை தொனித்தது.

"டியர் ஸ்டுடண்ட்ஸ்! அவசரப் படாதீங்க. போட்டியில முரளி கலந்துக்கலையே தவிர.... நம்ம காலேஜ் வின் பண்றறதுக்குரிய அத்தன முயற்சிகளையும் அவர் செய்துகிட்டு தான் இருக்காரு.... அவர் ஒரு ஐடியா குடுத்தாரு..... சால்சா நடனம்னு..... லத்தின் நாட்டுப் பராம்பரிய நடனம் இப்போ அறிமுகப்படுத்தி இருக்காங்களாம். சென்னையில இதற்கான நடன வகுப்புகள்.... பல இடங்கள்லே" டான்ஸ் மாஸ்டர் உத்தரவிட்டார்.

"சால்சா நடனம்... ஆணும் பெண்ணுமா ஜோடியா ஆடப் படற நடனம் உற்சாகமான நடன அசைவுகளும் துள்ளல்





இசையும்... அதோட பிளஸ் பாயிண்ட்! டிஸ்கோதே, வார இறுதிப் பார்ட்டிகள்லே.... இந்த மேற்கத்திய நடனத்தை ஆடறது இப்போ.... ஃபேஷன்! கடந்த ரெண்டு வாரமா மதியம் நடன வகுப்புக்குப் போய்.... இந்த டான்ஸை நா கத்துக்கிட்டேன். நம்ம காலேஜ் பிரின்சிபால் தான் மதியம் லீவு கொடுத்து என்னை அனுப்பி வச்சார்.... இந்த டான்சை வச்சா.... இந்த வருஷமும் நாம ஜெயிச்சுடலாம்.

இந்த டான்சுக்கு பத்து ஜோடியை நாம்ப தேர்வு செய்யப் போறோம். போட்டிக்கு இன்னமும் ஒரு மாசம் தான் இருக்கு.... கஷ்டமான நடன அசைவுகளை டான்ஸ் மாஸ்டர் கூட சேர்ந்து நானும் கத்துத் தருவேன். டான்சுக்கு இடையிடையே "ஸ்வாதிக்".... "ஸடார்" போன்ற வடிவ அமைப்பை ஏற்படுத்தி ஆடினா.... ரொம்ப வித்தியசமா அற்புதமா இருக்கும். என்ற படி முரளி கட்டிட விரலை உயர்த்திக் காட்டினான்.

"யா.... ஹீ !" "ஹிர்ரே" சில மாணவிகளும், மாணவர்களும் உற்சாக பகுதியில் எழுந்து நின்று ஆட்டம் போட்டனர். சிலர் "விஷ்" என்று விசிலடித்தனர்.

"வாரே வா " முழங்கையை உயர்த்தி இழுத்தாள் சஹானா.

"தேங்க் யூ மிஸ்டர் முரளி!" நம்ம காலேஜ் வின் பண்ணணும்கிறதுக்காக இவ்ளோ மெனக்கெடறீங்க.... உங்க கடமை உணர்ச்சியை நான் பாராட்டறேன். ஐ அப்ரிஷியேட் யுவர் சின்ஸியாரிட்டி" என்று கூறியவாறு சந்தடிவாக்கில் அவனது கையைப் பற்றிப் குலுக்கினாள்.

"இது என்னோட கடமை" முணுமுணுத்தபடி மெல்லக் கையை உருவிக் கொண்டான் முரளி. முணுமுணுத்தபடி மெல்லக் கையை உருவித் கொண்டான் முரளி.

அந்தக் கூட்டத்தில் யமுனா கலந்து கொள்ளவில்லை. ஆட்டம், பாட்டம் போன்ற கேளிக்கையில் ஈடுபட என்றுமே அவள் விரும்பியதில்லை. படிப்பு, கட்டுரைப் போட்டி, பேச்சுப்

போட்டி... போன்றவற்றில் மட்டுமே அவள் கவனம் செலுத்துவாள்.

டான்ஸ் மாஸ்டரும், முரளியும் சேர்ந்து... நடனத்தில் கை தேர்ந்த மாணவ, மாணவிகளைத் தேர்ந்தெடுத்து வடிகட்டினார்கள். அந்த ஆர்ப்பாட்டத்தில் மூன்று மணி நேரங்கள் நகங்கியதே தெரியவில்லை.

முரளியின் கவனத்தைக் கவருவதிலேயே சஹானா குறியாக இருந்தாள். அவளுடன் ஜோடியாக பாலாஜி, மூன்றாம் வருட மாணவன் தேர்வு செய்யப்பட்டான்.

அவன் தனது கையைக் கோர்த்து அணைத்து ஆடிய போது.. சஹானாவுக்கு எரிச்சல். மண்டிக் கொண்டு வந்தது.

அரை மணி நேரம் டான்ஸ் ரிகர்சல் நடந்தது. சால்சா நடனத்தை முரளி லாவகமாகக் காற்றுக் கொடுத்த விதமும், கடினமான நடன அசைவுகளை நளினமாக ஆடிய விதமும்... அவளை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன.

"பாலாஜி ! நீங்க நல்லா ஆடறீங்க.... ஆனா நடன அசைவில நளினமே இல்ல.... ஸ்பீடா ஆடினாலும் நனினமா இருக்கணும். அதான் முக்கியம்.... நகருங்க..... நா ஆடிக் காட்டறதை கவனமா பாருங்க. புரியும். கமான். மிஸ். சஹானா"

அவளது கையைக் கோர்த்து அணைத்து முரளி ஆடிய போது... அவளுக்கு சந்தோஷத்தில் அப்படியே அந்தரத்தில் பறப்பது போ–ருந்தது. அவனது வேகத்திற்கு ஈடு கொடுத்து சுற்றிச் சுழன்று ஆடிய போது... மகிழ்ச்சியில் திக்கு முக்காடித் தான் போனாள்.

ஆனால்.... இவளது காதல் ததும்பும் விழிகளை நேருக்கு நேராக சந்திப்பதைத் தவிர்த்தான் முரளி. அதனால் அவளது அடி டனதில் ஏமாற்றம் முற்றுகையிட்டது.

"யமுனா.... யமுனா'' என்றழைத்தபடி அடுப்பங்கரைக்குள் நுழைந்தார் நடேசன். கிரைண்டரி–ருந்து மாவை வழித்துக் கொண்டிருந்தவளின் முகத்தில் ஆச்சரிய





ரேகை படர்ந்தது.

"என்னப்பா? மணி எட்டரை தான் ஆகுது.... சீக்கிரம் கடையை மூடிட்டு வந்துட்டீங்க? உடம்பு சரியில்லையா?"

"வியாபாரம் சரியில்லையம்மா...... சரி அதை விடு! இந்தாம்மா பணம்.... கம்ப்யூட்டர் சென்டருக்கு கட்டிடு"

"கம்ப்யூட்டர் சென்டருக்கு அடுத்த மாசத்துலே இருந்து நீங்க பணம் தர வேண்டாம். அப்பா... நான் தான் ட்யூஷன் எடுக்கு ஆரம்பிச்சுட்டேனே? ஒன்பது பத்தாம் கிளாஸ் படிக்கிற பசங்க..... எட்டுப் பேர் சேர்ந்திருக்காங்க இல்ல? அஞ்சரை மணியி–ருந்து ஏழு மணி வரை ட்யூஷன்.... பக்கத்துத் தெருவில் இருக்கற அபார்ட் மெண்ட்டுலே இருந்து இன்னமும் சில பசங்க...... ட்யூஷனுக்கு வந்து கேட்டாங்க.... அடுத்த மாசத்துல இருந்து செகன்ட் ஷி∴ப்ட், ஏழு மணியி–ருந்து எட்டரை வரைக்கும் எடுக்கலாம்னு இருக்கேன். "

"என்னம்மா நீ.... உன்னோட குடும்பப் பொறுப்பைப் பார்க்கும் போது மனசுல பெருமிதம் பொங்காத் தான் செய்யுது.... ஆனா தாயில்லாக் குழந்தை நான் ஒருத்தன் உயிரோட இருக்கம் போது... கஷ்டப்படறதைத் தான் என்னால தாங்க முடியலை " தழுதழுத்தார் நடேசன்.

"இதுல என்னப்பா கஷ்டம் இருக்கு? இதுல ரெண்டு நல்ல விஷயம் இருக்குப்பா... வீக் ஸ்டூடண்ட்ஸை நல்ல மார்க் எடுக்க வைச்சு தரத்தை உயர்த்தறோம்.... அதுல பெரிய ஆத்ம திருப்தி கிடைக்கும். இரண்டாவது... எங்க செலவை நாங்களே பார்த்துக்கலாம். உங்களுக்கு அதிக சிரமம் கொடுக்காம இருக்குலாம்கிற நிம்மதி.'' புன்முறுவல் பூத்த மகளின் உச்சந்தலையை இலோசக வருடி விட்டு நகர்ந்தார் நடேசன். அவள் இந்த முடிவை எடுப்பதற்குக் காரணமாயிருந்த முரளியின் ஞாபகம் மெல்ல எழுந்தது. நெஞ்சுக்குள் ஒரு சி–ர்ப்பு பொங்கியது.

# 8

பவர்ணமி முடிந்து இரண்டு நாட்களான நிலையில்..... தாமதமாய் கிளம்பியிருந்த நிலவொளியில்.... வெள்ளியில் ஓரங்கட்டின. தினுசில் அலைகள் மின்னின. கொடுக்குகளைத் தூக்கிக் கொண்டு யாதோ உடன் இருந்து விரட்டுகிற மாதிரி பரபரத்து ஓடிய நண்டுகளும்..... இதமாய் உடம்பை வருடிக் கொடுத்த உப்புக் காற்றும்..... முரளியின் மனதைத் தங்கள் பால் ஈர்க்க முடியாமல் தோற்றத் தான் போயின.

அவனது மனக் கண்ணில் சஹானா வந்து வந்து போனாள். அவ்வபோது அவள் நெஞ்சுக்குள் வந்து அழகாய் கோலமிட்டாள். விடாத படி இவனும் நீர் ஊற்றிக் கலைந்த படி இருந்தான்.

"நான் சஹியை காத–க்கிறனா? சதா... அவளது நினைப்பாகவே இருக்கிறதே? காதல் என்பது என்ன ?"

அவனைப் பொறுத்த வரையில்... காதல் தானக வர வேண்டும். பார்த்ததுமே மனதினுள் வண்ணத்துப் பூச்சி ஓசைபடாமல் பறக்க வேண்டும். இதயத்திற்குள் நூறு மின்னல்கள் மின்ன வேண்டும். நரம்புகளில் பூப் பூக்க வேண்டும். உள்ளுக்குள் மகிழ்ச்சிக் கொப்பளங்கள் வெடிக்க வேண்டும். கண்களில் கவிதை பொங்கி வழிய வேண்டும். சட்டென்று அரும்பி கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து... அடக்க முடியாத அளவுக்கு விஸ்வ ரூபமெடுத்து வெடித்து கிளம்புவது தான் காதல். !

சமீப காலமாக...... இத்தனையையும் அவன் உணர்வு பூர்வமாக அனுபவித்து வருகிறானே ?

அந்த அசாடிக்கும் அழகு அவனை அடிமைப் படுத்தி விட்டது. அது மட்டுமா? அவளது வெளிப்படையான பேச்சும்,





துணிச்சலும், குறும்புத்தனமும்.... முரளியின் மனத்தைக் கொக்கிப் போட்டு ஈர்த்து விட்டனவே... !

கரை காணாக் காதல் அவளது விழிகளில் ததும்புவதை... அவனும் அறிந்திருக்கிறான். ஆனால்.... "அவனால் தனது காதலை அவளிடம் வெளியிட முடியுமா? ஊமைக் கண்ட கனவைப் போல்... உள்ளுக்குள்ளேயே காதலைப் புதைத்து உருகி மருகிக் கொண்டிருக்க வேண்டியது தானா ?"

அவனுக்குள் கேள்விகள் முளை விட்டன.

"ட்ரிங்.... ட்ரிங்...." திரையில் நண்பன் பாஸ்கரின் பெயர் மின்னி மின்னிச் சிரித்தது.

"ஹலோ.... சொல்லு பாஸ்கி."

"எங்களிடம் இருக்கே? உங்க வீட்டுக்குப் போனேன். உங்கம்மா நீ வெளியில போயிருக்கிறதா சொன்னாங்க.... இன்னிக்கு சன்டே ட்யூஷனுக்கு லீவுன்னதும்... தனியே எங்கடா கிளம்பிட்டே?என்னைக் கூட கூப்பிடாம?"

"மனசு சரியில்லடா... பைக்கை எடுத்துட்டு அப்படியே பீச்சு பக்கமா வந்துட்டேன் பாஸ்கி"

"அதுக்கு என்ன காரணம் தெரியுமா? யூ ஆர் இன் லவ்... எஸ்.. நீ சஹானாவை காத–க்கத் தொடங்கிட்டே முரளி"

"இல்ல... இது சரியா வராது. விட்டுருடா"

"மண்ணாங்கட்டி! ஏன்மா தயங்கிறே? நம்ம காலேஜ்ல அழகிப் போட்டி வச்சா... இவ தான் மிஸ். வருவா.. அவ அழகைப் பார்த்து அவனவன் கிறுக்குப் புடிச்சு அலையறான். நேத்து டான்ஸ் ரிகர்சல் நடக்கும் போது நான் தூரத்துலே இருந்து கவனிச்சேன். அவ உன்னை ரொம்ப நேசிக்கிறாடா... பெரிய ஜீனியஸா இருந்துட்டு... ஒரு பொண்ணோட மனசைப் புரிஞ்சுக்கத் தெரியலையே? மடையா! உனக்கு நீயே முகமூடி மாட்டிக்கிட்டிருக்கியே.. ப்ளீஸ்... கம் அவுட்."

"பாஸ்கி ! என் குடும்பத்தைப் பத்தி உனக்கே நல்லாத்

தெரியும். லேடீஸ் விஷயத்துல அப்பா ரொம்ப வீக்... அதனால் தான் அம்மா அவரைப் பிரிஞ்சு தனியா வந்து எதிர் நீச்சல் போட்டு போராடி என்னை ஆளாக்கினாங்க... எங்க அண்ணனையும் எங்கப்பா கெடுத்து குட்டிச் சுவராக்கிட்டாரு...

வாழ்நாள் முழுக்க எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்காம ரணப்பட்டுக் கிடக்கிற..... எங்கம்மாவோட மனசுக்கு நாந்தான் மருந்தா இருக்கேன். எஸ். நேத்து எங்கம்மாவைத் தேடி அவங்க சிநேகிதி வந்தாங்க.... அப்போ எங்கம்மா என்ன பேசினாங்க தெரியுமா? முரளியைப் பெத்ததுக்கு நா ரொம்ப குடுத்து வச்சிருக்கணும். இந்தக் காலத்துல இப்படியொரு பிள்ளையான்னு அப்படின்னு எல்லாரும் ஆச்சரியப்படறாங்க.

எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டான். அவ்ளோ கண்ணியமான பையன். எந்தப் பொண்ணை நான் கை காட்டுறேனோ... அவ கழுத்துல தான் தா– கட்டுவான். கணவரால நொந்து வெந்த மனசுக்கு.... என் சின்னப் பையன் பாலை வார்க்கிறான். உத்தமமான பிள்ளையைக் கட்டறதுக்கு.... எந்தப் பொண்ணுக்கு குடுத்து வச்சிருக்கோ.... எனக்கு கண்ணுல ஜலம் வந்திருச்சு பாஸ்கி "

அம்மா உன் மேலே ரொம்ப பாசம் வச்சிருக்காங்க... உன் மனசுல இருக்கிற ஆசையைக் கோடிக் கட்டு..... அவங்களே உங்க ரெண்டு பேத்தையும் சேத்து வச்சிருவாங்கடா.

" வேண்டாம் பாஸ்கி ! அவங்க நம்பிக்கையை நான் குலைக்க விரும்பலை, அவங்க மனசுடைஞ்சு போனா... என்னால தாங்க முடியாதுடா... அப்பாவும் அண்ணனும்..... அம்மாவை நடைப்பொணமாக்கிட்டாங்க... நானும் வேதனைப் படுத்த விரும்பலை.... விட்டுரு"

"உள்ளுக்குள்ளேயோ காதலைப் புதைச்சுக்கிட்டிருந்தா... நீ நடைப் பொணமா ஆயிடுவேடா"

" பரவாயில்லை பாஸ்கி ! என் விதி எதுவோ..





அதுப்படி நடக்கட்டும்". "உண்மையான காதல்... ஒரு நாள் வெடிச்சுக்கிட்டு வெளியில வந்துடும்" அதற்கு மேல் பேச விரும்பாதவனாய் செல்லை அணைத்தான் முரளி.

சஹானாவின் பூப் போன்ற மிருதுவான கையைக் கோர்த்து அவளை மெல்ல அணைத்தபடி தான் நடனமாடியது... மீண்டும் மனக்கண் முன் வந்தது.

இள வட்டங்களுக்கே உரிய ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல்... அவன் மனம் பாறையாய்... இது வரை இறுகிக் கிடந்தது. இறுகிக் கிடந்த மனதை இளக வைத்து காதலை மலரச் செய்து விட்டாளே சஹானா?

காதல் செய்த இரசவாத வித்தையை எண்ணி அதிசயித்த முரளியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

விரைவில்.... நண்பன் பாஸ்கர் கூறியது போல்.... அவனுக்குள் இருந்த காதல் வெடித்துக் கொண்டு வெளிப்படும் ன்றேு அவன் எதிர்பார்க்கவில்லை. காதலெனும் ரூபத்தில் மிகப்பெரிய ஆபத்து.... அவனுக்காக ஆவலாய் காத்திருந்தது. காதலெனும் ரூபத்தில் மிகப்பெரிய ஆபத்து..... அவனுக்காக ஆவலாய் காத்திருந்தது.

மொட்டை மாடி! காற்று சிலு சிலுவென்று உடம்பைத் தொட்டு விலையாடியது. தூரத்தில் பச்சையும் சிவப்புமாய் விளக்கை மினுக் மினுக்கேள எரிய விட்டுக் கொண்டு ஒரு விமானம் பறந்து கொண்டிருந்தது. மாடியின் கைப்பிடி சுவர் மீது சோகமே உருவாய் அமர்ந்திருந்தாள் தங்கை உமா.

"உமா.... தோசை சூடா வார்த்திருக்கேன். தொட்டுக்க... வெங்காய சாம்பாரும் உனக்குப் பிடிச்ச கொத்தமல்லி சட்னியும் வச்சிருக்கேன். என்ன... இங்க வந்து உட்கார்ந்திருக்கே?" படியேறி வந்த யமுனா, உமாவின் மோவாயைத் தொட்டு நிமிர்த்தினாள்.

நிலா வெளிச்சத்தில்... அவளது விழிகள் கண்ணீரில் பளபளத்தன." எ...... என்னாச்சு உமா?

"நானும் என் ஃபிரண்டும் அசெம்பிளியில

பாடுவோம்னு சொன்னேன் இல்ல? மிஸ் கூட எங்களைப் பார்த்துட்டு..... உங்களுக்கு வாய்ஸ் பிரமாதமா இருக்கு.... முறைப்படி பாட்டு கத்துக்கிட்டா அமோகமா வருவீங்க அப்படின்னு பாராட்டினாங்களே?

"உன்னோட ஆசை நியாயமானது தான்..... நல்லாப் படிக்கிற பொண்ணு... உனக்கு குரல் வளமும் ஆர்வமும் இருக்கு... பாட்டு கத்துக்கணும்னு ஆசைப் படறே.... இது தப்பா? தாத்தா உன்னைத் திம்மவே மாட்டாரு..... நான் தான் ட்யூஷன் எடுத்து இருக்கேனே? ∴பீஸைப் பத்திக் கவலைப் படாம.... நாளைக்கே பாட்டு கிளாஸ்லே யாராவது சேர்ந்துடு சரியா? நானே வந்து உன்னைச் சேர்த்து விடறேன். பக்கத்துல யாராவது பாட்டு கிளாஸ் எடுக்கிறாங்களான்னு விசாரிக்கணும். வா வந்து முதல்லே சாப்பிடு"

"அ... அக்கா! என் ∴பிரண்ட் சேர்ந்த இடத்துலேயே நானும் சேர்ந்துக்கிறேன் அக்கா. அவங்க வீடு ராம் நகர்லே இருக்கு... ப்ளீஸ் அக்கா"

"கொஞ்சம் தூரமாச்சே? சரி.... உன் ஆசையைக் கெடுப்பானேனே? அங்கேயே சேர்ந்துக்கே" புன்னகைத்தாள். சந்தோஷம் தாளாமல் தமக்கையைக் கட்டிக் கொண்டாள் உமா. இருவரையும் பார்த்து விதி சிரித்தது.... அவர்களைப் பெரும் சோகக் கடலில் தள்ளி விட சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.

---

## 9

---

"நாங்க உள்ளே வரலாமா?" தங்கை உமாவுடன் வந்த யமுனா.... அந்த வீட்டின் வாசலருகே நின்றபடி தயக்கமாய் குரல் கொடுத்தாள்.

அடுப்பங்கரை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்





ரங்கநாயகி. அவரது பார்வை இருவரின் மீதும் படிந்தது. "உள்ளே வாங்கம்மா"

காவி பட்டையடிக்கப்பட்ட உயரமான திண்ணைகளைக் கடந்தால் ரேழி..... அதையும் தாண்டினால் பெரிய கம்பி முற்றம்.... முற்றத்திலிருந்த அழகான துளசி மேடையில் செழிப்பாக வளர்ந்திருந்தது துளசிச் செடி.... துளசி மேடையில் சிறிய அகல் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. கூடத்தில்..... சாமி சிலைகளும் படங்களும் வைக்கப்பட்டிருந்த அலமாரிக்குக் கீழே குத்து விளக்கு சுடர் விட்டு பிரகாசித்தது.

கூடத்துச் சுவருகே...... வீணையும், தம்புராவும், ஆர்மோனியப் பெட்டியும் வைக்கப் பட்டிருந்ததை பிரமிப்புடன் பார்த்தாள் உமா.

"உமா! அந்தம்மா வர்றாங்க பாரு"

"வணக்கம் அம்மா" பதிலுக்கு கை கூப்பியவரை எங்கேயே பார்த்த மாதிரி இருந்தது.

"நான் யமுனா... இவ என்னோட தங்கை உமா. இவளுக்கு நல்ல குரல் வளம் இருக்கு. பாட்டு கத்துக்கணும்னு ரொம்பவே பிரியப் படறா..... எட்டாம் கிளாஸ் படிக்கிறா"

"சங்கீதம்கிறது உன்னதமான கலை... சிரத்தையும் அக்கறையும் இருக்கிற குழந்தைகளுக்குத் தான் நான் தொடர்ந்து கத்துக் கொடுப்பேன். சிரத்தை இல்லைன்னு மனசுக்குப் பட்டா.... உடனே அவங்களை நிறுத்திடுவேன். அப்புறமா சங்கடப்படக் கூடாது. இப்பவே சொல்லிட்டேன். கறாராகப் பேசியவரின் முகத்தில் சாஸ்வதி கடாட்சம் தாண்டவமாடியது.

"இவளோட சிரத்தையைப் பார்த்துட்டு.... ரொம்ப நல்ல சிஷ்யைன்னு நீங்களே பாராட்டப் போறீங்கம்மா"

"உமா! அந்தப் பையைக் கொண்டா" என்றவள் பையிலிருந்து ஒரு தட்டை எடுத்து வைத்தாள். தட்டில் பழங்களும் வெற்றிலைப் பாக்கும், நூற்றியொரு ரூபாய்

தட்சிணைப் பணமும் வைத்து.... ரங்கநாயகியை பவ்யமாய் ஏறிட்டாள்.

"அம்மா! உன்னதமான கலையை அவளுக்குக் கத்துக் கொடுக்குப் போறகுரு நீங்க.... பெரிய மனசு பண்ணி இந்த சின்ன தட்சணையை நீங்க ஏத்துக்கணும். எங்களுக்கு அம்மா இல்ல.. உங்களைப் பார்த்தா.... பெத்த தாயைப் பார்க்கிற மாதிரி நெஞ்சுக்குள்ளே நிறைவா இருக்கும்மா.... உமா." உமா! அவங்க கால்லே விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கோ... உனக்கு குருவாச்சே"

நெகிழ்ந்து போய் கை நீட்டித் தட்டை வாங்கிக் கொண்டார் ரங்கநாயசி. "நல்ல நாளும் அதுவுமா உங்க ஆசிர்வாதம் கிடைக்க.... குடுத்து வச்சிருக்கனும். நானும் நமஸ்காரம் பண்ணிக்கிறேன். கால்களைத் தொட்டுப் பணிந்தவளின் தோளைத் தடவினார்.

"ந.... நல்லாயிரும்மா" இந்த காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா? அவரது மனதில் நல்ல விதமான அபிப்பிராயம் வந்து அமர்ந்தது.

"உமா! பாட்டு கிளாஸ் முடிஞ்சதும் தனியா கிளம்பிடாதே.... இங்கேயே இரு.... கிரியை அனுப்பி வைக்கிறேன். சரியா?

மீண்டும் கை கூப்பி வணங்கி விட்டு விடை பெற்றாள் யமுனா.

நேர்த்தியாய் அளவு வைத்து கோடு போட்டது போல் மழை, நேர் கோடாய் பூமியைத் துளைத்துக் கொண்டிருந்தது. சுழன்றடித்த காற்றில் மரங்கள் பேயாட்டம் போட்டன. தோட்டத்துச் செடிகள் குளிருக்கு நடுங்கி ஒன்றுடன் ஒன்று சாய்ந்து ஒட்டிக் கொண்டிருந்தன.

ட்யூஷன் முடிந்துவிட்டிருந்தது. அத்தனை பிள்ளைகளையும் அவரவர் வீட்டி–ருந்து குடையுடன் வந்து அழைத்துச் சென்று விட்டனர்.





வீட்டு வாச–ல் வந்து கவலையுடன் எட்டிப் பார்த்தாள் யமுனா. அதி, பயங்கர வெளிச்சத்தோடு மின்னலொன்று வானில் முகம் காட்டி விட்டுப் போனது. அடுத்த சில கணங்களில் டமடமவென்று இடிச் சத்தம்.

கவலை தோய்ந்த முகத்துடன் கூடத்திற்குள் நுழைந்தவளை ஏறிட்டார் தாத்தா சண்முகம். "தாத்தா! கிரி தலைவ–ன்னு சொல்–ட்டு.... அரைமணி நேரத்துக்கு முன்ன சுருண்டு படுத்தான். இப்போ காய்ச்சல் அனலாக் கொதிக்குது... உமாவை வேற கூட்டிட்டு வரணுமே? நானே போய் கூட்டிட்டு வந்துடறேன்.

குடையைத் தேடி எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். " பாத்தும்மா! வயசு பொண்ணுங்க ஜாக்கிரதையா வங்க. காலம் கெட்டுக் கிடக்கே..... ரொம்ப தூரமா யமுனா?

"பதினைந்து நிமிட நடைதான் தாத்தா... நீங்க விசனப்படாம இருங்க.... நாங்க ஜாக்கிரதையா வந்துடறோம். " நடையி–ருந்த செருப்புகளைக் கால்களில் திணித்துக் கொண்டே பதிலளித்தாள்.

அவள் அந்த வீட்டை அடையும் போது மழையின் தீவிரம் குறைந்து வானம் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது.

"அட..... யமுனாவா? வாம்மா... என்ன இந்த நேரத்துல?"

உமாவை பாட்டு கிளாஸில் சேர்த்து விடும் போது ரங்கநாயகியைச் சந்தித்தது தான். மூன்று வாரங்கள் உருண்டோடியும் அவளது பெயரை ஞாபகத்தில் வைத்திருக்கிறாரே?

யமுனாவுக்குள் ஆச்சர்யம் எட்டிப் பார்த்தது.

"உமாவைக் கூட்டிட்டு போகலாம்னு வந்தேன்" ."கொஞ்ச நேரத்துக்கு முன்ன உங்கப்பா வந்து கூட்டிட்டு போயிட்டாரே."

"கடையை சீக்கிரம் மூடிட்டாரு போ–ருக்கு... எதிர்த்தாப்பல நான் அவங்களைப் பாக்கலையே? ஸ்கூட்டரை வேற ரூட்லே விட்டுட்டாரு போல...." மெல்–ய குர–ல் பதிலளித்தவளின் விழிகள்.... ரங்கநாயகியின் முதுக்குப் பின்னால் வந்து நின்ற முரளியைக் கண்டு விதிர்த்தன.

"அட.... மிஸ் யமுனா! ?" அவனது குர–ல் வழிந்த ஆச்சர்யத்தைக் கண்டு விருட்டென்று திரும்பினார் ரங்கநாயகி.

"இவனை உனக்குத் தெரியுமாப்பா? "

"அம்மா... இவங்க என்னோட காலேஜ் மேட். ∴ பர்ஸ்ட் இயர் ஸ்டுடண்ட். ரொம்ப நல்லா படிக்கக் கூடியவங்க.... ஆனா... இவங்க இரத்த தானம் பண்ணக் கூடியவங்க... ஆங்... மிஸ்... யமுனா! உள்ளே வாங்களேன்"

"இ... இல்ல இருக்கட்டும் நா கிளம்புறேன்?

"அப்போ கடந்த சில வாரமா பாட்டு கிளாசுக்கு வருதே ஒரு சின்னப் பொண்ணு? அவ உங்க தங்கையா? உங்க ரெண்டு பேத்துக்கும் கொஞ்சம் கூட ஜாடை ஒத்துப் போகலையே?"

"அவ... அவ.... என் கூடப் பிறந்த தங்கை இல்ல" சற்று தயங்கிய யமுனா.... உமாவைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறினாள்.

பிரமிப்பின் உச்சக் கட்டத்திற்கே சென்று விட்டார் ரங்கநாயகி. உடன் பிறந்த தங்கையைப் போல் உமாவின் மேல் என்ன ஒரு கரிசனம் காட்டுகிறாள்? அவள் மீது எவ்வளவு பாசம் ... அக்கறை .... இரக்கம் காட்டுகிறாளே?

அவளது மனிதாபிமானமும், பாசமும், பண்பும், மரியாதையும், அடக்கமும் .. ரங்கநாயகியின் மனதைக் கட்டிக் போட்டுவிட்டன.

"அப்போ நான் வரேன் அம்மா"

"கொஞ்சம் நில்லுங்க யமுனா...... மெயின் ரோடு வரைக்கும்





துணையா வரேன்..... கதவைச் சாத்திக்கோங்க அம்மா .... இதோ வந்துடறேன்" என்று வார்த்தைகளை உதிர்த்துவிட்டு விரைந்த மகனை வியப்புடன் ஏறிட்டார் ரங்கநாயகி.

"இல்ல பரவாயில்ல....... நா போயிடுவேன். நீங்க சிரமப்பட வேண்டாம்" தர்ம சங்கடமாய் முரளியையும் ரங்கநாயகியையும் மாறி மாறி ஏறிட்டாள் யமனா.

"ஒரு சிரமமும் இல்ல...... மெயின் ரோடு வரைக்கும் அவன் வரட்டும்" அன்புடன் கடிந்து கொண்டதும்...... மௌனமாய் குடையை விரித்தபடி நடந்தாள். ஒரே குடையில் அவர்கள் ஜோடியாகச் செல்வதை .... விழிகள் விரியப் பார்த்தார் ரங்கநாயகி.

சற்று தூரம் நடந்ததும் மழை மீண்டும் வ–த்தது. கண்ணைக் குருடாக்கும் வெளிச்சத்தோடு பெரிய மின்னலொன்று தோன்றி நடுங்க வைத்தது. அதன் கூடவே காதுகளைப் பிளக்கும் படியான இடிச் சத்தம் ..... வானமே இடிந்து தலையில் வீழ்ந்து விட்டதைப் போன்ற பயங்கர சத்தத்தைக் கேட்டதும்..... ஐயோ அம்மா நடுங்கிப் போய் கண்களை இறுக மூடியபடி முரளியின் தோளோடு ஒண்டினாள். யமுனா "பயப்படாதே யமுனா......... நானிருக்கேன்" புறாக் குஞ்சாய் நடுநடுங்கியவளை ஆபத்தவனாய் அணைத்துக் கொண்டான் முரளி.

---

# 10

---

கல்லூரி வளாகத்தில், பரந்த மைதானத்திற்கு அருகே...... வலது பக்கமாய் ஏழெட்டு படிக்கட்டுகள் இறங்கினால் ....... புல்வெளிகளும் செடி, கொடிகளுமாய் ஒரு சிறிய நந்தவனம் இருந்தது. மீன்கள் துள்ளிக் குதிக்கும் அல்–க்குளம்... அதைச் சுற்றி சருகுகளுடன் உதிர்ந்த மகிழம்

பூக்கள்.

அல்-க் குளத்தின் சுற்றுச் சுவற்றைச் சுற்றி....... பதினெட்டு வயது பருவச் சிட்டுக்கள் அமர்ந்து........ மதிய உணவைக் கொறித்தபடி கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

"ஏண்டி சஹி ! நேத்து உங்க டான்ஸ் ரிகர்சலை வேடிக்கை பாத்தோம்டி ...... உனக்கு அந்த தேர்ட் இயர் பாலாஜிக்கும்......ஜோடிப் பொருத்தம் சூப்பர்டி " கிளாஸ் மேட் மேரி வேண்டுமென்றே சஹானாவை வம்புக்கு இழுத்தாள்.

"என்ன மேரி நக்கலா ? நானே ஏகப்பட்ட கடுப்புல இருக்கிறேன். நீ வேறே வெறுப்பேத்தறே ?" எரிந்து விழுந்தாள்.

" உன் கூட சேர்ந்து ஆடறப்போ........ சந்தோஷத்துல அவன் கண்ணுல பல்பு எரியுதே..... பாத்தியா நீ ?"

"அந்த மாங்கொட்டை மூஞ்சியைப் பாக்கவே எனக்கு சகிக்கிலை....மூஞ்சியைப் பாரு.... இஞ்சி தின்ன குரங்கு மாதிரி... அவனோட மூச்சியைப் பாத்தாலே..... எனக்கு நசுங்கிப் போன அலுமினியச் சொம்பு தான் ஞாபகத்துக்கு வருவது."

"பாத்தீங்களாடி ? சஹிக்கு சகிக்கலையாம். நாளைக்கு இன்டர் காலேஜ் காம்படிஷன்லே அவன் கூட ஆடித் தானே ஆகணும் ? இவ முகத்தைப் பாருங்கடி .... எப்படி அஷ்ட கோணலாகுதுன்னு......" என்று மேரி கூறியது தான் தாமதம்... வெள்ளிக் காசுகளை இரைத்து விட்டாற் போல் ..... இளம் பெண்கள் கலகலவென்று சிரித்து விட்டனர்.

"போதும் நிறுத்து மேரி......." அன்னிக்கு ரிகர்சல்லே..... முரளி என் கூட ஆடினதையும் பார்த்தே இல்லை ? அந்த ஜோடிப் பொருத்தம் எப்படி இருந்துச்சுன்னு சொல்லேன் ..... நல்ல விஷயங்கள் உன் கண்ணுல படாதே ? ".

" இந்த காலேஜீக்கு.... முடிசூடாத மன்னன் முரளி..... அவருக்கு யார் பொருத்தம் தெரியுமா ? அதுக்கு முன்னாடி ஒரு ஸீன் சொல்- முடிச்சுடறேன் எங்க அக்கா ராம் நகர்லே தான் குடியிருக்கா... ரெண்டு நாள் முன்னாடி அவளைப்





பாத்துட்டு சாப்பிட்டு வீட்டை விட்டுக் கிளம்பறப்போ... நைட் மணி எட்டாயிருந்த மழை வேற பிடிச்சுக்கிச்சு... பஸ் ஸ்டாப்புல அரை மணி நேரம் நின்னது தான் மிச்சம்... பஸ் வரலை.. சரி திரும்பவும் அக்கா வீட்டுக்கே போயி தங்கிடலாம்னு முடிவு பண்ணி ஷார்ட் கட்லே நுழைஞ்சேன்.

கொட்டற மழையில் .. முரளி கூட ஒரு பொண்ணு குடையைப் படிச்சுக்கிட்டு வந்துகிட்டிருந்தா.. இடி மின்னல் சத்தத்துல அவ வெட வெடன்று நடுங்க... முரளி அவ தோள்லே கை போட்டு அரவணைச்சு நடந்தாரு... முரளிக்கேத்த உயரம், அழகு, அவரை மாதிரியே படிப்புல நம்பர் ஒன் அவரு மாதிரி அடக்கம் நிதானம்.... அந்தப் பொண்ணு யாரு தெரியுமா ? மேலும் மேலும் வெறுப்பேற்றினாள் மேரி. 668383

யமுனாவுக்கு சுரீரென்றுது. எலுமிச்சை சாதத்தை வாய்க்குள் திணித்தவள் திகிலுடன் ஏறிட்டாள். அவளுக்கு எப்போதும் அரட்டைக் கச்சேரியில் ஈடுபடுவதோ.... வம்பு பேசுவதோ பிடிக்காது. தான் உண்டு தன் வேலை உண்டு என்று கடமையே கண்ணாக இருப்பவள். 894.8113 LAX

தொண்டைக்குள் இறங்க மறுத்த சாதத்தை சிரமப்பட்டு விழுங்கி விட்டு..... டிபன் பாக்ஸை ஹேண்ட் பேக்கில் திணித்துக் கொண்டு அவசரமாய் எழுந்தாள்.

"ஏய்.... ஏய் மேரி அந்தப் பொண்ணு யாரடி ?" ஏக காலத்தில் கேட்டபடி மேரியை ரவுண்ட் கட்டி நின்றனர். வம்புக்கு ஆலாய் பறந்த இளம் பெண்களைப் பார்த்த யமுனாவுக்கு...... தொண்டைக்குள் ஏதோ கசப்பாய் ஊர்வதைப் போன்றிருந்தது. மூக்கும், காதுமடல்களும் ஜிவ்வென்று சூடேறி போயின.

"சாட்சாத் நம்ம யமுனா தான்" விஷயத்தைப் போட்டு உடைத்தாள்.

"என்னது ?" விருட்டென்று திரும்பினாள் சஹானா.

"யமுனா! மேரி சொல்றது நிஜமா ?" அவளது தோளைத்

...NEMARA PUBLIC LIB...

தொட்டு அசைத்தாள்.

"சஹி... மேரியைப் பத்தி உனக்கே தெரியுமே" ஒண்ணைப் பத்தாக்கி பேசக் கூடியவளாச்சே" அவ ஜோடி கீடின்னு பேசறது எனக்கு சுத்தமா பிடிக்கலை.... மிஸ்டர் முரளியோட அம்மா தான்... எங்க உமாவுக்குப் பாட்டு கத்துக் கொடுக்கிறாங்க....... கிரிக்கு உடம்பு முடியலை... அதனால அவளை நனோ கூட்டிட்டு வரப் போனப்ப தான்.... எனக்கு இந்த விஷயமே தெரியும்.

நான் அங்க போறதுக்கு முன்னாடியே எங்கப்பா உமாவைக் கூட்டிட்டுப் போயிட்டாரு... முரளியை மெயின் ரோடு வரைக்கும் எனக்குத் துணையா..... அவங்கம்மா தான் அனுப்பி வச்சாங்க.... தட்ஸ் ஆல்! அதுக்கு மேல ஒண்ணுமே இல்ல" படபடவென்று பொரிந்து தள்ளி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள் யமுனா.

"ஒண்ணுமே இல்லைன்னு அழுத்தம் திருத்தமா சொல்ட்டுப் போறாளே? ஏதோ ஒண்ணு கண்டிப்பா இருக்கும்னு தோணுதடி... அந்த சகல கலா வல்லவனை வளைச்சுப் போடலாம்னு... சஹி சகல விதமான முயற்சிகளும் செய்யறா... ஆனா யமுனா ஊமையா இருந்துகிட்டே காரியத்தை சாதிச்சுடுவா பாருங்கடி" என்று மேரி கூறியதும்...... சுற்றியிருந்த மாடர்ன் யுவதிகள் "களுக்" என்று சிரித்து.... சஹானாவின் வயிற்றெரிச்சலைக் கிளறி விட்டனர்.

"ஷட் அப்" அவளது அழகிய விழிகள் அனலைக் கக்கின.

இன்டர் காலேஜ் காம்படிஷனுக்காக... அந்தக் கல்லூரி விழாக் கோலம் பூண்டிருந்தது. வண்ண வண்ண விளக்குகளும், தோரணங்களும் கட்டப்பட்டு தேவலோகமாய் ஜொ—த்தது.

மேக்கப் ரூமில் டான்ஸ் மாஸ்டரும், முரளியும் நிலைக் கொள்ளாமல் போட்டியில் கலந்து கொள்ளப் போகும் மாணவர்கள் பீதியுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்





"இப்போ என்ன சார் பண்றது?" கவலையுடன் கேட்டாள் சஹானா. "இந்த பாலாஜிக்கு இப்படியாகும்னு யார் கண்டா? " காம்படிஷன் நடக்கப் போகுதுன்னு தெரியுமில? ஜாக்கிரதையா பைக்கை ஓட்ட வேண்டாமா? பைக் ஸ்கிட்டாகி விழுந்து கால்லே பலத்த அடியோடு படுத்துக்கிட்டானே ? போச்சு..... எல்லாம் போச்சு.... இந்தப் போட்டியில நமக்கு படு தோ—வி தான்." முரளியின் நண்பன் கார்த்திக் வாய் விட்டுப் புலம்பினான்.

"நம்பிக்கையைத் தளர விடக் கூடாதுடா! டேய் முரளி... இன்னும் பத்து நிமிஷம் தான் பாக்கி இருக்கு. சீக்கிரமா மேக்கப் போடு.... சஹானா கூட நீ தான் ஆடணும். ஏன்னா சஹானா பாலாஜிக்கு பதிலா வேற யார் ஆடினாலும் தப்பு, பளிச்சுன்னு தெரிஞ்சுடும். நீ தான் ஆடணும், வேற வழியே இல்ல... க்விக்" சமயோகிதமாய்ப் பேசிய நண்பன் பாஸ்கரை... கண்கள் மின்னப் பார்த்தான் முரளி.

"ஆமாம்பா! நீ தான் ஆடணும். தேர் இஸ் நோ அதர் வே" மாஸ்டரும் [illegible] உறுதி தொனிக்கப் பேசினார்.

போட்டியில் கலந்து கொள்ள சஹானாவுடக் ஜோடியாக முரளி மேடையேறிய போது.... அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கு குஷி பிய்த்துக் கொண்டு போனது.

சில குறும்புக் கார மாணவர்கள்... " அலைபாயுதே" பட நாயகன் மாதவன் ஸ்டைல் சஹானாவைப் பார்த்து.... " சகியே..... சகியே" என்று உச்சஸ்தாயியில் பாடினார்கள்

" முரளி முன்னாடி வந்து நின்னாலே..... சக்ஸஸ் பின்னாடி வரப் பாகுதுன்னு அர்த்தம் டோய்...." என்று கத்தி விட்டு "விஷ் விஷ்" என்று விசிலடித்தார்கள்.

அவர்கள் எதிர்ப்பாத்தது வீண் போகவில்லை. முரளி, சஹானா ஜோடி பிரதானமாக நின்று பிரமாதமாய் ஆடியது— சால்சா நடனத்திற்கே ஹை லைட்டாக அமைந்தது. அவனுடன் ஆடும் சந்தோஷத்தில்..... தனது ஒட்டு மொத்தத் திறமையையும் வெளிப் படுத்தினாள் சஹானா.

தனது காதலை உள்ளுக்குள் புதைத்து மறைத்து வைப்பதில்... இதுவரை வெகு உறுதியாய் இருந்தவன் தான் முரளி.

ஆனால் இவ்வளவு கிட்டத்தில் அணைத்து ஆடிய போது... அவனுக்குள் இருந்து உறுதி உடைந்து தூள் தூளாகிக் கொண்டிருந்தது.

"அந்த முகம், அந்த பாவங்கள், அந்த அழகு, அந்த நளினம், அந்தக் கவர்ச்சி, அந்த இடை... ." எல்லாமாகச் சேர்ந்து பனிப் பாறையாய் இறுகிக் கிடந்த அவன் மனதை உருக்கி இளகச் செய்தன.

ஆட்டத்தின் முடிவில் அவனுக்கு மட்டுமே கேட்கும் படி "ஐ லவ் யூ ஸோ மச் முரளி" என்று அவள் கூறிய போது.... மேகமாக மிதந்தான்..... பறவையாகப் பறந்தான்......... உருகினான்...... சிரித்தான் ஒன்றுமே இல்லாமல் கரைந்து போனான். விதி வெற்றிக் களிப்புடன்.

---

# 11

---

ரம்மியமான அதிகாலைப் பொழுது.

குருவியின் "கீச் கீச்." கோரஸ்சால் கீழ் வானம் மகிழ்ந்து சிவக்கிறதா அல்லது வானத்தின் வர்ண ஜாலத்தைக் கண்ட பரவசத்தில் பறவைகள்

பதினைந்து புள்ளிகளை வைத்து நேர்புள்ளியாய் மூன்று புள்ளி வரையிலாய் குறுக்கி அத்தனை புள்ளிகளையும் வளைவு சுழிவுகளுக்குள் அடக்கி விட்ட திருப்தியில் நிமிர்ந்தாள் யமுனா.

"ஒரு மணி நேரமா கோலம் போட்டுட்டு இப்ப அதை வேற அழகு பாத்துட்டு நிக்கிறே." வாசலில் நின்ற நடேசன் புன்னகைத்தார்.





" இதுக்கே இப்படி சொல்றீங்களே அப்பா? அக்காவோட ரசனையே தனி... அவளால தினமும் இழுத்துப் போர்த்திக்கிட்டு நான் தூங்கறேன் தெரியுமாப்பா? ." ஸ்வெட்டர் ஸ்கார்ஃப் அணிந்திருந்த உமா....... குளிரில் இலேசாய் வெடவெடத்த படி பேசினாள்.

"அப்படி என்ன தான் பண்றா உங்க அக்கா?" உமாவின் தலையில் ஆதுரமாய் கை வைத்தபடி கேட்டார்.

"ஜன்னலைத் திறந்து வச்சுக்கிட்டுதான் எப்பவும் தூங்கறா.... எனக்கு ஜன்னல் வழியா இருட்டு தெரிஞ்சா பயமாயிருக்கு... ஆனா அக்காவுக்கு ஜன்னலைச் சாத்தினா மூச்சடைக்கிற மாதிரி இருக்காம். "

"உமாவுக்கு ரசனையே இல்லை அப்பா" கோல மாவு கிண்ணத்தை நிலைப்படி அருகே வைத்த யமுனா..., கிச்சனுக்குச் சென்று மாவு படிந்த கைகளைக் கழுவினாள்.

யமுனாவின் முகத்தில் இளநகை அரும்பியது. உமா கூறுவது உண்மை தான்! ஜன்னல் வழியாக ராத்திரி வானத்தை ரசிப்பாள் யமுனா. வைரக் கம்மல் போல் மின்னும் நட்சத்திரங்கள் இரவில் பூக்கும் நைட் க்வீன் மற்றும் பன்னீர்ப் பூவின் வாசத்தை சுமந்து வரும் இளந்தென்றல் காற்று... நிலா, வானத்து சின்ன சின்ன மின்னல்கள் எல்லாம் வேண்டும் அவளுக்கு.

ஆனால் சமீப காலமாய் நிலா நட்சத்திரங்கள், வானம் என்று எதைப் பார்த்தாலும் முரளியின் களையான முகம் தான்.... அவளுக்குத் தெரிந்தது.

வேப்பம் பூ வாசனையே உள்ளிழுத்து ராத்திரி பூக்கும் பன்னீர்ப் பூவின் மணத்தில் கிறங்கும் போதெல்லாம்.... முரளியின் ஞாபகம் தான் அவளை ஆட்டிப் படைத்தது.

கொல்லைப்புற வாசலைத் திறந்தாள் யமுனா. மஞ்சள், சிவப்பு, ரோஸ், வெள்ளை, வயலட் என்று கதம்ப நிறத்தில் தோட்டத்துப் பூக்கள் சிரித்தன.ஒவ்வொரு பூக்களிலும்

முரளியின் முகம் தான் தோன்று மறைந்தது.

காதல் கொண்ட மனம் அவளைப் பாடாய் படுத்தியது. ஒவ்வொரு நாளும் புதிதாய் விடிந்ததைப் போல்..... புதிதாய் பிறந்தவளைப் போல்..... புத்துணர்ச்சியோடு வலம் வந்தாள்.

தோட்டத்து மலர்களைப் பார்வையால் ஆசையுடன் வருடிக் கொடுத்து விட்டு கிச்சனுக்குள் அடைக்கலமான போது.... இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து கன்னங்களில் ஒத்தடம் கொடுத்தபடியே உமா வந்தாள்.

"அக்கா! வர்ற பொங்கல் அன்னிக்கு ரங்கநாயகி மேடம் உன்னைக் கையோட கூட்டிட்டு வரச் சொன்னாங்க.... பாட்டு கத்துக்கற எல்லா ஸ்டுடண்ட்ஸையும் வரச் சொல் இருக்காங்க.... அவங்க வீட்டுலே ஏதோ விசேஷமாம்."

"பொங்கல் அன்னிக்கு எல்லோர் வீட்லேயும் விசேஷம் தான்! என்னை எதுக்கு வரக் சொன்னாங்கன்னு தெரியலையே ?" இலசாக முணுமுணுத்தான் யமுனா.

அன்று மழை கொட்டிய போது..... மனசு கேட்காமல் முரளி இவளுக்குத் துணையாக இவளது வீடு இருக்கும் தெரு முனை வரை வந்து விட்டுச் சென்றது..... ஞாபகத்திற்கு வந்தது. அதன் பின்பு யமுனா அவனது வீட்டிற்கு செல்லும் வாய்ப்பு ஏற்படவே இல்லை.

"அன்னிக்கு மேடத்தோட சன் முரளியோட பிறந்த நாளாம்..... உன்னை கண்டிப்பா அழைச்கட்டு வரச் சொன்னாங்க"

குபீரென்று யமுனாவின் முகத்தில் விளக்கு போட்டாற் போல் வெளிச்சம் பரவியது.

"என்னை........ என்னத்துக்கு வரச் செரல்றாங்க ?"

"பெரியவங்க ஆசையா கூப்பிடறாங்க..... போயிட்டு வாயேன் யமுனா. முத நான் ஞாபகப் படுத்தும்மா.... நான் கொஞ்ச பழங்கள் கடையில் இருந்து எடுத்துட்டு வரேன்.





குடுத்துட்டு அவர்களை நமஸ்காரம் பண்ணிட்டு வாங்க.... நல்ல நாளும் அதுவுமா பெரியவங்க கிட்ட ஆசிர்வாதம் வாங்கிக்கறது நல்லதும்மா."

அழுத்தம் திருத்தமாச் சொன்னார் நடேசன்.

"சரிப்பா! இந்தாங்க காபி"

"என்னம்மா இது.... காபியில இவ்ளோ சர்க்கரை போட்டிருக்கே ?"

"சரிப்பா.... பேச்சு வாக்குல கவனக் குறைவா இருந்துட்டேன்"

முரளியின் பிறந்த நாளைப் பற்றி அறிந்து கொண்ட சந்தோஷத்தில் மனம் ஆர்ப்பரித்தது. அவளும் பிரமப் பிரயத்தனம் செய்து மனதைக் கட்டுக்குள் வைக்க முயற்சித்தாள். அவனது ஞாபகம் எகிறி எழுந்த்தான் செய்தது என்பது நிஜம்!

"அடடே வாங்க யமுனா! விஷ் யூ ஹேப்பி பொங்கல்" சிரித்தான் முரளி. வெளிர் நீலக் காட்டன் புடவையில் தேவதையாய் மிளிர்ந்தாள் யமுனா.

"தேங்க் யூ... மெனி மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆ∴ப் த டே" பொக்கையை நீட்டினாள் யமுனா. கண்ணாடித் தாள் சலசலவென்று சப்திக்க முழுதும் செக்கச் செவேலென்ற சிவந்த ரோஜாக் கொத்து கீழே சின்னதாய் பிரம்புக் கூடை.... அதன் மீது பளபளவென்று மின்னியது வாழ்த்து அட்டை

"இது எங்க தோட்டத்து ரோஜாக்களைப் பறிச்சு.... அக்காவே தயார் பண்ணின பொக்கேயாக்கும்" உமா பெருமிதமாய் கூறினாள்.

"வாவ்! ∴பெண்டாஸ்டிக் யமுனா.... தேங்க் யூ ஸோ மச்! அம்மா உமா மூலமா இந்த விஷயத்தை சொல் அனுப்பினாங்களாக்கும் ?" கண்கள் மின்ன சிரித்தான் முரளி.

"வாம்மா யமுனா... அட.... பொக்கே உனது கை

வண்ணமா ? அருமையா இருக்கும்மா" என்ற ரங்கநாயகி உரிமையாய் யமுனாவின் தோளில் கை வைத்தாள்.

பழங்கள் அடங்கிய பையை மோடாவில் வைத்து விட்டு கையி ருந்த சிறு காகிதப் பொட்டலத்தைப் பிரித்தாள் யமுனா.

"ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போயிட்டு வரோம். குங்குமப் பிரசாத்தை எடுத்துக் கோங்க" என்றாள்.ரங்கநாயகி கங்குமத்தை எடுத்து முரளியின் நெற்றியில் தீற்றலாய் இட்டு விட்டார்.

"தீர்க்காயுசா அமோகமா இருக்கணும்பா" என்றார். உள்ளம் கவர்ந்த முரளிக்கு எந்த குறையும் வரக் கூடாது என்று யமுனா மனதார வேண்டிக் கொண்டு தான் வந்திருந்தாள்.

"வாம்மா....... வெத்தலை பாக்கு வாங்கிக்கோ! இருந்து சாப்பிட்டுப் போகலாம்" பூஜையறைக்குள் அழைத்துச் சென்றாள் ரங்கநாயகி.

"நல்ல குணவதியாய் இருக்கும் யமுனாவே மருமகளா வர வேண்டும்" என்று உள்ளுர வேண்டிக் கொண்டார் ரங்கநாயகி.

"இதே வீட்டிற்கு மருமகளாகும் பாக்கியத்தைத் தர வேண்டும்" என்ற கோரிக்கையை கடவுளிடம் வைத்தாள் யமுனா. ரவிக்கைத் துண்டு பழங்கள், தாம்பூலம், வைத்துக் கொடுத்தவரின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள்.

அனைவரையும் வரிசையாய் அமர வைத்துப் பரிமாறினார் ரங்கநாயகி. "பொங்கல் ரொம்ப நல்லா இருக்கும்மா" முறுவ த்தாள் யமுனா.

"பழம், பாயாசம் எப்படியிருக்குன்னு சொல்லுங்க யமுனா.... அம்மாவுக்கு நல்ல கை மணம்" எதிர் வரிசையில் அமர்ந்து சாப்பிட்ட முரளி முறுவ த்தான்.





சிவந்த நெற்றியில் குங்குமத் தீற்ற டப் பட்டதும் முரளியின் முகம் முன்னை விடப் பொ வுடன் மிளிர்ந்தது. யமுனாவின்...... மருண்ட விழிகள் அவ்வ போது கரை காணாக் காதலுடன் முரளியின் மீது படிந்து மீண்டன.

"அம்மா! டைமாச்சு கிளம்பறேன்மா.... திருப்தியா சாப்பிட்டுட்டேன்... இனி நான் கிளம்பலாம் இல் யா ?"

" பாத்தியா யமுனா.... இவனும் ஃபிரண்ட்ஸும் மகாப புரம் பார்த்துட்டு [illegible] கிளம்பிட்டாங்க.... கால்லே வெந்நீர் ஊத்திக்காத குறையா அவசரமா ஓடறான் பாரு" ங்கநாயகி அங்கலாய்த்தார்.

"இன்னிக்கு பொங்கல் திருவிழா, என்னோட பிறந்த நாள், இன்டர் காலேஜ் காம்படிசன்லே வேற ஜெயிச்சிருக்கோம். சந்தோஷத்தைக் கொண்டாடலாம்னு கிளம்பறோம். ப்ளீஸ் மா வரேன்.... மிஸ் யமுனா ! நான் வரட்டுமா ? ஸீ யூ.... பை! " தலையாட்டி விட்டு பைக்கிலேறி விருட்டென்று பறந்தான் முரளி.

மகாப புரத்தில்.... முரளியும், ஏழெட்டு நண்பர்களும் ஜா யாய் கடற்கரையில் குளித்துக் கும்மாளமிட்டனர். அதன் பின்.... காலத்தால் அழியாத பல்லவர் காலச் சிற்பங்களைச் சுற்றிச் சுற்றி வந்து, அணு அணுவாய் ரசித்து, தொட்டுப் பார்த்து மகிழ்ந்தான் முரளி.

நண்பர்கள் புடைசூழ உல்லாசமாக சுற்றி வந்தாலும் அவனது மனம்..... சஹானாவையே சுற்றி வந்தது

அன்று மேடையில் சேர்ந்து ஆடிய போது.... "ஐ லவ் யூ ஸோ மச் முரளி" என்று தேன் போன்ற இனிய குர ல் அவள் கூறிய போது..... அவனது செவிகளில் பாகுக் கரைசலாய் வழிந்தது.

மீண்டும் மீண்டும் செவிகளில் அவளது குரல் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

பைக்குகள் முட்டுக்காடு போட்டிங் ஏரியாவுக்கு

விரைந்தன.

சஹானா ஞாபகத்தில் மூழ்கிப் போன முரளி...... சிறு மரப் பாலத்தைக் கடந்து அந்தப் படகில் ஏறி அமர்ந்தான்.

"டேய்..... வாங்க சீக்கிரம்..... நேரமாயிட்டே இருக்குல்ல" என்ற படி அண்ணாந்து பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

சிக்கென்ற உடையில்..... கார்ச் சாவியின் வளையத்தை ஆள்காட்டி விரலில் மாட்டி சுழற்றிய படி..... அழகு முகத்தில் காதல் ததும்பி வழிய புன்னகைத்த படி நின்று கொண்டிருந்தான் சஹானா.

"மைகாட்! இவள் எப்படி இங்கு வந்தாள்? நான் நண்பர்களுடன் உல்லாசமாக இங்கே வந்த விஷயம்.... இவளுக்கு எப்படி தெரியும்?"

முகத்தில் ஒரு கேள்விக் குறியுடன் புருவங்கள் முடிச்சுப் போட அப்பால் ஏறிட்டான்.

சஹானாவுக்கு சற்றுத் தள்ளி திருதிருத்தபடி நின்றிருந்த நண்பன் கார்த்தி தர்ம சங்கடமாய் புன்னகைத்தான்.

"உன் கிட்ட தனியாப பேசணும்ணு சிஸ்டர் ரொம்ப பிரியப் பட்டாங்க..... அதான் சொன்னேன்" கூறிவிட்டு நாசூக்காக அகன்று சென்று விட்டான். சஹானா உரிமையாய் படகில் அவனருகே அமர்ந்தாள். படகு நகர்ந்து செல்லத் தொடங்கியது.

"இன்னிக்கு எனக்குத் தெரிஞ்சாகணும் முரளி. நான் உங்களை உயிருக்கு உயிரா நேசிக்கிறேன். நீங்க..... ?" கேட்டுக் கொண்டே அவனது கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டாள்.

நடப்பதெல்லாம் கனவா, அல்லது நனவா என்ற புரியாத குழப்பத்தில் கல்லாய் சமைத்திருந்தான் முரளி. அவளது





உறுதியும் வைராக்கியமும் கொஞ்சம் கொஞ்சமாய் காற்றில் பறக்க ஆரம்பித்தன.

# 12

முட்டுக்காடு! கடல் போன்ற பரந்த நீர்ப்பரப்பை காற்று காதலுடன் ஸ்பரிசித்ததும்... நீரின் மேற்பரப்பில் மேடும் பள்ளமுமாய் அலைகள் ஜனித்தன.

சஹானாவின் பட்டு கன்னத்தில் பொருந்தியிந்த தனது கரத்தை மெல்ல உருவிக் கொண்டான் முரளி. இலக்கின்றி தூரத்தில் எங்கோ வெறித்தன அவனது விழிகள்.

"ப்ளீஸ்.... என் கேள்விக்கு பதில் சொல்லுங்க முரளி... உங்களையே சதா நினைச்சு உருகி பைத்தியமாகிட்டு வரேன். நீங்க.... இல்லாம என்னால வாழவே முடியாது முரளி" தழுத்தான்.

ஒரு கனம் அவளது அகன்ற விழிகளை ஊடுவிப் பார்த்து விட்டு மீண்டும் எங்கோ வெறித்தான்.

"நான் ஒரு பெண்ணாயிருந்தும் வெட்கத்தை விட்டு... இவ்ளோ தூரம் இறங்கி வந்து கெஞ்சறேனே.... இப்பக் கூட என் மனசு உங்களுக்குப் புரியலையா முரளி? அவனது தோளைத் தொட்டு அசைத்தான்.

அழகிய விழிகளில் ஊற்றெடுத்த கண்ணீர் உடைப்பெடுத்துக் கொண்டு..... கன்னங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு இறங்கியது.

"எனக்கு அழகில்லையா? அறிவில்லையா.? எதுக்காக என்னை ஏத்துக்க தயங்கறீங்க? எனக்கு ரீஸன்

தெரிஞ்சாகனும். சொல்லுங்க"

"ஓ... அந்தஸ்து தான் என்னை உங்களோடு இணைய விடாம தடுக்குதா? உங்களுக்காக.... உங்க அன்புக்காக.... இந்த உலகத்துல எதையும் இழக்கத் தயாரா இருக்கேன் முரளி.... என்னை நம்புங்க"

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியபடி... சங்கித் தொடர் போல் ஒன்றாகத் தலைக்கு மேல் பறந்து சென்ற பறவைகளை அண்ணாந்து பார்த்தான் முரளி.

"எல்லாத்தையும் உதறிட்டு உங்க பின்னாடி வரத் தயாரா இருக்கேன் முரளி... இன்னமும் என் மேல உங்களுக்கு நம்பிக்கை வரலையா? நீங்க ஏத்துக்கலைன்னா.... நான் இங்கிருந்து உயிரோடு திரும்ப மாட்டேன். இது சத்தியம்! எனக்க நீச்சல் தெரியாது. இதோ இந்த ஏரியில குதிச்சு என் உயிரை மாய்ச்சுக்கிறேன்.... அதுக்கு அப்புறமாவது இந்த சஹியோட தூய்மையான அன்பைப் புரிஞ்சு.... ஒரு சொட்டுக் கண்ணீர் வடிச்சீங்கன்னா... என்னோட ஆத்மா சாந்தி அடையும். அடுத்து ஜென்மத்திலாவது உங்களோட இதயத்துல ஒரு இடம் பிடிக்கணும்னு.... கடவுள் கிட்ட நான் வேண்டிக்கிறேன் முரளி.

சொன்னதோடு நிற்காமல் படகிருந்து குதிக்க எத்தனித்தவளை சஹானாவைக் கண்டு அவனுக்கு சர்வமும் பதறியது. அவளது இடையில் கையை வளைத்து இந்தப் பக்கமாக இழுத்தான்.

"இல்ல... நான் சாகணும். என்னை விடுங்க.... நீங்க இல்லாம என்னால வாழ முடியாது. சாகவும் விடாம ஏன் தடுக்கறீங்க?" திமிறினாள்.

முரட்டுத்தனமாக முரண்டியவளை முழு பலத்தைப் பிரயோகித்து இழுத்து நிற்க வைத்து கன்னத்தில் "பளார்" என்று அறைந்தான்.

"என்ன காரியம் செய்யப் பார்த்தே சஹி? தீராத பழி





பாவத்துக்கு என்னை ஆளாக்கிடலாம்னு நினைச்சியா? பெண் என்பவள் பூ மாதிரி... அவளை உள்ளங் கையில் வச்சுத் தாங்கணும்னு நெனக்கிறவன் நான்... என்னைப் போய் மூர்க்கத் தனமா உன்னை அறையும் படி வச்சுட்டியே?"

"இன்னமும் நீங்க என்னைப் புரிஞ்சுக்கலை, இன்னிக்கு நீங்க இருக்கீங்க என்னைத் தடுத்திட்டீங்க... என்னிக்கும் நீங்க கிட்டயே இருக்க மாட்டீங்க இல்ல? என்று தேம்பிக் கொண்டே கூறி விட்டு முகத்திலறைந்து கொண்டு கதறினாள்.

அது வரை லகான் போட்டு இழுத்துக் கட்டுக்குள் வைத்திருந்த மனக்குதிரை ஆர்ப்பரித்து எம்பிக் குதித்து தாவிப் பாய்ந்தது.

"மிஸ் காலேஜ்," "காலேஜ் ப்யூட்டி" "கல்லூரியின் கட்டழகி" "காலேஜ் கிளியோபாட்ரா" என்று எண்ணற்ற மாணவர்களால் போற்றிப் புகழப்படும் சஹானா... எனது அன்புக்காக ஏங்குகிறாளா?

இவளது கடைக்கண் பார்வைக்காக தவமிருக்கும் இளைஞர்கள் தான் எத்தனை பேர்?

நான் இதற்கு கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்?

இந்த பேரழகியின் அன்பு கிட்டுவதற்கு.... முன் ஜென்மத்தில் ஏதொ புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அதுவரை பாறையாய் இறுகிக் கிடந்த முரளி மெழுகாய் இளகினான். பாகாய் கரைந்தான். பனிக்கட்டியாய் உருகினான். உரு கணம் தன்னையே மறந்து நெகிழ்ந்தான்.

முகத்தை மூடிக் கதறிக் கொண்டிருந்த சஹானாவின் கையைப் பற்றி மெல்ல விலக்கினான். அவளது இடது கன்னத்தில் முரளியின் நான்கு விரல்களும் அழுத்தமாய் பதிந்து கன்றி சிவந்திருந்தன.

சிவந்த கன்னத்தில் இதமாய் வருடினான். சட்டென்று

அழுவதை நிறுத்தி விட்டு விழிகள் விரிய... திகைப்புடன் ஏறிட்டாள்.

"சா..... சாரி சஹி ! ஐ லவ் யூ ஸோ மச்... ரொம்பவும் வ-க்குதாடா ? சாரி " தாமதம்.... சந்தோஷம் தாளாமல் கண் கலங்கியவளை இதமாய் தனது தோளில் சாய்த்துக் கொண்டான் முரளி.

ஆசை தீர படகு சவாரி செய்து விட்டு இருவரும் கை கோர்த்தபடி ஜோடியாய் கரையேறினார்கள்.

"வாரே வா..." ,"ஹீர்ரே" "யாஹீ" என்று விதவிதமாய் குரல் எழுப்பி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய நண்பர்களைப் பார்த்து சங்கோஜமாய் முறுவ-த்தான் முரளி.

"டேய் முரளி ! கங்கிராஜிலேஷன்ஸ்டா"

"ஏய் முரளி ! விவேகானந்தர் சொன்ன மாதிரி இலட்சிய இளைஞனா இது வரைக்கும் இருந்தே.... நம்ம காலேஜ் ப்யூட்டி சஹி உன்னை விரட்டி விரட்டி லவ் பண்ண வச்சுட்டாளேடா"

"எப்பவும் வண்டு தான் பூவைச் சுத்தி சுத்தி வரும்... ஆனா இங்க ஒரு பூ. வண்டைச் சுத்தி சுத்தி வந்து காத-க்க வச்சிருக்குடா"

"கரையில இருந்து பார்த்தா... ஒண்ணும் சரியா தெரியல மச்சி ! சிஸ்டர் கடைசியா என்ன அஸ்திரத்தைப் பிரயோகிச்சு உன்னைக் கவுத்தாங்கன்னு... விலா வாரியா சொல்லேன் முரளி"

"முரளி முகத்தைப் பாருங்கடா... ஆயிரம் வாட்ஸ் பல்ப் எரியுது"

"சஹியும் நீயும் ஜோடி சேர்ந்துட்டீங்க... அந்த சந்தோஷத்துல எங்களைஒரங் கட்டிடாதே முரளி... எங்களையும் ஞாபகம் வச்சுக்கோடா"

அவனது நண்பர்கள் ரவுண்ட் கட்டி நின்று கிண்டலடித்தனர்.



வெற்றிக் களிப்பு கனி இதழ்களில் நெளிந்தோட.... ஹை ஹீல்ஸ் சப்திக்க ஒயிலாக தனது காரை நோக்கி நடந்தாள் சஹானா.

மேரி உட்பட ஐந்தாறு தோழிகள் அவளது கார் பானெட்டில் ஏறி அமர்ந்து கலகலத்துக் கொண்டிருந்தனர்.

சஹானாவைக் கண்டதும் "ஹேய்ய்" என்று உற்சாகமாகக் கூவு வாய் விட்டுக் சிரித்தனர்.

அவர்களை நெங்கியதும் சஹானா தனது கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தாள். "யா... ஹீ என்று முழங்கையை உற்சாகமாய் உயர்த்தி இழுத்தாள்.

"அடியே சஹி ! உண்மையிலேயே நீகில்லாடி தான்டி... அந்த முரளிக்கு கர்வம் ஜாஸ்திடி... நாம்ப வ-ய எதுக்காச்சும் பாராட்டப் போனா... ஏறெடுத்தும் பார்க்காம அலடசியமா நடந்துக்கவார்டி...... ஆனா நீ விடாம முயற்சி பண்ணி உன்னோட அழகுக்கு அடிமை ஆக்கிட்டியே... சாதிச்சட்டே சஹி" மேரி அவளது கையைப் பற்றி குலுக்கினாள்.

"சகல கலா வல்லவன்... காலஜின் கட்டழகன்... மாணவர்களின் தலைவன்.... அப்படி இப்படின்னு எல்லோராலும் பாராட்டப் படற முரளியை.. இளஞ்சிங்மா கம்பீரமா வலம் வந்தவனை... பூனைக்குட்டி மாதிரி என் பின்னாடியே சுத்த வைக்கிறேன் பாருங்கடி" கண் சிமிட்டி சிரித்தாள் சஹானா.

காதல் மிகவும் புனிதமானது. உண்மையான இரு அன்பு உள்ளங்கள் மனத்தளவில் சங்கமிக்கும் போது ஜனிப்பது தான் உன்னதமான காதல்!

முரளி... நேர்மையான கண்ணியமான இளைஞன்... காதல் வயம் பட்டு விட்டான். அவனது காதல் ஆத்மார்த்தமானது தான் உண்மையானது தான், மானசீகமானது தான், ஆனால் சஹானா அவனது அன்புக்கும், காதலுக்கும் பாத்திரமானவளா ? அருகதையானவளா ?

அவளது உண்மையான சொரூபம் தெரிந்தால்.... மென்மையான இதயம் கொண்ட முரளி தாங்கவானா ?

விதி சிரித்தது. அவனைத் தவிடு பொடியாக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.

"அப்பா ! இன்னிக்கு என் ∴கேர்ள் ∴பிரண்ட் கூட மகாப–புரம் வரைக்கும் போயிட்டு திரும்பி வர்றப்போ..... சாலையோரமா காரை நிறுத்தி இறங்கி இளநீர் வாங்கி குடிச்சுட்டிருந்தோம்... தம்பி முரளி தனது நண்பர்களோட மகாப–புரம் நோக்கிப் போயிட்டிருந்தான்...." பேச்சை இழுக்க... நிறுத்திய முகேஷ் சிகெரெட்டை வாயில் வைத்து புகையை ஆழமாக இழுக்க.... அது அடி வரைக்கும் நுரையீலைப் பதம் பார்த்து விட்டு மூக்குத் துவாரங்கள் வழியாக வெளி நடப்பு செய்தது.

"உன்னைப் பார்த்து ஏதாவது பேசினான ?" அப்பா விஸ்வநாதன் விஸ்கியை கோப்பயில் சரித்தபடி கேட்டார்.

"எங்க ? பார்த்துட்டு பார்க்காத மாதிரி விருட்டுனு போயிடடான். அவனுக்கு அம்மாவோட பிடிவாதமும், வறட்டு கௌரவமும் அப்படியே வந்திருக்கே ?

"விட்டுத் தள்ளு... .... லை∴ப்லே எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்கத தெரியாத முட்டாளுங்க... சரி.. தரகர் கிட்ட சொல்– உனக்கு பொண்ணு பார்க்க சொ–யிருக்கேன். எல்லாம் தகைஞ்சு வந்துட்டா உடனடியா கல்யாணத்தை பண்ணிடலாம்னு இருக்கேன் முகேஷ்."

"வேணாம் டாடி! அம்மா மாதிரி எனக்கும் பத்தாம் பச– வாய்ச்சுட்டான்னா நான் இப்படியே ∴ப்ரீ பேர்டா இருந்துட்டுப் போயிடறேனே ?"

"உன் குணத்துக்கு ஏத்தவளா... உன்னை நல்லாப் புரிஞ்சுக்கிட்டு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போறவளா... நாசூக்காக நாகரீகமா நடந்துக்கிற பொண்ணா அமைஞ்சா... கல்யாணத்துக்கு ஒத்துக்குவியா முகேஷ் ?"





"அப்படிப்பட்ட பொண்ணு அமைஞ்சா எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்ல டாடி" என்று சிரித்த முகேஷ் கண்ணாடிக் கோப்பை எடுத்து சியர்ஸ் என்று சொல்– விட்டு தொண்டைக்குள் விஸ்கியை சரித்துக் கொண்டான்

## 13

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில்! அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் வெளியூர் பக்தர்களின் கூட்டம் ஏகத்திற்கும் திமுதிதுத்தது.

முப்பத்திரண்டு அடி உயரத்தில் திவ்ய சொரூபத்தில் அருள் பாத்த ஆஞ்சநேரை கணங்குளிரப் பார்த்து மனமுக சேவித்து விட்டு.... தொன்னைப் பிரசாத்ததைப் பெற்றுக் கொண்டு வெளிப்பட்டாள் யமுனா.

"அக்கா! புளியோதரை ரொம்ப டேஸ்டா இருக்குல்ல" பிரசாதத்தை சாப்பிட்ட படி பேசினாள் தங்கை உமா.

"உம்! உனக்கு புளியோதரைன்னா... உசிராச்சே ? இந்தா.... இதையும் நீயே சாப்பிடு" தன் பங்கு பிரசாதத்தையும் அவளிடமே தந்தாள் யமுனா.

"ஊகூம்! இது பிரசாதமாச்சே ? நீயும் சாப்பிடு... வீட்டுக்குப் போனதும் இன்னிக்கு இதே டேஸ்ட்டுலே புளியோதரை பண்ணித் தர்றியா அக்கா ?

"காரசாரமா சுவையும் மணமும் இதே டேஸ்ட்டுல பண்ணித் தந்துடறேன் போதுமா ? "செருப்புகளைக் கால்களில் திணித்துக் கொண்டு நடந்தாள் யமுனா!

பத்தடி தூரம் நடந்திருப்பார்கள். சரக்கென்று அவர்களை உரசியபடி நெருக்கத்தில் ஒரு கார் வந்து நின்றதும்.... திடுக்கிட்டுப் போய் ஏறிட்டாள் யமுனா.

"ஹாய் யமுனா! வழக்கமா இந்நேரத்துக்கு நீ இந்தக்

கோவிலுக்குத் தவறாம வருவேன்னு எனக்குத் தெரியும்.... அதான் அவரையும் வரச் சொல்–யிருக்கேன். ரெண்டு பேரும் ஆஞ்சநேயரை தரிசனம் பண்ணிட்டு.... கார்லே நேரா கிஷ்கிந்தாவுக்கு போறோம். நான் யாரை லவ் பண்றேன்னு தெரியுமா ? என்று கேட்ட சஹானா... அதியசத்திலும் அதியசயமாய் அன்று புடவை கட்டியிருந்தாள். க்ரே கலரில் குழைவாய் இருந்த அந்த வெளிநாட்டுப் புடவை அவளுக்கு அம்சமாய் இருந்தது.

யமுனாவுக்கு திக்கென்றிருந்தது. அருகில் தங்கை வேறு இருக்கிறாளே ? என்ற சங்கோஜத்துடன் தயக்கமாய் திரும்பினாள். ஆனால் உமாவோ.... அருகி–ருந்த கடை வாச–ல் குவிந்திருந்த சாமி படங்களையும் குட்டி வெண்கல, மரச்சிலைகளையும் ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டிரைவிங் சீட்டில் அமர்ந்த படி எட்டிப் பார்த்து பேசிய சஹானா காரை ஓரங்கட்டி நிறுத்திவிட்டு இறங்கி வந்தாள்.

ஆர்கண்டி காட்டன் புடவையில் மிக எளிய தோற்றத்தி–ருந்த யமுனா.... தெய்வீகக் களையுடன் மிளிர்ந்தததைப் பார்க்கும் போதே.... சஹானாவின் மனம் பொறாமையில் பொசுங்கியது.

"என்ன... கெஸ் பண்ண முடியலையா யமுனா ?" நீ என்னோட ∴பிரண்ட் இல்–யா ?.....அதான் கோவில் கிட்ட வச்சு ஸ்பெஷலா அவரை அறிமுகப் படுத்த ஆசைப் படறேன்" ஸ்டைலாக சிரித்தாள்.

யமுனாவின் பார்வை மீண்டும் உமாவின் மீது படிந்து மீண்டது. "சஹி! உமாவும் கூட வந்துருக்கா.. வீட்ல நிறையா வேலை இருக்கு. தாத்தாவுக்கு வேற காய்ச்சல்.... அவருக்கு துளசி கஷாயம் வச்சுத் தரணும். சமையல் செய்யனும்." அதனால யமுனா பேசி முடிக்கும் முன் அவசரமாய் இடைமறித்தாள் சஹானா.

"ஒரு அஞ்சு நிமிஷம் எனக்காக பொறு யமுனா... இ...





இதோ அவர் வந்துட்டார்... நீ பார்த்து ரெண்டு வார்த்தைப் பேசிட்டே போயிடலாம்" உற்சாகமாய்க் குரலுயர்த்திப் பேசினாள்.

பைக் தடதடத்து வந்த திசையை நோக்கிப் பின்னால் திரும்பினாள் யமுனா. முரளி.....? இவரையா சஹி விரும்புகிறாள் ? அடக்கடவுளே

அவளது மனம் சுக்கு நூறாக உடைந்தது. இதயத்தைக் கத்தியால் கிழித்து கூறு போட்டது போ–ருந்தது.

உலகமே தட்டாமாலையாகச் சுழன்றது. காலடியில் தரை நகர்நது செல்வதைப் போன்றிருந்தது.

முரளியும் இவளை விரும்புகிறாரே ? சந்திக்கும் தருணங்களில் எல்லாம் என்னிடம் கனிவுடன் பேசி கண்ணியமாக நடந்து கொண்டாரே ? அன்று அவரது வீட்டில்... தனது அம்மாவிடம் பரந்த மனப்பான்மையுடன் அடிக்கடி இரத்த தானம் செய்யக் கூடிய பெண் என்று கூறினாரே ?

ஒரே கல்லூரியில் படிக்கும் பெண் என்று ரீதியில் சகஜகமாய்ப் பழகி இரக்கிறார். அவ்வளவு தான் போலும்! எனது இதயத்தில் குடி கொண்ட முரளியின் மனம்.... சஹியை நேசித்திருக்கதிறது......

இதை நான் எப்படி.... இது நாள் வரை அறிந்துக் கொள்ளாமல் இருந்தேன் ? சற்று முன் கூட.... ஆஞ்சநேயரிடம் எனது காதல் நிறைவேற வேண்டும் என்று மனமுறுக வேண்டிக் கொண்டு வந்தேனே ?

எனது காதல் அல்பாயுசில் முடிந்து விட்டதே ?

கண நேரத்தில் ஆயிரம் கேள்விகள் முளை விட்டன. அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஓராயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டியது போன்று உள் மனம் வேதனையில் துடிதுடித்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து துக்கத்தை விழுங்க

முயறிசித்தாள். அவளையும் மீறி கண்களில் வெப்ப நீரூற்று குபுக் என்று பொங்கியது.

அன–ல் இடப்பட்ட புழுவாய்... இவள் உள்ளுக்குள் துடித்ததை வெகுவாய் ரசித்தாள் சஹானா.

"பாம்பின் கால் பாம்பறியும்" என்பார்கள். முரளியின் பேச்சை எடுத்தாலே... யமுனாவின் முகத்தில் விளக்கு போட்டாற் போல் வெளிச்சம் பரவியதை... சஹானா கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக் கொள்ளாத குறையாக உன்னிப்பாக கவனித்து கணித்திருந்தாள்.

"ஹாய் யமுனா ! சஹியும் நீ... நீங்களும் ஒரு குறையும் இல்லாம அமோகமா வாழணும்னு... நா..... நான் பகவானை வேண்டிக்கிறேன்." சிரமப்பட்டு வார்த்தைகளை உதிர்த்தாள். வேதனை முகபாவனையில் இம்மியளவும் வெளிப்பட்டு விடாம–ருக்க மிகவும் பிரயத்தனம் செய்தாள் யமுனா.

தூசி விழுந்து உறுத்துவதைப் போல ஆள் காட்டி கட்டி விரல்களால் கண்களைக் கசக்க.... இவளது வேதனையைப் புரிந்த சஹானாவுக்கு சந்தோஷம் பீறிட்டுக் கொண்டு வந்தது. கரும்புச் சாற்றைப் பருகியது போல் உள்ளுக்குள் இனித்தது.

"தேங்க் யூ யமுனா! உங்க மாதிரி நல்ல மனசு படைச்சவங்களோட வேண்டுதலும் வாழ்த்தும்... எங்களை வாழ வைக்கும் புன்னகைப் பூத்தான்.

"வாங்க முரளி.... இங்க தரிசனம் முடிச்சுட்டு கிஷ்கிந்தாவுக்கு வேற நாம்ப போகணுமே ?" அவனது கரத்தை உரிமையாய் பற்றி இழுத்தாள் சஹானா.

"அப்போ நான் கிளம்புறேன். வரேன் சஹி" தலையாட்டி விட்டு விடைபெற்றாள் திடீரென்று தோன்றி தன்னை வாரிச் சுருட்டி விடக் கூடாதா ? சுனாமி என்று ஏங்கினாள்.

உடம்பும் உதறிப் போட்டது. கை, கால் விரல்கள் தந்தியடித்தன. விழிகளி–ருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டியத. முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்துக்





கொண்டாள்.

"என்னக்கா ? ஏன் அழறே ?" பதறினாள் உமா.

"கண்ணுல தூசு பட்டிருச்சு உமா" என்றபடி அவளது கையை இறுகப் பற்றி கொண்டாள் உமா.

இது ஒரு தலைக் காதல் தான்! ஊமைக் கண்ட கனவு தான்! என் காதல் நிறைவேறாம போயிருக்கலாம்..... ஆனா என் காதல் ஆத்மாத்தமானது மானசீகமானது. அதில் எந்த சந்தேகமும் இல்லை

முரளி! நீங்க என்னை நேசிக்காட்டியும்.... நான் உங்களை என் உயிருள்ளவரை காத–ச்சுட்டே இருப்பேன். உங்க நினைவு தரும் சுகத்திலேயே காலம் முழுவதும் வாழப் போறேன்.

உங்க மனசுக்கு பிடிச்சவளோட எந்தக் குறையும் இல்லாம சந்தோஷமா நீங்க வாழணும். அதை தூரத்தில இருந்து பார்த்து ரசிக்க திருக்தி பட்டுக்கிறேன். அடுத்த ஜென்மத்திலாவது உங்களுக்கு மனைவியாகும் பாக்கியத்தை... பகவான் எனக்கு தரணும்னு....... இன்னிக்கு இருந்தே வேண்டிக்கப் பேறேன்.

தனக்குத் தனே சமாதானம் செய்து கொண்டாலும்... பொங்கிப் பொங்கி கண்ணீர் வழிந்தது. இதயத்தில் இரகசியமாய் குருதி வடிந்து கொண்டிருந்தது.

முரளியும் சஹானாவும் "கிஷ்கிந்தாவுக்கு" சென்றனர். இருவரும் கையைக் கோர்த்துக் கொண்டு காதல் கிளிகளாய் வலம் வந்தனர். விதவிதமான ராட்டினங்கள், வகை வகையான நீர் விளையாட்டுக்கள் எதையும் விட்டு வைக்க வில்லை.

"முரளி! அதோ "ஸ்பேஸ் ஷட்டில்" வித்தியாசமா இருக்கல்ல ? வாங்க அதிலேயும் ஏறி என்ஜாய் பண்ணிடலாம்"

"சஹி! அது, அசுரத் தாலதட்டு... அந்தரத்துல ரொம்ப உயரத்துக்குப் போய் அப்படியே நம்மைக் கவிழ்க்கிறாப்பல

சர்ருனு இறங்குறீ பாரு குடலைப் புரட்டும். ரொம்ப பயப்படுவே.. வேண்டாம்"

"ப்ளீஸ் முரளி! எனக்கு ஆசையா இருக்கே... அந்தரத்துல பறக்கிற மாதிரி ஒரு த்ரில் கிடைக்குமே? எப்பவுமே இந்த மாதிரி த்ரில்லான விஷயங்கள்லே எனக்கு ஈடுபாடு அதிகம்.... ப்ளீஸ்! எனக்காக...

வேண்டா வெறுப்பாக சென்றான் முரளி. ஒவ்வொரு முறையும் "ஸ்பேஸ் ஷட்டில்" மேலேறும் போதும் கீழிறங்கும் போதும் குடல் புரண்டு தொண்டைக்குள் இறங்கி வட்டது போன்ற உணர்வு தான் ஏற்ப்பட்டது

ஆனால்... சஹானாவோ "ஆ... ஊ ஃப்" என்று உற்சாகமாக சிரித்து கண்களை மூடி இவனது கையை இறுக்கமாகப் பற்றி கொண்டிருந்தாள்.

ஆனால் முரளிக்கோ... ஏதோ ஒரு ஏமாற்றம் வந்து நெஞ்சைக் கவ்விக் கொண்டிருந்தது..

"சஹி சத்தம் போடாம என் வாய் பண்ணு கீழே பாரு...... நிறைய பேரு சுத்தி நின்று நம்மளையே வேடிக்கை பாத்துட்டு இருக்காங்க"

"ஸோ வாட்? நாம நமக்காகத் தான் வாழனும். அடுத்தவங்களைப் பத்தி சட்டையே பண்ணக்கூடாது. இப்படி தயங்கிட்டிருந்தா.... வாழ்க்கையில் எந்த சந்தோஷத்தையும் நாம்ப அனுபவிக்கவே முடியது. யாரு பார்த்தா எனக்கென்ன? எனக்கு என்னோட சந்தோஷம் தான் முக்கியம் " பட்டென்று பதிலளித்தாள்.

ஆஞ்சநேயர் கோவிலுக்குள் சென்ற போது கூட ...... கூட்டத்தில் வரிசையாக நகர்ந்தது. தரிசனம் செய்வதற்குள் அவளும் இருப்பே கொள்ளவில்லை. தணல் மேல் நின்று கொண்டிருப்பவளைப் போன்று தவித்துக் கொண்டிருந்தாள்.

முரளியின் விருப்பத்திற்காக ஒப்புக்கு கோவிலுக்கு வந்தவளைப் போன் முக பாவனை!





அந்த 'ஸ்பேஸ் ஷட்டிலை' விட்டு எப்போது இறங்கித் தொலைப்போம் என்றிருந்தது முரளிக்கு, ஒரு வழியாக இறங்கியதும் நேராக மரங்களும் செடி கொடிகளும் நிறைந்த பூங்காவுக்குள் நுழைந்து சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தனர். பேசிக் கொண்டு இருந்ததில் நேரம் பறந்ததே தெரியவில்லை.

தனது கணவர், மகன் மருமகள், பேரன் பேத்திகளுடன் வந்திருந்த சொர்ணத்திற்கு இரட்டை நாடி சரீரம். அளந்து பார்க்க இன்ச் டேப் போறாது. புருவங்கள் முடிச்சுப் போட உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சொர்ணத்திற்கு திடிரென்று பொறி தட்டியது.

"என்னங்க ..... என்னங்க " விழுந்தடிக்காத குறையாக கணவர் அமர்ந்திருந்த மரத்தடி அருகே ஒடி வந்தார்.

"பார்த்து... ஏன் இப்படி பதறிக்கிட்டு வர்றே சொர்ணம்?"

" அந்த பொண்ணு யாரு தெரியுமாங்க? அதான் ... ஆ... ஊன்னு ஜா—யா கத்திக்கிட்டு அந்த பையன் கூட நெருக்கமா உட்கார்ந்திருந்தாளே... அவதான்... அவ நம்ப குருமூர்த்தியோட பொண்ணுங்க... பாத்து இரண்டு மூணு வருஷத்துக்கு மேல இருக்கும்... அதான் சட்டுனு அடையாளம் தெரியலை"

"அட....... குரு மூர்த்தியோட பொண்ணா இவ? இவளுக்கு கல்யாணம் ஆயிடுச்சா? கல்யாணத்துக்கு கூட அவன் வந்து நம்மளைக் கூப்பிடலையே? தூரத்து உறவை ஒதுக்கி வச்சுட்டான் போல " கணவர் சதாசிவம் அலுத்துக் கொண்டார்.

"போங்க..... நீங்க வேற ..... குருமூர்த்தி அந்த மாதிரி சொந்த பந்தங்களை விட்டுக் கொடுக்க மாட்டாடேங்க....... இந்தப் பொண்ணுக்கு இன்னமும் கல்யாணமே ஆகலை...... படிச்சுட்டு இருக்கா "

"அப்போ இவ்ளோ தைரியமா பொது இடத்துல அந்தப் பையனோட கையை உரிமையா புடிச்சுக்கிட்டு நடக்கிறா. .....

ஓ ..... கதை வேற மாதிரி போகுதா ? உன்னோட தம்பி தன் மகனுக்கு இந்த பொண்ணைக் கேட்லாம்னு..... இருந்தானே ? நல்லகாலம் தம்பி கிட்ட சொல் வை ..... நாம்ப தப்பிச்சோம். கொஞ்சம் கூட லஜ்ஜை இல்லாம இருக்காளே ? சேச்சே "

சொர்ணத்திற்கு மெல்லுவதற்கு நல்ல அவல் கிடைத்த சந்தோஷம்.... உடனடியாக இந்த தகவலை குறைந்தது ஐம்பது பேரிடமாவது கூறாவிட்டால் ... அவளுக்குத் தலையே வெடித்துவிடுமே ?

---

# 14

---

அன்று சனிக்கிழமை விடுமுறை நாட்களில் காலை ஒன்பதரை மணிக்கே பாட்டு கிளாசுக்கு சென்றுவிடுவாள் உமா.

கிச்சன் ஸிங்கில் ஒழித்துப் போட்டிருந்த பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவி, வீட்டைப் பெருக்கிவிட்டு.... கூடத் தூணில் சாய்ந்தமர்ந்து படிக்க ஆரம்பித்தாள் யமுனா.

சுகமோ, துக்கமோ... நிதர்சனத்தை ஏற்றுக் கொண்டு, அனைத்தையும் ஜீரணித்துக் கொண்டு வாழ்பவர் நடேசன். ஜாடையில் மட்டுமல்ல... குணத்திலும் அப்பாவை உரித்துக் கொண்டு வந்திருந்தாள் யமுனா.

"நன்கு படித்து டிஸ்டிங்ஷனில் தேறி நல்ல பதவியில் அமர்ந்து.... தம்பி, தங்கையை நன்றாகப் படிக்க வைத்து உயர்த்த வேண்டும். அப்பாவின் பாரத்தை இறக்கி குடும்பத்தை முன்னுக்கு கொண்டு வர வேண்டும்... இதுதான் என் லட்சியம்."

தனது துக்கத்தை மென்று விழுங்கிவிட்டு மனதைக் கஷ்டப்பட்டு திசை திருப்பிவிட்டிருந்தாள் யமுனா.





கல்லூரிக்குச் சென்றால் வேண்டுமென்றே ஜாடை மாடையாகப் பேசி இவளது ரணத்தைக் கீறிக் கிளறி திருப்தி பட்டுக் கொண்டிருந்தாள் சஹானா.

"நேத்து நானும் முரளியும் பீச்சுக்குப் போனப்போ ..... அவர் எப்படியெல்லாம் என்னை வர்ணிச்சார் தெரியுமா ? " என்பாள்.

"போன வாரம் வள்ளுவர் கோட்டத்துக்கு போனோம். அங்க அந்த பி ரமாண்டமான தேர் கிட்ட நின்று ஜோடியா ஃபோட்டோ எடுத்துக்கிட்டோம் பாரேன் " என்று காட்டுவாள்.

ஆரம்பத்தில் இதையெல்லாம் கேட்கும் போது யமுனாவின் இதயம் ....அம்பால் துளைக்கப்பட்ட பறவையாய் துடிக்கத் தான் செய்தது.

ஆனால் நாளடைவில் தியானம் செய்து மனதை ஒரு முகப்படுத்தி எதற்கும் சஞ்சலப்படாமல் பாறையாய் இறுகி விட்டிருந்தாள். இவள் எதையும் கண்டு கொள்ளாமல் சித்தன் போக்கு சிவன் போக்கு என்றிருந்ததைப் பார்த்து விட்டு..... இவளைச் சீண்டு வதை விட்டு விட்டாள் சஹானா.

ஆனால் கல்லூரியில் அனைவரிடமும் தம்பட்டம் அடிக்காத குறையாக சகல கலா வல்லவன்.... கல்லூரி நாயகன் முரளி தன்னை உருகி உருகிக் காத–ப்பதை சொல்–ப் பெருமைப்பட்டுக் கொண்டாள் சஹானா.

தனக்கும் முரளிக்கும் இடையே மலர்ந்த காதலை அவள் அடிக்கடி பறைசாற்றும் போது இதழ்களில் குறுநகை தவழ ... நாசூக்காக நகர்ந்து விடுவாள் யமுனா.

"ட்ரிங் ... ட்ரிங்....... ட்ரிங் "

வீட்டு உபயோகத்திற்கு என்று அப்பா வாங்கிக் கொடுத்திருந்த செல்லை எடுத்துப் பேசினாள்.

"ஹலோ ! "

"ஹலோ .... அக்கா நான் உமா பேசறேன் " குர–ல் ஏகத்திற்கும் பதற்றம் தொனித்தது.

"என்ன உமா? பதட்டமா பேசறே ? நீ ட்யூஷனுக்குப் போனியே ? "

"அ...... அக்கா ! ரங்கநாயகி மேடம் கொதிச்சுட்டிருக்கிற குழம்பை இறக்கி இறக்கி வைக்கப் போனாங்க. கை தவறி பாத்திரம் நழுவிடுச்சு போல...... "

"ஐயோ........... கொதிக்கிற குழம்பு உடம்புலே பட்டுருச்சா ? "

"தரையில குழம்பு பாத்திரம் விழுந்தப்போ ... கொஞ்சம் சிதறி அவங்க வலது பாதத்துலே பட்டுருச்சுக்கா ...... வேதனையில துடிக்கிறாங்க ...... எனக்கு கை, கால் நடுங்குது ........ நீ கொஞ்சம் வர்றியா அக்கா ? "

"தோ வந்துடறேன். உடனடியா ஃபர்ஸ்ட் எய்ட் குடுக்கணுமே? நீயும் பசங்களும் அவங்க கிட்ட தானே இருக்கீங்க ? "

"ஆமா அக்கா ! அவங்க கால்லே ஒரு சொம்பு தண்ணீயை ஊத்தி விட்டேன். "

"கிட்ட இருந்து பாத்துக்கோ ........ அஞ்சே நிமிஷத்துல வந்துடறேன். "

ஈஸி சேரில் அமர்ந்து செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்த தாத்தா சண்முகம் ஆர்வமாய் அவளை ஏறிட்டாள்.

"உமாவா ஃபோன் பண்ணினா ? யாருக்கு என்ன ஆச்சாம் ? " துளைத்தெடுத்தார்.

"நான் வந்து சொல்றேன் தாத்தா, வரும் போது உமாவைக் கூட்டிட்டு வந்துடுவேன், வாசல் கதவைச் சாத்திட்டுப் போறேன் " இரைந்து பதில் சொல்லிகொண்டே ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் விரைந்தாள்.

தெருவில் இறங்கி அவசரமாய் நடந்தபோது .... எதிரே வந்த காலிஆட்டோவை நிறுத்தி ஏறிக் கொண்டாள்.

கூடத்து சோபாவில் காலை நீட்டி அமர்ந்திருந்தார். ரங்கநாயகி கொதிக்கும் குழம்பு பட்டதால் பாதத்தின் மேல் தோல் உரிந்து சொத சொத வென்றிருந்தது.





வேதனை தாளாமல் "உஸ் ...... அப்பா ..... உஸ்" என்று அனத்திக் கொண்டிருந்தார். கண்களி–ருந்து கண்ணீர் கரகரவென்று வழிந்தது.

"எ ..... என்னம்மா இது? ஜாக்கிரதையா இருந்திருக்க வேணாமா? வாங்க..... என்னைக் கைத்தாங்கலா புடிச்சிக்கிட்டு எழுந்து நில்லுங்க ..... ஆட்டோவை புடிச்சுட்டு வந்திருக்கேன். காயத்துக்கு உடனடியா சிகிச்சை பண்ணணுமே ?"

பற்களைக் கடித்துக் கொண்டு யமுனாவின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு இழுத்து இழுத்து நடந்தார் ரங்கநாயகி.

"மு ..... முரளிக்கு ஃபோன் பண்ணினேன். லைனே கிடைக்கல ...... இன்னொரு வாட்டி பண்ணி அவனைக் கூப்பிடணுமே ? " அனத்திக் கொண்டே பேசினார் ரங்கநாயகி.

"அவர் வர்றப்போ வரட்டும். முதல்லே நாமபு ஹாஸ்பிடலுக்கும் போகலாம் வாங்க" அவரை ஆட்டோவில் ஜாக்கிரதையாக ஏறி அமர உதவி விட்டு தானும் அமர்ந்து கொண்டாள்.

சிகிச்சை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் போது பதினொரு மணி ஆகிவிட்டிருந்தது. ரங்கநாயகியை கட்டில் அமர வைத்த யமுனா..... டாக்டர் எழுதிக் கொடுத்த ஆயின்மெண்டை மிருதுவாகப் பாதத்தில் தடவினாள்.

"சாப்பிட்டுட்டு இந்த மாத்திரையெல்லாம் போட்டுக்கணுமே ? " யோசனையுடன் நிமிர்ந்தாள் யமுனா.

"மணத்தக்காளி வத்தல் குழம்பை வச்சுட்டு .... சாதம் வடிக்கலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு"

" நான் சாதம் ரசம் வச்சுடட்டுமா ?" குரலில் தயக்கம் நெளிந்தோட ரங்க நாயகியை ஏறிட்டாள் யமுனா.

"உனக்கு எதுக்கு வீண் சிரமம்? முரளி வந்ததும் ஹோட்டல்லே ஏதாச்சும் வாங்கிச் சாப்பிட்டா போச்சு"

"இதுல எனக்கு ஒரு சிரமமும் இல்லை ..... உடம்புக்கு முடியாத நேரத்துல ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு வயித்துக்கு வேற ஒத்துக்காம போயிட்டா யாருக்கு கஷ்டம்?" முந்தானையையை வரிந்து இடுப்பில் செருகிக் கொண்டு களத்தில் இறங்கி விட்டாள்.

குழம்பு சிந்திக் கிடந்த சமையலறையைக் கழுவித் தள்ளிவிட்டு மளிகை சாமான்கள் இருந்த ஷெல்பைத் திறந்து ஒவ்வொரு டப்பாவாகத்திறந்து ஆராய்ந்து விட்டு....... நளபாகத்தை துவங்கினாள்.

மளமளவென்று சமைத்துவிட்டு ரங்கநாயகி படுந்திருந்த அறைக்கு அவள் வந்த போது...... முரளி கண்கலங்கியபடி அவரது கால்மாட்டில் அமர்ந்திருந்தான்.

"எ ...... எங்கம்மான்னா எனக்கு உயிர் யமுனா ! என்னோட உலகமே அவங்க தான்... நீங்க பண்ணின உதவிக்கு எப்படி ......."

" முரளி ....... என்னப்பா பைத்தியக்காரப் புள்ளையா இருக்கியே ? இந்த மாதிரி " பேசி யமுனாவை ஏன் அந்நியப் படுத்தறே ? அவ மனசு சங்கடப்படும் இல்ல ? அவ என்னைத் தன்னோட அம்மா ...... சாப்பிட்டு மாத்திரை போட்டுக்கிறீங்களாம்மா ?

"உம் ! சாப்பிடறேனே "

"அம்மா சாப்பிடறதுக்கு கடையில ஏதாச்சும் வாங்கிட்டு வரட்டுமா ? " சட்டென்று எழுந்து கொண்டான் முரளி.

"நான் சமைச்சுட்டேன்.... பருப்பு மசியல், தக்காளித் தொக்கு, பூண்டு ரசம், காரசாரமா கறிவேப்பிலை துவையல் வச்சுட்டேன்..... எல்லாத்தையும் இங்கேயே கொண்டு வந்து பரிமாறிடலாமா ? " என்று கேட்டவளை விழிகள் விரியப் பார்த்தான் முரளி.

மனதில் நன்றியுணர்ச்சி குடிகுடிவென்று ஊற்றெடுத்தது. சன்று முன்பு வரை யமுனாவின் மனம் கல்லாய்





இறுகித்தான் கிடந்தது. முரளியை இவ்வளவு கிட்டத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டதும்... உள்ளூர ஒரு நெகிழ்வு ஏற்பட்டது. நிஜம்

அவன் விழிகள் அவளுடைய இதயத்தைத் தீண்ட ..... மனதிற்குள் சுகமான நேச மழைச் சாரல் !

அவனது விழிகளை நேருக்கு நேர் சந்தித்ததும்... அவளுக்குள்ளே மௌனமாய் ஒரு உயிர்ப்பூவின் மலர்வு ! அவளுக்குள் இனம் புரியாத ஓர் உணர்வை சிற்றுளியாய் செதுக்கியது – அவனது தீர்க்கமான பார்வை.!

"என்னது இது ? " அவன் தனக்கில்லை என்று தெரிந்தும்... அனைத்தும் அறிந்து பின்னும் மனதை இப்படிப் புரவி விடுவது ஆபத்தாயிற்றே ? மனசாட்சி அசரீரியாக மாறி அவளை எச்சரித்ததும்..... சூடு போட்ட கன்றாய் திடுத்துப் பார்வையை தழைத்து கொண்டள் யமுனா.

"இங்கேயே கொண்டு வந்துடு யமுனா.... மத்த பசங்க போயிட்டாங்கல்ல ? உமாவைக் கூப்பிடு.... நாம்ப எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம் " உரிமையாய் பேசியவரை ஏறிட்டாள் .

"இல்லம்மா... வீட்டுல சமைச்சு வச்சதெல்லாம் வேஸ்ட்டாயிடும். நாங்க இன்னொரு நாள் சாப்பிடறோம். நீங்க ரெண்டு போரும் சாப்பிடுங்க"

"வாவ் யமுனா ! எல்லாமே ரொம்ப டேஸ்ட்டாயிருக்கே ? சுவிரசாரமா சுவையும் மணமுமா பிரமாதம் போங்க.... எங்கம்மா கூட இப்படித்தான் நாக்கைச் சுழற்றாப்பல டேஸ்ட்டா சமைப்பாங்க.... நல்ல கை மணம் உங்களுக்கு"

" ஆங்.... முரளி ! உன் கிட்ட ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். வழக்கமா நாம்ப காட்டற " ரோஜா நர்ஸிங்ஹோமுக்கு" தான் யமுனா கூட்டிட்டுப் போனா.... இவ பதறின பதட்டத்தைப் பார்த்துட்டு... புதுசா வந்த நர்ஸ் என் கிட்ட வந்து " இவங்க உங்க பொண்ணா" உங்க மேல உசுரையே வச்சிருக்காங்களே ?ன்னு கேட்டா.... ? இவ என்

பொண்ணு இல்லை" ன்னு சொன்னேன்.

"அப்போ இவங்க உங்க மருமகளா ?ன்னு கேட்டா... நான் மவுனமா சிரிச்சேன்.... "இந்த மாதிரி ஒரு மருமக கிடைக்க... நீங்க கொடுத்து வச்சிருக்கீங்க" அப்படின்னு சொல்லிட்டு.... ஆச்சர்யம் தாளாம ரெண்டு பேர்களையும் மாறி மாறிப் பார்த்துட்டே போனா..... ? பேசிவிட்டு ரசம் சாதத்தை அள்ளி வாயில் திணித்துக் கொண்டார் ரங்கநாயகி.

ரங்கநாயகி மிகவும் சாமர்த்தியசாலி தனது ஆசையையும், விருப்பத்தையும், சந்தடி வாக்கில், நாசூக்காக சாதுர்யமாக வெளிப்படுத்தி விட்டிருந்தாள்.

முரளிக்கும், யமுனாவுக்கும் பக்கென்றிருந்தது.

நான்கு விழிகளும் தர்மசங்கடமாய் மோதிக் கொண்டன.

சாதத்தை விழுங்க முடியாமல் தவித்தான் முரளி. அர்த்தபாவனையுடன் இருவரையும் பார்வையால் அளவெடுத்துக் கொண்டிருந்தாள் ரங்கநாயகி.

"இந்தாங்கம்மா மாத்திரை.... மிஸ்டர் முரளி! நைட்டுலே அம்மாவுக்கு சாப்பாடு போட்டு இந்த மாத்திரையைக் குடுங்க.... ரசத்தை மட்டும் சூடு பண்ணிப் பரிமாறுங்க.....

ஜாக்கிரதையா செய்யுங்க... நான் நாளைக்கு காலையில ஏழரை மணிக்கு உமாவை அழைச்கட்டு வந்து.... இங்க சமைச்சு வச்சுட்டு காலேஜீக்கு கிளம்பலாம்னு இருக்கேன்...ஹோட்டல்லே எதுவும் வாங்கிடாதீங்க.... வயித்துக்கு ஒத்துக்காது சரியா. ? "ஹேண்ட் பாக்கை மாட்டிக் கொண்டு உமாவின் கையைப் பிடித்துக் கொண்டு கிளம்ப எத்தனித்தாள்.

"உங்களுக்கு எதுக்கு சிரமம் ?"

"ப்ளீஸ்.... அப்படி சொல்லாதீங்க ! எங்களுக்கு அம்மா இல்ல... ஒரு அம்மாவுக்கு சேவை செய்யற பாக்கியம் கிடைச்சிருக்கேன்னு ரொம்ப சந்தோஷப்படறேன்.... அதைக் கெடுத்துடாதீங்க.... " அவள் கூறியது போலவே.... காலை





நான்கு மணிக்கு எழுந்து பரபரவென்று வீட்டு வேலைகள், சமையலை முடித்துவிட்டு ஏழரை மணிக்கெல்லாம் உமாவுடன் ஆஜராகி விடுவாள். எட்டரை மணிக்கு உமாவுடன் [illegible] வெளியேறி விடுவாள்.

இரவு ஏழரை மணிக்குள் தனது ட்யூஷன் மாணவர்களை அனுப்பி விட்டு கிரியை அழைத்துக் கொண்டு முரளியின் வீட்டுக்கு வந்து விடுவாள். தோசையை வார்த்து இரவு டிபனை முடித்து விட்டு தம்பி, தங்கையுடன் எட்டரை மணிக்கு சென்று விடுவாள். அந்த குணவதியை கண் குளிர, ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்த ரங்கநாயகி விரைவில் தேறி விட்டாள். விதி சிரித்து அந்த குணவதியின் தலையில் பெரிய இடியைப் போட்டது. முரளி காதலித்த சஹானாவோ... பெரிய அணுகுண்டைத் தூக்கி அவனது தலையில் போட்டாள்

---

## 15

---

காலத்தின் சக்கரங்கள் வெகுவேகமாய் சத்தமில்லாமல் உருண்டன. செமஸ்டர் தேர்வுகள் நேற்றோடு முடிந்து விட்டன. கல்லூரிக்கு அடியெடுத்து வைத்து.... கண் மூடி கண் திறப்பதற்குள் ஒரு வருடம் ஓடி விட்டது.

"நேத்தைக்கு தான் காலேஜீக்கு நீ போனாப்பல இருக்கு..... மாயமா ஒரு வருஷம் முடிஞ்சிருச்சுல்ல ? "கூடத்தில் அனைவரும் அரைவட்டமாய் அமர்ந்திருந்தனர்

அப்பா நடேசனின் தட்டில் வெண் பொங்கலையும் சாம்பாரையும் பரிமாறிய படியே முறுவலித்தாள் யமுனா.

"ஆமாப்பா ! இன்னமும் மூணு வருஷந்தான். படிப்பு முடிஞ்சதும் நான் வேலைக்குப் போக ஆரம்பிச்சுடுவேன். உங்க பாரத்தை இறக்கி வச்சுட்டு நீங்க கோவில் குளத்தை சுத்திக்கிட்டு ஈஸி சேர்லே நிம்மதியா உட்காரணும். அப்புறம்..."

அவள் பேசி முடிக்கும் முன் இடைமறித்தார் நடேசன்.

"என்னோட கடமையை நான் முடிக்க வேணாமா யமுனா? உனக்கொரு வழிவகை பண்ணியாகனுமே? உனக்கொரு நல்ல வரன் அமைஞ்சுட்டாலே..... என்னோட பாதி பாரம் குறைஞ்சுடும். கடமையை முடிக்காம நிம்மதியா நான் உட்கார முடியுமாடா? ..."

பேசிக் கொண்டிருக்கும் போதே அவரது முகம் அஷ்ட கோணலானது. அதீத வேதனையுடன் இடது பக்க மார்பில் கை வைத்து அழுத்திக் கொண்டார்.

"அப்பா ! என்னப்பா செய்யுது ? எ... என்னாச்சுப்பா ? ." யமுனா விழித்தாள் கேஸ் ட்ரபிளா இ.... இருக்கும்." திணறித் திணறி பதிலளித்தார் நடேசன்.

அதற்குள் குப்பென்று வியர்த்துக் கொட்டியது

"அப்பா ! ஆஸ்பத்திரிக்குப் போயி என்னென்னு "செக்.." பண்ணிட்டு வந்துடலாம் கிளம்புங்கப்பா.... கிரி ! ஆட்டோ புடிச்சுட்டு வாப்பா" பதறியவளைக் கையமர்த்தினார்.

"த... தண்ணி கொண்டாம்மா..." வேதனை மேலிட்டால் ஆயாசத்துடன் கண்களை மூடி கூடத்துத் தூணில் சாய்ந்தார்.

"ஐயோ! அப்பா... இ.... இந்தாங்க" அருகி–ருந்த சொம்பை எடுத்து நீட்டினாள். அப்பா! " அவரது மேவாயைத் தொட்டு நிமிர்த்தினாள் யமுனா.

"லொடக்" என்று இவரது தலை பக்கவாட்டில் சரிந்தது. திகி–ல் அவளது உடம்பு தந்தியடித்தது. நடுங்கும் விரல்களால் அவரது நாசியைத் தடவினாள்.

சுவாசம் வேலை நிறுத்தம் செய்திருந்தது.

"அப்...பா.....ஆ....." அவள் அலறிய அலற–ல் அந்த வீடே கிடுகிடுத்தது.

"சற்று முன் பேசி சிரித்துக் கொண்டிருந்த அப்பா? இந்த பாசமான தந்தையின் மீது பாசக்காயிறு வீச எமனுக்கு எப்படி மனம் வந்தது?





முடிந்து விட்டதே ? எல்லாம் முடிந்து விட்டதே ? என்ன காரணம் ? வியாபாரம் மந்தமாகி விட்டது என்று கவலையில் உருகிக் கொண்டிருந்தாரே ? அந்தக் கவலையே அவருக்கு மரணத்தை தருவித்து விட்டதே ?

ஐயோ! இது கனவா இருக்கக் கூடாதா ? இதை என்னால் நம்பவே முடியவில்லையே ?

யமுனாயுக்குள் கேள்விகள் முளைத்து நெஞ்சைப் பிளந்தன. கிரியும் உமாவும் கதறிக் கொண்டிருந்தார்கள். இருவரையும் இரு கரங்களால் அணைத்து கொண்டவளின் விழிகளி–ருந்து மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் பெருக்கெடுத்தது.

"யப்பா... நடேசா! நீ எனக்கு கொள்ளி போடுவேன்னு காத்துக் கிடக்கிறேனே ? எண்பத்திரன்டு வயசுல பூமிக்கு பாரமா நான் இருக்கேனே ? இந்த காய்ஞ்ச சருகை விட்டுட்டு உன் உசுரையா எடுக்கணும் நடேசா ?.... இந்த கண்றாவியைப் பார்க்கத் தானா என் உசுரு இத்தன வருஷமா ஒட்டிட்டுக் கிடக்கது ?" பிரம்பை ஊன்றியபடி தள்ளாடித் தடுமாறியபடியே மகனை நெருங்கி வந்தார் தாத்தா சண்முகம்.

"நானும் வந்துடறேன்னு.... என்னையும் கூட்டிட்டுப் போணிடு நடேசா..." முகத்தில் அறைந்து கண்ணீர் முதுகு குலுங்கக் கதறிய தாத்தாவை கைத்தாங்கலாகப் பற்றிக் கொண்டாள் யமுனா.

. "அம்மா யமுனா! கடமையை முடிக்காம நான் எப்படி நிம்மதியா உட்கார முடியும்னு சித்த நேரத்துக்கு முன்னாடி கேட்டானேம்மா ? இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டானேம்மா ?"

முதியவரைத் தேற்றும் வழி தெரியாமல் தானும் அவரது மார்பில் தலை சாய்த்துக் கதறினாள் யமுனா. தந்தையின் முகத்தை நீர்த் திரையிட்ட விழிகளால் உற்றுப் பார்த்தாள்.

நிம்மதியாக நிச்சரனமாக சாந்தம் தவழும் முகத்துடன்

"துயில்" கொண்டிருந்தார் நடேசன்.

"வாழ்க்கையில் எது நடந்தாலும் அதை ஜீரணிக்கப் பழகிக்கனும். எதிர்நீச்சல் போடணும். அதல பாதாளத்துல விழுந்தாலும் கையை ஊனிக் கரணமடிச்சுப் போராடி மேல வரப் பார்க்கணும். இதயத்தை இடி தாங்கியா வச்சுக்கணும். இத்தோட எல்லாமே முடிஞ்சு போச்சுன்னு துவண்டு போயிடக் கூடாது. பகவான் மேல பாரத்தைப் போட்டுட்டு கை சளைக்காம எதிர்நீச்சல் அடிக்கணும். அப்பத்தான் கடவுள் நமக்குத் துணையா இருந்து வழி நடத்துவாரு"

அப்பா அடிக்கடி சொன்ன வார்த்தைகள்... அவளது செவிகளில் "அசாரீயாக" ஒ-த்தது போலிருந்தது.

"நானும் சேர்ந்து கதறிக் கொண்டிருந்தால் என்னாகும்? நான் நடேசனின் மகள். நான் போராடுவேன்". மனதில் சங்கல்பம் செய்து கொண்டாள்.

குடும்பத்தின் ஒட்டு மொத்த பொறுப்பும் அவளது தலையில் விழுந்து விட்டதே? மிகப்பெரிய பளு அவளது தோள்களில் ஏறி விட்டதே?

அப்பா மறைந்து விட்டார். இது மிகப்பெரிய இழப்பு தான் "நடேசன் போயிட்டான்டா.... அவன் குடும்பமும் நட்டாத்துல தவிக்குது" என்று யாரும் ஒரு வார்த்தை சொல்லி விடக் கூடாது.

உமாவையும் கிரியையும் தொடர்ந்து அதே மெட்ரிகுலேசன் பள்ளியில் படிக்க வைக்க வேண்டும். குடும்ப பாரத்தை இழுத்தாக வேண்டும்.

என்ன செய்யப் போகிறேன் நான்

சின்னதாக அரும்பிய கேள்வி கிடுகிடுவென பூதாகாரமாக வளர்ந்து அவளை மிரட்டியது.

சோகத்தையும் துக்கத்தையும் மென்று விழுங்கி விட்டு.... அடுத்து ஆக வேண்டிய காரியங்களைச் செய்ய தன்னை ஆயத்தக் படுத்திக் கொண்டாள் யமுனா.





விஷயத்தைக் கேள்விப்பட்டதும் பதறியடித்துக் கொண்டு வந்துவிட்டார் ரங்கநாயகி. சோக மூலாம் பூசிய முகத்தோடு முரளியும் வந்து விட்டான்.

கண்ணீர் மல்க "யமுனா" என்றழைத்து அவளது தோளில் ரங்கநாயகி கை வைத்தது தான் தாமதம்..... "அ......அம்மா" என்று கதறியவாறு அவரது தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"எனக்கோ ஆறலையே யமுனா.... பாட்டு கிளாஸ் முடிஞ்சதும் உமாவைக் கூட்டிட்டுப் போக தினமும் வருவாரே உங்கப்பா? அதிர்ந்து கூட பேச மாட்டாரு அவ்ளோ நல்ல மனுஷன்..... இவ்ளோ சீக்கிரம் போயிருக்க வேணாம்... பெரிய இழப்பு தான்! ஆனா.... ரொம்ப நல்ல சாவு யமுனா.... நீ தைரியமா இருக்கணும்மா... தம்பியும், உமாவும் உன் முகத்தையே பரிதாபமா பாத்து அழுதுட்டிருக்காங்க பாரு.

மனசை திடப்படுத்திக்கோம்மா... நீ நல்ல புத்திசாலிப் பொண்ணு! நா எதுவும் சொல்ல வேண்டியதில்லை....." அவளது முதுகில் இதமாகத் தட்டி ஆறுதல் கூறினார்.

யமுனா! இப்பேர்ப்பட்ட கண்ணியமான மனிதருக்கு மகளா பிறக்கறதுக்கு நீங்க குடுத்து வச்சிருக்கணும். நல்லவங்களைத் தான் கடவுள் ரொம்ப சீக்கிரமா தன் கிட்ட அழைச்சுக்கிறாருன்னு சொல்வாங்க.... கண்ட்ரோல் யுவர் செல்ஃப் தேற்றும் விதமாக மெல்லிய குரலில் முரளி பேசியதும்.... கீழுதட்டை அழுந்தக் கடித்து பீறிட்டுக் கொண்டு வந்த துக்கத்திற்கு அணை போட முயன்றாள்.

என்ன பாவம் செய்தேன் நான்? சிறுவயதிலேயே தாயை இழந்தேன். தந்தைக்கு தந்தையாய் தாயுமானவராய் உற்ற நண்பராய் இருந்த அப்பாவையும் இழந்து விட்டேன். மனதில் அரும்பிய காதல்.... ஒரு தலையாய் கருகி விட்டது. பெரிய பெரிய துக்கங்களைக் கொடுத்து... என்னை ஏன் இப்படி பந்தாடுகின்றார் பகவான். ?

கனவில் கூட அடுத்தவர்களுக்கு தீங்கு நினைத்ததில்லை... யாரைப் பார்த்தும் எதற்கும் பொறாமைப் பட்டதில்லை. முடிந்தவரை மற்றவர்களுக்கு உதவி செய்து நல்லதையே... நினைத்து நல்லவிதமாகத் தானே நடந்து வருகின்றேன். ஒரு வேளை போன ஜென்மத்தில் ஏதாவது பாவம் செய்திருப்பேனோ ?

சுய பச்சாதாபத்தில் மீண்டும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

"ஊகூம்! சுய பச்சாதாபப் படக் கூடாது. அது என்னை முடக்கிப் போட்டு மூலையில் தள்ளி விடும். தன்னம்பிக்கையுடன் வைராக்கியத்துடன் நான் பிரச்சினைகளை சமாளித்தாக வேண்டும்". பற்களைக் கடித்துக் கொண்டு கண்ணீரை உள்ளீழுத்துக் கொண்டாள்.

பெற்றதாயைப் போல் ஆறுதலாக கூடவே இருந்தார் ரங்கநாயகி. குடும்பத்தில் ஒருத்தனாக நின்று சகல காரியங்களையும் கவனித்துக் கொண்டான் முரளி. அவனது நண்பர்கள் கார்த்தியும் பாஸ்கரும் ஒத்தாசையாக நின்றிருப்பதைப் பார்க்கும் போது.. யமுனாவின் புண்பட்ட இதயத்திற்கு மருந்து தடவியது போலிருந்தது.

காலண்டரில் கிட்டத்தட்ட நாற்பது நாட்கள் விரயமாயின.

அடிக்கடி ஆறுதலாக வந்து போய் கொண்டிருந்தார் ரங்கநாயகி. அன்று மாலை மலர்ந்த முகத்துடன் வந்த ரங்கநாயகி, "யமுனா! முரளிக்கு ஒரு நல்ல கம்பெனியில வேலை கிடைச்சிருக்கும்மா! எம்.ஈ. எக்ஸாமோட ரிசல்ட் இன்னமும் வரல... ஆனா பி.ஈ. எக்ஸாம்லே டிஸ்டிங்ஷன்லே தேறியிருந்தான் இல்லையா ? அத்தோட எக்ஸ்ட்ரா கர்ரிகுலர் ஆக்டிவிடிஸ்லே நிறையா சர்டிபிகேட்ஸ் வச்சிருக்கான் இல்லையா ? அதான்..... நல்ல சம்பளத்தோட வேலை கிடைச்சிடுச்சு" என்றார்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா" யமுனாவின் முகத்திலும் சந்தோஷ ரேகை படர்ந்தது.





"யமுனா! வித்தியாசமா நினைக்காதேம்மா.... நீயும் எனக்கொரு மகள் மாதிரி தான். ஒட்டுமொத்தப் பொறுப்பும் உன் தலையில் விழுந்திருக்கு. உனக்கு பண உதவி செய்ய நாங்க தயாரா இருக்கோம். மறுக்காம அதை நீ ஏத்துக்கணும். நீ டிகிரி முடிச்சு..." அவர் பேசி முடிக்கும் முன் சட்டென்று இடை புகுந்தாள் யமுனா.

"ப்ளீஸ் அம்மா! இந்த விஷயத்துல என்னை வற்புறுத்தாதீங்க. உங்க வார்த்தையை மீறும்படியான இக்கட்டமான சூழ்நிலைக்கு என்னைத் தள்ள வேண்டாம். நான் மேற்கொண்டு படிக்கப் போறதில்லை. வேலைக்குப் போகப் போறேன்

"யமுனா ! நீ என்ன சொல்றே ? படிப்பை பாதியில நிறுத்திட்டு வேலைக்கப் போகணும்கிறியே ? " டிகிரி கூட முடிக்காம நிலைமையில... உனக்கு எப்படி வேலை கிடைக்கும் படபடத்தார் ரங்கநாயகி.

"எங்கப்பா ஒரு தீர்க்கதரிசி அம்மா... கம்யூட்டர் கத்து வச்சுக்கிட்டா பிற்காலத்துல அது கை கொடுக்கும்னு சொல்–.... கம்யூட்டர் சென்ட்ர்லே சேத்துவிட்டாரு.. நானும் நாலு வருஷமா கம்யூட்டர் சென்டருக்கப் போயி... சில கம்யூட்டர் கோர்ஸ்கள் முடிச்சிக்கேன். ரெண்டு நானைக்கு முன்னாடி கம்யூட்டர் சென்டர் மாஸ்டரைப் போய் பார்த்தேன்.

விஷயத்தைக் கேள்விப்பட்டதும் ரொம்ப வருத்தப் பட்டாரு. அவரோட நண்பர் புதுசா சா:.ப்ட்வேர் கம்பெனி ஒண்ணை இந்த ஏரியாவுல தொடங்கியிருக்காராம். அந்தக் கம்பெனியில எனக்கொரு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் குடுத்துட்டாரு.... "டிகிரியில என்னம்மா இருக்கு ? திறமையின் அடிப்படையில் இந்த வேலையை என் நண்பர் போட்டுக் குடுத்துட்டாரு... கம்யூட்டர் கோர்ஸ்கள்லே :.பர்ஸ்ட் கிளாஸ்லே தேறியிருக்கே... அதை என் நண்பர்கிட்ட சொன்னேன். திறதையும் சின்ஸிளாரிட்டியும் இருந்தால் போதும்னு சொல்லிட்டான் " அப்படின்னு சொன்னாரு அம்மா!

நான் நாளைக்கு வேலையில சேரப் போறேன் அம்மா. நாளைக்கு அமாவாசை நாள் நல்லா இருக்கு அதான்... நானே உங்க வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொல்லலாம்னு இருந்தேன். நீங்களே வந்துட்டீங்க... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க " கால்களில் பணிந்தாள் யமுனா.

"நீ அமோகமா வரணும் யமுனா" கண்கள் பணிக்க ஆசீர்வதித்தார் ரங்கநாயகி. முரளிக்கும் உனக்கும் ஒரே சமயத்துல வேலை கிடைச்சிருக்கே.... நல்ல விஷயம் தான்"

இருவரும் அவரவர் பணிகளில் வெகு காலம் நீடிக்கா விடாமல்.... விதி சதி செய்தது.

---

# 16

---

உயர உயரமாய் வீசியடித்தன அலைகள். வானத்தில் குளிர்ச்சியாய் நிலவு ஜில்லென்று பாதங்களை முத்தமிட்டு விட்டுச் சென்ற அலைகள்.... யாருமே இல்லாத அமைதி... குறுகுறுக்க வைத்த மணல். அலைகளை வெறித்தபடி அமர்ந்திருந்தான் முரளி.

கை நிறைய மணலெடுத்து சிறிய ஓட்டை வழியாக கீழே வழிய விட்டான். கல்லெறிபட்ட குளமாய் அவனது மனம் குழும்பித் தவித்தது.

அவனது படிப்பு முடிந்து காலேஜை விட்டு வெளியில் வந்ததும்... சஹானாவை சந்திக்கும் வாய்ப்புகள் வெகுவாய் குறைந்து விட்டிருந்தன.

சதா அவளது நினைவிலேயே உருகி மருகிகக் கொண்டிருந்தான். இரு தினங்கள் சேர்ந்தாற்போல் அவளைப் பார்க்க முடியாவிட்டால்... அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போ–ருந்தது.

இந்தத் தடிப்பும் பரிதவிப்பும் சஹிக்கும் இருக்கிறதா ?





நான் முரளியோட லவ்வராக்கும் என்று தம்பட்டம் அடிக்காத குறையாக .... காலேஜில் படிக்கும் அனைவரிடமும் பெருமையாய் சொல்லிக் கொண்டு திவிந்தவள் அவள்.

"உங்களைப் பிரிஞ்சு ஒரு நாள் கூட என்னால இருக்க முடியாது முரளி! இருபத்து நாலு மணி நேரமும் உங்க கூடயே இருக்கணும்னு மனசு ஏங்குது முரளி கண்களில் காதல் ததும்ப அவனது கையை எடுத்து தனது கன்னத்தில் பெருத்திக் கொண்டு குழைவாள் சஹானா.

ஆனால் ... சமீப காலமாக அடியோடு மாறிப் போய் விட்டாளே ? என்னை நிராகரிக்கத் தொடங்கி விட்டாளோ ?

குட்டியாய் ஒரு சந்தேகம் ஜினத்தது.

"சேச்சே ! சஹானா என் மேல உயிரையே வச்சிருக்கா. எனக்காக... என் காதலுக்காக உயிரை துச்சமாக நினைச்சு தற்கொலை முயற்சியில இறங்கினாளே ? இந்த வாட்டி செமஸ்டரக்கு சரியா படிக்காம கோட்டை விட்டுட்டேன் முரளி! ரிசல்ட் வந்ததும் வீட்டுல மண்டகப்படி வாங்கிக் கட்டினேன்" என்றாளே ?

ஒரு வேளை... அந்தக் கவலையில் மூழ்கிப் போய்த் தான் என்னை சந்திப்பதை தவிர்க்கிறாளோ?

அவள் எதற்கும் கவலைப்படும் ரகத்தைச் சேர்ந்தவள் இல்லையே ?

குழுப்பமும் சந்தேகமும். அவனைப் பாடாயப்படுத்தி வரைதத்தன.

"ட்ரிங்... ட்ரிங்" அவனது செல்ஃபோன் செல்லாமாய் சிணுங்கியது.

"ஹலோ"

"ஹாய் முரளி! எங்க இருக்கீங்க ? நான உங்களை உடனடியா பார்க்கனுமே ?"

"ஏன் கேட்க மாட்டே ? உன் செல்லுக்கு நூறு வாட்டி ட்ரை பண்ணிட்டு ஒய்ஞ்சு போய் பீச்சுல உட்கார்ந்திருக்கேன்.

நிம்மதியா ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வச்சுட்டு ... இப்போ ஞானோதயம் வந்து பேசறியாக்கும் ? "

"சாரி சாரி முரளி! வீட்டுலே கெஸ்ட் வந்திருக்காங்க... அதான்! அப்புறம் எங்க வீட்டலே நாளைக்கு ஒரு விசேஷம் இருக்கு. நீங்க கண்டிப்பா ஃபங்ஷனுக்கு வரணும் "

"என்னை ஃபங்ஷன் சஹி? உன்னோட பெர்த்டேயா? முரளியை ஆர்வம் ஆக்கிரமதித்துக் கொண்டது."

"அது சஸ்பென்ஸ்! நாளைக்கு காலையில் பத்து மணிக்கு எங்க வீட்டுக்கு நீங்க வந்துடணும். கண்டிப்பா வரணும். நான் காத்துட்டிருப்பேன் முரளி! மிஸ் பண்ணிடாதீங்க" மறுமுனையில் செல்லை அணைத்துவிட்டாள் சஹானா.

மறுநாள் காலையில் ... சஹானாவுக்குப் பிடித்தமான கலரில் உடை அணிந்து கொண்டு மலர் பொக்கேயை வாங்கிக் கொண்டு ... தயங்கியபடி ஸ்கூட்டரில் ஏறி அவளது பங்களாவுக்குச் சென்றான். அந்த பங்களா இருந்த தெருவை அடைத்துக் கொண்டு வரிசையாக கார்கள் அணிவகுத்து நின்றன.

"என்ன விசேஷம்னு கூட செல்லலை ... குறும்புக்காரி" என்று நினைத்துக் கொண்டே பைக்கை நிறுத்தி விட்டு "பொக்கேயுடன்" பங்களாவுக்குள் நுழைந்தான்.

போர்டிகோவைத் தாண்டி அந்த பிரமாண்டமான ஹா–ல் பூரித்த முகங்களோடு நிறைய பேர் தெரிந்தனர். சோபாவில் நடுநாயகமாக சஃபாரி சூட் அணிந்து அமர்க்ளமாக அமர்ந்திருந்தவர்களைப் பார்த்தும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அப்பா விஸ்வநாதனும் அண்ணன் முகேஷீம் இங்கு எதற்கு வந்தார்கள்? கேள்வி கொக்கியாக வளைந்து அவனது மென்மையான இதயத்தைக் கிழித்தது.

அவர்கள் தன்னைப் பார்த்துவிடும் முன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விட வேண்டும் என்று விருட்டென்று நடந்தான்.

"மிஸ்டர் முரளி ! " போர்டிகோவின் இடது புறத்தி–ருந்து





குரல் வந்த திசையில்.. சஹானாவின் தோழி மேரி நின்று கொண்டிருந்தாள்.

"உங்களை சஹி வரச் சொன்னா...... இப்படி வாங்களேன் ப்ளீஸ் " மறுக்க முடியாமல் அவளை பின் தொடர்ந்தான்.

பங்களாவின் புறத் தோட்டத்தி–ருந்த அலங்கார ஊஞ்ச–ல்.... தலை நிறைய பூவும் பட்டுப்புடவை சகிதமாக அலங்கார தேவதையாக கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருந்தாள் சஹானா. விழிகளில் ஆணவமும் அகங்காரமும், அலட்சியமும் மிதந்தன.

அவளை அந்தக் கோலத்தில் பார்த்த முரளியின் அடிவயிறு சுருண்டது. ஏதோ பொறி தட்டியது.

" ஹாய் முரளி ! என் பேச்சைத் தட்டாம ஃபங்ஷனுக்கு வந்துட்டியே ? குட் ! என்ன விசேஷம்னு இன்னுமா புரியலை ? பிரபல தொழிலதிபர் விஸ்வநாதனைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறயா ? கேள்விப் பட்டிருப்பே.... அவரைப் பத்தி தெரியாதங்க யாரும் இருக்க முடியாது? அவரோட மகன் மிஸ்டர் முகேஷிக்கும் எனக்கு நிச்சயதார்த்தம்! ஜஸ்ட்..... ஃபைவ் மினிட்ஸிக்கு முன்னாடி தான் தாம்பூலத் தட்டை மாத்திக்கிட்டாங்க........

"ச..... சஹி ! அப்போ நீ என்னைக் காத–ச்சது ? ....." அவன் திணறிப் பேசுவதற்குள் குறுக்கிட்டாள்.

"ஸ்டாப் இட் இந்தக் காதல் கத்திரிக்காயில எனக்கு என்னிக்கும் நம்பிக்கை இல்ல ........ ஒட்டு மொத்த காலேஜீம் உன்னை ஆஹோ ஒஹோன்னு தூக்கி வச்சுக் கொண்டாடுச்சா ? உன்னை வ–ய வந்து பாராட்டினேன். ஆனா பெரிய விஸ்வாமித்திரர் மாதிரி என்னை ஏறிட்டுக் கூடப் பார்க்காம அலட்சியம் பண்ணினே ? எந்த இளைஞனும் என்னை ஒருவாட்டி பாத்துட்டா போதும் என் கடைக்கண் பார்வைக்காக ஏங்கித் தவிப்பான் .... ஆனா நீ அவ்ளோ அசால்டா இருந்தே !

"காலேஜிக்கே முடி சூடா மன்னனா இருந்த உன்னை ..... என் அழகுக்கு அடிமையாக்கணும்னு நெனச்சேன். சாதிச்சுட்டேன். ஃப்ரண்ட்ஸ் கிட்ட பெட் கட்டி இருந்தேன். அதுல ஜெயிச்சுட்டேன். உன்னை என்பின்னாடி அலைய வச்சேன், ஒவ்வொரு நிமிஷமும் என்னையே நினைச்சு ஏங்கி உருக வைச்சேன்.

மிடில் கிளாஸ் ஃபேமி–யில் பிறந்தவன் நீ, உனக்கு உன்னோட தகுதியைப் பத்தின் நெனப்பே இல்லையா? நீ ஜீனியஸ் தான்...... ஆனா பணத்துலேயே புரண்டு வளர்ந்த ஒரு அழகியை காத–க்கிறியே? உனக்கும் எனக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா?

யமுனா கிட்ட நான் நெருங்கிப் பழகினாலும் .... உள்ளூர அவள் மீது எனக்கு பயங்கர கோபம் தான்! டீச்சர்ஸ் கிட்டேயும் லெக்சரர்ஸ் கிட்டேயும் என்னைவிட அவ நல்ல பேரெடுத்துவா... படிப்புலேயேயும் நம்பர் ஒன்! அவளுக்குக்கும்ஒரு சரியான மரண அடி குடுக்கணும்னு நெனச்சேன். குடுத்துட்டேன். என்ன முழிக்கிறே?.

அவ உன்னை விரும்பினா... பாம்பின் கால் பாம்பறியும்னு சொல்வாங்க அதை நான் ஆரம்பத்துலேயே புரிஞ்சுகிட்டுதான்.... உங்க ரெண்டு பேருக்கு இடையில புகுந்து குட்டையைக் குழப்பினேன். உன்னை என் வலையில் விழ வைச்சேன். அவளை அழ வைச்சேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அரதப் பழசான வீட்டுல அடியெடுத்து வச்சு குடும்பம் நடத்துவேன்னு எதிர்பார்த்தியா முரளி? நீ ஒரு என்ஜீனியர் தான்.

நல்ல கம்பெனியில கை நிறைய சம்பளம் வாங்கிட்டுருக்கியே? மாசாமாசம் நான் வாங்கற காஸ்மெடிக்ஸ்க்கான செலவு இருக்கே?.... அது உன் சம்பளத்தைவிட ரொம்ப ஜாஸ்தி முரளி. ஊசிக்கணைகளை புன்சிரிப்போடு சேர்த்து வீசினாள்.

முரளியின் கையி–ருந்த மலர் பொக்கே நழுவிக் கீழே





விழுந்தது. தனது காலடியில் விழுந்த பொக்கேயின் மீது அலட்சியமாகப் பார்வையைப் பதித்த சஹானா.... ஹை ஹீல்ஸ் போட்ட பாதத்தால் அதை மித்து நசுக்கினாள்.

குருதி வடிந்து ரணப்பட்டுக் கொண்டிருந்த முரளியின் இதயமும் நசுங்கியது. "ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் ரேஞ்சுக்கு விருந்து தயாராகியிருக்கும், பஃபே சிஸ்டம் தான்.... வந்தது வந்துட்டே... கொஞ்சம் நேரம் இருந்து சாப்பிட்டுப் போயேன்... இந்த மாதிரி அயிட்டம்ஸை இதுக்கு முன்னாடி நீ கண்ணால கூடப் பாத்திருக்க மாட்டேயில்ல? ... ஓகே! ஸீ யூ முரளி" முகத்தில் சிரிப்பைத் தொலைக்காமல் வார்த்தைகளில் விஷத்தை ஏற்றினாள்.

நாற்சந்தியில் நிற்க வைத்து துகிலுரிந்தது போன்ற அவமானத்தில் துடித்துப் போனான் முரளி.

உடம்பெல்லாம் திகு திகு வென்று தீப் பற்றி எரிந்து போ–ருந்தது. விருட்டென்று வெளியேறி பைக்கில் அமர்ந்து அதை சீற்றத்துடன் கிளம்பினான்.

"சஹி இவ்வளவு மோசமானவளா நீ? கள்ளம் கடபமில்லாத வெள்ளை மனசுக்காரின்னு நெனச்சுட்டிருந்தேன்? சூது, வாது, பொய், வஞ்சம், பொறாமை, நய வஞ்சகம்.... இவற்றின் மொத்த உருவமா நீ? உன்னைப் போய் உருகி உருகிக் காத–த்தேனே?

என்னை ஜெயிக்கணும்னு பெட் கட்டியிருந்தியா? என்னை வீழ்த்துவதற்கு உனக்கு வேறு ஆயுதமே கிடைகலையா? காதல் புனிதமானது மலரினும் மென்மையானது. அதையா ஆயுதமா எடுத்துக்கிட்டே?

நான் உண்டு என் வேலை உண்டுன்னு ரிஷ்ய சிருங்கனா படிச்சுட்டிருந்தேன். இது தப்பா? என்னை மயக்கி அடியோடு வீழ்த்தி உன் பின்னால பூனைக்குட்டி மாதிரி அலைய வச்சியா? என்னை ஒரு பஃபூன் மாதிரி ஆக்கி இத்தன நாளா சிரிச்சு ரசிச்சுட்டிருந்தியா?

அடப்பாவி பிரபல தொழிலதிபர் விஸ்வநாதனைப் பத்தி

கேள்விப்பட்டிருக்கியா? அப்படின்னு என்கிட்டேயே கேட்டியே? நானும் அவரே பிள்ளை தான் கோடிக்கணக்கான சொத்துக்களை துச்சமா நெனச்சு உதறிட்டு நானும் எங்கம்மாவும் நிம்மதியா வைராக்கியத்தோட வாழறோம். என்னை பார்த்தா.... விருந்து சாப்பிட்டுப் போன்னு சொன்னே? ச்சீ! பணப்பிசாசே .... ஒரு பொண்ணுக்கு எதெல்லாம் இருக்கக் கூடாததோ..... அத்தனை கெட்ட குணங்களும் உன்கிட்ட இருக்கு

உனக்கு போய் என் இதயத்துல இடம் குடுத்தேன்? எவ்வளவு பெரிய முட்டாள் நான்! ஒரு விஷப்பாம்பை விரும்பிவிட்டேன்.

சவுக்கடி பட்ட மாதிரி உடம்பு உதறி உதறிப் போட்டது. என்ன வலி? என்ன அவஸ்தை? அம்மம்மா........ வெறும் வார்த்தைகளால் மனிதனை இப்படி எல்லாம் சித்ரவதை செய்ய முடியுமா?

உடைத்து, நசுக்கி, நொறுக்கி, குத்தி, கிழித்து, வாட்டி, வதைத்து, அறுத்து, அணு அணுவாய் சிதைத்து, பொசுக்கி....... அப்பப்பா.... என்ன வேதனை?

தீ, அனல் கங்குகள், திராவகம், கொதிக்கும் எண்ணெய் பட்டாற்போல் மனசும் உடம்பும் எரிந்தன, கருகின. வ-தாளாமல் ஊளையிட்டு அலறின.

'சஹி ஏதோ சொன்னானே? யமுனா உன்னை விரும்பினாள் என்று? அது உண்மையாக இருக்குமா? உன்னை என் வலையில் விழ வைச்சேன்.... அவளை அழ வைச்சேன் என்றாளே?

யமுனாவை முதன் முறையாக சந்தித்ததிலிருந்து.... சாவு வீட்டில் அவளுக்கு ஆறுதல் சொன்னது வரை.... அவள் சம்பந்தப்பட்ட காட்சிகள் அனைத்தும் அவனது மனக்கண் மன் படமாய் விரிந்தன.

'சதிகாரி சஹானா கூறியது உண்மை தான் போலும்! அன்று





நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் வாசலில் வைத்து சஹியும் நீங்களும் ஒரு குறையுமில்லாமல் அமோகமாக வாழணும்னு பகவானை நான் வேண்டுக்கிறேன்'. என்று யமுனா கூறிவிட்டு கலங்கிய விழிகளைத் தழைத்துக் கொண்டாளே?

கண்களில் ஏதோ தூசு விழுந்துவிட்டது என்றல்லவா நினைத்தேன்?

வேதனையும் அவமானமும் சேர்ந்து அவனது மென்மையான இதயத்தைக் கூறு போட்டன.

ஆத்திரமும் ஆவேசமும் அவனை உலுக்க..... பைக்கை படுவேகத்தில் ஓட்டிக் கொண்டு சென்றான்.

' இந்த மாதிரி அயிட்டம்ஸை இதுக்கு முன்னடி நீ கண்ணால கூட பார்த்திருக்க மாட்டேயில்ல?.... சாப்பிட்டுட்டுப் போ முரளி' சஹானா ஏக வசனத்தில் பேசியது மீண்டும் மீண்டும் செவிகளில் நாராசமாய் எதிரொலித்தது.

பைக் புயல் வேகத்தில் குறுக்கு வழியில் புகுந்தது, அந்த திருப்பத்தில் பாதாள சாக்கடைக்காக மிகப் பெரிய பள்ளம் தோண்டப்பட்டிருந்தது. எச்சரிக்கை பலகை மீது அவனது பார்வை படிந்து சுதாரித்து......: திடீரென்று பிரேக் போட்டான். முன் பக்க பிரேக்கைப் போட்டதும் பைக் தடுமாறி ஸ்கிட் ஆகி சிறிது தூரம் சரிந்து கொண்டே போய் அந்த விளக்கு கம்பத்தில் அசுரத்தனமாய் மோதியது. பலத்த அடிபட்டு குபுகுபு வென்று குருதி வழிய மயக்கத்தில் மூழ்கினான் முரளி.

---

# 17

---

யமுனாவின் செல்ஃபோன் அவசரக் குரலில் அழைப்பு விடுத்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த யமுனா எழுந்து போய் செல்லை

எடுத்தாள் திரையில் ரங்கநாயகியின் வீட்டு நம்பர் மின்னிக் கொண்டிருந்தது.

"சொல்லுங்கம்மா "

"யமுனா சித்த வீட்டுக்கு வந்துட்டுப் போறியாம்மா ? என்னவோ தெரியலை .... கார்த்தால எழுந்ததிலிருந்து மனசே சரியில்லை.... நேத்து ஒரே கெட்ட கனவா வந்தது.... மனசு பாரமா இருக்கு.... உன்கிட்ட பேசிட்டிருந்தா கொஞ்சம் இதமா இருக்கும்னு தோணுது. வர்றியா யமுனா ?." தயங்கினார் ரங்கநாயகி.

"இதோ.... இதோ வந்துட்டேன்மா." என்றவள் செல்லை அணைத்துவிட்டு தாத்தாவின் அருகில் வந்தாள். தாத்தா ரங்கநாயகி அம்மா வீட்டுக்கு கூப்பிட்டாங்க. நான் போயிட்டு அப்படியே வரும் போது உமாவை அழைச்சுட்டு வந்துடறேன்.

"மகராசி ரொம்ப நல்ல குணம் ! அம்மாவும் பிள்ளையும் நடேசன் [illegible] சாவுலே இழுத்துப் போட்டுக் காரியங்களை கவனிச்சாங்க..... போயிட்டு வாம்மா ."

தெருவில் இறங்கி நடந்த யமுனா..... காலியாக வந்த ஆட்டோவை நிறுத்தி சட்டென்று ஏறிக்கொண்டாள். அவள் ஆட்டோவில் ரங்கநாயகியின் வீட்டை அடைவதற்கும், முரளியின் நண்பன் கார்த்தி பைக்கில் தடதடத்து வந்து இறங்குவதற்கும் சரியாக இருந்தது.

" யமுனா ! மு... முரளிக்கு ஆக்ஸிடெண்ட் ! பயங்கரமா இரத்த இழப்பு ஏற்பட்டிருக்கு..... ஹாஸ்பிடல்லே சேத்திருக்கோம்"

" ஐயோ..... அ..... அவரோட உயிருக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே ? ." பகீர் என்ற உணர்வில் ஆடிப்போனாள்.

"எ....... எதுவும் இப்போ சொல்ல முடியாதுங்கிராங்க....... முரளியோட அம்மாகிட்ட பக்குவமா விஷயத்தைச் சொல்லி..... இதே ஆட்டோவுல கூட்டுட்டு வர்றீங்களா ?"

அதற்குள் வாசலில் வந்து நின்ற ரங்கநாயகி இவர்களது





சம்பாஷனையைக் கேட்டு விட்டு கதற ஆரம்பித்தார்.

" ஐயோ ! என் பிள்ளைக்கு என்னாச்சு? நான் உயிரோட இருக்கறதே அவனுக்காகத் தானே? எப்போர்ப்பட்ட உத்தமமான பிள்ளை அவன்......." புலம்பியவரைக் கைத்தாங்கலாக அணைத்து நடத்திக் கொண்டு வந்து ஆட்டோவில் ஏற்றினாள் யமுனா.

"ந....... நம்பிக்கையைத் தளர விடாதீங்கம்மா ! நீங்க கும்பிடற கடவுள் கைவிடவே மாட்டாரும்மா.... அ..... அவரோட நல்ல குணத்துக்கு ஒரு குறையும் வராது. தைரியமா இருங்க." ரங்கநாயகிளைத் தேற்றுவதற்காக ஒப்புக்கு வார்த்தை உதிர்த்தாளே தவிர.... உள்ளுக்குள் புழுவாய் துடி துடித்தாள் யமுனா.

ஐ.சி.யு... வெளியே பேயறைந்தாற் போல் நின்று கொண்டிருந்த பாஸ்கரிடம் "டாக்டர் என்ன சொன்னாரு ?" ப... பயப்படும்படியா ஒண்ணுமில்லையே ? கேள்விக்கணையைத் தொடுத்துவிட்டு ...... கண்ணாடி வழியாகப் பார்வையை பாய்ச்சினாள் யமுனா.

தலை, கை, கால்களில் போடப்பட்ட கட்டுக்களுடன் ... நோயின் தீவிரம் உணராத "கோமா" நிலையில் அவன் உறங்க... அவனின் வருத்தமும், வேதனையும், வலியும் வெளியே இருந்தவர்களின் மனசுக்குள் கடத்தப்பட்டிருந்தன.

உயிரின் ஓட்டத்தையும், தப்பித்தலையும் தடுத்து நிறுத்தக்கூடிய கருவிகள் பலவற்றின் காட்சிச் சாலையாக இருந்தது அந்த அறை !

"முரளிக்கு நிறைய இரத்த இழப்பு ஏற்பட்டிருக்கிறதால ..... உடனடியாக இரத்தம் செலுத்தியாகனும், அவனுக்கு ரேர் குரூப்பாம்...... பிளட் பேங்க்லே கூட ஸ்டாக் இல்லையாம்......... பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனுக்கு ஃபோன் பண்ணியிருந்தாங்க. கடவுள் புண்ணியத்துல ரேர் குருப்பைச் சேந்தவங்க யாராச்சும் வந்து பிளட் கொடுத்தாங்கன்னா....... முரளிளைக் காப்பதத்திடலாம். "

படாரென்று திரும்பி திருப்பி பாஸ்கரை ஏறிட்டாள். "மைகாட் ஏ.... எனக்கு ரேர் குருப் தான்..... என் உடம்பிலிருந்து எவ்வோள பிளட் வேணுமா எடுத்துக்கச் சொல்லுங்க" தழுதழுத்தாள்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?" எவ்வளவு கட்டுபடுத்தியும் [illegible] கண்ணீர் சுப்பிரகள் தங்கள் அடக்கத்தைக் கைவிட்டிருந்தன. வெகு வேகமாக உருண்டு வந்த உப்பு நீர் நேரடியாகக் கன்னங்களின் வழியே வெளியேறாமல்.... உதடுகளின் மீது அடிக்கடி பயணம் செய்தது.

நரம்பில் ஊசி இறக்கி இரத்தம் சேகரித்த போது தலையோடு காலாய் நெகிழ்வு!

"ஆஞ்சநேயா! பகவானே......" என் முரளி முழுசா குணமாகிடணும். என் ஆயுட் காலத்தை எடுத்துகிட்டு அவரை நீடுழி வாழ வைக்கணும். உனக்கு துளசி மாலையும், வடமலையும் சாத்தறேன்....." நங்கநல்லூர் ஆஞ்சநேயரை மனதாரப் பிரார்த்தனை செய்தாள்.,

இரத்தக் கொதிப்பையும், சர்க்கரை வியாதியையும் ஏற்கனவே குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருந்தார் ரங்கநாயகி. மிகப் பெரிய அதிர்ச்சி தாக்கியதில் அவருக்கு பி.பி. எகிறி அடிக்கடி தலைசுற்றல் ஏற்பட்டது. அவருக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலையை ஏற்பட்டது.

எம்.டி.யிடம் விஷயத்தைத் தெரிவித்து விடுமுறை பெற்றுக் கொண்டு பகல் முழுவதும் ஹாஸ்பிடல் தங்கி இருவரையும் கவனித்து கொண்டாள் யமுனா.

மூன்றாம் நாள் முரளி கண் விழித்துப் பார்த்த போது.... ரங்கநாயகி கண்கலங்க அவனது கால்மாட்டில் அமர்ந்து கொண்டார். யமுனா பிரிஸ்கிரிப்ஷனை எடுத்துக் கொண்டு ஏதோ மாத்திரை வாங்க டிஸ்பென்சரிக்குச் சென்றிருந்தாள்.

"அன்னிக்கு நீ கிடந்த கோலத்தைப் பாத்துட்டு நிலைகுலைஞ்சு போயிட்டேன்பா..... பகவான் அனுக்கிரகத்துல பிழைச்சு வந்து என் வயிற்றுல பாலை





வார்த்தியே... ஜாக்கிரதையா வண்டியோட்டி இருக்கக்கூடாதா? எவ்ளோ பெரிய விபத்துல மாட்டிக்கிட்டே ராஜா? " விசும்பினார்.

"எ..... எல்லாம் விதிம்மா ! அ... அதான் நான் பிழைச்சுட்டேன்ல? " மெல்லிய குரலில் திணறித் திணறி பேசினான்.

"யமுனா மட்டும் இல்லேன்னா...... நீ பிழைக்கிறதே பெரிய கஷ்டமா போயிருக்கும் முரளி என்னப்பா அப்படி பார்க்கிறே? நிஜத்தைத் தான் சொல்றேன். தக்க தருணத்துல அவதான் ரத்தம் குடுத்து உன்னைக் காப்பாத்தினா.... தெய்வமா பாத்து தான் இந்த அன்பு தேவதையை நமக்காக அனுப்பியிருக்காருன்னு.... என் உள்மனசு சொல்லுதுப்பா...

நான் உனக்கு ஒரு தாயாக மட்டும் இருந்தில்லை..... நல்ல சிநேகிதியாவும் இருந்திருக்கிறதால....... ஒரு விஷயத்தை வெளிப்படையா சொல்றேன். யமுனா உன்னை உயிருக்கு உயிரா நேசிக்கிறா...... உனக்கு இப்படி ஆச்சுன்னு தெரிஞ்ச உடனே அவ துடிச்ச துடிப்பு இருக்கே? அதிர்ச்சியில எனக்கு பி.பி.ஜாஸ்தி ஆகி கிட்டினஸ் வந்துடுச்சு. ஊசி மாத்திரை குடுத்து எப்படியோ தூங்கப் பண்ணிட்டாங்க....

ஆனா யமுனா தணல் மேல நின்னுக்கிட்டிருந்தாப்பல..... தவிச்சுப் போயிட்டா... அவளோட பதை பதைப்பும் பரிதவிப்பும்.... அவளையும் மீறி தாரை தாரையா வடிஞ்ச கண்ணீரும் என்னைத் திகைக்க வச்சிடுச்சு.... அவ எந்த அளவுக்கு என்னை நேசிக்கிறாள்னு புரிய வச்சிடுச்சு.

ஊசி மயக்கத்துல நானாவது கண் அசந்துட்டேன். ஆனா யமுனா உனக்கு ஏதாவது ஆயிடுமோங்கிற பயத்துல ஒரு நிமிஷம் கூட கண் அசந்திருக்க மாட்டா.... ஆபீசுக்கு லீவு போட்டுட்டு இங்கேயே இருந்து கவனிச்சுக்கிட்டா... நைட் வீட்டுக்குப் போயிட்டு விடிஞ்சும் விடியாத்துமா பதட்டத்தோட இங்க ஓடி வந்துடுவா......

முரளி இப்பேர்ப்பட்ட பொண்ணு உனக்கு மனைவியானா..... உன்னோ வாழ்க்கை ரொம்ப அமோகமா இருக்கும்னு நம்பறேன். கார்த்தியும் பாஸ்கரும் ரொம்ப ஒத்தாசையா இருந்தாங்க.... யமுனாவோட நல்ல குணத்தையும் பரந்த மனப்பான்மையையும் நேர்ல பார்த்துட்டு... உன் நண்பர்கள் பிரமிச்சுப் போயிட்டாங்கப்பா.... அவர் மேற்கொண்டு பேசியது எதுவும் முரளியின் செவிகளை சென்றடைவில்லை.

அவனது மனசாட்சி ரம்பமாய் அறுக்கத் தொடங்கியது.

யமுனா ஒரு "ரோஜா வைரம்"..... அருகிருந்த வைரத்தின் அருமை தெரியாமல் கிறிஸ்டல் கல்ன் அழகில் மயங்கிப் போய்விட்டேனே?

யமுனா ஒரு பத்தரை மாற்றுத் தங்கம்.... ஆனால் நான் காக்கா பொன்னின் பளபளப்பில் மதி மயங்கினேனே? யமுனாவும் அழகி தானே? மனத்திற்கு இதம் தரும் அழகு!.

அடுத்தப்படி சஹனாவை என் மனம் நாடியது? யமுனா தாமதமாகத்ததானே கல்லூரிக்கு அடியெடுத்து வைத்தாள்? அவள் வருவதற்கு முன்பே........ சஹானா என்னைச் சுற்றி சுற்றி வந்து வசியம் செய்து விட்டாள் போலும்.

"காதலுக்கு கண்ணில்லை" என்று சொல்வார்களே? அதைப்போல் கண்ணிருந்தும் குருடனாய் ஆகிவிட்டடேன். அந்த அசாடிக்கு அழகு என் புத்தியை மழுங்க வைத்துவிட்டதா? இல்லை... குறும்புத்தனம் சிறைந்த வெகுளிப் பெண்ணாக நடித்து என்னை ஏமாற்றி விட்டாள்.

என்றைக்கு சஹானா ஒரு சதிகாரி, விஷக்கிருமி என்று தெரிந்ததோ... அன்றே அவள் மிது வைத்திருந்த காதலும் மரணித்துவிட்டது. அவளைக் காதத்த நானும் மரணமடைந்து விட்டேன்.

ஒரு அப்பழுக்கில்லாத அன்பு தேவதை எனக்கு உதிரம் அளித்து உயிர் கொடுத்துவிட்டாள். அந்த புண்ணியவதியால் நான் ஜென்மம் எடுத்திருக்கின்றேன்.





கருணையின் மொத்த உருவம் யமுனா. நான் கிடைக்கப்போவதில்லை என்று தெரிந்திருந்தும், எ சஹி குடியிருந்தாள் என்று தெரிந்திருந்தும்.... எனக்கு விபத்தை கண்டு துடித்திருக்கிறாள். தவித்திருக்க ள. உள்ளூர ஓலமிட்டுக் கதறியிருக்கிறாள் என்றாள்......... அவள் எந்த அளவுக்கு என்னை நேசித்திருக்க வேண்டும்?

சஹி என்னை அவமானப்படுத்தி மரணவாசலுக்குத் தள்ளிவிட்டாள். ஆனால் யமுனா எமனிடம் போராடி உதிரம் கொடுத்து உயிரை மீட்டுக் கொடுத்து நடமாட வைத்திருக்கிறாளே? அவளுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் என் அம்மாவுக்கு கால் காயம் ஏற்பட்ட போது சிரத்தையுடன் கவனித்துக் கொண்டாளே? காலை, மாலை இரு வேளைகளிலும் இழுத்துப் போட்டு செய்தாளே?

கருணை, அன்பு, மனித நேயம், மனிதாபிமனம், பண்பு, அடக்கம், பவ்யம், பாசம் போன்ற நற்குணங்களை மொத்தமாகச் சேர்த்துப் பிசைந்து இவளை பிரம்மன் படைத்திருக்க வேண்டும்.

இந்த காலத்திரும் இப்படியொரு பெண்ணா? அவளது இதயத்தில் நான் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறேனா? அதற்குத் தகுதி உடையவனா நான்?!

"அம்மா! பி.பி. மாத்திரை போட்டுக்கிறீங்களா? கேட்டபடி உள்ளே வந்தாள் யமுனா. முரளி கண் விழித்திருந்ததைப் பார்த்ததும்.. அதுவரை பாறாங்கல்லாய் கணத்த இதயத்தில் சட்டென்று பாரம் விலகி இறகு போல் இசானது.

இரு தினங்களுக்கு முன் சஹானா யமுனாவின் செல்ல் பேசினாள். காதல் என்ற துருப்புச் சீட்டை பயன்படுத்தி முரளியை வீழ்த்தியதையும் விரைவில் கோடீஸ்வர மாப்பிள்ளைக்கு மாலையிடப் போவதையும்

CONNEMARA PUBLIC LIBRA

முரளி இப்பேர்ப்பட்ட பொண்ணு உனக்கு மனைவியானா.... உன்னோ வாழ்க்கை ரொம்ப அமோகமா இருக்கும்னு நம்பறேன். கார்த்தியும் பாஸ்கரும் ரொம்ப ஒத்தாசையா இருந்தாங்க.... யமுனாவோட நல்ல குணத்தையும் பரந்த மனப்பான்மையையும் நேர்ல பார்த்துட்டு.... உன் நண்பர்கள் பிரமிச்சுப் போயிட்டாங்கப்பா.... அவர் மேற்கொண்டு பேசியது எதுவும் முரளியின் செவிகளை சென்றடைவில்லை.

அவனது மனசாட்சி ரம்பமாய் அறுக்கத் தொடங்கியது.

யமுனா ஒரு "ரோஜா வைரம் "..... அருகிருந்த வைரத்தின் அருமை தெரியாமல் கிறிஸ்டல் கல்ன் அழகில் மயங்கிப் போய்விட்டேனே ?

யமுனா ஒரு பத்தரை மாற்றுத் தங்கம்.... ஆனால் நான் காக்கா பொன்னின் பளபளப்பில் மதி மயங்கினேனே ? யமுனாவும் அழகி தானே ? மனத்திற்கு இதம் தரும் அழகு !.

அடுத்தப்படி சஹானாவை என் மனம் நாடியது ? யமுனா தாமதமாகத்தானே கல்லூரிக்கு அடியெடுத்து வைத்தாள் ? அவள் வருவதற்கு முன்பே........ சஹானா என்னைச் சுற்றி சுற்றி வந்து வசியம் செய்து விட்டாள் போலும்.

"காதலுக்கு கண்ணில்லை " என்று சொல்வார்களே ? அதைப்போல் கண்ணிருந்தும் குருடனாய் ஆகிவிட்டடேன். அந்த அசாடிக்கு அழகு என் புத்தியை மழுங்க வைத்துவிட்டதா ? இல்லை... குறும்புத்தனம் சிறைந்த வெகுளிப் பெண்ணாக நடித்து என்னை ஏமாற்றி விட்டாள்.

என்றைக்கு சஹானா ஒரு சதிகாரி, விஷக்கிருமி என்று தெரிந்ததோ... அன்றே அவள் மிது வைத்திருந்த காதலும் மரணித்துவிட்டது. அவளைக் காதத்த நானும் மரணமடைந்து விட்டேன்.

ஒரு அப்பழுக்கில்லாத அன்பு தேவதை எனக்கு உதிரம் அளித்து உயிர் கொடுத்துவிட்டாள். அந்த புண்ணியவதியால் நான் ஜென்மம் எடுத்திருக்கின்றேன்.





கருணையின் மொத்த உருவம் யமுனா. நான் அவளுக்கு கிடைக்கப்போவதில்லை என்று தெரிந்திருந்தும், என் மனதில் சஹி குடியிருந்தாள் என்று தெரிந்திருந்தும்.... எனக்கு நேர்ந்த விபத்தை கண்டு துடித்திருக்கிறாள். தவித்திருக்கிறாள். உள்ளுர ஓலமிட்டுக் கதறியிருக்கிறாள் என்றாள்......... அவள் எந்த அளவுக்கு என்னை நேசித்திருக்க வேண்டும் ?

சஹி என்னை அவமானப்படுத்தி மரணவாசலுக்குத் தள்ளிவிட்டாள். ஆனால் யமுனா எமனிடம் போராடி உதிரம் கொடுத்து உயிரை மீட்டுக் கொடுத்து நடமாட வைத்திருக்கிறாளே ? அவளுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் ?

எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் என் அம்மாவுக்கு கால் காயம் ஏற்பட்ட போது சிரத்தையுடன் கவனித்துக் கொண்டாளே ? காலை, மாலை இரு வேளைகளிலும் இழுத்துப் போட்டு செய்தாளே ?

கருணை, அன்பு, மனித நேயம், மனிதாபிமனம், பண்பு, அடக்கம், பவ்யம், பாசம் போன்ற நற்குணங்களை மொத்தமாகச் சேர்த்துப் பிசைந்து இவளை பிரம்மன் படைத்திருக்க வேண்டும்.

இந்த காலத்திரும் இப்படியொரு பெண்ணா ? அவளது இதயத்தில் நான் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறேனா ? அதற்குத் தகுதி உடையவனா நான் ?!

"அம்மா ! பி.பி. மாத்திரை போட்டுக்கிறீங்களா ? கேட்டபடி உள்ளே வந்தாள் யமுனா. முரளி கண் விழித்திருந்ததைப் பார்த்ததும்.. அதுவரை பாறாங்கல்லாய் கனத்த இதயத்தில் சட்டென்று பாரம் விலகி இறகு போல் இலேசானது.

இரு தினங்களுக்கு முன் சஹானா யமுனாவின் செல்லில் பேசினாள். காதல் என்ற துருப்புச் சீட்டை பயன்படுத்தி முரளியை வீழ்த்தியதையும் விரைவில் கோடீஸ்வர மாப்பிள்ளைக்கு மாலையிடப் போவதையும்

CONNEMARA PUBLIC LIB...

தெரிவித்தாள். வேதனையில் வெகுண்டு போனாள் யமுனா.

இந்த அதிர்ச்சியும் அவமானமும் சேர்ந்து தான் முரளியை விபத்துக்குள்ளாக்கி இருக்கின்றன என்பதை புரிந்து கொண்டாள். முரளியின் மீது பரிதாபமும் பரிவும் கூடுதலாக ஏற்பட்டிருந்தன.

"மிஸ்டர் முரளி! பெயின் ரொம்ப இருக்கா ? " மறுப்பாய் தலையசைத்தான். ரங்கநாயகி மெல்ல அறையை விட்டு வெளியேறினாள்.

அவளது விழிகளை ஊடுருவினான். அந்த நேசம் கோர்த்த பார்வை குற்றாலச் சாரல் மாதிரி பன்னீர் தெளித்தது. பொதிகைத் தென்றலாய் ஜவ்வாது வீசியது. சரம் சரமாய் பிச்சிப் பூ வாசம் பூசியது.

"இந்த உடம்பில உன்னோட ரத்தம் தான் ஓடிட்டிருக்கு. உயிரோட மீட்டு வந்திருக்கே. ஏழேழு ஜென்மத்துக்கும் உனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேன் யமுனா" என்று பேச முடியாமல் திணறினான். அவனது கண்கள் பொங்கின.

சட்டென்று அவளது கையைப் பிடித்தான். அந்தக் கையின் அழுத்தல் ஆயிரமாயிரம் வார்த்தைகள் பேசின. வார்த்தை என்பது நாக்கில் ஜனித்து ஒலி வடிவமாய் வாயிலிருந்து தான் வர வேண்டும் என்பது நியதியா என்ன ? அவனது கை சில்லென்றிருந்தது. அவனது பார்வை அவளது விழிகளைத் துளைத்து இதயத்தை ஸ்பரிசித்தது.

நரம்பை ஊடுருவும் சிலிர்ப்பு அவளுக்குள் இடமாற்றம் ஆனது. மனதுக்குள் ஓராயிரம் தாமரைகள் நெருங்கி அலையடிததன.

"கடவுள் புண்ணியத்துல உயிரோட மீண்டு வந்திருக்கீங்க... நடந்து போனதை நினைச்சு விசனப் படாதீங்க.... ட்ரிப்ஸ் பாட்டில் முடிஞ்சு.. உடனே வேறே மாத்தியாகணும். நர்ஸை கூட்டிட்டு வரேன்" நாசூக்காக கையை மெல்ல உருவிக் கொண்டாள்.





கிட்டத்தட்ட பதினான்கு தினங்களுக்கு பின்பே முரளி டிஸ்சார்ஜ் செய்யப் பட்டான். அவன் முழுதாய் தேறி நன்கு நடமாடுவதற்கு இரு மாதங்கள் வீட்டிற்குச் சென்று இதமாய் பேசி விட்டு வந்தாள்.

அன்றும் அப்படித்தான்! ஆபீஸ் வேலை முடிந்ததும் நேராக ரங்கநாயகி வீட்டிற்குச் சென்றிருந்தாள். பத்து நிமிடங்கள் அவருடன் கரிசனமாய் பேசிக் கொண்டிருந்தவள் கிளம்ப பயணித்த போது... அந்த டாக்ஸி வீட்டு வாசலில் வந்து நின்றது.

"வணக்கம் முரளி! ஒரு துக்கமான செய்தி சொல்ல வந்திருக்கேன். முகேஷ் ஓட்டிட்டு வந்த கார் ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சு. விஸ்வநாதன் சாருக்கு இடுப்புக்கு கிழே பலத்த காயம்... ஹாஸ்பிடலே சேத்திருக்கோம். முகேஷ்... ஸ்பாட்டிலேயே இறந்துட்டாரும்மா..... பாஸ் உங்களை பார்க்கப் பிரியப்படறாரு... சீக்கிரமா வர்றீங்களாம்மா ? "

---

# 18

---

முகேஷ் ஓர் உல்லாசமான இளைஞன். அப்பா விஸ்வநாதனுக்கு தப்பாமல் தலையெடுத்தவன். இரவெல்லாம் விழித்திருந்து விட்டு பகலில் உறங்கி விடும். நட்சத்திரத்தைப் போன்றவன் அவன்.

சூரியோதயத்தை அவன் பார்த்ததில்லை. எப்போதாவது விழிக்கும் போது அவன் விஸ்கியில் முகம் கழுவிக் கொள்வான். இரவு விடுதிகளும் சூதாட்டக் களங்களுமே அவனுடைய ராத்திரி உலகங்கள். பாசம், நேசம், நட்பு, பண்பு இவைகளெல்லாம் வார்த்தைகளாகக் கூட அவனுக்கு அறிமுகமில்லை.

அவனுக்கும் சஹானாவுக்கும் நிச்சயதார்த்தம் நடந்து முடிந்ததும்.. முகேஷிக்கு மகிழ்ச்சியில் தலை கால்

புரியவில்லை. அப்பா விஸ்வநான் வலைவிசீத் தேடி அவனது ரசனைக்கு ஒத்துப் போகின்ற பெண்ணைப் பிடித்துவிட்டாரே ? என்ந சந்தோஷம்...அவனைத் திக்கு முக்காட வைத்தது.

ஒரு பார்ட்டியில் கலந்து கொண்டு மூக்கு முட்டக் குடித்து விட்டு அப்பனும் மகனுமாய் காரிலேறினார்கள். போதையில் கண்கள் சொருக காரை ஒட்டியதால் பெரிய விபத்து ஏற்பட்டு விட்டது. சம்பவ இடத்திலேயே முகேஷை மரணம் தழுவிக் கொண்டது

படு காயத்துடன் துடித்த விஸ்வநாதன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு.. சிகிச்சை அளிக்கப் பட்டது. நினைவு திரும்பியதும் மிகப் பெரிய அதிர்ச்சியில் தாக்குதோடு சர்வமும் ஆடிப் போனார்.

"என் மனைவி ரங்கநாயகியைப் பார்க்கணும். என் பிள்ளை முரளியையும் அவளையும் கூட்டிட்டு வாங்க" கதற ஆரம்பித்தார் விஸ்வநாதன்.

"தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும். " என்று சொல்வார்கள். விஷயத்தைக் கேள்விப் பட்டதும் துயரக் கடல் மூழ்கிப் போனாள் ரங்கநாயகி. "பட்ட காலே படும் கெட்ட குடியே கெடும்" ன்னு சொல்வார்கள்... கடவுள் புண்ணியத்துல நீ பிழைச்சு வந்துட்டே... முகேஷ்..... போயிட்டான் முரளி!

மனம் போன போக்கு.ல ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி அழிவைத்தடிக்கிட்டானே ? வாடா... சீக்கிரமா போகலாம்

சட்டென்று காரிலேறினர். கண்ணீர் மல்க காருக்குள்ளிருந்து எட்டிப் பார்த்த முரளி, "யமுனா! நீங்களும் வாங்க... உங்க வீட்டுக்கு தகவல் சொல் அனுப்பிச்சுடலாம்... ப்ளீஸ்" என்றதும் மறுக்க முடியாமல் ஏறிக் கொண்டாள்

துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைக்க ரங்கநாயகியை தனது தோளில் சாய்த்துக் கொண்டாள்





யமுனா.

கிளம்புங்க அம்மா போகலாம். [illegible] எல்லாக் காரியங்களும் முடிஞ்சு போச்சே ? இன்னும் எத்தன நாளைக்கி இந்த பங்களாவிலேயே இருக்கிறராம் ?" முரளி உரிமையாய் ரங்கநாயகியை அதட்டினான்.

ரங்கநாயகி மௌனமாக யமுனாவை ஏறிட்டார். அன்று ஞாயிற்றுக்கிழமை ரங்கநாயகி அவளுக்கு ஃபோன் செய்து வர வழைத்திருந்தார்.

"மிஸ்டர் முரளி! எவ்ளோ பெரிய ஜீனியஸ் நீங்க! உங்களுக்கு நா எதுவும் சொல்ல வேண்டியதில்லை.... நடந்து போன தவறுக்கு வருந்தி உங்கப்பா பகிரங்கமா மன்னிப்பு கேட்டுட்டாரு.... வயோதிக காலத்துல மூத்த மகனை இழந்துட்டு... இடுப்புக்கு கீழே செயிழந்து சக்கா நாற்காயில உட்கார்ந்துட்டாரு

அம்மாவுக்கு உங்க அப்பா மேல கோபமும் வருத்தமும் நிறைய இருந்தது. இப்பவும் இருக்கலாம்... ஆனா அடிப்படையில் அவங்க ஒரு நல்ல மனைவிங்கிறதை ஏன்மறந்துட்டீங்க ? இந்த நிலைமையில அப்பாவை விட்டுட்டு வாதுக்கு அவர்களுக்கு எப்படி மனசு வரும் ? " பரிந்துக் கொண்டு பேசினாள்.

"புரிஞ்சு தான் பேசறீங்களா யமுனா ? அவரு கெட்டழிஞ்சு போனதுமில்லாம அண ணனைக் கெடுத்து கடைசியல அவனைக் குழி தோண்டி பிதைச்சுட்டாரு. இதை நினைச்சா எனக்கு பத்திக்கிட்டு வருது.... கண்கெட்ட சூரிய நமஸ்காரம் பண்றாரு... "எல்லாத்தையும் நீ தான் பாத்துக்கணும்பா... இல்லேன்னா மனசுடைஞ்சு இப்பவே செதழுதுப் போயிடுவேன்னு புலம்பறாரே ? அள்ளக் குறையாத சமுத்திரம் மாதிரி சொத்து இருக்கே ?

அவரை கவனிச்சுக்க ஆயிரம் பேர் வருகாங்க. அவங்களை வச்சே.... எல்லா நிறுவனங்களை கட்டி மேய்க்க வேண்டியது தானே ? யாருக்கு வேணும் இவரோட சொத்து ?

" கோபத்தில் கொந்தளித்தான்.

"அம்மாவோட மனசறிஞ்சு நடக்கிற தங்கமான பிள்ளை நீங்க! இப்ப ஏன் அவங்களோட மனசைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறீங்க? இது.... உங்கப்பாவோட சுய சம்பாத்தியமா? இல்லையே? பரம்பரையா வந்த சொத்து தானே? அத்தனையும் நீங்க தானே நிர்வாகம் பண்ணணும். இந்த வம்சத்தோட வாரிசு நீங்க.... எங்கேயோ யாருக்கோ நீங்க சேவகம் செய்யறதிலே.... அம்மாவுக்கு உடன்பாடு இல்ல....

சொத்து சுகத்துக்கு ஆசையே படாத இளைஞர் நீங்க! பாராட்டப்பட வேண்டிய விஷயம் தான். ஆனா... இது மூலமா நீங்க எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்யலாமே? நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு தரலாம். நிறைய குடும்பங்களுக்கு படியளக்கலாமே

அதுக்காவது நீங்க ஒத்துக்கணும். ...உங்களுக்கு திறமை இருக்கு. அக்கறையும், உத்வேகமும், உழைப்பு சேர்த்துக் காட்டி களத்துல இறங்கினா... நீங்க சிகரத்தைத் தொடலாமே? அம்மாவோட ஆசையும் அது தான். ப்ளீஸ் மறுக்காதீங்க!

சரக்கென்று திரும்பி அவளது முகத்தை உற்றுப் பார்த்தான் முரளி.

"நான் இப்போ மறுத்தா.. அது உங்க ரெண்டு பேச்சோட மனசையும் காயப்படுத்தற மாதிரி இருக்கும். வேண்டாவெறுப்பாத்தான் நான்இதுக்கு உடன்படறேன். யமுனா. நான் இதுக்கு சம்மதிக்கனுன்னா.... நீங்க உங்க வேலையை ரிஸைன் பண்ணிடனும். என்ன... திகைச்சுப் போய் பார்க்கிறீங்க? அந்த வேலையை ரிஸைன் பண்ணிட்டு... எனக்கு உதவியா என்னோட பெர்ஸனல் செகரட்டரியாக ஜாயின் பண்ணி.... என்னோட முன்னேற்றத்துல பங்கெடுத்துக்கணும். அதுக்கு நீங்க சம்மதிப்பீங்களா? "

சிவந்த முகத்தில் திகைப்பு பரவ தயக்கத்துடன் ரங்கநாயகியை ஏறிட்டாள் யமுனா.





"சின்சியாரிட்டியும், நேர்மையும், திறமையும் நிறைஞ்ச பி.ஏ. அவனுக்கு கண்டிப்பா தேவை. அவனுக்கு பக்கபலமா நீ கூடவே இருக்கனும் யமுனா. அதான் என்னோட ஆசை கண்டிப்பா நீ இதுக்கு ஒத்துக்கனும்டா" குரலில் பரிதாபம் வழிந்தோட பேசிய ரங்கநாயகியைக் கண்டதும் அவளது மனம் பாகாய் கரைந்தது.

"சரிங்கம்மா...உங்க இஷ்டப் படியே செய்கிறேன். " என்று அவள் கூறியதும் முரளிக்கு பெருத்த நிம்மதி பரவியது.

சஹானாவால் அவமானத்தையும் ஏமாற்றத்தையும் சந்தித்த முரளிக்கு...உள்ளுக்குள் ஒரு புது உத்வேகம் பிறந்தது.

ரங்கநாயகியிடம் ஆசிர்வேதம் பெற்றுக் கொண்டு தனது அலுவலகத்தில் அடியெடுத்து வைத்தான். மூத்த அதிகாரியின் உதவியுடன் புயல்வேகத்தில் விவரங்களை சேகரித்தான். அனைத்து ∴பைல்களை தலைகீழாகப் புரட்டி கம்ப்யூட்டரை விரல் நுனிக்குள் அடக்கியதும்... வெற்றிப்பாதை 'பளிச்' சென்று கண்ணுக்கு புலனாகியது.

யமுனா கற்பூர புத்தியுடன் அதி திறமைசாலியான 'பி.ஏ' வாக செயல்பட்டு ஆலோசனைகளை அள்ளி வழங்கிய விதம்.... அவனை ஆச்சிரியத்தில் மூழ்கடித்தது. அவர்கள் இருவரும் இணைந்து உருவாக்கிய பிராஜெக்ட் 'கிளிக்' ஆனது. வர்த்தக ரீதியாக வெற்றி பெற்று லாபத்தை அள்ளிக்குவித்தது.

மளமளவென்று வெற்றிப் படிகளில் வேகமாக ஏற ஆரம்பித்தான் முரளி. மாதங்கள் ஜெட் வேகத்தில் பறந்தன.

இரவும் பகலும் உரசிக் கொள்ளும் அந்திப் பொழுது ஆபீஸ் காரில் வந்திறங்கிய யமுனா கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்டு பூத்துவாலையால் ஒற்றிய படியே அடுக்களைக்குள் புகுந்தாள்.

சிறுது நேரத்தில் துரை பொங்க காபியை ஆற்றியபடியே வெளிப்பட்டாள். டிகாக்ஷன் மணம், தாத்தா சண்முகத்தின் நாசியைத் துளைத்தது. வைத்த கண்

வாங்கமால் பேத்தியையே அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்தாங்க தாத்தா..... காப்பி சாப்பிடுங்க!" காபியை ஒரே மூச்சில் குடித்து முடித்து மோடாவில் டம்ளரை வைத்தார் சண்முகம்.

"என்ன தாத்தா? ஒரு மாதிரியா இருக்கீங்க... உடம்புக்கு முடியலையா தாத்தா?" பாரிவுடன் அவரது வெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

"உடம்புக்கு ஒண்ணுமில்லைம்மா........ உன் கிட்ட கொஞ்சம் மனசு விட்டு பேசனும்மா." சீரியஸான முகபாவனையுடன் ஏறிட்டார்.

"என்ன தாத்தா இது? பீடிகை பவமாக இருக்கே..... சொல்லுங்க தாத்தா" புன்முறுவல் பூத்தபடி ஆர்வமாய் பார்த்தாள்.

"எனக்கு பொழுதே போகலைம்மா........ வீட்டுலே எந்தப் பக்கம் பார்த்தாலும் நடேசன் நிக்கிற மாதிரியே இருக்கு ..... சரி..... ஸ்ரீ ராம ஜெயம் எழுதினா...... சொஞ்சம் நிம்மதி கிடைக்கமென்று நெனச்சேன். ஏதாவது பழைய நோட்டு இருந்தா எடுத்துட்டு வாப்பான்னு .... கிரி கிட்டே சொன்னேன்.

அவன் உன்னோட பழைய டைரியை கொண்டாந்து குடுத்துட்டான் ஸ்ரீ ராம ஜெயம் எழுதிட்டு தற்செயலா பக்கங்களைப் புரட்டினேன். அடுத்தவங்களோட டைரியைப் படிக்கிறது தப்பு தான்.

ஆனா நீ என் செல்லப் பேத்தியாச்சே? ஏதோ ஒரு ஆர்வத்துல உரிமையாவாசிச்சுட்டேன். நீ...... நீ.... முரளிளை ஆத்மார்த்தமா விரும்பின விஷயத்தைத் தெரிஞ்சுட்டேன்.

"தாத்தா......" அவளது விழிகளில் "மளுக்" என்று கண்ணீர் குளம் கட்டியது. இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"ரங்கநாயகி அம்மா ரொம்ப நல்லவங்க ........ முரளியும் கண்ணியமான யோக்கியமான பையன்..... நாளைக்கு நல்ல நாளா இருக்கும். ரங்கநாயகி அம்மாளைப் பார்த்துப் பேசி முடிவு





பண்ணிடலாம்னு இருக்கேன். எனக்கு ரொம்ப வயசாயிடுச்சு இத்தன வருஷத்துக்கு நான் உயிரோட இருக்கிறதே பெரிய விஷயம்"

நான் கண்ணை மூடும் முன்னே உன்னைக் கரையேத்திடனும். என்னடா கண் கலங்கறே? உன்னைப் பெத்த அம்மாவோ, இல்ல... நடேசனா இருந்திருந்தா.... உன் மனசுல என்ன இருக்குன்னு நாசூக்காக கேட்டுத் தெரிஞ்சிருப்பாங்கல்ல?

நீ விரும்பினதை நான் குற்றமே சொல்லலை கண்ணா... மனசுக்கு கடிவாளம் போட்டு குடும்பப் பொறுப்போட கண்ணும் கருத்துமா இதுவரை நடத்துட்டு வர்றியே? உன்னைப் பேத்தியா அடைஞ்சதுக்கு நான் ரொம்பவே குடுத்த வச்சிருக்கனும் யமுனா!

யமுனாவின் உதடுகள் காற்றில் சிக்கிய மலரிதழ்களாய் துடித்தன. நெஞ்சுக்குள் கல்லை ஏற்றி வைத்தாற் போலிருந்தது. தணலில் வாட்டிய கீரையை மனம் துவண்டது.

சட்டென்று மடங்கி அமர்ந்து தாத்தாவின் மடி மீது தலை சாய்த்துக் கொண்டாள். கரிசனத்துடன் அவளது உச்சந்தலையை இதமாக வருடினார் சண்முகம்.

தாத்தாவின் அனுசரனையில் பொல பொலவென்று நெறுங்கிப் போனாள். "உன்னோட செல் ∴போனானக் குடும்மா..... முன் கூட்டியே ரங்கநாயகி அம்மாளுக்கு நான் வரப் போற விவரத்தைத் தெரிச்சுடறேன்."

"வே.. வேணாம் தாத்தா! இப்போ... முரளி பெரிய பணக்காரர். ரொம்ப உயரத்துல உச்சாணிக் கொம்பல உட்கார்ந்துருக்காரு. அது மட்டுமில்ல. பிஸினஸ்லே பல சாதனைகள் புரிஞ்சு சிகரத்தைத் தொட ஆரம்பிச்சுட்டாரு.....

நமக்கும் அவருக்கும் ஏணி வச்சாலும் எட்டாது தாத்தா! இந்த விஷயத்தை நீங்க மறந்துடுங்க தாத்தா" தழுதழுத்தாள் யமுனா.

"என்னம்மா நீ டைத்தியக்காரத்தனமா பேசறே ? ரங்கநாயகியும் சரி முரளியும் சரி... உன்னை அவங்களோட குடும்பத்துல ஒருத்தியாத் தனே பார்க்கிறாங்க ? உன்னை அவர்களுக்கு ரொம்பவே பிடிச்சிருக்கே ? அப்புறம் என்ன ?"

"தாத்தா ! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா ? முரளி சஹானாவை நேசிச்சாரு.. ஆனா சஹி என்ன பண்ணினா தெரியுமா ? என்று தொடங்கி முழு விவரத்தையும் அவரிடம் தெரியப் படுத்தினாள் யமுனா.

"அடப் பாவி.... சண்டாளி! பெண் இனத்துக்கே பெரிய கேவலமாச்சே ? சேச்சே...தம்பியை சுத்தி வந்து காதச்சுட்டு... சே! நடிச்சுட்டு அவனை அவமானப்படுத்தி உதறிட்டு... அவனோட அண்ணன்காரனையே கட்டிக்கப் பார்த்தாளாமா ? கிராகிதி !சதிகாரி... அவளைக் கண்டாலே ஆரம்பத்துல இருந்தே எனக்கு கட்டோட பிடிக்காது.

சினிமா நடிகை மாதிரி அவ போட்டுக்கற டிரஸ்ஸஸீம் அந்த தளுக்கம் மினுக்கும்.... சேச்சே! இந்த மாதிரி பொண்ணை நிச்சயம் பண்ணின பாவத்துக்குத் தான்...அந்தப் புள்ளை அல்பாயுசுல பொட்டுன்னு போயிட்டான்..... போ! சரி யமுனா! நம்ம விஷயத்துக்கு வருவோம்.... இப்பேர்ப்பட்ட பொண்ணை.... முரளி இன்னும் மனசுல நெனச்சுட்டு இருப்பாருன்னு... நெனக்கிறியாம்மா ?

அவளை பத்தின நெனப்பை என்னிக்கோ அடிமனசுலேர்ந்து ஆணி வேரோட புடுங்கி எறிஞ்சிடுங்க மாட்டாராம்மா ? "

"இல்ல தாத்தா ! சஹி தான் நடிச்சாளே தவிர...முரளி ரொம்ப உண்மையா தான் நேசிச்சாரு... அவ அவமானப் படுத்தினாலும் துடிச்சுப் போனது நிஜம் தான் ! நான் மறுக்கவே இல்ல.... ஆனா... நீறு பூத்த நெருப்பா அவராட மனசுக்குள்ளே இன்னமும் அந்த நேச உணர்வு இருந்தா ?

அத்தோட இன்னமும் முக்கியமான காரணமும் இருக்கு. நீங்க சொன்னபடியே சஹியை அவர் அடியோட மறந்திருக்கலாம். "சஹி ஒரு பணத்தாசை பிடிச்ச





பொண்ணுன்னு இரண்டொரு வாட்டி முரளி சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அந்தக் குடும்பத்துக்கு ஒரு நல்ல வெல் விஷ்ஷரா நான் இருந்துட்டு வரேன். "

இந்த சமயத்துல நீங்க கல்யாணப் பேச்சை எடுத்தா...என்ன நினைப்பாங்க ? ஒரு நல்ல நிலைமைக்கு வந்தப் புறம்... சொத்து சுகத்தோட அமோகமா வாழணும்னு பேராசைப்பட்டு...முரளியை கல்யாணம் செய்துக்க விரும்பறதா நினைக்க மாட்டாங்களா ?

அந்த மாதிரியான எண்ணம்... முரளியோட மனசுல கடுகளவு முளைச்சாக் கூட நான் தாங்க மாட்டேன் தாத்தா !... அந்த டைரியைப் பத்தின விஷயத்தை தயவு செய்து மறந்துடுங்க தாத்தா... நான் என்னிக்கோ அதை என் மனசுக்குள்ளேயே புதைச்சுட்டேன். நான் இப்படியே இருந்துடறேன்.

"உனக்கு இஷ்டமில்லேன்னா விட்ரு யமுனா... அழாதே ராஜாத்தி" என்ற முதியவரின் முகத்தில் அதீத சோகம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

# 19

சஹானாவுக்கு சர்வமும் பதறியது. மனதை சூனியம் கவ்விக் கொண்டிருந்தது. எதிர்காலம் இருண்டு விட்டாற் போன்று.... இதயத்தில் பீதி படர்ந்தது. ஒரு வழியும் புலப்படாமல் கண்ணைக் கட்டி அவளைக் காட்டில் விட்டாற் போ–ருந்தது.

"கோடீஸ்வரன் முகேஷை கை பிடிக்கப் போகிறோம்" என்று அவளது மனம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது. உற்சாக மிகதியில் சந்தோஷத்தின் விளிம்பிற்கே சென்று விட்டாள்.

மட்டற்ற மகிழ்ச்சியில் மண் விழுந்து விட்டது. தன் முன் பரப்பட்டிருந்த விதவிதமான விளையாட்டுப் பொருட்கள் அனைத்தும் ஒருங்கே பிடுங்கப்பட்ட குழந்தையானாள்.

எதிர்பாராத ஏமாற்றத்தில் உள் மனம் ஓலமிட்டுக் கதறியது.

கல்யாணப் பத்திரிக்கை அச்சடித்து இதை ஊருக்கெல்லாம் விநியோகித்துக் கொண்டிருந்த நேரத்தில் விதி விளையாடி விட்டதே? அவளது தந்தை குருமூர்த்தி அயோடு நிலைகுலைந்து போய் விட்டார்.

விஷயத்தை அறிந்தவர்கள் வதந்திக்குத் "தந்தி" அடித்தார்கள். கிசு கிசு என்னும் நெருப்புக்கு நெய் வார்த்தார்கள்.

"சஹானா துரதிர்ஷ்டம் பிடிச்ச பொண்ணு! அவ ஜாதகத்துல பெரிய தோஷம் இருக்காம் அதான்... தாலி கட்டறதுக்கு முன்னே மாப்பிள்ளை மாண்டு போயிட்டான்."

"குருமூர்த்தியோட பொண்ணு இருக்காளே? அவ மாதிரியான டைப்பாம்..... காலேஜில் ஒரு பையன் கூடவே சுத்தியிருக்கா... பைக்குல அவன் கூட சுத்தாத இடமே இல்லையாம்... அவன் கூட மட்டுமில்ல... ஆம்பிளைப் பசங்க கூட கொஞ்சமும் லஜ்ஜை இல்லாம பழகுற பொண்ணாம்... நிச்சயம் பண்ணினதுக்கு அப்புறம் அந்த முகேஷ் கூடவும் நல்லா சுத்தியிருக்கா"

வதந்தி தீயை விட வேகமாகப் பரவும் என்று சொல்வார்கள். மகளைப் பற்றிய வதந்திகள் காற்று வாக்கில் குரு மூர்த்தியின் செவிகளைப் பதம் பார்க்கத் தான் செய்தன.

அவசர அவசரமாக வேறு வரன்களைப் பார்க்க ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு வரனாக தட்டிக் கழித்து போய்க் கொண்டிருந்தன. ஊரார் தங்களது அருமை மகளின் தலையை உருட்டத் தொடங்கியதும்... ஆரம்பத்தில் வருத்தப் பட்ட அம்மா குமுதா... நாளாக ஆக ஆவேசத்துடன் குமுறத் தொடங்கிவிட்டாள்.

"ஒரே பொண்ணுண்ணனு செல்லம் குடுத்து தலையில தூக்கி வச்சு ஆடினது தப்பா போச்சே? ..... வயசுக்கு வந்த பொண்ணு அடக்கம் ஒடுக்கமா இருக்கிற இடம் தெரியாம இருந்திருந்தா.... இந்தப் பிரச்சனை வந்திருக்குமா?"





"கண்டதே காட்சி கொண்டதே கோலம்னு" அதி நாகரீகமா ஜாலியா திரிஞ்சா... இந்த கதி வரும். சோஷியலா பெச வேண்டியது தான்... அதுலேயும் ஒரு லிமிட் இருக்க வேணாமா? அந்த லிமிட்டைத் தாண்டினா... சொஸைட்டியே காறித் துப்பிடும்கிறதை நல்லா ஞாபகத்துல வச்சுக்கிட்டு கத்தி மேல நடக்கிற மாதிரி சர்வ ஜாக்கிரதையா இருந்திருந்தா... கண்டவங்களும் இப்படி கண்டபடி பேசியிருப்பாங்களா.

எல்லாம் என்னைச் சொல்லனும். நினைச்ச மாத்திரத்துல நீ ஸ்கூட்டி எடுத்துக்கிட்டு ஊர் சுத்தறப்ப எல்லாம்... அசால்டா இருந்தது என் தப்பு! ஊர் சுத்தத் துடிச்ச காலை ஒடிச்சு அடுப்புல வச்சிருந்தா... நானொரு நல்ல தாய்! நான் நல்ல தாயா இருக்கத் தவறிட்டேனே?"

"என் அம்மாவா இப்படி பேசுகிறாள்? என்னைப் பார்த்தாலே அம்மாவின் கண்ணெல்லாம் நேசம் வழியும். குரலெல்லாம் பாசம் வழியும். மனசெல்லாம் அன்பு வழியுமே? என் எதிர்காலம் என்னவாகும்?"

பயம் மனசுக்குள் குதியாட்டம் போட்டது. வர்த்தம் பிடுங்கித் தின்றது. வேதனை நெஞ்சை அரித்தது. இனம் புரியாத கோபமும் வருத்தமும் முகத்தை அறைந்தன.

அவளது ஆணவத்திற்கும் அகங்காரத்திற்கும் பொருத்த மரண அடி கொடுத்து அந்த தகவல்... முரளி, முகேஷின் தம்பியாகுமே? முகேஷ் மரணமடைந்த பின் தான் இந்த விவரமே தெரிய வந்தது.

பிரபல தொழிலதிபர் விஸ்வநாதனின் மகனா முரளி? அவரையா நான் அவமானப் படுத்தினேன்? என்னை உருகி மருகிக் காதலித்தவரை துச்சமாக நினைத்து உதறித் தள்ளினேனே?

அத்தனை திரண்ட சொத்தையும் முரளியா ஆளப் போகின்றார்? வேதனையில் வெந்து போனாள் சஹானா.

தோழி மேரி அவளுக்கு இன்னொரு தகவலையும் ஃபோனில் சொன்னாள்.

யமுனா, முரளியின் அந்தரங்க காரியதரிசியாக வேலை செய்கின்றாள் என்பதையும்.... முரளி பிஸினஸில் பல சாதனைகள் புரிந்து முன்னேறி வருகின்றான் என்பதையும்.... அவளால் ஜீரணித்தக் கொள்ளவே முடியவில்லை.

"அன்று அவமானப் படுத்திய போது... யமுனா உன்னை ஆழமாக நேசிக்கிறாள்" என்ற விவரத்தைக் கூறி விட்டேனே ? யமுனாவே மூடி மறைத்த விஷயத்தை..... நான் அம்பலப்படுத்தி விட்டேனே ?..... இன்று தனது செகரட்டரியாக யமுனாவை வைத்துக் கொண்டிருக்கும் முரளி.... நாளைக்கே அவளுக்கு மாலையிட்டு... மனைவி என்ற அந்தஸ்தைக் கொடுத்து விட்டால்... அத்தனைச் சொத்தையும் யமுனா ஆண்டு அனுபவிப்பாளே ? என் வாழ்க்கை இருண்டு போய் கிடக்கிறதே ?

நான் என்ன செய்யப் போகிறேன் ? "

அன்று இரவு முழுவதும் வெகு தீவிரமாக மூளையைக் கசக்கி யோசித்து விட்டு... ஒரு முடிவுக்கு வந்தாள் மறுநாள்.....

முரளியின் அலுவலகத்திறகுத் தொடர்பு கொண்டாள். ரீசிவரை எடுத்த ரிசப்ஷனிஸ்டிடம் "ஷல் ஐ ஸ்பீக் டு மிஸ்டர் முரளி ? " என்றாள்.

"நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா மேடம் ? "

"நான் சஹானா ! முரளியோட லவர் "

"இஸிட் ? " மறு முனையில் குரல் அதிர்ந்து பின் பவ்யமானது. "ஒன் மினிட் ப்ளீஸ்..... " உடனே இணைப்பு கொடுத்து விட்டாள்.

"ஹலோ ! சாரி... சாரி....! புத்தி கெட்டுப் போயி முட்டாள் தனம் பண்ணிட்டேன். இடைப்பட்ட காலத்துல நமக்குள்ள ஏற்பட்ட பிரிவு.... உங்களோட அருமையை எனக்கு நல்லாவே உணர்ந்திருச்சு... என்னை மன்னிப்பீங்களா ?

உங்களை... நா... நான் நேர்ல பார்க்கணும்னு துடிக்கிறேன்.





உங்க கால்லே விழுந்து மன்னிப்பு கேட்கணும். உங்க பாதங்களை என் கண்ணீரால் அபி□கம் பண்ணினாக் கூட.... நான் செய்த பாவம் தீராது.

அந்தளவுக்கு உங்க மனசை நான் காயப்படுத்தியிருக்கேன். அவமானப்படுத்தியிருக்கேன். சேரக்கூடாதவங்களோட சேர்ந்து விளையாட்டுத் தனமா.. யோசிக்காம பெரிய தவறைப் பண்ணிட்டார்.

உங்க காதல் உண்மையானது.பவித்ரமானது. அது தான்... உங்களோட அருமையை எனக்குப் புரிய வச்சது. என் மனசுக்குள்ளேயும் காதலை மலர வச்சுடுச்சு... மு... முரளி! லைன்ல இருக்கீங்களா ? உங்க சஹி பேசறது கேட்குதா ? ஹலோ.... ஹலோ ! "

"உம் ! நல்லாவே கேட்குது. சொல்லு சஹி" என்று சொல்லியபடியே மெல்லப் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான் முரளி.

கம்ப்யூட்டர் மௌஸைப் பிடித்தபடி மும்முரமாய் திரையில் பார்வையைப் பதித்திருந்தாள் யமுனா.

முரளி வழக்கம் போல் "சஹி" என்று அழைத்ததும்... அவளுக்கு ஜில்லென்றிருந்தது.

"முரளி ! உங்க கால்லே விழுந்து நான் கதறணும். மன்னிப்பு கேட்கணும். இந்தப் பாவி பண்ணின தப்பை மறந்து மன்னிச்சு.. என்னை ஏத்தப்பீங்களா ? உங்க சஹிக்கு இதயத்துல இன்னமும் இடமிருக்கா ?

நான் உங்களை உடனடியா சந்திக்கணுமே முரளி! என் மனசுல முழுசா இப்போ நீங்க தான் இருக்கீங்க.... நீ.... நீங்க என்னை மறந்துடலையே முரளி ?"

குரலில் நிறைய இனிப்பைக் குழைத்துக் கேட்டாள் சஹானா.

"மறக்கறதா ? அதுவும் உன்னையா ? நெவர் ! என்னை விட்டு உன் நினைப்பைப் பிரிக்க முடியுமா சஹி ?"

"நான் கொடுத்து வச்சவ முரளி ! எனக்கு இப்பதான் உயிரே

வந்துச்சு...உங்க பெருந்தன்மை யாருக்கு வரும்? அப்போ... நாம்ப எப்ப சந்திக்கலாம்?"

"கமிங் சண்டே... எங்க பங்களாவுல... திறந்த வெளியில தோட்டத்துல ஃபங்ஷன் நடக்கப் போகுது. நம்ம நிறுவனங்களை எல்லா ஊழியர்களும் அன்னிக்கு வருவாங்க....நான் நிர்வாகப் பொறுப்பை,நேத்து தான் ஏத்துக்கிட்ட மாதிரி இருக்கு... அதுக்குள்ளே ஒரு வருஷமாகப் போகுது. "

சண்டே அன்னிக்கு நாள் நல்லா இருக்கு. எங்கம்மா பேர்ல அறக்கட்டளை ஒண்ணு தொடங்கப் போறோம். சாயந்திரம் ஊழியர்களுக்கு விருந்தும் இருக்கு!

இன்னமும் ரெண்டு நாள் தானே பாக்கி இருக்கு. சண்டே அன்னிக்கு சாயந்திரம் அங்க வந்துடு! நம்ம ஊழியர்கள் அத்தனை பேருக்கும் முன்னாடி உன்னை அறிமுகப்படுத்தறேன்.

எங்க பேரண்ட்ஸ் உட்பட ஊழியர்கள் அத்தன பேருக்கும் என்னோட வருங்கால மனைவியை அறிமுகப் படுத்தி கௌரவப் படுத்த விரும்பறேன். சரியா சஹி?"

"தே... தேங்க்யூ முரளி! தேங்க் யூ ஸோ மச்! என் குரலைக் கேட்டதும் கோபத்துல கொதிச்சு போவீங்கன்னு எதிர்பார்த்தேன். ரொம்ப பயந்தேன். ஆனா நீங்க எதையும் மனசுல வச்சுக்காம பேசினீங்களே? இன்னமும் என் நினைப்போடயே இருக்கீங்களே? சந்தோஷத்துல அப்படியே இறக்கை கட்டிப் பறக்கற மாதிரி இருக்கு முரளி! பை... ஸீ யூ"

அவளுக்கு வெள்ளம் கரை புரண்டது.

அவனது நிறுவனங்களைச் சேர்ந்த அத்தனை தொழிலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. முரளி தனிப்பட்ட முறையில் காரை ஓட்டிக் கொண்டு சென்று தாத்தா சண்முகத்தை சந்தித்து விழாவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டான்.





கல்லூரி நண்பர்கள், உற்றார் உறவினர்கள் என்று உருவரையும் விட்டு வைக்கவில்லை.

"யமுனா! நம்ம தொழிலாளர்கள் அத்தன பேருக்கும்... வர்ற சண்டே அன்னிக்கு போனஸ் குடுத்துடலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். அதுக்கான ஏற்பாட்டை... பண்ணிருங்க... இந்தாங்க செக்!

சஹியை நான் ஃபங்ஷனுக்கு வரச் சொல்லியிருக்கேன் இல்லையா? அவளை அறிமுகப் படுத்தி வைக்கணும். வருங்கால எஜமானியை அறிமுகப்படுத்தி போனசும் குடுத்தா... ரொம்ப சந்தோஷப் படுவாங்கல்ல?"

அவங்க மனசும் வயிறும் நிறைஞ்சு வாழ்த்தணும் அதான் முக்கியம்! நான் சொல்லறது சரிதானே யமுனா?"

"எல்லோருடைய ஆசீர்வாதமும் வாழ்த்தும் கிடைச்சா... உங்க மணவாழ்க்கை அமோகமா சிறப்பா அமையும்" கூறியபடியே செக்கை ஹேண்ட் பாக்கில் பத்திரப் படுத்தினாள்.

வண்ண வண்ண தோரணங்களும் பூச்சரங்களும் கட்டப்பட்டு...சீரியல் பல்புகள் பொருத்தப்பட்டு அந்த பிரம்மாண்டமான பங்களா..... விழாக்கோலம் பூண்டிருந்தது.

சந்தோஷ முலாம் பூசப்பட்ட முகங்களோடு தொழிலாளர்களும் உறவினர்களும் நண்பர்களும் உற்சாகமாய் கலகலத்துக் கொண்டிருந்ததால்.... அந்த பங்களாவே அமளி துமளிப்பட்டது.

குருமூர்த்தி, குமுதா தம்பதிகளோடு சஹானா காரில் வந்து இறங்கினாள். முழுவதும் ஜரிகையாலேயே நெய்யப்பட்ட பட்டுப் புடவையுடன்... நிறைய நகைகள் மாட்டி தலை நிறைய பூ வைத்து.... கிட்டத்தட்ட புது மணப்பெண்ணின் கோலத்தில் தகதகத்தாள்.

வந்ததும் வராததுமாக பார்வையாலேயே பங்களாவை வலம் வந்தாள் சஹானா. மெல்லிய ஜரிகை பார்டர் போட்ட சாம்பல்

நிற காட்டன் புடவை கட்டி தளரப் பின்னி இருந்த கூந்த ல் ஒற்றை பன்னீர் ரோஜாவை செருகி.... எளிய தோற்றத்திலும் வசீகரித்த யமுனாவின் மீது... அவளது பார்வை பதிந்தது.

"முரளிக்கு பெர்ஸனல் செகரட்டரியாகி நாள் முழுக்க கூடவே இருக்கிற சந்தோஷமா? அந்த சந்தோஷத்துல இவளோட அழகு மெருகேறி... நிகுநிகுன்னு கூடுதல் பளபளப்போடு தெரியறாளே?"

அவளது வயிறு கபகபவென்று பற்றி எரிந்தது.

"ஹாய் சஹி! நல்லாயிருக்கியா? ரொம்ப நாள் கழிச்சு உன்னை சந்திச்சதிலே.... மகிழ்ச்சியடைகிறேன். விருந்து ஏற்பாடு சரிவர நடக்குதான்னு பார்க்கணும். அப்புறம் பார்க்கலாம் சரியா?" முறுவ த்து விட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

"கால்லே சக்கரத்தைக் கட்டிக்காத குறையா.. அங்கேயும் இங்கேயுமா ஓடிட்டு இருக்கியா? முரளி என் கழுத்துல தா கட்டட்டும்... மறு நாளே உன்னை விரட்டி அடிக்கிறேன் பாரு"

உள்ளுக்குள் கறுவினாள். பெருமினாள்.

ஆறரை மணி அளவில் சபாரி சூட் அணிந்து மாடியி ருந்து இறங்கி வந்தான் முரளி.

"வணக்கம்! உங்களுக்கு ஒரு முக்கியமான நபரை இப்போ அறிமுகப் படுத்தப் போரேன் நான் நிர்வாகப் பொறுப்பை எத்துக்கிட்டதும் நம்ம நிறுவனங்கள்லே பெரிய அளவில முன்னேற்றம்! ஒரே வருடத்துல எக்கச் சக்கமான லாபத்தை அள்ளிக் குவிச்சு உச்சிக்குப் போயிட்டு இருக்கோம்னு உங்களுக்குத் தெரியும்...

அதுக்கெல்லாம் காரணம் நான் தான்னு.... ஒவ்வொருத்தரும் என் கிட்டயே சொல் என்னைப் பாராட்டி இருக்கீங்க... வெறித்தனமா உழைச்சு வெற்றியை நான் தொட்டதுக்கு யார் காரணம் தெரியுமா? இதோ.... இந்த சஹி தான்! உத்வேகத்தையும் உசந்து காட்டணும்கிற வைராக்கியத்தையும்





எனக்கு தந்தது இவ தான்... என்னிக்கும் நான் இவளுக்கு கடன் பட்டிருக்கேன். இடையில நாங்க பிரிஞ்சுட்டோம். ஆனா நீறு பூத்த நெருப்பா இவ நினைப்பு... என் நெஞ்சுலயே இருக்கு......."

# 20

"நீறு பூத்த நெருப்பா இன்னமும் இவ நினைப்பு என் நெஞ்சுலேயே இருக்கு" என்று முரளி கூறியதும்... சரேலேன்று யமுனா திரும்பி முன் வரிசையில் அமர்ந்திருந்த தாத்தா சண்முகத்தைப் பார்த்தாள்.

அவரது விழிகள் பளபளவென்று கூர்மை பெற்றிருந்தன. முகம் கொள்ளப் பூரிப்போடு முரளியையே பார்த்துக் கொண்டிருந்தார் சண்முகம்

"இவ நினைப்ப என் நெஞ்சுல நெருப்பா கனன்றுகிட்டே இருந்தது. இன்னமும் இருக்கு... அது தான்... ! எனக்கு வெறித் தனமா அசுர வேகத்தோட வளர்ந்து உசந்து காட்டணும்கிற.. உத்வேகத்தை கொடுத்தது" அவன் பேசி முடிக்கும் முன்.. பலத்த கலவொ எழும்பியது.

கரவொ அடங்கும் வரை அமைதி காத்த முளி மீண்டும் பேச ஆரம்பித்தான். முரளியின் பேச்சையும் பலத்த கரவொ யையும் கேட்ட மாத்திரத்தில்.... சஹானாக்கு சந்தோஷத்தில் அப்படியே அந்தரத்தில் மிதப்பது போ ருந்தது.

ஓரக்கண்ணால் அலட்சியமாக யமுனா ஏற இறங்கப் பார்த்தாள்.

"என்னைப் பொறுத்தவரை... ஒரு மனுஷன் தான் பட்ட அவமானத்தையும், நன்றியையும் மறக்கவே கூடாது. ஒரு சிலர் "இப்படி நாம்ப அவமாணப் பட்டுட்டோமேன்னு" கூனிக் குறுகி சதா வேதனைப்பட்டுட்டே இருப்பாங்க."

அந்த வேதனையும் கவலையும் அப்படியே நம்மை உருக்குலைச்சுடும். நம்ம வளர்ச்சியை கருக வைச்சிடும். மூலையில் முடக்கிப் பொட்டுரும்.

என்னையும் ஒரு பொண்ணு ரொம்ப அவமானப்படுத்தினா... என்னைக் வேலமா பேசினா.... கேலிக் கூத்தா ஆக்கினா... தூக்கியெறிஞ்சு பேசினா.... நான் அவமானத்துல கூனிக் குறுகி... அப்படியே உள்ளுக்குள்ளே சுக்கு நூறா நொறுங்கிப் போயிட்டேன்.

ஆயிரம் தேள்கள் ஒட்டு மொத்தமா கொட்டினாப்பல அப்படியொரு வலி வேதனை... இனியும் இந்த பூமியில உயிரோட நடமாடனுமாங்கிற விரக்தி தோணிச்சு

முரளி பேசப் பேச சஹானாவின் முகம் ஏகத்திற்கும் இருண்டு போனது. "∴போனில் கொஞ்சங்கூட கோபப்படாமல் சாந்தமாக இனிமையாக முரளி பேசினானே? குரலில் வழிந்த வாத்சல்யத்தையும் பரிவையும் நம்பி.... இங்கு வந்தது தவறோ?

அனைவரிடமும் "இவள் என் மனைவியாகப் போகின்றவள்" என்று அறிமுகப்படுத்துவான் என்று நம்பி வந்தது.... எவ்வளவு பெரிய முட்டாள் தனம்? சபை ஜனங்களுக்கு மத்தியில்... நிற்க வைத்து என்னை அவமானப் படுத்தத் தான்.. இந்த விழாவையே நடத்துகதிறான் போலும்!

அய்யய்யயோ! இவன் அழைத்ததும்..... கொஞ்சம் கூட யோசிக்காமல் உடனே கிளம்பி வந்தது... எவ்வளவு பெரிய மதியீனம்? எனது முகத்தில் கரியைப் பூசத்தான் நைச்சியமாகப் பேசி வரவழைத்திருக்கிறான்!

பயத்தில் அவளது இதயம் தந்தியடித்தது. திகிலும் எதிர்பாராத அதிர்ச்சியிலும் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. முள்ளின் மேல் நிற்பதை போல் தவித்துப் போனாள்.

அந்தப் பொண்ணு நம்மை இப்படி உதாசீனப் படுத்தி உதறிட்டாளேங்கிற அவமானம்... கோபம்... வேதனை....





விரக்தி... எல்லாமுமே சேர்ந்து என்னை ஒரு பெரிய விபத்துல மாட்டி விட்டுருச்சி....

எம லோகத்தைக் கூட நான் எட்டிப் பார்த்துட்டேன். அந்த சமயத்துல தேவதை மாதிரி யமுனா வந்தாங்க... தன்னோட ரத்தத்தைக் கொடுத்து எனக்கு "புனர் ஜென்மத்தைக் கொடுத்தாங்க... பட்ட அவமானத்தை நெனச்சு வேதனைப் பட்டுட்டே இருந்தா... ஒண்ணு விரக்தியிலே செத்துபோயிடுவோம்..... இல்ல....... நடைப் பிணமா ஆயிடுவோம்.

அவமானத்தை ஒவ்வொரு நிமிஷமும் நானும் நினைச்சுப் பார்த்தேன். என் உயிர் மூச்சு உள்ளவரை நினைச்சுட்டே இருப்பேன். அப்பத்தான் ரோஷம் வரும். வைராக்கியம் வரும்.... வெறி வரும்... வெறித்தனமா உழைச்சு வெற்றியைத் தொட வைக்கும்."

"ஆவதும் பெண்ணாலே... அழிவதும் பெண்ணாலே. "ன்னு சொல்வாங்க... என் வாழ்க்கையில் உணர்வுப் பூர்வமா ரெண்டையும் அனுபவிச்சுப் பார்த்துட்டேன்.

"நிழலின் அருமை வெயிலில் தெரியும்" ன்னு சொல்வாங்க.... சில கசப்பான அனுபவங்களுக்கு அப்புறம் தான்... இனிய சிநேகிதியின் அருமையை நான் உணர்ந்தேன்.

நான் ஆரம்பத்துல சொன்ன மாதிரி.... ஒரு மனுஷன் நன்றியை மறக்கவே கூடாது. நன்றியை மறந்துட்டா... நாம்ப நாயைக் காட்டிலும் கீழமான ஜென்மம் ஆயிடுவோம்கிறது என்னோட கருத்து!

நான் விபத்துல மாடினப்போ... என் தாயார் நிலைகுலைஞ்சு போகாம..... கவனமா கண்ணும் கருத்துமா.. ஆறுதலா இருந்து பார்த்துக்கிட்டாங்க... இந்த அற்புதமான சிநேகிதிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் நான்?

எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இந்த நன்றிக் கடனைத் தீர்க்கவே முடியாது. அதனால என்னை முழுசா...

என் வாழ்க்கையை இவங்க கையில் ஒப்படைக்கலாம்னு இருக்கேன். எங்க அம்மாவோட ஆசையும் அது தான்!

உங்க அத்தன பே?தோட ஆசீர்வாதத்தோட...... நான் யமுனாவை என்னோட வாழ்க்கைத் துணையாக்கிகலாம்னு இருக்கேன்

உறவினர்களுக்கும் ஊழியர்களுக்கும் நண்பர்களுக்கும் குஷி பிய்த்துக் கொண்டு போனது. குபீரென்று எழுந்த கைதட்டல் ஒசை... அந்த பங்களாவையே அதிர வைப்பதாக இருந்தது.

சஹானாவின் செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினாற் போ ருந்தது.

வார்த்தைகளால் சுழற்றி அடித்து விட்டானே? சாட்டிடயாய் விளாசித் தள்ளி விட்டானே ?

கனல் பொறியாய் தீட்சண்மாய்த் தெறித்த வார்த்தைகள்... அவளது இதயத்தை சுட்டுப் பொசுக்கின.

பக்க வாட்டில் நின்று கொண்டிருந்த முரளியின் நண்பர்கள் கார்த்தி, பாஸ்கரை தற்செயலாய் ஏறிட்டாள். அவர்களது விழிகள் இவளைக் கண்டதும் வெறுப்பை உமிழ்ந்தன.

அவமானம் தாளாமல் அவளது தேகமே வெட வெடவென்று நடுங்கியது.

சக்கர நாற்கா யில் அமர்ந்திருந்த கணவன் விஸ்வநாதனின் அருகே நின்று கொண்டிருந்த ரங்கநாயகிப் பார்த்தாள்.

விழிகளில் ஆர்வமும் ஆசையும் ததும்ப... யமுனாவையே பாத்துக் கொண்டிருந்தவரைக் கண்டதும்... மனம் எரிமலையாய் குமுறியதும். அதற்கு மேல் அங்கே நிற்க முடியாமல் விடுவிடுவென்று நடந்தாள்.

தலைகுனிந்தபடி குருமூர்த்தியும் குமுதாவும் சபையை விட்டு வெளியேறினார்கள்.





"இப்படிப்பட்ட பெண்ணை நாம்ப பெத்ததுக்கு இன்னமும் எத்தன அவமானங்களை சந்திக்கப் போறோமோ தெரியலையே குமுதா?" ஆற்றாமை தாளாமல் தலையில் அடித்துக் கொண்டே காருக்குள் ஏறினார் குருமூர்த்தி.

பொங்கிய கண்ணீருடன் தலை குனிந்தாள் சஹானா.

எதிர்காலம்... ஒரு கேள்விக் குறியாய் பூதாகாரமாய் விஸ்வரூபமாய் வளர்ந்து... அவளை மிரட்டி பயமுறுத்தியது.

இருளும் சூனியமும் அவளை சுற்றி வந்து "கெக்க கொட்டி சிரித்தன.

அந்தி கறுக்கும் நேரம்

பிரம்பை ஊன்றியபடி படிகளில் கவனமாய் இறங்க முற்பட்ட தாத்தா சண்முகம் வீட்டு வாச ல் கார் வந்து நின்தும்... நழுவப் பார்த்த மூக்குக் கண்ணாடியை ஆள்காட்டி விரலால் சரி செய்த படியே உற்றுப் பார்த்தார்.

"என்ன தாத்தா? எங்க கிளம்பிட்டீங்க?" உரிமையாய் கேட்டபடி வெளிப்பட்டான் முரளி.

"இன்னிக்கு பௌர்ணமி. பங்குனி உத்திரம். வெள்ளிகிழமை வேற... அதான்! பக்கத்துல கோவில் வரைக்கும் போயிட்டு வரலாம்னு கிளம்பினேன். உமாவும், கிரியும் ரங்கநாயகி அம்மாளோட... ரொம்ப ஒட்டிக்கிட்டாங்க. நேரம் கிடைக்கறப்ப எல்லாம் அவங்களைப் பார்க்க கிளம்பிடறாங்க" புன்னனைத்தார்

"நல்ல விஷயம் தானே தாத்தா? கல்யாணத்துக்கு அப்புறம் நாம்ப எல்லோரும் ஒண்ணாகத்தானே இருக்கப் போறோம். அவங்களும் இங்கிட்டும் அங்கிட்டுமா அல்லாடமா இருப்பாங்கல்ல? என்று முரளி கேட்டதும்... தாத்தாவுக்கு சட்டென்று ஆனந்தக் கண்ணீர் ஜனித்தது.

"சரிப்பா... யமுனா உள்ளார வேலையா இருக்கா... பேசிட்டிருங்க... நான் கோவிலுக்குப் போயிட்டு வரதுக்கு முன்ன கிளம்பிடாதே... இருந்து சாப்பிட்டுட்டுத் தான்

போகனும். சரியா ?" சுட்டு விரலைக் காட்டி உரிமையாய் அதட்டி விட்டு நிதானமாய் படியிறங்கினார்.

"யமுனா! பதில் இல்லை. கொல்லைபுறக் கதவை தாண்டி தோட்டத்திற்குள் புகுந்தான். பவள மல்லிப் பூக்களின் நறுமணத்தையும் பன்னீர்ப் பூவின் மணத்தையும் கலவையாய் சுமந்து கொண்டு வந்த காற்று.... அவனது முகத்தை ஸ்பரித்து சிலிர்க்க வைத்தது.

சித்திரம் தீட்டின மாதிரி இலேசான பழுப்பில் முழுசாய் நிலா மிதந்து கொண்டிருந்தது கை கையாய் அள்ளித் தெளித்த மாதிரி நட்சத்திரங்கள்.

"யமுனா" திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். " வா...வாங்க" திகைத்து வரவேற்றாள். "என்ன யமுனா" வாசக் கதவை திறந்து போட்டுட்டு இங்க வந்து நின்னுட்டிருக்கே ?"

"உமாவுக்கு கறி வேப்பிலை பொடி பிடிக்கும். கறிவேப்பிலை பறிக்க வந்தவ. லயிச்சுப் போயி நின்னுட்டேன். " உரிமையாய் நெருங்கி வந்து நின்றான்.

"எனக்கும் இப்பத்தான்... தோட்டம், செடி, கொடி, கடற்கரை, ராத்திரி வானம், நட்சத்திரங்கள், நிலா, கவிதைகள் எல்லாம் பிடிக்கும். ஏகாந்தமா ரசிக்கப் பிரியப் படுவேன்" ஆமா.... ∴பங்ஷனுக்கு மறுநாள் ∴போன் பண்ணி ஒரு வாரம் லீவு கேட்டே.... என்ன ஏ[illegible]து விவரம் சொல்லலை.... உன் செல்லுக்கு ட்ரை பண்ணினா "ஸ்விட்ச் ஆ∴ப்" அப்படிங்கிற அறிவிப்பு தான் வந்தது. எனக்கு ஒரு வேலையும் ஓடலை.

உன்னைப் பார்க்காம.... இந்த நாலு நாளா நான் எப்படித் தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா யமுனா ?

"பார்வையற்ற மாணவர்களுக்காக ஒரு ஸ்கிரைபரா எக்ஸாம் எழுதப் போயிருந்தேன். எக்ஸாம் எழுதறப்போ... தொந்தரவு இருக்கக் கூடாதுன்னு ஸ்விட்ச்சை ஆ∴ப் பண்ணி வச்சேன்" முறுவலித்தாள்.

"ரியலி யூ ஆர் கிரேட்" சட்டென்று அவளது கரத்தைப்





பிடித்து கன்னத்தில் பொருத்திக் கொண்டான்.

"நீறு பூத்த நெருப்பா இன்னமும் சஹானா என் நெஞ்சுல இருக்கலாம்னு... நீ தாத்தாகிட்டே சொன்னியாமே ? சத்தியமா சொல்றேன்... நான் சஹானாவை மறந்துட்டேன். ஆனா நீறு பூத்த நெருப்பா... அவ என்னை அவமானப்படுத்தினது இன்னமும் கனன்றுகிட்டே தான் இருக்கு. எல்லாமே நடிப்பு தான் சொல்லி என் முகத்துல அவ கரியைப் பூசினா பாரு ? அப்பவே என்னோட காதல் செத்துடுச்சு. விபத்துல ஏகப்பட்ட இரத்தம் இழந்தேனே ? அதோட அவ மேல இருந்த, அன்பு, பிரேமை, நேசம், காதல் அத்தனையும் சுத்தமா வடிஞ்சிடுச்சு.

என் உடம்புல உன்னோட இரத்தம் ஓடுது. புதுப்பிறவி எடுத்திருக்கேன். என்னோட நாடி, நரம்புகள்லே.... என் ஒவ்வொரு அணுவிலேயும் நீ தான் நிறைஞ்சிருக்கே... என் உயிருக்கும் மேலா உன்னை நேசிக்கிறேன் யமுனா.குரலில் பிரேமை பிரவாகமெடுத்துப் பொங்கியதால்... அவனது குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

"அப்போ... தாத்தா உங்க கிட்ட டைரி மேட்டரை சொல்லிட்டாரா ? " நாணத்தில் அவளது முகம் குங்குமமாய் சிவந்து போக... சங்கோஜத்துடன் விழிகளைத் தழைத்துக் கொண்டாள்.

"உம்! சொன்னாரே !.... அதுக்கு முன்னாடியே எனக்கு தெரிஞ்சு போச்சு... ! என்னயமுனா திகைச்சுப் போய் பார்க்கிறே ? அந்த விஷப் பாம்பு எனக்கு விஷயத்தை சொல்லிடுச்சே"

"சஹியா ? அவளுக்கு எப்படித் தெரியும் ? " அவளது விழிகள் வியப்பில் மேலும் விரிந்தன. கண்களை அகல விரிக்கையில் ஓவியம் போலவே இருந்தாள். சிறு ரசனையுடன் விழிகளை ஊன்றிப் பார்த்த முரளி மெல்ல நகைத்தான்.

"விழிகளுக்கு சூட்சமம் ஜாஸ்தி. விஷயத்தை கிரகிக்கிறதிலே அவங்க கில்லாடிங்க... அவ மட்டுமில்ல....

அம்மா ஆஸ்பத்திரியில நீ துடிச்ச துடிப்பைப் பார்த்துட்டு புரிஞ்சுகிட்டாங்க யமுனா உன் மேல உயிரையே வச்சிருக்காங்கன்னு.... நான் முழிச்சதுமே சொல்லிட்டாங்க.... நீ கிடைக்கறதுக்கு நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும் யமுனா"

கிசுகிசுப்பாய் வெளிப்பட்டாலும் அடி வயிற்றிலிருந்து கிளம்பி உயிரின் வேரை அசைத்துப் பார்க்கும் கம்பீரக் குரல்! அவளது செவிகளில் தேனோடை பாய்ந்தது போலிருந்தது. அவளது இதயம் கப்பென்று நின்று துடிக்க மறந்து அப்புறம் இயங்கியது.

"மை காட்! அம்மாவுக்கும் விஷயம் தெரிஞ்சுப் போச்சா ? " சங்கடமாய் பார்த்தாள். "மலர்ந்த மல்லிகையோட வாசத்தை மறக்க முடியுமா ? அது மாதிரி தான்.உண்மையான காதலையும் மூடி வைக்க முடியாது. நான் தான் முட்டாள்... உயிர் காக்கிற அமுதமா நீ இருக்கிறப்போ... நான் ஒரு அனக்கோண்டாவை விரும்பினேன் பாரு ? என் மனசாட்சி ரம்பமா அறுக்குது தெரியுமா ? என்ன யமுனா... ஒரு மாதிரியா இருக்கே ? "

"இல்ல.... அன்னிக்கு சஹி கண் கலங்க வெளியேறிப் போனா... அவளோட நிலைமையை நினைச்சா.... எனக்கு ரொம்ப பாவமா இருக்கு"

"பிரியமா இருக்கிற மாதிரி நடிச்சுக்கிட்டே உனக்குக் குழி தோண்டிருக்கா... எனக்குப் பெரிசா வேட்டு வச்சுட்டா... அத்தனையும் தெரிஞ்சும்... கெடுதல் நினைச்சவளோட எதிர் காலத்தை நினைச்சு இரக்கப் படறே பாரு ? இந்த குணம் தான் எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு... வினை விதைச்சா வினையைத் தான் அறுக்கணும். அவங்கவங்க மனம் போல் தான் வாழ்க்கை அமையும். அவளை விட்டுத் தள்ளு.. நம்ம கதைக்கு வருவோம்.....

இனி ஒரு நிமிஷம் கூட என்னால உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியாதுடா... இந்த நாலு நாள் நான் பட்ட அவஸ்தை





இருக்கே ? ஐ லவ் யூ ஸோ மச் யமுனா" அவளது புறங்கையில் மென்மையாக முத்தமிட்டவன் "இன்னமும் என் கிட்டே நீ... மனசு விட்டு ஒன்னுமே சொல்லலையே யமுனா"

"ஐ லவ் யூ ஸோ மச் முரளி" என்றவளை உரிமையாய் இழுத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டான். வேப்ப மரத்தின் அடியிர் இருந்தாலும் அவர்களை நிலவின் ஒளி மிருதுவான அழகோடு காட்டியது.

ஒரே சமயத்தில் நூறு குயில்கள் கீதமிசைத்தது போலிருந்தது. அவர்களுக்குள் லட்சம் லட்சமாய் ஆனந்த நட்சத்திரங்கள் மின்னின. மரத்தின் கிளைகள் காற்றுக்குத் தலையசைத்து வேப்பம் பூக்களை அட்சதையாய் தூவின.



# "நிலவு தூங்கும் நேரம்"

## 1

விடியற்காலை இன்பமாக உறக்க வேளை, இரவு முழுவதும் அனலைக் கக்கிக் கொண்டிருந்த மின் விசிறி... இப்போது சில்லென்று... குளிர் காற்றைப் பிரசவித்து கொண்டிருந்தது.

வைஷ்ணவி இழுத்துக் கழுத்து வரை மூடிக் கொண்டாள். சிமெண்ட் தரை மீது கிடந்த பாயின் மீது தான் அவள் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

உயரம் பற்றாத தலையணை தொய்ந்து, 'பிய்ந்து விடுவேன்' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. போர்வையில் பல கிழிசல்கள். அருகே கிடந்த மரக்கட்டிலின் மேல் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். பெரியப்பாவின் செல்வங்களான வனிதாவும், அனிதாவும்!

முன்னறைக் கடிகாரம் ஐந்து முறை அடித்து ஓய்ந்தது. பக்கத்து அறையில் பெரியப்பா பலமாக இருமிக்

கொண்டிருந்தார். அதற்கு மேல் இருப்புக் கொள்ளாமல் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் வைஷ்ணவி.

போர்வையை உதறி மடித்து வைத்துக் கொண்டே... மரக்கட்டிலில் பஞ்சு மெத்தையில் சுகமாக சயனித்திருந்த வனிதாவையும் அனிதாவையும் ஏக்கமாகப் பார்த்தாள்.

இன்று ஞாயிற்றுக் கிழமை... ஓய்வு நாள் தானே? இன்னும் சிறிது நேரம் தன்னால் தூங்க முடியுமா? அவளுக்குள் ஒரு குட்டி கேள்வி ஜனித்தது.

அவளது ஒன்றுவிட்ட சகோதரிகள் உலக நினைப்பின்றி ஆனந்தமாக எட்டு மணி வரை உறங்குவார்களே? 'கொடுத்து வைத்தவர்கள்' நிராசையான பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

பாத்ரூம் கதவை படால் என்று பெரும் ஓசையுடன் பெரியம்மா மரகதம் மூடுவதைக் கேட்டதும்... பாயைச் சுருட்டி மூலையில் வைத்துவிட்டு நடந்தாள் வைஷ்ணவி.

அடுத்த சில வினாடிகளில் பெரியம்மா அவளை அழைக்கும் அபயக்குரல் எட்டு வீடுகளைத் தொட்டுக் கொண்டு எதிரொலிக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

வாசற்கதவைத் திறந்து மளமளவென்று பெருக்கி வாசலை அடைத்துக் கோலமிட்டு விட்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

குளித்துவிட்டு உடைமாற்றி வந்த வைஷ்ணவி அவசரமாக அடுக்களைக்குள் அடைக்கலமானாள்.

ஆவி பறக்கும் டிகாக்ஷன் காபியை பெரியம்மாவிடம் நீட்டினாள். காப்பியை உறிஞ்சியபடி வைஷ்ணவியை ஏற இறங்கப் பார்த்தாள் மரகதம்.

'பெற்றவர்களை இழந்துவிட்டு அனாதையாக நம்மை அண்டிக் கொண்டு வாழும் அபலைப் பெண்ணிற்கு... அபரிமிதமான அழகை பகவான் கொட்டிக் கொடுத்துள்ளாரே?

வனிதாவும் அனிதாவும் பணத்தைத் தண்ணீராக செலவு செய்து அழகு சாதனப் பொருட்களை வாங்கிக் குவித்து அலங்கரித்து என்ன பிரயோசனம்? அரதப் பழசாகிப் போன





காட்டன் புடவையில் ஒப்பனை சிறிதுமின்றி... ஒப்பற்ற பேரழகியாகத் திகழ்கின்றாளே?

இவளருகே எனது மகள்கள் நிற்க முடிமா?

வழக்கம்போல் பொறாமை உணர்வு தலை தூக்கியது. அவளது கோபக் கனலைக் கிறளறி நன்கு விசிறி விட்டது.

'என்ன மசமசன்னு நின்னுட்டிருக்கே? உங்க பெரியப்பாவுக்கு ராகி கஞ்சியை காய்ச்சி வையி... வனிதாவும் அனிதாவும் ரொம்ப நாளா மகாபலிபுரத்தைச் சுத்திப் பார்க்கணும்னு ஆசைப்பட்டாங்க... பாவம்! வயசுப் பொண்ணுங்க இந்த வயசுல சுத்திப் பார்க்காம... எப்போ பார்க்கப் போறாங்க?'

பத்து மணிக்கு கால் டாக்சியை வரச் சொல்லியிருக்கேன். பக்கத்து தெருவுல இருக்கிற என் சிநேகிதி பாக்கியமும்... அவளோட பொண்ணுங்களை கூட்டிக்கிட்டு வருவா... நாங்க எல்லாரும் போயிட்டு நைட்டுக்கு தான் வீடு திரும்புவோம்.

வயசுப் பொண்ணுங்க ஹோட்டல்லே இஷ்டப்பட்டதை வாங்கி சாப்பிடும். எனக்கு தான் ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்காதே? எனக்கும் பாக்கியத்துக்கும் புளியோதரையும் தயிர் சாதமும் பண்ணி பார்சல் கட்டிக் கொடுத்துடு.

தொட்டுக்க காரசாரமா வெங்காய சட்னியும், தக்காளித் தொக்கும், உருளைக் கிழங்கு வறுவலும் பண்ணிடு. போதும்! ஒன்பதரைக்கு எல்லாம் பார்சல் தயாராயிடணும்.

"உன்னையும் அழைச்சுட்டுப் போகணும்னு ஆசைதான். உங்க பெரியப்பாவுக்கு நேரத்துக்கு சாப்பாடு போட்டு மருந்து மாத்திரை தரணும். அழுக்குத் துணிகளைத் துவைக்கணும்."

"சரி பெரியம்மா... இட்லி தோசைக்கு மாவு வேற அரைச்சு வைக்கணும். பெரியப்பாவை தனியா விட்டுட்டு நாம்ப எல்லோரும் கிளம்ப முடியாதே? முறுவலித்தாள் வைஷ்ணவி."

காலியான காபி டம்ளரை எடுத்துக் கொண்டு அடுக்களைக்குள் ஐக்கியமானாள்.

வைஷ்ணவிக்கு பெரியப்பா சண்முகத்தின் மீது அலாதி

பாசம். சண்முகத்தின் தம்பி மகள் தான் வைஷ்ணவி.

அழகு குவியலாக ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறோம் என்று மகிழ்ச்சி வெள்ளத்தில திளைத்தனர் நடேசனும்-ஜோதியும்!.

என்ன கெட்ட நேரமோ தெரியவில்லை... அவர்களது மட்டற்ற மகிழ்ச்சியில் மண் விழுந்து விட்டது. டைபாயிடு ஜீரத்தில் படுத்த ஜோதி நிரந்தரமாக கண்ணை மூடி விட்டாள்.

மூன்று வயதிலேயே பெற்ற தாயை இழந்து விட்ட மகளின் மீது அன்பு மழையைப் பொழிந்து வளர்த்தார் நடேசன். அவள் எட்டாம் வகுப்பு படிக்கும் போதுதான் அந்தத் துயர சம்பவம் நடந்தது.

தொழிற்சாலை விபத்திலே மாண்டு விட்ட அவள் தந்தை நடேசன் அவளை நிராதரவாக விட்டுப் போகவில்லை. இன்ஷுரன்ஸ் வொர்க் காம்பன்சேஷன் என்றெல்லாம் சேர்த்து இரண்டு லட்ச ருபாய்களை விட்டுப் போயிருந்தார்.

அந்தப் பணத்தில் தான் வைஷ்ணவி வளர்ந்து படித்து இப்படிக் குதிர் போல நிற்கிறாள்.

"இந்த காலத்து விலைவாசிக்கு முன்னால் இந்தப் பணம் கடைவாய்க்குக் கூட காணுமா சொல்லுங்க.. உங்க தம்பி இவளை அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டாரே? நம்ப தலையில பாரத்தை ஏத்திட்டுப் போயிட்டாரே மனுஷன்?" அடிக்கடி இரைந்து கத்துவாள் மரகதம்.

அவமானத்தில் நத்தையாய் அடுக்களைக்குள் சுருண்டு போவாள் வைஷ்ணவி. கன்னங்களும் காதுமடல்களும் சிவந்து சூடேறிவிடும்.

கன்னங்களில் வாய்க்கால் போட்டுக் கொண்டு கண்ணீர் வழியும். தனது துக்கத்தையும் வேதனையையும் யாரிடமும் வெளிப்படுத்த மாட்டாள்.

பி.எஸ்.சி. முடிந்ததும் அளவது படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாள் பெரியம்மா மரகதம். மேற்கொண்டு படிக்க அவளுக்கு கொள்ளை ஆசைதான்.





பெற்றவர்களை இழந்து விட்டு பெரியப்பாவின் நிழலில் ஒண்டிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவள் அவள். அவளது வார்த்தைக்கு யார் மதிப்பு கொடுப்பார்கள்?.

கடந்த எட்டு மாதங்களாக... 'முருகன் ரோட்வேஸ்' என்ற லாரி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில ரிஸப்ஷனிஸ்ட்டாகவும், டெலிபோன் ஆபரேட்டராகவும் பணி புரிந்து வந்தாள்.

"பெரியப்பா... இந்தாங்க ராகி கஞ்சி!"

"லொக்... லொக்" என்று இருமியபடியே எழுந்து அமர்ந்தார் சண்முகம். அவருக்கு காபி அருந்தப் பிடிக்காது. ராகி கஞ்சியைக் குடித்தபடியே தம்பி மகளைப் பரிவுடன் ஏறிட்டார்.

"நீயும் அவங்க கூடப் போயிட்டு வாயேன் வைஷு?"

"இருக்கட்டும் பெரியப்பா... உங்களுக்கு நேரத்துக்கு மருந்து மாத்திரை தரணும்... தவிர எனக்கு இன்ட்ரஸ்ட் இல்லை பெரியப்பா... அதான்"

நெகிழ்ந்து விட்டார் சண்முகம். மனைவி மரகதம் இவளிடம் உத்தரவிட்டதைக் கேட்டுக் கொண்டு தான் படுத்திருந்தார்.

ஆனால் மனைவியை அதட்டவோ அடக்கவோ... அவரால் முடியாதே? ஆரம்பத்திலிருந்தே மனைவிக்குப் பணிந்து அடங்கி நடந்து பழக்கப்பட்டவர் அவர்.

அவர் பரம சாது! தம்பி மகளுக்குப் பரிந்து கொண்டு பேசினால்... மனைவியிடம மண்டகப்படி வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியிருக்குமே என்ற பயத்தில் – கண்டும் காணாதது போல் நடந்து கொள்வார்.

"வைஷு! அருமையாக பாசமான மகள் கூட வாழுறத்துக்கு நடேசனுக்குத்தான் குடுத்து வைக்கலை..."

"பெரியப்பா! நீங்களும் அப்பாவும் ஒரே ஜாடை தானே? எனக்கு என்னமோ அவர் உங்க ரூபத்துல நடமாடிட்டு இருக்கற மாதிரியே இருக்கு முகஜாடை, குரல் எல்லாமே... அப்பா

மாதிரியே இருக்கு" அவளது அழகிய விழிகளில் பாசமும் அன்பும்... ஏகத்திற்கும் ததும்பின.

நெக்குருகிப் போன சண்முகம், "உனக்கு வாழ்க்கையில ஒரு குறையும் வராதுடா... உன்னோட நல்ல குணத்துக்கு.. நீ அமோகமா இருக்கப் போற..."

மனைவி மரகதம் இவளை சக்கையாகப் பிழிகின்றாள். வீட்டில் மாடாக உழைத்து விட்டு... விழுந்தடித்து வேலைக்கு ஓடி சம்பாதித்தும் வருகின்றாள்.

தனக்கென்று ஒரு பைசா வைத்துக் கொள்ளாமல் சம்பளக் கவரை பிரிக்காமல்... அப்படியே கொண்டு வந்து மரகதத்திடம் தந்து விடுகின்றாள்.

"இந்த அப்பாவிப் பெண்ணின் மீது கடவுள் தான் கருணை காட்ட வேண்டும்."

சண்முகத்திற்கு உள்ளூர இரக்கம் சுரந்தது. அவளது முகத்தில் முறுவல் பூத்தது.

" நீங்க எல்லாரும் இருக்கறப்போ... எனக்கு ஒரு குறையும் வராது பெரியப்பா" கரிசனத்துடன் பதிலளித்துவிட்டு அவசரமாக நகர்ந்தாள் வைஷ்ணவி.

வலியை மறைத்துக் கொண்டாளா இல்லை... வலியே ஏற்படாத வகையில் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டு இருக்கிறாளா? தெரியவில்லையே... சண்முகம் அதிசயித்துப் போனார்.

புன்னகை சிந்தும் குறிஞ்சி மலர்... விரைவில் புயலில் சிக்கித் தவிக்கும் என்பதை அவர் எவ்விதம் அறிவார்?

---

# 2

---

அழகான பசுமையான தோட்டத்திற்கு மத்தியில் ஒவ்வொரு அங்குலமும் பணத்தால் இழைத்துக்





கட்டப்பட்டிருந்தது, அந்த பிரமாண்டமான பங்களா. அந்தி சாயும் பொழுது!

தோட்டத்தில் இருந்த அலங்கார ஊஞ்சலில் சோகமே உருவாக அமர்ந்திருந்தார் சிவானந்தம்.

பங்களாவின் வாசலில் வந்து நின்ற காலைப் பார்த்ததும்... மின்னல் வேகத்தில் காம்பவுண்ட் கேட்டைத் திறந்து சல்யூட் அடித்தான் காவலாளி.

காரை போர்டிகோவில் நிறுத்தி விட்டு... கவலை தோய்ந்த முகத்துடன் அப்பா சிவானந்தம் அமர்ந்திருந்த ஊஞ்சலருகே வந்தான் ஸ்ரீதர்.

சிவந்த நிறம், சுருண்ட கேசம், ஆஜானுபாகுவான தோற்றத்துடன் கண்களை நிறைத்தான் ஸ்ரீதர்.

"என்னப்பா நீங்க, தினப்படி செக்கப் பண்ண வந்த டாக்டரை கோபமா பேசி அனுப்பிட்டீங்களாம்? இன்சுலின் இஞ்செக்ஷன் போட்டுக்க மாட்டேன்னு அடம் பண்ணினா எப்படிப்பா?"

"ஸ்ரீதர் எனக்கு ட்ரீட்மெண்டே வேணாம். விட்டுரு... எனக்கு எதுவுமே பிடிக்கலை"

"சுகர், பி.பி. கொலஸ்ட்ரால்னு ஏகப்பட்ட வியாதி உடம்பிலே இருக்கே அப்பா? மருந்து மாத்திரை எடுத்துக்காம... இன்சுலின் போட்டுக்காம இருந்தா வியாதி முத்திடும்... அப்புறம் கஷ்டமாயிடும் அப்பா!"

"வியாதி நல்லா முத்தட்டும். மனசுல பெரிய வேதனையை வச்சிக்கிட்டு கஷ்டப்படறதை விட... பேசாம காலா காலத்துல போய்ச் சேர்ந்துடலாம் ஸ்ரீதர்"

"இப்படி பேசினா எப்படியப்பா? எனக்கும் தான் ரொம்ப வேதனையா இருக்கு... அதுக்காக விரக்தியடைஞ்சு இடிஞ்சு போய் உட்கார்ந்திட முடியுமாப்பா?"

நமக்குப் பல நிறுவனங்கள் இருக்கு. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நம்மை நம்பி வேலை பார்த்துட்டிருக்காங்க...

மனசுல இருக்கற கவலையை ஒதுக்கி வச்சுட்டு... நிறுவனங்களை நிர்வகிச்சுட்டிருக்கேன். நம்ம நிறுவனங்களும் நல்ல லாபத்தோட வளரணும். தொழிலாளர்களோட வாழ்க்கைத் தரமும் உயரணும். அதான் என்னோட குறிக்கோள்!

"அப்பா! விஸ்வம் அண்ணனோட குழந்தை சந்தீப்பை... கொஞ்சம் நினைச்சுப் பாருங்க... அவனோட எதிர்காலத்திற்காகவாவது நாம்ப இன்னும் பல காலம் வாழ்ந்தே தீரணும்கிற வைராக்கியம் வரும்."

"விஸ்வம்" என்ற பெயரைக் கேட்டதும், முதியவரின் விழிகளில் வெப்ப நீர் ஊற்றெடுத்தது.

"விஸ்வம் எங்களுக்கு ரொம்ப காலம் கழிச்சுப் பிறந்தவன். ஏழு வருஷமா குழந்தை இல்லாம தவிச்சு தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை அவன். நல்ல காலம் உங்கம்மா எப்பவோ... பூவும் பொட்டுமா போய்ச் சேர்ந்துட்டா..."

விஸ்வம் அவமானம் தாங்காம தற்கொலை பண்ணிகிட்டு செத்ததை நினைச்சா... என் நெஞ்சு துடிக்குதே ஸ்ரீதர்?" அதற்கு மேல் பேச முடியாமல் மவுனமாக கண்ணீர் உகுத்தார் சிவானந்தம்.

அண்ணன் விஸ்வத்தை... அவனுக்கு நேர்ந்த கதியை நினைத்தாலே... ஸ்ரீதரின் அடிவயிறு பலமுறை சுருண்டது.

அண்ணனின் சாவுக்கு காரணமான அண்ணி வத்சலாவை நினைத்துப் பார்த்தாலே... ஆஸிட் ஊற்றியது போல் அவனது நெஞ்சு கபகபவென்று எரிந்தது.

வத்சலா...! சிவானந்தம் அவர்களின் சொந்த தங்கை மகள்தான். சிறு வயதிலேர்ந்தே வத்சலாவுக்கும் விஸ்வத்திற்கும்... பெரியவர்கள் முடிச்சுப் போட்டுப் பேசினார்கள்.

வருங்காலத்தில் கணவனும் மனைவியுமாய் ஆகப் போகின்றவர்கள் என்ற நம்பிக்கையில்... இவர்கள் உரிமையாய் சகஜமாய் பழகினார்கள்.

அதிலும் விஸ்வம் வத்சலாவின் மேல் உயிரையே வைத்திருந்தான். அவளும் சிரித்த முகத்துடன் தான்





மணவறையில் வந்து அமர்ந்தாள்.

அவர்களது இனிய இல்லறத்தின் சாட்சியாக, சந்தீப் பிறந்தான். குழந்தைக்கு ஒன்றரை வயதாகும் வரை ஒழுங்காக இருந்த வத்சலா திடுதிப்பென்று தடம் மாறி விட்டாள்.

நான் படிக்கும் காலத்தில் 'ரகு' என்பவரை மிகவும் நேசித்தேன். அவர் கவிதைகள் எழுதுபவர். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இளைஞர். என்னை மிகவும் நேசித்தார்.

என் மனமும் அவரை விரும்பியது. அவரது குடும்பச் சொத்தில் ஏதோ வில்லங்கம் இருந்ததால் கோர்ட் கேஸ் என்று... இழுபறியாக இருந்தது. வரைக் கைப்படித்தால் எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்குமோ என்று பயந்தேன்.

பெரியவர்களும் சிறுவயதிலிருந்தே என்னையும் உங்களையும் முடிச்சுப் போட்டு பேசி... கடைசியில் என்னைக் கட்டாயப்படுத்தி கழுத்தை நீட்ட வைத்து விட்டார்கள்.

சமீபத்தில் ரகுவை சந்தித்தேன். அவரது கேஸ் ஜெயித்து விட்டதாம். பங்காளியிடமிருந்த சொத்தை மீட்டு விட்டாராம். அவர் இன்னமும் என்னை நேசிக்கிறார்.

மனத் தராசில் எடை போட்டுப் பார்த்தேன். இப்போது அவரும் பணக்காரர்... சொல்லப்போனால் உங்களை விட பணக்காரர் ஆகிவிட்டார். என்னைப் போலவே அவருக்கும் இலக்கிய ரசனை!

உள்ளொன்று வைத்து புறமொன்று வாழ எனக்கு விருப்பமில்லை. நான் ரகுவிடம் போகின்றேன். 'குட் பை ∴ பார் எவர்' என்று கடிதம் எழுதி வைத்து விட்டு... தாலிச் செயினைக் கழற்றி கடிதத்தின் மீது 'பேப்பர் வெயிட்'டாக வைத்துவிட்டு வெளியேறி விட்டாள்.

விஸ்வம் இடிந்து போய் விட்டான். அவமானம் தாளாமல் புழுவாய் தவித்துப் போனான்.

வேதனையை மறக்க குடிக்க ஆரம்பித்தான். நாளடைவில் ... அவன் சூரியோதயத்தையே பார்க்கவில்லை. எப்போதாவது விரைவில் விழிக்கும் போது... அவன் விஸ்கியில்

முகம் கழுவிக் கொண்டான்.

சதா போதையிலேயே மிதந்த மகனைக் கண்டு ரத்தக் கண்ணீர் சிந்தினார் சிவானந்தம். ஒரு வருடம் உருண்டோடியது. திடீரென்று என்ன தோன்றியதோ தெரியவில்லை... விஸ்கியில் விஷத்தைக் கலந்து குடித்து விட்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டான் விஸ்வம்.

"அப்பா! அண்ணன் நம்மை விட்டுப் போய் மூணு மாசமாச்சு. அண்ணி நம்ம குடும்பத்தோட கவுரவத்துக்கு வேட்டு வெச்சுட்டாங்க. இது தீராத கவரைதான்... ஆனா நம்ம சந்தீப்பை நெனச்சுப் பாருங்க... சகலத்தையும் சகிச்சுக்கிட்டு நாம் அவனுக்காக வாழத்தான் வேணும்.

பகவான் மேல பாரத்தைப் போடுங்கப்பா... டாக்டரை வரச் சொல்லியிருக்கேன். பிடிவாதம் பிடிக்காம அவரு சொல்ற படி நடந்துக்கோங்கப்பா... ப்ளீஸ்!"

தூரத்தில் தென்னை மரத்தைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தான் சந்தீப். கிண்ணத்தில் பால் சாதத்தை ஏந்திக் கொண்டு அவன் பின்னாடியே அல்லாடிக் கொண்டிருந்த ஆயாவின் மீது... முதியவரின் பார்வை படிந்தது.

"பாவம் குழந்தை! சீக்கிரமா நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கோயேன் ஸ்ரீதர்... மருமகள் வந்துட்டா... அவ பொறுப்பா இவனை கவனிச்சுப்பா இல்லையா? இவனும் ஒரு தாயோட அரவணைப்புக்கு ஏங்கிட்ருக்கான்... அதலால.."

அவர் பேசி முடிக்கும் முன் இடை மறித்தான் ஸ்ரீதர்.

"அப்பா! ப்ளீஸ்... என் மனசே ரணமா கிடக்குது. தன்னோட முன்னாள் காதலன்... கட்டின புருஷனை விட பெரிய பணக்காரன் ஆகி விட்டான்னு தெரிஞ்சதும்... அண்ணி, அண்ணனையும் ஒன்றரை வயசுக் குழந்தையையும் உதறிட்டு ஓடிட்டாங்க..."

பத்து மாசம் சுமந்து பெத்தக் குழந்தையை விட்டுட்டு ஓடறத்துக்கு எப்படித்தான் மனசு வந்ததோ? ஆயிரம் காலத்துப் பயிரை வேரோட பிடுங்கி எறிஞ்சுட்டுப் போனாங்களே?





காலம் மாறிப் போச்சு அப்பா! எனக்கு பயமாயிருக்கு... மனைவியால அவமானப்பட்டு உள்ளுக்குள்ளே மருகி மரணத்தைத் தேடிக்கிட்டாரு விஸ்வம் அண்ணா!

எனக்கு கல்யாணம்கிற வார்த்தையைக் கேட்டாலே அலர்ஜியா இருக்கு... விட்டுருங்கப்பா... வத்சலா அண்ணி உங்க தங்கச்சி மகள்... சின்ன வயசிலேர்ந்து நீங்க பார்த்து வளர்ந்தவங்க...

அவங்க இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவாங்கன்னு... நாம கனவுல கூட நெனச்சுப் பார்க்கலையே? முகம் தெரியாத மூணாம் மனுஷி... அடியெடுத்து வச்சு அவளால பிரச்சினை உருவாகறதை நான் விரும்பலை... சந்தீப் என்னோட உயிர்... அவனுக்கு ஒரு குறையும் வரக் கூடாது. எனக்கு எல்லாமே அவன்தான்..."

"ஸ்ரீதர்! தரகர் கிட்ட சொல்லி ஒரு ஏழைப் பொண்ணா பார்க்கச் சொல்லுவோம். அவ அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு போவா இல்லையா?"

"நீங்க எந்தப் பொண்ணைப் பார்த்தாலும்.. அவ இந்த சொத்து சுகத்துக்கு ஆசைப்பட்டுத்தான் கழுத்தை நீட்டுவா... நமக்கு நல்லா தெரிஞ்ச வத்சலாவே இப்படி மாறினத்து அப்புறம்... நான் யாரையும் நம்பத் தயாரா இல்ல... தயவு செய்து இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வச்சுடுங்கப்பா."

அண்ணன் மகனின் மீது உயிரையே வைத்திருக்கும் ஸ்ரீதரைக் கண்டு... முதியவரின் மனம் பெருமிதப் பட்டது.

குழந்தை சந்தீப்புக்கு மிகப் பெரிய ஆபத்து காத்திருந்ததை... இருவரும் எப்படி அறிவார்கள்?

---

# 3

---

அதிகாலையில் ஆரம்பித்து ஓயாது கொட்டிய மழை வலுவிழந்து... இப்போது இலேசாகப் பன்னீர் தெளித்துக்

கொண்டிருந்தது.

சாரலில் வாயில் வராந்தா முழுவதும் நனைந்து விட்டிருந்தது. முன்னறை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் மரகதம்.

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரப்போற நேரத்துல... சகதியும் சேறுமா சொத சொதன்னு கிடக்கே?" உள்ளூர எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

வெங்காயப் பக்கோடா எண்ணெயில் வறுபடும் வாசனை... முன்னறையை நிறைத்துக் கொண்டிருந்தது. வரப் போகும் பிள்ளை வீட்டவர்களைத் திருப்தி செய்ய வைஷ்ணவி அடுப்புடன் போராடிக் கொண்டிருந்தாள்.

"ஏய்... வைஷு! ரவாகேசரிக்கு முந்திரிப் பருப்பு, பச்சைக் கற்பூரம் குங்குமப்பூ... எல்லாம் சேர்த்தியா? நெய்யை தாராளமா விட்டியா?" அதட்டினாள் மரகதம்.

"நீங்க சொன்னபடியே பண்ணியிருக்கேன் பெரியம்மா... எதுக்கும் நீங்க 'டேஸ்ட்' பண்ணி பாத்துடுங்க..." சிறு தட்டில் கொஞ்சம் ரவாகேசரியை வைத்து ஸ்பூனையும் சேர்த்து நீட்டினாள்.

கேசரியை சுவைத்துப் பார்த்த மரகத்தின் முகத்தில் திருப்தி ரேகை மெல்லப் படர்ந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை! காலையிலிருந்து ஓய்வின்றி வீட்டுவேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள் வைஷ்ணவி.

காலையில் குளித்து விட்டு உடுத்திக் கொண்ட வாயில் புடவை கொஞ்சம் சிறிதும் கலையவில்லை.

கழுத்தில் கருகமணிப் பாசி, காதுகளில் சிறு ரோஜா தோடு, கைகளில் பிளாஸ்டிக் வளையல்கள்... அவள் உள்ளே வந்து நின்றதுமே நிலவு பளிச்சிட்டது போன்ற பிரமிப்பு!

'ஹூம்! வனிதாவுக்கு நிறம் தான் மட்டென்றால்... முகக்களையும் வாய்க்கவில்லையே? வரப்போகும் பிள்ளை வீட்டவர்களுக்கு அவளைப் படிக்க வேணுமே?'

உள்ளூர ஏக்கமும் அதே சமயம் கோபமும்





பொங்கியது.

"பஜ்ஜி மாவைத் தயாரா வச்சிருக்கியா? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்தவுடனே சூடா போட்டு எடுத்துரு... உருளைக் கிழங்கையும், வாழைக்காயையும் சீவி வச்சுக்கோ... அசமந்தமா நின்னு என் கழுத்தை அறுத்துடாதே... சரியா?"

"எல்லாமே தயாரா இருக்கு பெரியம்மா...!" பவ்யமாக பதிலளித்தாள். அவள் 'ஏன்' என்று சொல்வதற்குள் எண்ணெயாக' நிற்கிறாளே? மேற்கொண்டு அவளைத் திட்டுவதற்கு எந்த சாக்கும் கிடைக்கவில்லையே? மீண்டும் உள்ளே கோபம் கனன்றது.

வனிதா பீரோவை திறந்து புடவைகளை அள்ளிப் படுக்கையின் மீது போட்ட வண்ணம் இருந்தாள். படுக்கையில் ஒருக்களித்துப்படுத்தபடியே தங்கை அனிதா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இரண்டு நாட்களாக நல்ல காய்ச்சல்! எண்ணற்ற புடவைகளை வாரியிறைத்து விட்டு... என்ன புடவை உடுத்திக் கொள்ளலாம் என்ற ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தாள் வனிதா.

அரை மனதுடன் ஆரஞ்சு வண்ண பனாரஸ் புடவையைத் தேர்வு செய்து விட்டு... "ஏய் வைஷு! புடவைகளை மடிச்சு அடுக்கி வச்சுடு" அதிகாரமாக உத்தரவிட்டாள்.

சிறிது நேரத்தில் பிள்ளை வீட்டவர்கள் வந்து இறங்கினர். வைஷ்ணவி தயாரித்து வைத்த பலகாரங்களை வைத்து உபசரித்தாள் மரகதம்.

'மாப்பிள்ளை சிவந்த நிறத்துடன் களையாக இருக்கிறானே, அம்பத்தூரில் ஏதோ பெரிய ஸ்தாபனத்தில் நல்ல பதவி... கைநிறைய சம்பளம்... அந்தஸ்தான இடம்...'

மரகதத்திற்கு மகிழ்ச்சி கரை புரண்டது.

"பொண்ணுக்குப் பாடத் தெரியுமா?" வந்த பெண்களில் ஒருத்தி கேட்டு விட்டாள்.

வனிதாவிற்கு உள்ளூர நடுக்கம் பரவியது.

"தெரியும் ! ஆனா... ரெண்டு நாளா அவளுக்கு தொண்டை கட்டிக் கொண்டிருக்கிறது" மரகதம் சமாளித்தாள்.

"வாத்யம் ஏதாவது... வீணை கீணை வாசிக்கத் தெரியுமா?" வந்தவள் விடவில்லை. தொடர்ந்து குடைந்து கேள்வி கேட்டாள்.

மூலையில் தூங்கிக் கொண்டிருந்த வீணைப் பெட்டியைத் திறந்து வீணையைத் தூக்கிக் கொண்டு வந்து மரகதம் ஜமுக்காளத்தின் மீது வைத்து விட்டாள்.

பயத்தில் வனிதாவுக்கு வியர்த்துக் கொட்டியது.

"அம்மா! அனிதாவை... இன்னொரு வீணையை எடுத்துக் கொண்டு வரச் சொல்லுங்க... என் கூட சேர்ந்து அவளும் வாசிக்கட்டும். எனக்கு பயமா இருக்கு" மரகதத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு... அவள் மெல்லிய குரலில் கெஞ்சுவதைக் கேட்டார் சண்முகம்.

"அனிதாவுக்குத் தான் உடம்பு முடியாம படுத்திருக்காளே?... சரி இப்போ என்ன? உன் கூட சேர்ந்து வாசிக்கணுமா? வைஷ்ணவி! இன்னொரு வீணையை எடுத்துட்டு வந்து வனி அக்காவோட சேர்ந்து வாசிம்மா" விகல்பமில்லாமல் உத்தரவிட்டார்.

மரகதத்தின் முகம் சட்டென்று இருண்டு போனது.

சபை ஜனங்களுக்கு முன் மறுப்பு தெரிவிக்க முடியாமல்... அரை மனதுடன் வீணையுடன் வந்தமர்ந்தாள் வைஷ்ணவி.

வியப்புடன் அவள் மீது படிந்த மாப்பிள்ளையின் கண்கள் வேறுபுறம் திரும்பவே இல்லை. விடை பெற்றுக் கொண்டு அவர்கள் கிளம்பினார்கள். மறுநாள் பிள்ளையின் தந்தையிடமிருந்து ஃபோன் வந்தது.

"உங்களுடன் சம்பந்தம் செய்து கொள்வது பற்றி எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி... வீணை வாசித்தாளே இன்னொரு பொண்ணு? கத்தரிப்பூ வண்ணத்துல காட்டன் புடவை





கட்டியிருந்தாளே?" அந்தப் பெண்ணைத்தான் என் மகனுக்குப் பிடிக்கிறதாம்.

"எங்களுக்கும் அந்தப் பெண்ணைத்தான் பிடிச்சிருக்கு. உங்களுக்கு சம்மதம் என்றால் மேலே பேச்சு வார்த்தைகளைத் தொடரலாம். என்ன சொல்றீங்க அம்மா?" என்று அவர் கேட்டபோது... மரகதம் ஆத்திரத்தில் ஆடிப் போனாள்.

அன்று வீட்டில் பெரிய பூகம்பமே வெடித்தது.

"புத்தி கெட்ட மனுஷரா இருக்கீங்களே? வனிக்கு நல்ல வாழ்க்கை அமையப் போகுதுன்னு சந்தோஷப் பட்டுட்டு இருந்தேனே? உங்க பொண்ணு வாழ்க்கையில நீங்களே மண்ணள்ளிப் போட்டுட்டீங்களே?"

"ஏன் இப்படி பெரிய வார்த்தையெல்லாம் சொல்றே? அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதே மரகதம்!" சாந்தப்படுத்தும் விதத்தில் பேசியவரை விழிகளால் சுட்டெரித்தாள்.

"உங்க தம்பி பொண்ணை கூப்பிட்டு வீணை வாசிக்க வச்சீங்களே? இப்போ என்னாச்சு தெரியுமா? எல்லோருக்கும் அவளைத்தான் ரொம்ப பிடிச்சிருக்குன்னு ஃபோன் பண்றாங்க... ஐயோ! இந்த சனியனால... என் பொண்ணோட வாழ்க்கையே போச்சே?"

"நல்ல சம்பந்தம் கைவிட்டுப் போச்சே? அனாதையா நம்ம அண்டி வாழ வந்தவ... என் பொண்ணுக்கு வேட்டு வச்சுட்டாளே... பாவி!"

மரகதம் கர்ஜித்தாள். ஓலமிட்டாள். சபித்தாள்.

'தன்னைப் பார்க்க வந்தவன் இப்படி மனம் மாறி அவள் பக்கம் தாவி விட்டானே?' என்று வனிதாவுக்கு பொறாமை; ஆத்திரம்!

" இந்த மனுஷன் கூப்பிட்டா உனக்கு எங்கேடி புத்தி போச்சு?" மரகதத்தின் விழிகள் அனலைக் கக்கின.

" இல்ல... பெ... பெரியம்மா! எல்லாத்துக்கும் முன்னாடி

வச்சு பெரியப்பா வற்புறுத்தினதால... ம...மறுத்துப் பேச தயக்கமா இ.. இருந்துச்சு பெரியம்மா ! அதான்... வ...வந்தேன்"

திக்கித் திணறி வார்த்தைகளை உதிர்த்தாள் வைஷ்ணவி. பயத்தில் கோழிக் குஞ்சாய் வெட வெடத்தாள். இந்த மாதிரி நடக்குமென்று சத்தியமாய் அவள் கற்பனை செய்து கூட பார்க்கவில்லை.

"வீணையைத் தூக்கிட்டு வந்து வாசிச்சு... வந்தவனை மயக்கிட்டியே சனியனே! வனிக்கு வரப்போற நல்ல வாழ்க்கையைக் கெடுத்துட்டியே... பாவி..."

"பெரியம்மா ! சத்தியமாக நா அப்படி எதுவும் நினைக்கலே... இப்படி நடக்கும்னு எனக்குத் தெரியாது..." தழுதழுத்தாள் வைஷ்ணவி.

"நல்லதுக்கு நரி முட்டையிடலை... இவ நம்ப குடும்பத்தைக் கெடுக்க வந்த கொள்ளிவாய்ப் பிசாசு... சே! நீலிக் கண்ணீர் வடிக்காதே மாய் மாலக்காரி... அப்பால போ! என் முன்னாடி நிக்காதே..."

மரகதம் சினத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ... ஓங்கி அவளது கன்னத்தில் ஒரு அறை விட்டாள்.

இடக் கன்னத்தில் ஓர் இடி இறங்கியது. செவிப்பறைக்குள் பூச்சிகள் கத்தின.

இன்னொரு இடி வலக்கன்னத்தில் விழுந்தது. கண்ணுக்குள் ஆயிரம் மின்னல்கள் அறுந்து விழுந்தன.

இறங்கிய மூன்றாவது இடியை... சண்முகத்தின் வலக்கரம் தடுத்தது.

"வைஷ்ணவி ! நீ உள்ளே போம்மா"

அவமானம் ஒரு புறமும் துக்கம் ஒரு புறமும்... வைஷ்ணவியைப் பிடுங்கித் தின்றன.

கீழுதட்டை அழுத்தக் கடித்து... அடுக்களைக்குள் தஞ்சமடைந்தாள்.





# 4

அறைபட்ட கன்னங்கள் ஜிவுஜிவு என்று தீயாய் காந்தின. அவமானம், துக்கம், வேதனை எல்லாம் ஒரு சேர ஆட்டிப்படைக்க புயலில் அகப்பட்ட பூங்கொடியாய் துடித்துக் கொண்டு நின்றாள்.

'அம்மா...' என்று அலறி அழ வேண்டும் போன்ற துக்கம் - அது தொண்டையை அடைத்துக் கொண்டு நின்றது.

அன்று இரவு வைஷ்ணவி வெகு நேரம் உறக்கமின்றி அழுது கொண்டிருந்தாள். இடை இடையே பெரிதாக எழுந்து உடலைக் குலுக்கிய விம்மலை அடக்கிக் கொண்டு அவள் சப்தமிடாமல்.... கண்ணீர் உகுத்தாள்.

தலை பாரமாக கனத்தது. நெஞ்சு வேதனை தாளாமல் வெடித்து விடும் போல் இறுகியது.

'இந்த வாழ்வு தேவைதானா? நான் எதற்காக வாழ வேண்டும்?' எனக்கு விடிவு காலம் பிறக்குமா?

'இப்படி அவமானப்பட்டுக் கொண்டு வாழ்வதற்கு... செத்து விடுவதே மேல்!'

மீண்டும் பொல பொல வென்று கண்ணீர் கொட்டியது. மூக்கை நீர் அடைத்துக் கொள்ளவே மூச்சு விட முடியாமல் திணறிப் போனாள்.

மெல்ல எழுந்து அமர்ந்தாள். வனிதாவுக்கும் அனிதாவுக்கும் தெரிந்தால் கோபித்துக் கொள்வார்களே என்ற பயம்!

அன்று இரவு சாப்பாட்டின் போது பரிமாற வந்த வைஷ்ணவியை சுட்டெரித்து விடுபவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள் வனிதா.

'வீணையை வாசிக்க வந்தவ... ஒரு நல்ல சம்பந்தத்தை

வீணாக்கி விட்டியே... நீ நல்லா இருப்பியா?' என்று கேட்காமல் கேட்டது அவளது கடும் பார்வை!

"என்ன வைஷு? அம்மாவும் அக்காவும் உன்னைக் கரிச்சுக் கொட்டிட்டே இருக்காங்களா?" எனக்கொரு ஐடியா தோணுது.

"பேசாம... இந்த வரனுக்கே நீ கழுத்தை நீட்டி விட்டு இந்த வீட்டை விட்டுப் புறப்படு... பிறகு எங்கள் வாழ்க்கையிலே எந்தப் பிரச்சனையும் வராது இல்லியா?"

இளையவள் அனிதாவும் அவளது பங்குக்குப் பேசி... வைஷ்ணவியின் இதயத்தில் ஈட்டியைப் பாய்ச்சினாள்.

சண்முகத்திற்கு அன்றிரவு சாப்பிடவே மனமில்லை. அனாதையாகித் தம்மிடம் அடைக்கலமான தம்பி மகளின் உள்ளம் நோக... மரகதம் பேசியது அவருக்குப் பிடிக்கவே இல்லை...

அதிலும் அத்து மீறிக் கையை நீட்டி அடித்து விட்டாளே? பாவம்! அழுது ஊதிப் போன முகத்தையும், சிவந்து விட்டிருந்த கண்களையும் பார்த்து அவர் பரிதவித்துப் போனார்.

" போம்மா... கண்ணைத் துடைச்சிட்டு போய் சாப்பிடு" என்று மெல்ல முணுமுணுத்தார்.

இன்னும் ஆறுதலாக நான்கு வார்த்தைகள்... கனிவாகப் பேசி அவளை சமாதானப் படுத்த ஆசைதான்! ஆனால்... பத்ரகாளி ரூபத்தில் வளைய வந்து கொண்டிருந்த மரகதத்தின் வாய்க்கு பயந்து கப்பென்று வாயை மூடிக் கொண்டு விட்டார்.

ஏற்கெனவே மண்டகப்படி வாங்கிக் கட்டிக் கொண்டு விட்டாரே? கையாலாகாத தனத்துடன் செய்து அறியாமல்... படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார்.

"என் பொண்ணுகளுக்கு சமமா இவளையும் வீணை கத்துக்க வச்சேனே? மாசா மாசம் ஃபீஸ் கட்டி கத்துக்க வச்சதுக்கு... கை மேலே பலனைக் கொடுத்துட்டாளே... பாம்புக்குப் பால் வார்த்தேனே?"





அடிபட்ட சிறுத்தையாய் இன்னமும் அடிக்கடி உறுமிக் கொண்டே இருந்தாள் மரகதம்.

'வைஷ்ணவி வீணை கத்துக் கொள்ளட்டும்கிற நல்ல எண்ணத்துலே கிளாசுக்கு அனுப்பி வச்சியாக்கும்? உன் பொண்ணுங்களோட வீணையைத் தூக்கிட்டுப் போக அவளை அனுப்பினே! வேலைக்காரி மாதிரி அந்த அனாதைப் பொண்ணை நடத்தறாங்களே'ன்னு மத்தவங்க பேசிடக் கூடாதுன்னு பயந்து... அவளுக்கு ஃபீஸ் கட்டினே... மத்தபடி உன் பொண்ணுகளுக்கு சமமா அவளை என்னிக்காச்சும் நீ நடத்தினது உண்டா மரகதம்?' என்று கேட்டு விட அவரது நாக்கு துடிக்கத் தான் செய்தது.

ஆனால் அப்படியே அவர் கேட்டுவிட முடியுமா? சே! என்ன பிழைப்பு இது? வெறுப்புடன் போர்வையைத் தலைவரை இழுத்து போர்த்திக் கொண்டார்.

வைஷ்ணவி முகத்தை நன்கு அலம்பிவிட்டு வந்து மீண்டும் படுத்தபோது... காலி வயிற்றில் 'எனக்கு?' என்ற உறுமலான கேள்வி எழும்பியது.

'தொட்டதுக்கு எல்லாம் குற்றம் குறை கண்டுபிடித்து வசைபாடும் பெரியம்மா... இவ்வளவு பெரிய விஷயம் நடந்த பிறகு இனி என்னை சும்மா விட்டு வைப்பாளா?'

ஆரம்பித்திலிருந்தே பெரியம்மாவுக்கு என்னைக் கண்டாலே ஆகாது... இப்போது எரியும் நெருப்பில் நெய் வார்த்தது போலாகி விட்டதே?

தொடர்ந்து இதே வீட்டில் நான் நீடித்திருக்க முடியுமா?

பெரியம்மாவின் ஒவ்வொரு வார்த்தையும் எனது காதுகளில் தீக்கங்கைச் செருகியது போலிருக்குமே?

வனிதா ஜாடையாகப் பேசி வறுத்தெடுத்து விடுவாள்.

அனிதாவோ ஊசிக் கணைகளைப் புன்சிரிப்போடு சேர்த்து வீசுவாள்.

தற்கொலை செய்து கொள்ளலாமா? சேச்சே! தற்கொலை செய்வது மகா பாவம் என்று அப்பா சொல்லக்

கேள்விப்பட்டிருக்கிறேனே?

வேலைக்கு போகிறேன்... சம்பாதிக்கின்றேன். பிறகென்ன?

இந்த வீட்டை விட்டு வெளியேறி ஏதாவது நல்ல ஹாஸ்டலில் தங்கிக் கொண்டு... வேலைக்குச் செல்லலாமா? 'இவளை வளர்த்து படிக்க வைத்தோம். சம்பாதிக்க ஆரபித்ததும்... நன்றியை மறந்து விட்டு வெளியேறி விட்டாளே?' என்று பெரியம்மா அனைவரிடமும் கூறத்தான் போகின்றாள்.

'நன்றி மறந்தவள்' என்ற பழிச் சொல் வந்து சேருமே?

,நான் வீட்டை விட்டு வெளியேறினால்... பெரியப்பா என்ன நினைப்பார்?

இதே வீட்டில் தொடர்ந்து இருக்க முடியாதே? என்ன செய்யப் போகின்றேன்...!"

இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துப் போனாள் வைஷ்ணவி.

---

# 5

---

முழு நிலாவின் மோகன ஒளியில் எம்பி ஆர்ப்பரித்தது கடல்! அந்த எம்பலையும் துள்ளலையும்... பால்கனியில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதர்.

'பாவம் சந்தீப்! இரண்டு நாட்களாக அவனுக்கு சரியான காய்ச்சல்... அனலாகக் கொதித்த காய்ச்சலில் 'அப்பா... அப்பா' என்று அனத்த ஆரம்பித்து விட்டானே... குழந்தை!"

தனக்குள் மெல்ல முணுமுணுத்துக் கொண்டான்.

சந்தீப்புக்கு விஸ்வத்தின் மீது ஒட்டுதல் அதிகம். 'அப்பா காலமாகி விட்டார். இனி திரும்ப வரவே மாட்டார' என்பதைப் புரிந்து கொள்ள இயலாத பிஞ்சுப் பருவத்தில் அவன் இருந்தான்.

சிவானந்தமும், ஸ்ரீதரும்... 'அப்பா ஊருக்குப் போயிருக்காரு கண்ணா... முக்கியமான ஆபீஸ் வேலையை





முடிச்சிட்டு உடனே வந்துடுவாரு ராஜா' என்று பொய் சொல்லி சமாளித்தார்கள்.

எத்தனை நாளைக்கு சமாளிக்க முடியும்?

அதிலும் சளி ஜுரம் பிடித்து உடம்புக்கு முடியாமல் போனதும்... குழந்தைக்க அப்பாவின் ஞாபகம் அதிகரித்து விட்டது.

அனத்தத் தொடங்கியதும் சிவானந்தம் பதறி விட்டார்.

குடும்ப மருத்துவரின் தீவிர கண்காணிப்பில்... எப்படியோ காய்ச்சல் மட்டுப்பட்டது.

சற்று முன்னர் தான் கண்விழித்துப் பார்த்தான் சந்தீப்.

சித்தப்பா ஸ்ரீதர் பரிசளித்த 'ரோபோ' பொம்மையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு... மருந்து மாத்திரைகளின் தீவிரத்தில் மீண்டும் கண் அசந்து போனான்.

பால்கனி கதவை மூடிவிட்டு விஸ்தாரமான அறைக்குள் நுழைந்த ஸ்ரீதர்... அர்த்த பாவனையுடன் சந்தீப்பின் கட்டிலருகே அமர்ந்திருந்த ஆயாவைப் பார்த்தான்.

"இன்னும் ரெண்டு மணி நேரம் பொறுத்து டானிக் ஊத்தினா போதும் தம்பி!" பவ்யமாகப் பதிலளித்தாள்.

சந்தீப்பின் கேசத்தை மிருதுவாகத் தடவியபடியே "ஜாக்கிரதையா பார்த்துக் கோங்கம்மா... நான் கொஞ்சம் பீச்சுல காலார நடந்துவிட்டு வரேன்" என்று கூறிவிட்டு மாடிப்படிகளைக் கடந்து இறங்கினான்.

பிரமாண்டமான ஹாலின் பக்கவாட்டிலிருந்து அறைக் கதவைத் திறந்து மெல்ல எட்டிப் பார்த்தான் ஸ்ரீதர்.

நிம்மதியாய் நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தார் சிவானந்தம்.

"முத்து"

இடுப்பில் துண்டைக் கட்டியிருந்த பணியாள் வேகமாய் ஓடி வந்தான்.

"அப்பா... சாப்பிட்டாரா இல்லையா?"

"டிபன் எதுவும் வேணாம்னு சொல்லிட்டாருங்க... ஒரு வாழைப்பழம்... ஒரு டம்ளர் பால் அவ்ளோதான்! பி.பி. மாத்திரையைப் போட்டுக்கிட்டாருங்க"

ஸ்ரீதரிடமிருந்து நீண்ட பெருமூச்சு அனலாய் வெளிப்பட்டது.

பங்களாவை விட்டு வெளியேறி... கடலை நோக்கி நடந்தான்.

கடற்கரை மணலில் கால்கள் புதையப் புதைய நடந்தவனின் மனம்... பாறாங்கல்லாய் கனத்துக் கொண்டிருந்தது.

சோகத்தை சுமந்து கொண்டிருக்கும் மனிதரின் மனம் சோர்ந்து போய் விடுகின்றது. ஆனால் கடலின் அலைகள் 'எங்களுக்கு சோர்வே இல்லை' என்று தெம்புடன் குதித்து விசிறின.

வெள்ளியில் ஓரம் கட்டின தினுசில் கடலலைகள் மின்னின. செல்லமாய் மோதி ஒவ்வொரு முறையும் கரை மணலில் சிறிதை சுரண்டியடித்தன.

அண்ணி வத்தசலாவை நினைத்தாலே... உள்ளுக்குள் உலை கொதிக்கத் தொடங்கியது.

சந்தீப்பை பத்து மாதங்கள் சுமந்து பெற்றவள் அவள்! தாய்மை உணர்வை சுத்தமாகத் துணி கொண்டு துடைத்துப் போட்டு விட்ட தினுசில் ... பச்சிளம் குழந்தையைப் பரிதவிக்க விட்டு ஓடிப் போய் விட்டாளே?

தனது சுயநலத்தை மட்டும் கருத்தில் கொண்டு... பாரம்பரியமான குடும்பத்தின் கவுரவத்தை அழித்து... சந்தி சிரிக்க வைத்து விட்டாளே?

ஆஜானுபாகுவான அழகான கணவன் விஸ்வம்... அவனுக்கு பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி தலை குனிய வைத்து... குடிக்கு அடிமையாக்கி கடைசியில் தற்கொலை செய்து கொள்ளும் நிலைமைக்கு தள்ளினாளே?

பெண் இனத்திற்கே களங்கம் ஏற்படுத்தி விட்டாளே?

தனது 'ஓடுகாலித் தனத்தால்' அன்பான கணவன்





அவமானப்பட்டு இறந்து விட்டானே? என்ற உறுத்தல் சிறிதளவும் இன்றி... எப்படி அவளால் சந்தோஷமாக இருக்க முடிகின்றதோ?

தவறு செய்தவள் அவள்... பாவம் செய்தவள் அவள்!

தண்டனையை அனுபவிக்கும் தெம்பின்றி... அவமானப்பட்டு கூனிக் குறுகி எனது அண்ணன் இறந்து விட்டான்.

அண்ணனின் குழந்தை இன்றளவும் பாசத்திற்கு ஏங்கித் தவிக்கிறது. சேச்சே! மனசாட்சி சிறிதுமில்லாத ஜென்மம் அவள். இப்பேர்ப்பட்ட சுயநலப் பிசாசுக்கு... கடவுள் ஏன் இன்னமும் தண்டனை தராமல் இருக்கிறாரோ?

தன்னைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் நெருப்பாற்றில் தள்ளி விட்டு... தன் சுகத்தை மட்டும் பிரதானமாக மதித்து ஓடி விட்டாளே?

அவள் எழுதி வைத்து விட்டுப் போன கடிதம்... ஸ்ரீதரின் மனக் கண்ணில் நிழலாடியது.

'மனத் தராசில் எடை போட்டுப் பார்த்தேன். என் காதலர் உங்களை விட பணக்காரராகி விட்டார்' என்று எழுதியிருந்தாளே?

படித்து விட்டு விஸ்வம் அண்ணன் எப்படி துடித்துப் போனார்? மனைவி ஓடிய பிறகு விரக்தி மேலிட... ஆபீஸ் பக்கமே விஸ்வம் தலை வைத்துப் படுக்கவில்லை.

வத்சலா எழுதிய வாசகம்... ஸ்ரீதருக்குள் ஒரு வெறியைத் தூண்டி விட்டிருந்தது.

சதா ஆபீஸிலேயே பழியாய் கிடந்தான். அதீத ஆர்வத்துடனும், அக்கறையுடனும் சிரத்தையுடனும் கடுமையாக உழைத்தான்.

விஸ்வம் குடி போதையில் மூழ்கிக் கொண்டிருக்க... ஸ்ரீதரோ பிஸினஸில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டான்.

அவனது அயராத உழைப்பிற்கும் பட்ட பாட்டிற்கும் பலன் கிடைக்கத்தான் செய்தது.

முன்பு எப்போதும் இல்லாத அளவில் ... பன் மடங்கு லாபத்துடன் அவனது நிறுவனங்கள் வெற்றிப் பாதையில் முன்னணியில் முன்னேறின.

அனைவரும் மூக்கில் விரல் வைக்கும் வகையில் இளம் தொழிலதிபர் ஸ்ரீதர் சிகரத்தைத் தொட்டு கொண்டிருந்தான்.

இளம் வயதினருக்குரிய ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்காமல்... மனதிற்கு கடிவாளம் போட்டுக் கட்டுக்குள் வைத்திருந்தான் ஸ்ரீதர்.

அவனது மனதை முழுவதுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான் சிறுவன் சந்தீப்.

சந்தீப்பின் பிஞ்சு உடம்பில் ஈ, கொசு அமர்ந்தாலும் துடித்துப் போய் விடுவான் ஸ்ரீதர்.

அந்த அளவுக்கு அவன் மீது உயிரையே வைத்திருந்தான்.

விதி சிரித்தது! சந்தீப்பின் உடலிலிருந்து ஏகப்பட்ட இரத்தம் வெளியாகி... அவன் உயிருக்கு போராடும் சூழ்நிலையை உருவாக்க... விதி தக்க தருணம் பார்த்தக் கொண்டிருந்தது.

---

# 6

---

வேலைக்குச் சென்று நாள் முழுவதும் உழைத்து விட்டு அலுத்துக் களைத்து வீடு திரும்பியிருந்தாள் வைஷ்ணவி.

டகடகவென்று ஜகடை உருள கிணற்றில் இருந்து நீரை இறைத்துத் தோட்டத்து பூச்செடிகளுக்கும் கீரைப் பாத்திகளுக்கும் தண்ணீர் விட எத்தனித்தாள்.

"வைஷ! இங்க வா... நாங்க எல்லாரும் ரிஸப்ஷனுக்குக் கிளம்பறோம். முதல்லே வந்து காபி போட்டுக் குடு... காபி சாப்பிட்டுவிட்டு நாங்க போகணும். நாங்க போனதும் மெதுவா வந்து இந்தக் காரியத்தை கவனிச்சா போறும்."





மரகதத்தின் குரலில் கடுமை வழிந்தது.

"சரிங்க பெரியம்மா" ஓட்டமும் நடையுமாக அடுக்களைக்குள் புகுந்தாள் வைஷ்ணவி.

"என்னங்க... பாக்கியத்தோட பொண்ணுக்கு நாளைக்கு கல்யாணம் தெரியுமில்ல?... கிளம்புங்க சீக்கிரம்" அதட்டிய மனைவியை திகைப்புடன் ஏறிட்டுப் பார்த்தார் சண்முகம்.

"உன் சிநேகிதியோட பொண்ணுக்கு கல்யாணம். நீ கிளம்பிப் போயேன் மரகதம். என்னை என்னத்துக்கு வரச் சொல்றே." தயங்கியபடியே கேட்டு விட்டார்.

"இருபது வருஷத்துப் பழக்கம்... பாக்கியம், இன்னிக்கும் நாளைக்கும் குடும்பத்தோட வந்து போகணுமின்னு வருந்தி கூப்பிட்டிருக்கா... நீங்களும் வாங்க... நாளைக்கு நம்ம பொண்ணுங்களோட விசேஷத்துக்கு அக்கம் பக்கம் மனுஷாள் வர வேணாமா?"

மண்டபமும் பக்கத்துல தானே இருக்கு?... "கிளம்பி வரப் போறீங்களா இல்லையா?"

அதற்கு மேல் மறுத்துப் பேசினால் ருத்ரதாண்டவம் ஆடி விடுவாளே? என்ற பயத்தில் அரைமனதுடன் கிளம்பி விட்டார் சண்முகம்.

அனைவரும் கிளம்பிச் சென்றதும் வீட்டைப் பெருக்கி முடித்து... அடுப்பு மேடையில் இரைந்து கிடந்த பாத்திரங்களை ஒழித்துப் போட்டு தேய்த்துக் கவிழ்த்தாள்.

'செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி விட்டு ... கலைந்த கூந்தலை வாரிப் பின்னலிட்டு விட்டு கொல்லைப் புறக் கதவை மறக்காமல் சாத்தி விட்டு வர வேண்டும்' என்று எண்ணமிட்டுக் கொண்டே கிணற்றிலிருந்து நீரை இறைத்தாள் வைஷ்ணவி.

"தோட்டத்துச் செடிகளுக்கு எல்லாம் கிணத்துல இருந்து தண்ணியைச் சேந்தி தான் ஊத்தணும்... மோட்டார் தண்ணியை விட்டா கரண்ட் பில் எகிறும். பொண்ணா பொறந்தவ கட்டும் கெட்டுமா சிக்கனமா இருக்கணும்."

"என்ன முழிக்கிற? உடம்புக்கு நல்ல பயிற்சி... அதே சமயம் இறைக்க இறைக்க கிணத்துல தண்ணியும் ஊறிகிட்டே

இருக்கும்." என்று மரகதம் போட்ட உத்தரவை... ஒரு நாளும் மீறியதே இல்லை.

பவள மல்லி மரத்துக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தவள் அருகில் ஏதோ நிழலாடியதும் திடுக்கிட்டுத் திரும்பி பார்த்தாள்.

அழகு சுந்தரம் நெருங்கி நின்று கொண்டிருந்தான். மரகதத்தின் அண்ணன் மகன் அழகு சுந்தரத்திற்கு... பெயரில்தான் 'அழகு' இருந்தது.

அவனது பெயருக்கும் உருவத்திற்கும் சிறிதும் சம்பந்தமே இல்லை எனலாம். 'இவன் எப்படி இங்கே வந்தான்... அதுவும் இந்த நேரத்தில்?' வைஷ்ணவிக்கு அவனைக் கண்டதுமே தூக்கி வாரிப்போட்டது.

சட்டென்று பின் வாங்கி நின்றவள் பூவாளியைப் பொத்தென்று கீழே வைத்தாள்.

அந்தி சாயும் நேரத்தில் வாசற்கதவை எதற்கு மூடி வைக்க வேண்டும்? என்ற எண்ணத்தில் தோட்டத்திற்குள் புகுந்து கொண்டது... எவ்வளவு பெரிய முட்டாள்தனம்!

அவளைப் பார்வையாலேயே அளவெடுத்தபடி சல்லித்தனமாக சிரித்துக் கொண்டு நின்றிருந்தவனைக் கண்டு... அவளது மேனி மெல்லப் பதறியது.

காலுக்கடியில் பூரான்கள் நெளிவது போன்ற அருவருப்பு ஏற்பட்டது. நிஜம்!

இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த கொசுவத்தைத் தழைத்து விட்டபடியே கூடத்தை நோக்கி விரைந்தாள். அழகு சுந்தரமும் அவளைப் பின் தொடர்ந்தான்.

இரண்டு தெரு தள்ளித்தான் அழக சுந்தரத்தின் வீடு உள்ளது. சுற்று வட்டிக்கு பணத்தை விட்டு சம்பாதித்துக் கொண்டிருந்தான். அவனது வீட்டுக்கு அருகிலேயே அடகுக் கடையையும் நடத்தி அநியாயமாகப் பணத்தைச் சேர்த்து வைத்திருந்தான்.

பணத்தோடு சேர்த்து பாவத்தையும் மூட்டை மூட்டையாகச் சேமித்து வைத்திருந்ததால்... பத்துப் பன்னிரண்டு





வருடங்கள் ஆகியும் அவனது மனைவி கருத்தரிக்கவே இல்லை.

அண்ணன் மகன் அழகு சுந்தரத்தைக் கண்டாலே... மரகதத்திற்கு தலை கால் புரியாது. குஷி பிய்த்துக் கொண்டு போகும். வாயெல்லாம் பல்லாக வரவேற்று உபசரிப்பாள்.

"பெரியம்மாவும் மத்தவங்களும் ரிஸப்ஷனுக்குப் போயிருக்காங்க..." எரிச்சலுடன் கூறினாள் வைஷ்ணவி.

தெரியும் ! வீட்டுல யாரும் இருக்க மாட்டாங்கங்கிற விவரம் தெரிஞ்சுதான் வந்தேன். "என்ன முழிக்கிற? அத்தை தான் இந்த விவரத்தை எனக்கு சொன்னாங்க... இப்படிப்பட்ட சந்தர்ப்பம் அமையாதான்னு... நான் எவ்ளோ நாளா ஏங்கிட்டிருக்கேன்னு தெரியுமா வைஷு!" அவனிடமிருந்து நாசிக்குப் பிடிக்காத வாடை குப்பென்று கிளம்பியது.

'என்னது? பெரியம்மா எதற்காக இப்படியொரு சந்தர்ப்பத்தை இவனுக்கு உருவாக்கித் தரவேண்டும்?' சமீப காலமாக இவன் அடிக்கடி வர ஆரம்பித்திருக்கிறான்.

வழியில் எங்காவது பார்த்தாலும் வலிய வந்து நின்று பேச்சுக் கொடுக்க முயற்சித்தான்... சிறிதும் லஜ்ஜையின்றி பார்வையாலேயே அவளை விழுங்கி விடுவது போல பார்க்கிறானே?

ரிஸப்ஷனுக்கு வர மாட்டேன் என்று அடம் பிடித்த பெரியப்பாவை... அதட்டி மிரட்டி அவரையும் தன்னோடு அழைத்துச் சென்று விட்டாளே பெரியம்மா? அண்ணன் மகனுடன் சேரந்து ஏதோ சதி செய்கிறாள்' என்பது மட்டும் நன்கு புரிந்தது.

"எங்கிட்ட உங்களுக்கு என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு? அவங்க வந்தப்புறமா தாராளமா வாங்க... எனக்கு தலைக்கு மேல வேலை கிடக்கு... கிளம்பறீங்களா? நான் வாசற்கதவைச் சாத்தனும்!" வெடுக்கென்று பேசினாள் வைஷ்ணவி.

அவளது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"என்னத்துக்கு வைஷு... இப்படிக் கோபப்படறே? நீ கோபப்படறப்போ கூட எவ்ளோ அழகா இருக்கே தெரியுமா? ஊசிப் பட்டாசா நீ பொரிஞ்சு தள்ளினாலும்... உன் குரல்

தேனாட்டம் இனிக்குது தெரியுமா வைஷ்?"

"மிஸ்டர்! லிமிட்டைத் தாண்டிப் பேசறீங்க... நீங்க பெரியம்மாவுக்கு நெருங்கிய உறவுக்காரராக இருக்கலாம். ஆனா அவங்க இல்லாத நேரத்துல... தனியா இருக்கிற என்கிட்ட வந்து இந்த மாதிரியெல்லாம் பேசறது... கொஞ்சம் கூட நல்லாயில்ல... தயவு செய்து போயிடுங்க"

அழகிய விழிகள் தீக்கங்குகளாய் ஜொலித்தன.

"என்ன வைஷ்?" இந்த அத்தான் எவ்வயோ ஆசையா வந்திருக்கேன்... என்னத்துக்கு இப்படி எரிஞ்சு விழறே? அக்கம் பக்கத்துல இருக்கிறவங்க 'அழகு சுந்தரம் பெண்கள் விஷயத்துல மோசமானவன்'னு உன்கிட்டே சொன்னாங்களா? நிறைய குடிப்பான்னு சொன்னாங்களா?

எக்கச் சக்கமா பணம் புரண்டுகிட்டிருக்கு. நா ஜாலியா அனுபவிக்கிறேன். சமீபகாலமா எல்லாத்துக்கும் ஒரு சலிப்பு வந்துடுச்சு வைஷ்!

நீ எனக்கு கிடைக்கணுமேங்கற ஏக்கம் வந்துடுச்சு. நீ எனக்கு சொந்தமாயிட்டா... நானும் சுத்தமான மனுஷனாயிடுவேன். நானும் தவறுகள் செய்தவன்தான்... ஒப்புக்கிறேன்.

பணம் கொட்டிக் கிடக்கு... பொதுவா வசதி வாய்ப்போட இருக்கிற ஆம்பிளைங்க கொஞ்சம் அப்படி இப்படின்னு இருக்கத்தானே செய்வாங்க... நீ படிச்ச பொண்ணு! இதுகூடவா புரியலே வைஷ்? உரிமையாய் பேசிக் கொண்டே அவளை நெருங்கி வர ஆரம்பித்தான்.

"உங்களுக்கு கல்யாணம் ஆகி பல வருஷங்களாச்சு... வீட்டுல உங்க மனைவி காத்திட்டிருப்பாங்க... போயிடுங்க... உங்க ராஜ லீலைக்கும் ஆட்டம் பாட்டத்துக்கும்... வேற ஆளைப் பாருங்க. நான் நெருப்பு! இதுக்கு மேல ஒரு எட்டு வச்சா... நேரா பரலோகம் போயிடுவே..."

"என்ன பார்க்கிறே? உனக்கு எல்லாம் எதுக்குடா மரியாதை? கிட்டே வந்தே... இந்த உலக்கையால உன் மண்டையைப் பிளந்துடுவேன்... ராஸ்கல்!" சுவரோரமாக சாற்றி





வைக்கப்பட்டிருந்த உலக்கையை சட்டென்று எடுத்து ஓங்கினாள்.

கலைந்த் கூந்தலும் சிவந்த விழிகளுமாகப் பார்ப்பதற்கு அசுர சம்ஹாரம் செய்ய வந்த திரிபுரசுந்தரியைப் போன்று தோற்றம் அளித்தாள்.

"கத்தி ஊரைக் கூட்டி உன்னை அசிங்கப்படுத்துறத்துக்கு முன்னாடி ஓடிப்போயிடு... பொறுக்கி ராஸ்கல்"

கர்ஜித்தாள்.

"வை... வைஷ்!" பயத்தில் பின்வாங்கி நடந்து கொண்டே பேசினான்.

"நீ தப்பா புரிஞ்சுக்கிட்டே வைஷ்! உனக்கும் எனக்கும் கல்யாண ஏற்பாடு நடக்குது... அந்த உரிமையில தான் உன்கிட்டே நான் பேச வந்தேன். சரி... நா வரேன"

பயத்தில் அவனது நாக் குழறியது. வாசற்கதவைத் தாண்டி ஓடிப் போனான் அழகு சுந்தரம்.

வைஷ்ணவிக்கு இதயம் தடதடத்தது. கோபத்திலும் பயத்திலும் அவளுக்கு மூச்சிரைத்தது.

'இவன் கூறுவது உண்மையா? அல்லது குடிபோதையில் உளறிவிட்டுப் போகின்றானா?'

ஒருவேளை இவன் கூறுவது உண்மையாக இருக்குமோ?

உள்ளுக்குள் திகில் ஊறியது. பதற்றம் சிலந்தியாய் கால் பரப்பி, இவளுள் நடக்க ஆரம்பித்தது.

---

# 7

---

"ஸ்ரீ...ஸ்ரீதர்! நம்ம சந்தீப் மா...மாடிப் படியிலேர்ந்து உருண்டு விழுந்துட்டான்பா... வேகமாக உருண்டு விழுந்ததுல கீழ்ப்படி முனையிலே மோதிட்டான்... நிறைய ரத்தம் போயிடுச்சு..."

அ... அவனை வி.ஆர்.ஹாஸ்பிடல்லே சேர்த்திருக்கோம்.

ஐ...ஐ..ஸி..யு..வில தான் இருக்கான் இவ்ளோ நேரமா ட்ரை பண்ணி இப்பதான் உன்னோட லைன் கிடைச்சது.

'எனக்கு பயமா இருக்கு ஸ்ரீதர்! சீக்கிரமா வர்றியாப்பா?' தழுதழுத்தபடி பேசினார் சிவானந்தம். ஸ்ரீதருக்கு பகீரென்றிருந்தது.

"மை...மைகாட்!" இத்தனை பேர் இருந்தும் என்ன பிரயோஜனம்? குழந்தையை ஜாக்கிரதையாக கவனிச்சுக்காம... இப்படி அசால்ட்டா இருந்திருக்கீங்க? உயிருக்கு ஒ.. ஒண்ணும் ஆபத்தில்லையே அப்பா? கேட்டு முடிப்பதற்குள்... அவனது அடிவயிற்றில் அமிலம் சுரந்தது.

"டாக்டர்ஸ் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறாங்க... நிறைய ரத்த இழப்பு ஏற்பட்டிருக்கலாம்... நீ சீக்கிரமா கிளம்பி வாடா..."

மறுகணமே செல்.'.போன் மௌனித்தது.

அவனது கார் புயல் வேகத்தில் வீ.ஆர்.ஹாஸ்பிடலை நோக்கி சீறிக் கொண்டு கிளம்பியது.

"பகவானே! இந்த உலகத்துல எங்களுக்குன்னு இருக்கிற ஒரே பிடிப்பு... சந்தீப் தான். என் உயிரை எடுத்துக்கோ... குழந்தைக்கு எந்த ஆபத்தும் ஏற்படாம காப்பாத்து... பகவானே! இன்னொரு அதிர்ச்சியைத் தாங்கற சக்தி... எங்களுக்குக் கிடையாது... ஐயனே!"

மனம் உருக இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டான். அவன் ஆஸ்பத்திரியை அடைந்த போது... சிவானந்தம் சோகமே உருவாகத் தளர்ந்து போய் ஏறிட்டார்.

"எ...என்னப்பா?.. டாக்டர் என்ன சொன்னாரு?"

"ப்ச்! சந்தீப்புக்கு ரேர் குருப்பைச் சேர்ந்த ரத்தமாம்... பிளட் பேங்கிலே .'.போன் பண்ணி கேட்டிருக்காங்க... அங்கேயும் ஸ்டாக் இல்லையாம்... பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனுக்கு .'.போன் பண்ணி சொல்லி இருக்காங்க..."

'ரேர் குருப்பைச் சேர்ந்த டோனர்ஸ்"க்கு அவங்க தகவல் அனுப்பியிருப்பாங்க... அந்த குருப் ரத்தமுடையவங்க மனசு இரங்கி... சீக்கிரமா வந்து பிளட் டொனேட் பண்ணினா...





சந்தீப்பைக் காப்பாத்திடலாம்'னு சொல்றாங்க.

மருமளால குடும்ப மானம் போச்சு. எனக்கு கொள்ளி வைக்க வேண்டிய தலைப்பிள்ளை விஸ்வத்தை வாரிக் குடுத்தேன். இப்போ பேரன் உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கிறதைப் பார்க்கிறேன்...

"கடவுள் என்னை... அதுவும் வயசான காலத்துல இப்படி பந்தாடுகிறாரே ஸ்ரீதர்? இப்படி அணு அணுவா துக்கப்பட்டு சாகிறதை விட.... ஒரேயடியா கண்ணை மூடிக்கிட்டா தேவலை போலிருக்கேப்பா"

சோகத்தில் வாய்விட்டு அரற்ற ஆரம்பித்தார் சிவானந்தம். "நம்பிக்கையைத் தளர விடாதீங்கப்பா... நாம் எந்தப் பாவமும் செய்யலை... பகவான் நம்மைக் கைவிட மாட்டாருப்பா"

தந்தையின் தோளில் ஆதுரமாய் கை வைத்தான் ஸ்ரீதர். மெல்ல ஆற்றியபடியே அவனது புஜத்தில் சாய்ந்து கொண்டார் சிவானந்தம்.

அலுவலகத்திற்குள் நுழைந்து விட்டால்... வைஷ்ணவி தன்னையே மறந்து விடுவாள்.

தனது கவலையையும் சோகத்தையும் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு வேலையில் ஆர்வத்துடன் மூழ்கி விடுவாள்.

வேலை முடிந்து திரும்பவும் ஹேண்ட் பாக்கை மாட்டிக் கொண்டு வீட்டிற்குச் செல்லும் போதுதான்... சோக மேகங்கள் சொல்லி வைத்தாற்போல் அவளைச் சூழ்ந்து கொள்ளும்.

இனம் புரியாத பாரம் நெஞ்சில் ஏறி அமர்ந்து விடும். அன்று மதிய உணவு இடைவேளையின் போது... ஹேண்ட் பாக்கிலிருந்து டிபன் பாக்ஸை எடுத்து வெளியில் வைத்தாள்.

மோர் சாதத்தின் புளித்த மணம் குப்பென்று நாசியைத் துளைத்தது. கிளம்பிய அவசரத்தில்... தொட்டுக் கொள்ள உருளைக் கிழங்கு வறுவலையும் தக்காளி தொக்கையும் வைக்க மறந்து விட்டாள்.

வழக்கமாக எடுத்து வரும் மாவடுவைக் கூட வைக்க மறந்து விட்டாள்.

மோர் சாதத்தில் சிறிதளவு தண்ணீரை விட்டுப் பிசைந்த நேரத்தில்... டெலி.'.போன் விடாமல் அலறியது.

"ஹலோ! குட் ஆ'.ப்டர் நூன்... முருகன் ரோட்வேஸ்!"

"ஹலோ! மிஸ். வைஷ்ணவி... நாங்க பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனிலிருந்து பேசறோம்."

ஒரு சின்னப் பையன் அடிபட்டு உயிருக்குப் போராடிக்கிட்டிருக்கான். அவனுக்கு உடனடியா ரேர் குருப் பிளட் தேவைப்படுது. வீ.ஆர். ஹாஸ்பிடல்லே இருந்து '.போன் பண்ணினாங்க.

"நீங்க உடனடியா போய் பிளட் டொனேட் பண்ணினா... அந்தப் பையனைக் காப்பாத்திடலாம்."

"எ...எங்க.... எந்த ஹாஸ்பிடல்?" பதறி எழுந்தாள்.

"அடையாறுல வீ.ஆர்.ஹாஸ்பிடல்"

"இ...இதோ கிளம்பிட்டேன் சார" கையைக் கழுவிக் கொண்டு. அரக்கப் பரக்க 'ஹேண்ட் பேக்கை மாட்டிக் கொண்டு மானேஜரின் கேபினுக்குள் தயக்கமாய் நுழைந்தாள் வைஷ்ணவி.

விஷயத்தை கேள்விப்பட்டதும் மானேஜர் "உன்னோட மனிதாபிமானத்தைப் பாராட்றேன் வைஷ்ணவி. போயிட்டு வாம்மா" என்றார்.

அவசரமாக விழுந்தடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

மரகதத்திற்குத் தெரியாமல்... அவசரத் தேவைக்காக இருநூறு ருபாயைத் தந்திருந்தார் பெரியப்பா சண்முகம்.

பஸ்சுக்காக காத்திருந்தால் நேரமாகி விடும். அங்கே சிறுவனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அந்த உயிருக்கே உலை வைத்து விடுமே என்ற எண்ணத்தில்... காலியாக வந்த ஆட்டோவில் சட்டென்று ஏறிக் கொண்டாள் வைஷ்ணவி.

அவள் அடிக்கடி இரத்த தான முகாமில் கலந்து





கொண்டு... இரத்த தானம் செய்து விட்டு வருபவள். முதியோர் இல்லத்திற்கும், அனாதை இல்லத்திற்கும் சென்று தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்று விரும்புபவள்.

"வீ.ஆர். ஹாஸ்பிடலுக்கு கொஞ்சம் சீக்கிரமா போங்களேன் சார்! அங்கே ஒரு குழந்தை ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்காம்... ப்ளீஸ்" அவளது குரலில் பதற்றம் வழிந்தது.

ஆட்டோ வேகமெடுத்துப் பறந்தது.

இனம் புரியாத திகிலில் அவளது இதம் எம்பிக் குதித்தது.

---

# 8

---

"கடவுளே! அந்தக் குழந்தைக்கு எதுவும் ஆயிடக் கூடாது" அவளையும் அறியாமல் பதற்றமாக இறைவனிடம் கோரிக்கை வைத்தாள்.

'முன் பின் பார்த்தறியாத குழந்தைதான்! பாவம்... குழந்தையைப் பெத்தவங்க எப்படியெல்லாம் பரிதவிச் சுட்டு இருக்காங்களோ?' உள்ளூர பச்சாதாபம் சுரந்தது.

"இன்னும் கொஞ்சம் சீக்கிரமா போங்களேன்" ஆட்டோ ஜெட் வேகத்தில் பறக்க ஆரம்பித்தது. வீ.ஆர்.ஹாஸ்பிடல் வளாகத்தில் நின்றது.

ஆட்டோக்காரனுக்கு பணத்தைக் கொடுத்து விட்டு கிட்டத்தட்ட ஓடினாள் வைஷ்ணவி.

இவளது திகிலையும் பதற்றத்தையும் பார்த்து விட்டு தலைமை டாக்டர் புன்னகைத்துக் கொண்டார்.

நரம்பில் ஊசி இறக்கி ரத்தம் சேகரித்த போது தலையோடு காலாய் நெகிழ்வு!

"உரிய நேரத்தில் நீங்க கொடுத்த ரத்தம்... அந்த உயிரையே காப்பாத்தி இருக்கு ! நன்றி... மிஸ்.வைஷ்ணவி"

அந்த ஆஸ்பத்திரி தலைமை மருத்துவர் பாராட்டினார்.

"மனித நேயத்தோடு செயல்பட வேண்டியது நம்ம கடமை சார்! நான் என்னோட கடமையைத் தான் செய்திருக்கேன். விலை மதிப்பில்லாத ஒரு உயிரைக் காப்பாத்தின புண்ணியம் எனக்கு இன்னிக்கு கிடைச்சிருக்கே... அதுக்கு நான்தான் நன்றி சொல்லணும் சார்"

அவருடன் பேசியபடியே வெளிப்பட்டவளை.. கை கூப்பி வணங்கினார் சிவானந்தம்.

"பிரபல தொழிலதிபர் ஸ்ரீதரைப் பற்றி நீங்க கேள்விப்பட்டிருப்பீங்களே? அவர்தான் இவர்... இவர், ஸ்ரீதரோட அப்பா சிவானந்தம். சிவானந்தம் சாரோட பேரனைத்தான் நீங்க காப்பாத்தி இருக்கீங்க" டாக்டர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சங்கோஜத்துடன் இருவரையும் பார்த்துக் கை கூப்பினாள் வைஷ்ணவி.

"இவங்க மிஸ்.வைஷ்ணவி! ரெகுலர் பிளட் டோனர்"

"அம்மாடி... வைஷ்ணவி! நீ பண்ணின உதவி இருக்கே... எங்க உயிரையே நீ மீட்டுக் கொடுத்திருக்கே... என் மூத்த பையன் தவறிட்டான். அவ்ளோ பெரிய சோகத்தை சுமந்துகிட்டு நான் உயிரோட நடமாடிக்கிட்டு இருக்கேன்னா... அதுக்கு காரணம் என் பேரன் சந்தீப்தான்!"

ரணப்பட்ட மனசுக்கு அவன்தான் மருந்தா இருந்தான். அவனுக்கு இப்படி ஆனதும் நாங்க ஆடிப்போயிட்டோம். நல்ல காலம்...

"தேவதை மாதிரி வந்தே... என் பேரனுக்குப் புனர் ஜென்மம் குடுத்துட்டே..." கண்ணீர் மல்கியபடி கைகூப்பி வணங்கினார்.

"எனக்கு அப்பா ஸ்தானத்துல இருக்கிற பெரியவர் நீங்க! நான்தான் உங்களை வணங்கணும். நான் பெத்தவங்களை இழந்துட்டேன். உயிர் எவ்வளவு விலைமதிக்க முடியாதுன்னு... அனுபவப் பூர்வமா உணர்ந்த பொண்ணு நான்!"

"மனுஷருக்கு மனுஷர் இந்த உதவி கூட





செய்யலைன்னா... நாம பூமியில பிறந்ததுக்கே அர்த்தம் இல்லாம போயிடுமே சார்!" முறுவல் பூத்தாள் வைஷ்ணவி.

"மிஸ்.வைஷ்ணவி! நீங்க பண்ணின உதவிக்கு மிக்க நன்றி! எங்க குடும்பத்து வாரிசை மீட்டுக் கொடுத்துட்டீங்க... இ∴ப் யூ டோண்ட் மைண்ட்... இந்தாங்க பிளாங்க் செக்... நீங்க எத்தனை லட்சம் வேணும்னாலும் ∴பில் பண்ணிக்கலாம்."

"எங்க திருப்திக்காக நீங்க இதை வாங்கிக்கணும். பிளீஸ்" அவள் முன் செக்கை நீட்டினான் ஸ்ரீதர்.

அவளது நெஞ்சில் நெருஞ்சி முள் தைத்தது. ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. "நான் ஏழையாக இருப்பதனால்தானே செக்கை நீட்டி விட்டீங்க?"

"நான் ரெகுலரா பிளட் டொனேட் பண்ணக் கூடியவள் சார்! ஒரு உயிர் ஊசலாடிக்கிட்டிருக்கேன்னு தான்..." பதறிப் போய் லீவு போட்டுட்டு ஓடி வந்தேன்.

பிரபல தொழிலதிபரோட பேரனா இருந்தாலும் சரி... செருப்பு தைக்கிறவரோட பேரனா இருந்தாலும் சரி... மனித உயிர் உன்னதமானது... விலை மதிக்க முடியாதது.

"இந்த செக்கை எதிர்பார்த்து நான் இந்த உதவியைச் செய்யலை சார்!"

"மிஸ்.வைஷ்ணவி! நான் என்ன சொல்ல வந்தேன்னா... ஸ்ரீதர் பேசி முடிக்கும் முன் குறுக்கிட்டாள்.

"நான் ஏழையாக இருக்கிறதால தானே... செய்த உதவிக்கு 'செக்கை நீட்டி விட்டீங்க? எந்த விதப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் செய்த உதவியை... தயவுசெய்து கொச்சைப் படுத்தாதீங்க சார்"

அவளது மலர்ந்து முகம் சட்டென்று அனிச்ச மலராய் சுருங்கி வாடியதையும், கண்களில் 'குபுக்' என்று கண்ணீர் எட்டிப் பார்த்ததையும் கண்ட ஸ்ரீதர்... உள்ளூரப் பதறித்தான் போனான்.

"சா...சாரி மிஸ்.வைஷ்ணவி"

அவள் அதைக் காதில் போட்டுக் கொண்டதாகத்

தெரியவில்லை.

இறுகின முகத்துடன் மௌனமாக கைகூப்பி விட்டு விழிகளைத் தழைத்து கொண்டு விருட்டென்று வெளியேறினாள்.

அரண்டு போய் விட்டான் ஸ்ரீதர்.

இந்த காலத்தில் இப்படி ஒரு இளம் பெண்ணா?

காசு பணத்தைப்' பெரிதும் மதிக்காமல் மனித நேயத்திற்கு முக்கியத்துவம் அளித்து செயல்படும் வைஷ்ணவியைக் கண்டு... அவன் ஆச்சர்யத்தில் திக்குமுக்காடிப் போனான்.

அவனது கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

தான் காண்பது கனவா? நனவா? என்ற ஐயப்பாடு கூட மெல்ல எட்டிப் பார்த்தது.

கண் கொட்டாமல் அவள் சென்ற திக்கையே வெகுநேரம் வெறித்துக் கொண்டிருந்தான்.

வத்சலா வசதி வாய்ப்போடு பணத்திலேயே புரண்டு வளர்ந்த பெண்... அப்படிப்பட்டவளே பணத்தைப்பிரதானமாக மதித்து... கணவனையும் குழந்தையையும் உதறிவிட்டு ஓடி விட்டாள்.

ஆனால் வைஷ்ணவி...? அவளது எளிய தோற்றமே அவளது ஏழ்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறதே?

ஏழ்மை... வறுமையில் வாடி வதங்கும் பெண்ணொருத்தி கட்டாயம் பணத்தைப் பிரதானமாக மதிப்பாள் என்று எடை போட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்?

'எந்தவொரு பிரதிபலனையும் நான் எதிர்ப்பார்க்கவில்லை' என்று நெற்றிப் பொட்டில் அறைந்தாற் போல் பேசி விட்டாளே?

'எத்தனை லட்சங்கள் கொட்டிக் கொடுத்தாலும்... அது என் கால் தூசுக்கு சமம்' என்ற நீதியில் தாடை இறுக மௌனமாக நிமிர்ந்து நடந்தாளே?

அவளது சுய மரியாதை... அவனை பிரமிக்க வைத்தது. நெகிழ வைத்தது.





அந்த அற்புதமான அதிசயமான பெண்ணின் உருவம்... அழுத்தம் திருத்தமாய் மனதில் பதிந்து போனது.

'பாவம்! அந்தப் பெண்ணின் மனதை நோகடித்து விட்டேனே?' அவளது கண்கள் கலங்கி விட்டனவே? செக்கை நீட்டியதும் ரோஷம் தாளாமல் அவளது மூக்கு நுனியும் காது மடல்களும், ஜிவு ஜிவுத்து விட்டனவே?

எங்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறாள். அவளது கண்களில் கண்ணீர் ஊற்றெடுக்கும் படி நடந்து கொண்டேனே?

மனசாட்சி... கண்ணில் விழுந்த மணலாய் உறுத்தியது.

'அவனையும் அறியாமல் அவள் பெயரை உச்சரித்தான்.'

'வைஷ்ணவி... அழகான பெயர். பெயர் மட்டுமா?' அவளும் அழகுதான்... மனதிற்கு இதம் தரும் அழகு... நிலவை நேரில் பார்த்தது போல்... உள்ளம் குளிர வைக்கும் அழகு அல்லவா?

கழுத்தில் கருக மணிப் பாசி... அரதப் பழசான காட்டன் புடவை... ஆபரணங்கள் ஏதுமின்றியும் அப்சரஸாக ஜொலிக்கின்றாளே?

'அப்பா கூறியது போல்... தேவதையே நேரில் வந்தது போல் இருக்கின்றதே?'

அவளது குரல் அவனது செவிகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. அவனது செவியில் பாகுக் கரைசலாய், வழிந்தது.

'என்ன தெளிவான பேச்சு?' இனிய குரல்...! பணத்திற்கு மயங்காத பவித்திரமான பெண்... அழகும், குணமும், பணிவும், பவ்யமும் ஒட்டுமொத்தமாக அவளிடம் குடி கொண்டிருக்கின்றன.

அவளைப் பற்றி நினைக்க நினைக்க... மயிலிறகால் சாமரம் வீசியதைப் போன்று... மனதிற்கு இதமாக இருந்தது.

மனதிற்குள் சன்னமாய் சிலுசிலுவென்று ஒரு நீரோடை ஓடியது.

நெஞ்சுக்குள் இனம் புரியாத சிலிர்ப்பு பொங்கியது நிஜம்.!

# 9

வைஷ்ணவி ரத்த தானம் செய்து விட்டு வந்தாலே... உடம்பில் அயர்ச்சியும் தளர்ச்சியும் ஏற்பட்டது போல் இருக்கும்.

சிறிது நேரம் படுத்து ஓய்வு எடுக்கலாமா? என்று அவளது கால்கள் தொய்ந்து கெஞ்சத் தொடங்கும்.

ஆனால் அவள் எதையும் சட்டை செய்ய மாட்டாள். தொடர்ந்து தனது காரியங்களை கவனிப்பாள். பற்களைக் கடித்துக் கொண்டு பலாத்காரமாக.... அலுவலக வேலையாகட்டும், வீட்டு வேலையாகவட்டும் செய்து முடித்து விட்டுத் தான்... ஆசுவாசப் படுத்திக் கொள்வாள்.

இன்று... அந்த சிறுவனுக்கு ரத்த தானம் செய்து விட்டு வந்த போது... அவளது உடம்பில் களைப்பு தலை தூக்கவே இல்லை.

மாறாக... மனதில் மகிழ்ச்சி நீரூற்று பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

இறக்கை கட்டிக் கொண்டு பறக்க வேண்டும் போல் மனம் சந்தோஷத்தில் ஆர்ப்பரித்தது.

ஸ்ரீதரின் முகம் அவளது மனக் கண்ணில் வந்து வந்து போனது. பிரபல தொழிலதிபர் ஸ்ரீதர்... ஆனால் அவனிடம் பணக்கார வாலிபர்களுக்கே உரிய அலட்சியமோ அகம்பாவமோ கர்வமோ, திமிரோ, அலட்டலோ... எதுவுமே தென்படவில்லை!

மாறாக கனிவும், கண்ணியமும், மரியாதையும் தானே அவன் விழிகளில் ததும்புகின்றன.

'தனது அண்ணன் மகனின் உயிரைக் காத்தவள் என்று மரியாதையுடன் பேசியவனின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் வெளிச்சம் பரவியிருந்ததே?'





அவளையும் அறியாமல்... அவளது இதயக் கதவுகள் திறந்து ஸ்ரீதரின் வசீகரமான உருவத்தை தன்னுள் புகுத்தி... சிறைப் படுத்திக் கொண்டிருந்தன.

அலுவலகத்திலும் சரி... வீட்டில் வேலைகள் நெட்டி முறித்த போதும் சரி... அவளுக்கு அலுப்பே தட்டவில்லை.

இதற்கு முன்பு அவளது மனம் சதா இரும்பு போல் கனத்துக் கொண்டிருக்கும்.

ஆனால் ஸ்ரீதரைக் கண்ட பிறகு... மனதிலிருந்த பாரம் இறங்கி இறகு போல் இலேசாகி இருந்தது.

மனதில் மகிழ்ச்சிப் பிரவாகமெடுத்தது‌ பொங்கியதால்... வேலைகளை மாயமாய் செய்து முடித்தாள்.

இரவில் அனைவரும் சப்பாத்தி தக்காளித் தொக்கைப் பறிமாறி முடித்து விட்டு... தட்டில் இரண்டு சப்பாத்திகளை வைத்துக் கொண்டு சாப்பிட அமர்ந்தாள்.

சப்பாத்தியை தக்காளித் தொக்கில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்டவளுக்கு... திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது.

வீ.ஆர். ஹாஸ்பிடலுக்கு நாளை ஃபோன் செய்து... அந்த சிறுவன் கண் விழித்து விட்டானா என்று விசாரிக்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

சேச்சே! என்னது இது? இதற்கு முன்பு பலதடவை நான் ரத்த தானம் அளித்திருக்கிறேன். ரத்தம் கொடுத்ததோடு என் கடமை முடிந்து விடும்.. அதை மறந்து விடுவேன். இந்த சிறுவனைப்பற்றி நான் விசாரித்தால்... ஸ்ரீதர் என்ன நினைத்துக் கொள்வார்?

அவர் கொடுத்த செக்கை நான் கை நீட்டி வாங்காமல்... வெடுக் என்று பேசி விட்டு வந்திருக்கிறேன்.

'எந்த விதப் பிரதி பலனையும் நான் எதிர்பார்க்கவில்லை சார்' என்று கூறி விட்டு... மீண்டும் நலம் விசாரித்தால் என்ன நினைப்பார்?

ஊகூம் இது தப்பு! அதிலும் அடிக்கடி நான் அவரைப் பற்றியே நினைத்துக்' கொண்டிருக்கிறேன்.

என்னையும் அறியாமல்... என் மனதில் அவருக்கு இடம் கொடுத்து விட்டேனோ?

நான் ஒரு அனாதைப் பெண். பெரியப்பாவின் வீட்டில் அகதியைப் போல் அண்டி வாழும் அபலைப் பெண்.

ஸ்ரீதர்... பிரபல தொழிலதிபர், கோடிஸ்வரர்! எனக்கும் அவருக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே?' என் தோற்றமே 'நான் ஒரு ஏழை' என்பதை அவருக்குக் காட்டி விட்டதே?

அதனால் தானே பரிதாபப்பட்டு செக்கை நீட்டினார்?

இந்த ஏழையை... அபலையை அவர் ஏற்றுக் கொள்வாரா? ஊகூம்! அவர் பெரிய கோடீஸ்வரர் என்று தெரிந்திருந்தும்... இந்தப் பேதை மனம்... அவரை விரும்பித் தொலைத்து விட்டதே?

இருக்கும் கவலை போதாதென்று... இதென்ன மனக் கஷ்டம்?

இந்த ஒரு தலைக் காதலால்... யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. இனி அவரை நினைப்பதே தவறு அல்லவா?

மனதில் ஜனித்த காதல்... கானல் நீர் தான்! மனதை இழுத்துக் கட்டுக்குள் அடக்கினாள்.

வாய்க்குள் திணித்துக் கொண்ட சப்பாத்தி... தொண்டைக்குள் இறங்க மறுத்துப் புரட்சி செய்தது.

வயிற்றுப் பசி அவளைக் கிள்ளியெடுத்தது. ஆனாலும் சாப்பிட மனமிருக்க வில்லை.

கைகளைக் கழுவிக் கொண்டு சட்டென்று எழுந்து கொண்டாள். ஸிங்கில் பாத்திரங்களைத் தேய்த்து அலம்பி அடுப்பு மேடையை நன்கு சுத்தப் படுத்தி விட்டு... பாயை விரித்துப் படுத்தாள்.

தண்ணீருக்குள் அமிழ்த்தப் படும் பந்து... குபீரென்று





எம்பி எழுந்து மேலே வருவது போல்... மீண்டும் ஸ்ரீதரின் ஞாபகம் எழுந்து அவளை ஆக்கரமித்தது.

'இது என்ன பைத்தியக்காரத்தனம்?' இன்று எனக்கு என்ன ஆகிவிட்டது?

என் மனம் ஏன் புத்தி கெட்டு அலைகிறது? இந்தக் காதல் கை கூடுவதற்கு எந்த சாத்தியமும் இல்லையென்று தெரிந்தும்... மீண்டும் மீண்டும் என் உள்ளம் ஸ்ரீதரையே நினைத்துக் கொண்டே வாழ்ந்து விட வேண்டியதுதான்!

என் காதல் ஆத்மார்த்தமானது. பவித்திரமானது. உன்னதமானது.

அதில் எந்த மாற்றமும் இல்லையே?

மடை திறந்த வெள்ளமாய் விழிகளிலிருந்து வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

விடி விளக்கின் மங்கிய வெளிச்சத்தில்... அந்த டைரியைப் புரட்டி மனதில் உள்ளதை எல்லாம் வார்த்தைகளாக எழுத்தில் வடித்தாள்.

அவளுக்கென்று பெற்றவர்களோ... உற்ற தோழிகளோ யாரும் இல்லை... மனதிலிருந்த ஆதங்கத்தை யாரிடமும் வெளிப்படையாக சொல்ல முடியாதே?

டைரி தான் அவளுக்கு வடிகாலாக இருந்தது.

"ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...ட்ரிங்..."

இராத்திரி நேரத்தில் டெலிபோன் சத்தம் அலறியதும்... சட்டென்று டைரியை மூடி தலையணைக்கு அடியில் வைத்தாள்.

இந்த நேரத்தில் யாராக இருக்கும்? ரிசீவரை எடுத்துப் பேசினால் அதற்கும் அர்ச்சனை கிடைக்கும்.

போர்வையை இழுத்துக் தலை வரை போர்த்திக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

"ஹலோ"

மரகதத்தின் குரலில் தூக்கம் கலக்கம் அப்பட்டமாய் தொனித்தது.

"யாரு? அழகு சுந்தரமா?"

பெயரைக் கேட்டதுமே பெரியம்மாவின் தூக்கக் கலக்கம் பஞ்சாய் பறந்து விட்டது.

"என்னப்பா இந்த நேரத்துல...? என்றவள்," கொஞ்சம் பொறு அழகு ! அவ தூங்கிட்டாளான்னு பார்த்துட்டு வந்துடறேன்" ரிசீவரை மேசையில் ஒருக்களித்து வைத்து விட்டு மெல்ல நடந்து வந்தாள்.

அந்த இரவின் நிசப்தத்திலும் மரகதத்தின் குரல் தெளிவாய் காதில் விழுந்தது.

வைஷ்ணவியின் இதயம் திக்திக் என்று அடித்துக் கொண்டது. உள்ளூர திகிலும் பய்முமம் ஊறின.

## 10

விடி விளக்கு மங்கலான மஞ்சளான ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது.

போர்வையைத் தலை வரை இழுத்துப் போத்திக் கொண்டு படுத்திருந்த வைஷ்ணவியின் மீது மரகத்தின் பார்வை படிந்தது.

சிறிது நேரம் நின்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த விட்டு... மெல்லத் திரும்பி நடந்து சென்றாள்.

வைஷ்ணவிக்கு ஒரு எச்சரிக்கை மணி ஓங்கி அடித்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டு மூச்சைத் திணறடித்தது.

அழகு சுந்தரத்துடன் இந்த இரவு நேரத்தில் அப்படியென்ன ரகசியப் பேச்சு பேசப் போகிறாள் மரகதம்?

அவன் எதற்கு இந்த நேரத்தில் பெரியம்மாவுக்கு ∴





போன் செய்ய வேண்டும்?

நான் தூங்கி விட்டேனா? இல்லையா? என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டு போகிறாளே பெரியம்மா?

பீடிகை பலமாக இருக்கிறதே? பெரியம்மா நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால்... எனக்குப் பெரிய வேட்டு வைக்க சதி நடக்கிறதோ?

அழகு சுந்தரம் யாருமில்லாத நேரத்தில் அன்று வீட்டிற்கு வந்து என்னிடம் வம்பு பேசினானே?

அன்று அவன் சொன்னதெல்லாம் உண்மையாக இருக்குமா? குடித்து விட்டு போதையில் ஏதோ உளறி விட்டான் என்றெல்லவா என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்?

பெரியம்மா அழகு சுந்தரத்துடன் சேர்ந்து கூட்டு சதி செய்யும் விவரம் எல்லாம்... பெரியப்பாவுக்கு தெரிந்திருக்குமா?

அழகு சுந்தரத்திற்கு என்னை இரண்டாம் தாரமாகக் கட்டி வைக்க பார்க்கிறாளே பெரியம்மா...?

குழந்தை இல்லை என்ற காரணத்தால் ... முதல் மனைவியை ஒதுக்கி விட்டு... எனக்குத் தாலி கட்டி விடத் துடிக்கிறானே இந்த பொறுக்கி ராஸ்கல்?

ஒரகத்தியின் மகள்... அனாதை... அபலை ! தட்டிக் கேட்க ஆளில்லை என்ற தைரியத்தில் என்னைப் பாழும் கிணற்றில் தள்ளிவிட துணிந்து விட்டாளே பெரியம்மா !

என் மனதில் ஸ்ரீதருக்கு இடம் கொடுத்த பின்பு... இனி நான் யாருக்கும் கழுத்தை நீட்ட முடியாது.

மனதில் ஒருவனை வைத்துக் கொண்டு... இன்னொருவனுடன் குடும்பம் நடத்த என்னால் முடியாதே?

இந்த இக்கட்டிலிருந்து எப்படியாவது தப்பித்து விட வேண்டுமே!

இந்த நேரத்தில் திருட்டுத்தனமாக அப்படி என்ன தான் பேசிக் கொள்ளப் போகிறார்கள்?

வைஷ்ணவி போர்வையை கழுத்து வரை இறக்கினாள்.

காதை நன்கு தீட்டிக் கொண்டாள்.

"என்ன அழகு?... உம் ! சரி... நீ கவலையே படாதே... அவளை கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு... ! என்னது?... அவ கண்டிப்பா உனக்குத்தான்... எப்படின்னு கேட்கறியா?"

வனியோட வாழ்க்கையை தட்டிப் பறிக்கப் பார்த்தா... நாங்க ரொம்ப வேதனைப் பட்டோம் இல்லியா?... அந்த குற்ற உணர்வு அவளுக்கு ரொம்பவே இருக்கு!

பெத்த மகள் மாதிரி கண்ணுக்குள்ள வச்சு நான் அவளை வளர்த்திருக்கேன்... என் வார்த்தையை அவ மீற முடியாது. ஏன்னா... அவ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... நீ என் பொண்ணுங்க கரையேறுவதற்கு உதவுகிறேன்னு சொல்லிட்டே?

வரதட்சணைப் பணம், சீர் செனத்தி கல்யாணச் செலவுன்னு அத்தனையையும் தந்து இந்த அத்தைப் பொண்ணுங்களை் கரையேத்தி விடறேன்னு வாக்கு தந்திருக்கே.

அந்த அனாதை கழுதையை கஷ்டப்பட்டு வளர்த்து படிக்க வைச்சு ஆளாக்கி இருக்கேன்... அதுக்குப் பிரதி உபகாரமா... வனிதா அனிதாவோட வளமான வாழ்க்கைக்காக... அவ உன்னைக் கல்யாணம் செய்துகிட்டே ஆகணும்னு சொல்லிடப் போறேன்.

அவளுக்கு நன்றி உணர்ச்சி நிறையவே உண்டு ! இல்ல... அவ சம்மதிச்சுடுவாள்...

லட்சம் லட்சமா சம்பாதிச்சு வச்சிருக்கே... உன்னைக் கட்டிக்கிட்டா மகாராணி மாதிரி அமோகமா வாழலாமே?... இந்த அனாதைக்கு இப்படியொரு வாழ்க்கை கிடைக்குமா?

உம்! சரி... சரி! பேசிடறேன். அழகு ! நீ எனக்கு அண்ணன் பையன் தான்... நான் உனக்கு அத்தை தான்... மறுக்கலை. தாயும் பிள்ளையுமா இருந்தாலும்... வாயும் வயிறும் வேற வேற இல்லையா?

காரியம் ஆனதும் நீ குடுத்த வாக்கை காப்பாத்தத்





தவறிட்டா... நான் என்ன பண்றது? இல்லையில்ல... இது கலி காலம் அழகு! நான் யாரையும் நம்பத் தயாரா இல்ல...

எனக்கு ஒரு சே.்.ப்டி வேணாமா? நான் சொல்றதைக் கேளு... வனிதாவையும் அனிதாவையும் கரையேத்தியே தீரணும் இல்லையா?

அவங்க கல்யாணத்தப்போ... நீ தரேன்னு சொன்னதை முன் கூட்டியே தந்துட்டா எனக்கு நிம்மதியா இருக்கும் இல்லியா?... சரி! நீ ரொக்கத்தை என் கையில குடுத்ததும் அடுத்த நிமிஷமே அவ கிட்ட சொல்லிடுவேன்.

அதுக்கு அப்புறம் அவளுக்கு யோசிக்கக் கூட டைம் தரக் கூடாது. தடபுடலா கல்யாணத்தை நடத்திடணும்... சேச்சே! அப்படியெல்லாம் போயிட மாட்டா...

நீ கந்து வட்டிக்கு விடறவன். உன் கைவசம்... ஒரு ஆட்படையே ,இருக்கு. அதையெல்லாம் தாண்டி அவ ஓடிட முடியுமா?

நீ எனக்கு பணத்தை கொடுத்த மறுநாளே... அவ உனக்கு மனைவி ஆயிடுவா... போதுமா? சரி.. அந்த மலடியை என்ன பண்ணப் போறே?... இத்தன நாளா அவளை அடிச்சு துரத்தாம அழகு பாத்துட்டிருந்தியா..?

அவ அம்மா வீட்டுலே கொண்டு போய் விட்டுட்டு வரப் போறியா சரி... உன் இஷ்டம் ! அப்போ... விழுப்புரத்துக்குப் போயிட்டு உடனே திரும்பிடுவியா அழகு?...

"சரி! நாளைக்கு இராத்திரி ஏழரைக்கு உன் வீட்டுக்கு வரவா? இல்ல... இங்க வர வேணாம். நானே வந்து வாங்கிக்கறேன். ஒரு பிரச்சினையும் வராது. எல்லாம் சுமுகமா முடிஞ்சிடும்... உம்! வச்சிடு"

ரிசீவரை டொக்கென்று வைக்கும் சத்தம் கூட மிகத் தெளிவாகக் கேட்டது.

சே! இவளும் பெண் தானே? இரண்டு பெண்களைப் பெற்ற தாய்தானே? கொஞ்சம் இரக்கம் இல்லாமல்...

அழகு சுந்தரத்தின் மனைவியைஅடித்துக் துரத்தி விடச்

சொல்கின்றானே? மலடி என்று பட்டம் கொடுத்தாகி விட்டது.

வனிதா, அனிதாவை கரையேற்றுவதற்குரிய கணிசமான தொகையை அழகு சுந்தரம் தரப் போகின்றான் போலும்!

தட்டிக் கேட்பதற்கு... அதனால் "என்னை அவனுக்கு இரண்டாம் தாரமாக கட்டி வைக்கப் பார்க்கிறாள்."

அழகு சுந்தரத்தைக் கட்டிக் கொண்டால் மகாராணி மாதிரி அமோகமாக வாழலாம் என்கிறாளே பெரியம்மா?

வனிதாவையோ அனிதாவையோ அவனுக்கு கட்டி வைக்க வேண்டியதுதானே?

பெரியப்பாவுக்கு இந்த விவரம் அனேகமாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அதனால் தான் அழகு சுந்தரத்தை இங்கு வர வேண்டாம் என்கிறாள்.

அப்படியே இந்தத் திட்டம் பெரியப்பாவுக்கு தெரிந்தாலும்... அவரால் என்ன செய்து விட முடியும்?

இரு மகள்களின் வருங்கால வாழ்வுக்காக... அவரும் வாய் மூடி மௌனமாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லைதான்.

என்ன செய்யப் போகின்றேன் நான்?

கேள்விக் குறி பூதாகாரமாக கண் முன்னே வளர்ந்து அவளை மிரட்டியது.

ஒரு வழியும் புலப்படாமல் மனதை சூனியம் கவ்விக் கொண்டு இருந்தது.

---

## 11

---

தூக்கம் வராமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தான் ஸ்ரீதர்.

பாவம் வைஷ்ணவி! வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்து





ரத்த தானம் அளித்து சந்தீப்பின் உயிரைக் காப்பாற்றினாள்.

அவளது மனித நேயத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் மதிப்பு அளிக்காமல்... செக்கைக் கொடுத்து அவளது ஏழ்மையை சுட்டிக் காட்டி விட்டேனே?

அவள் என்னை என்னவென்று நினைப்பாள்?

ஸ்ரீதரின் மனசாட்சி ரம்பமாய் அறுத்துக் கொண்டிருந்தது.

'சே! என்ன மனிதன் நான்? அவள் பெயர் மட்டும் தானே எனக்குத் தெரியும்?

அவள் யார்? எங்கு வேலை செய்கிறாள்? அவளது குடும்பப் பின்னணி என்று எதையும் தெரிந்து கொள்ளாமல்... விட்டு விட்டேனே?

அவளது முகவரியையோ அல்லது வேலை பார்க்கும் நிறுவனத்தின் பெயரையோ அறிந்து கொள்ளாதது எவ்வளவு முட்டாள் தனம்?

பார்த்த முதல் நாளிலிலேயே என் மனதைத் திருடிச் சென்ற தேவதை அவள் !

எத்தனையோ அழகிகளை நேரில் சந்தித்திருக்கிறேனே! யாரையும் கிட்டவே நெருங்க விட்டதில்லையே?

இந்த அன்பு தேவதையை..... கருணை மனம் கொண்டவளை .... மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டுமா?

அவளை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டால்........ அவளிடம் மனப் பூர்வமாக மன்னிப்பு கேட்க வேண்டும்.

என்னை அவள் மன்னிப்பாளா?

என் மனதில் அவளுக்கு இடமளித்து விட்டேன் என்று கூறினால்... என்னை ஏற்றுக் கொள்வாளா?

அதெப்படி என்னை அவள் ஏற்றுக் கொள்வாள்?

முதல் சந்திப்பிலேயே... மனக் கசப்பை ஏற்படுத்தி விட்டேனே? அவள் மனதை புண் படுத்தி விட்டேன்.

சரி! நடந்தது நடந்து விட்டது. காலத்திற்கு எந்த

புண்ணையும் ஆற்றும் சக்தி உண்டு என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

அவள் கருணை உள்ளம் கொண்டவள். மனமிரங்கி மன்னித்து விடுவாள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

அவளே என் மனைவியானால்... எவ்வளவு நன்றாக இருக்கும்? இது சாத்தியபடுமா?

அந்தளவுக்கு நான் அதிர்ஷ்டசாலியா?

கடவுளே! இப்படியொரு தேவதையை அனுப்பி சந்தீப்பை மீட்டுக் கொடுத்திருக்கே... மீண்டும் அவளை சந்திக்கும் பாக்கியத்தைக் கொடு.

வைஷ்ணவியே இந்த வீட்டிற்கு மருமகளாக அடி எடுத்து வைத்தால் பாலைவனமாக வறண்டிருக்கும் எங்கள் வாழ்க்கை.... கண்டிப்பாக சோலைவனமாக மாறும்.

லட்சோப லட்ச அன்பு மலர்கள் பூத்துக் குலுங்கி மணம் பரப்பும்.

சந்தீப்புக்காக.... எனக்காக.... அப்பாவுக்காக..... இந்தக் குடும்பத்திற்காக இந்தப் பிரார்த்தனை பலித்துவிட வேண்டுமே?

என் வேண்டுதலை நிறைவேற்றி வைப்பாயா பகவானே! மனமுருகி வேண்டிக் கொண்டான் ஸ்ரீதர்.

சந்தீப்பை ஐ.ஸி.யூ-விலிருந்து அறைக்கு மாற்றி விட்டிருந்தார்கள்.

"அப்பா! நீங்க வீட்டுக்குப் போங்க...பி.பி. மாத்திரை போட்டுக்கிட்டுப் படுங்க... பாவம்! ரொம்ப டென்ஷனாயிட்டீங்களே?"

நான் பார்த்துக்கிறேன். நீங்க போயிட்டு காலையில வாங்கப்பா என்று வற்புறுத்தியபோது கவலை கப்பிய முகத்தோடு ஏறிட்டார் சிவானந்தம்.

"எவ்ளோ பெரிய உதவி பண்ணியிருக்கா அந்த வைஷ்ணவி? அவளோட அட்ரஸ் தெரிஞ்சாலாவது... வீட்டுக்குப்





போயி நன்றி தெரிவிச்சுட்டு வரலாம்."

"ரத்ததானம் செய்துட்டு வந்தவுடனே... நாம்ப நன்றி தெரிவிச்சோம். இல்லேங்கல... ஆனா எனக்கு என்னமோ திருப்தியா படலை. அதான்"

அதற்குப் பின்பு அவர் கிளம்பி விட்டிருந்தார்.

"சார்! மருந்து ஊசிகளின் மயக்கத்துல குழந்தை அசந்து தூங்குகிறான்... இன்னமும் மூனு மணி நேரத்துக்கு எழுந்திருக்கவே மாட்டான்.... நாங்க அவனை கவனிச்சுப்போம். நீங்க வேணாப் படுத்து ரெஸ்ட் எடுங்க" என்று ஸ்டா.'.ப் நர்ஸ் வற்புறுத்தியதால் அரைமனதுடன் படுக்கையில் சாய்ந்தான் ஸ்ரீதர்.

ஆனால் தூக்கம் வருவதற்கு பதிலாக... வைஷ்ணவியைப் பற்றிய நினைப்புதான் அவனைச் சுற்றி சுற்றி வந்து வதைத்தது.

'இதென்ன மாயம்!' நேற்று வரை அவள் யாரோ.... நான் யாரோ....

ஆனால் அவளை சந்தித்த மறு கணத்திலிருந்தே.... அவள் என் உணர்வுகளோடு உள்ளத்தோ ஒன்றி இரண்டறக் கலந்து விட்டாளே?

பெற்றவர்களை இழந்தவள் நான்' என்றாளே? பாவம்! அப்படியென்றால்.... இவள் யாருடைய பராமரிப்பில் இருக்கிறாள்?

'ஒரு வேளை விடுதியில் தங்கி வேலை பார்க்கும் பெண்ணோ? பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனிலிருந்து ∴ போன் வந்ததும்... லீவு போட்டு விட்டு ஓடி வந்தேன் என்றாளே?'

அட.... பிளட் டோனர்ஸ் அசோஸியேஷனிலிருந்து ∴ போன் செய்து விசாரித்தால்... இவளது முகவரி கிடைத்து விடுமே?

ஸ்ரீதருக்கு பொறி தட்டியதும்.... படக்கென்று எழுந்து அமர்ந்தான். நெஞ்சுக்குள் ஐஸ் க்ரீம் மழை ஜிலு ஜிலுவென்று வழிந்தோடியது.

# 12

கிணற்றிலிருந்து நீரை இறைத்து தோட்டத்துச் செடிகளுக்கும் மரங்களுக்கும் தண்ணீர் ஊற்றி விட்டு அலுப்புடன் உள்ளே வந்த வைஷ்ணவியின் அருகே வந்தாள் மரகதம்.

"என்ன வைஷு? செடிகளுக்கு தண்ணி உத்திட்டு வந்தியா? பாவம்... களைச்சுப் போயிட்டியே? இனிமே நீ தண்ணி இறைக்க வேணாம்... மோட்டார் தண்ணியை விட்டாப் போச்சு!"

"வர வர மெலிஞ்சிட்டே போறியே? நல்லா சாப்பிட வேணாமா வயசுப் பொண்ணு?" அவளது முகத்தில் அரும்பி இருந்த வியர்வை முத்துக்களை பாசத்துடன் துடைத்து விட்டாள் மரகதம்.

வைஷ்ணவியின் அகன்ற விழிகள் திகிலுடன் மேலும் விரிந்தன.

"அனிதாவோட தோழிக்கு இன்னிக்கு பிறந்தநாளாம்... அனிதாவும் வனிதாவும் கிளம்பறாங்க... அப்படியே சாப்பிட்டு வந்திடுவாங்க நான் எங்க அண்ணன் வீட்டுக்கு போறேன்."

நானும் சாப்பிட்டுட்டு வந்திடுவேன். நான் வரதுக்கு கொஞ்சம் லேட் ஆகும். பெரியப்பாவுக்கும் உனக்கும் டிபன் செய்துகிட்டா போறும். சரியா வைஷீ?

"ச... சரிங்க பெரியம்மா"

தோட்டத்தில் பந்தலில் படர்ந்திருந்த மல்லிகைக் கொடியில் இருந்து மொட்டுகளை ஏற்கனவே பறித்து வைத்திருந்தாள் வைஷ்ணவி.

கூடத்து தூணோரம் சாய்ந்து அமர்ந்து பூ தொடுக்க ஆரம்பித்தாள்.

ஜோடி மொட்டுக்களை எடுத்து நாரை லாவகமாக





விரல்கள் சுழற்றின.

புன்னகை பூத்த முகத்துடன் கண்ணிமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெல்ல நடந்து சென்றாள் மரகதம்.

அனிதாவும் வனிதாவும் பலத்த மேக்கப்புடன் பளபளக்கும் சேலை அணிந்து கொண்டு வெளியேறிவிட்டிருந்தனர்.

பூச்சரத்தை சாமி மாடத்தில் இருந்த அம்மன் படத்திற்கு சாற்றிவிட்டு கண்மூடி தியானித்தால் வைஷ்ணவி.

அழகு சுந்தரத்தின் வீட்டிற்கு பெரியம்மா கிளம்பிவிட்டாள் என்பது புரிந்தது.

ரகசியமாய் காயை கச்சிதமாக நகர்த்துவதில் அவள் கில்லாடியாக இருக்கிறாளே?

அழகு சுந்தரம் தனக்கென்று ஒரு ஆட்படையே வைத்திருக்கிறான். இந்த இக்கட்டில் இருந்து எப்படியாவது என்னை காப்பாற்று தாயே. முதுகு குலுங்க மௌனமாக கண்ணீர் உகுத்தவளின் தோளின் மீது ஒரு கரம் படிந்தது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள் வைஷ்ணவி.

பீதி படர்ந்த முகத்துடன் பெரியப்பா சண்முகம் நின்று கொண்டிருந்தார்.

"வைஷ்ணவி வாசற்கதவை தாழ்பாள் போட்டுட்டு வா... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்"

அவர் சொன்னபடியே செய்தாள்.

"உன்கிட்ட எப்படி சொல்றதுன்னு தெரியலைம்மா... ஆனா சொல்லியே ஆகணும். உன் பெரியம்மா குணம் கெட்டவதான். ஆனா இந்தளவுக்கு பேராசைக்காரியா இருப்பான்னு நான் நெனச்சுகூட பாக்கலைம்மா...

நேத்து இராத்திரி... அவ அழகு சுந்தரத்தோட பேசிட்டு இருந்ததை தற்செயலாய் கேட்டுட்டேன். எனக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டுச்சு... அழகு சுந்தரத்துக்கிட்டே பணம்

வாங்கறத்துக்குதான் இப்போ அவ கிளம்பி போயிருக்கா...

"அந்த பணத்தை அழகு எதுக்கு தர்றான்னு தெரியுமாம்மா?" மேற்கொண்டு விஷயத்தை சொல்வதற்குள் அவர் திணறிப் போனார்.

வார்த்தைகள் அகப்படாமல் கண்ணாமூச்சு ஆட்டம் ஆடின. மனைவி மரகத்தின் அடாத் செயல் அவருக்கு பெருத்த தலை குனிவை ஏற்படுத்தி விட்டிருந்தது.

"பெரியப்பா நானும் நேத்து நைட்டுல... அவங்க பேசுறத கேட்டுட்டேன். எ... எனக்கும் எல்லா விஷயமும் தெரிஞ்சு போச்சு"

துக்கம் பந்தாய் எழும்பி அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது.

"எவ்வளோ பெரிய ஆபத்து காத்திருக்கு?... நீ பாட்டுக்கு அசால்ட்டா இருக்கியே வைவஷீ?"

உன் பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும்... கடவுள் ஒரு குறையும் வைக்கமாட்டாரும்மா... ஆனா இனிமேலேயும் பொறுமையா இங்க இருந்தேன்னா... தலைக்கு மேலே வெள்ளம் போயிடும்.

கிளம்பு உன் பெரியம்மாவுக்கு தெரியாம... என் சிநேகிதனை தொடர்பு கொண்டு பேசி... ஆலோசனை கேட்டேன். அடையாறுல ஒரு நல்ல பெண்கள் விடுதி இருக்காம். இதோ அந்த முகவரியை குறிச்சு வைச்சிருக்கேன்... பாரு" ஒரு துண்டு காகிதத்தை நீட்டினார்.

என் நண்பன் வீட்டுலேயோ... நம்ம தூரத்து உறவுக்காரங்க வீட்டுலேயோ உன்னை தங்க வைக்கலாம். உங்க பெரியம்மா லேசுபட்டவள் இல்ல... அழகு சுந்தரத்தை பத்தி கேட்கவே வேணாம்.

சல்லடை போட்டு உன்னை தேடுவாங்க... அதான் கொஞ்ச காலத்துக்கு ஹாஸ்டல்லே தங்கிக்கோ... நீ வேலை பார்க்கிற ஆபீசுக்கு இரண்டு வாரம் லீவு சொல்லிட்டு... வெளியே தலைகாட்டாம இரு... அமளிதுமளி அடங்கினத்துக்கு அப்புறமா...





நிதானமா யோசிச்சு நாம ஒரு முடிவுக்கு வரலாம். முகவரிக்கு அடியில என் நண்பனோட செல் நெம்பர் இருக்கு...

கடவுள் நம்மை கைவிடவே மாட்டாரும்மா... அழாதேம்மா... கண்ணை தொடச்சுக்கோ... முக்கியமானதை எடுத்துக்கிட்டு வா... உன்னை பஸ் ஏத்தி அங்க சேர்த்து விட்டுட்டு நானும் திரும்பனும். பெரியம்மாவுக்கு எந்த சந்தேகமும் வந்துடக் கூடாது. சீக்கிரம்" துரிதப் படுத்தினார்.

சிறு பையில் மூன்று புடவைகள், ரவிக்கைகள் இத்யாதி... ஹேண்ட் பேக்கில் டைரியும், கந்தர் சஷ்டி கவசமும், அம்மன் ஸ்தோத்திர புத்தகமும் இடம் பெற்றிருந்தன.

"உம் ரொம்ப நல்லதும்மா... நிறைய லக்கேஜ் இருந்தா... கண்டிப்பா இப்பவே பிடிபட்டுருவோம். அந்த பையை என்கிட்டே குடும்மா... உங்க அப்பாவையும், அம்மாவையும் மானசீகமாக வணங்கிட்டு கிளம்பு வைஷீ... இந்தா இதுல மூவாயிரத்து ஐநூறு ரூபாய் இருக்கு... வச்சுக்கோ"

தைரியமா இருக்கனும். நல்லதே நடக்கும்னு நம்பும்மா...

'சரியாம்மா?'

தம்பி மகளை பார்க்கும் போதே அவரது அடிவயிறு பிசைந்தது. இரத்த பாசத்தில் உடம்பு தந்தி அடித்தது. உள்ளம் பதறியது.

'நம்மை நம்பி வாழ வந்த பொண்ணு அதுவும் அழகான இளம் பெண். தம்பி மகளை தனியாக நிர்க்கதியாக வீட்டை விட்டு அனுப்பி வைக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டதே?'

நினைத்துப் பார்க்கும் போதே... உள்ளுக்குள் உலை கொதித்தது. "வாங்க பெரியப்பா... நேரமாகுது"
தணலில் நின்று கொண்டிருப்பதை போன்று தவித்துக் கொண்டிருந்தாள் வைஷ்ணவி.

"முன் வாசல் பக்கமா போனா... மரகத்தோட சினேகிதி கண்ணுல பட்டுருவோமே? வா... தோட்டத்தைத் தாண்டி திட்டி வாசக்கதவை திறந்து பின்னாடி சந்து வழியாய் போயிடலாம்... வைஷீ"

கிணற்று மேடையைத் தாண்டி தோட்டத்திற்குள் புகுந்து நடந்த போது பெரியப்பாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"பார்த்து... பெரியப்பா.. ஜாக்கிரதை"

'லொக் - லொக்' என்று இரும்பிக் கொண்டே தளர்ந்த நடையுடன் வந்தவரை பார்க்கவே பாவமாக இருந்தது.

பின் பக்கத்து சந்து வழியாக நடந்து மெயின் ரோட்டை அடைவதற்குள் இருவரும் வியர்த்து வழிந்தார்கள்.

பஸ் ஸ்டாப்பில் நின்றபோது கிலியுடன் திரும்பி திரும்பிப் பார்த்தார் சண்முகம்.

பதற்றமும் பயமும் வைஷ்ணவியை பந்தாடின.

"பெ... பெரியப்பா அதோ... பஸ் வருது நீங்க போங்க... நான் போயிக்கிறேன்... பாவம் இருமி இருமி உங்க தொண்டையே புண்ணா இருக்கும்... நேரத்துக்கு மாத்திரை சாப்பிடுங்க பெரியப்பா" படபடத்தாள்.

"இந்த இக்கட்டான நிலையிலும் என் மீது எவ்வளவு அக்கறை... பாசம்! ஹாஸ்டல் வாசல்லே என் நண்பன் குருமூர்த்தி இருப்பான்... அட்ரஸ் பத்திரம்.! ஜாக்கிரதையா இரும்மா" தழுதழுத்தார் சண்முகம்.

"சரி பெரியப்பா... வரேன்" சட்டென்று பஸ்சில் தன்னை திணித்துக் கொண்டாள் வைஷ்ணவி.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து கையை அசைத்தாள். "நான் குருமூர்த்திக்கு ஃபோன் செஞ்சு நீ தனியா வர்ற விவரத்தை சொல்லிடறேன்." வயிற்றை எக்கி குரல் கொடுத்தார்.

நீர் திரையிட்ட விழிகளோடு தலையாட்டி விடைபெற்றாள். அழுகை முட்டிக் கொண்டு வந்தது. கண்களைச் சிமிட்டி பொங்கிய கண்ணீரை சிரமப்பட்டு உள்ளிழுத்துக் கொண்டாள் வைஷ்ணவி.

'பெற்றவர்களை இழந்த அனாதை நான். இதனால்





வரை பெரியப்பாவின் நிழலில் சகல சித்ரவதைகளையும் பொறுத்துக் கொண்டு அடைக்கலமாய் அண்டி வாழ்ந்தேன்.'

'இப்போது அங்கும் ஒரு ஆபத்து வந்து விட்டது. இந்த பரந்த உலகில் எனக்கென்று ஆதரவு கரம் நீட்ட யாருமே இல்லையே? என் நிலைமை எந்த இளம் பெண்ணிற்கும் ஏற்படவே கூடாது.'

இன்னும் சிறிது நேரத்தில் அவளது வாழ்க்கைத் தடமே முற்றிலும் மாறிவிடப் போகின்றது என்பதை... அவள் எவ்விதம் அறிவாள்.?

---

# 13

---

அடையாறு பேருந்திலிருந்து மெல்ல உதிர்ந்தாள் வைஷ்ணவி.

பேருந்தில் தன்னுடன் சேர்ந்து பயணித்த அந்த நடுத்தர வயது பெண்மணியிடம்... துண்டு காகிதத்தில் இருந்த முகவரியை காட்டி விசாரித்து வைத்திருந்தாள்.

ஆட்டோவில் ஏறினால் சுலபமாக சென்றுவிடலாம்தான்! ஆனால்... இரவு நேரத்தில் அதுவும் அழகான இளம் பெண்ணாக இருப்பவள்.... தன்னந்தனியாக ஆட்டோவில் பயணிக்க மிகவும் பயமாக இருந்தது.

ஆட்டோக்காரன் மோசமானவனாக இருந்து விட்டால்... பெரிய விபத்தாயிற்றே?

பலவும் எண்ணியபடி ஓட்டமும் நடையுமாக நடக்க ஆரம்பித்தாள்.

மெயின் ரோட்டில் இருந்து பிரிந்து சென்ற நீண்ட தெருவில் இறங்கி நடந்து அந்த வளைவில் திரும்பினாள்.

படு வேகமாக வந்து கொண்டிருந்த காரைக் கண்டு அதிர்ந்து பதறினாள்.

பதற்றத்தில் அவளது உடம்பு கிடுகிடுவென்று நடுங்கியது. அதிர்ச்சியிலும் பயத்திலும் கண்கள் சொருக மயக்கத்திற்குள் மூழ்கினாள்.

கவலையும் திகிலும் அவளை ஆட்டிப் படைத்ததால்... அன்று முழுவதுமே அவள் சாப்பிடவே இல்லை.

பச்சைத் தண்ணீர் பல்லில் படாததாலும்... திமர் அதிர்ச்சியாலும் மயக்கமடைந்து சரிந்து விழுந்தாள்.

நல்ல வேளையாக... கண்ணிமைக்கும் நேரத்தில் பிரேக் போட்டு காரை நிறுத்தினான் ஸ்ரீதர்.

சிவானந்தம் தனது குடும்ப மருத்துவரை வற்புறுத்தி... அன்று காலையில் சந்திப்பை வீட்டிற்கே கொண்டுவர ஏற்பாடு செய்துவிட்டிருந்தார்.

ஸ்பெஷலிஸ்டுகள் வீட்டிற்கே வந்து சிகிச்சை அளித்தனர். குழந்தையை அருகில் இருந்து கவனிப்பதற்கு திறமை வாய்ந்த நர்சுகள் நியமிக்கப்பட்டனர்.

குடும்ப மருத்துவர் குழந்தைக்கு ஊசி போட்டு மாத்திரை கொடுத்து முடித்ததும்.... அவரை தனதில் காரில் ஏற்றிக் கொண்டு அவரது வீட்டில் இறக்கி விட கிளம்பியிருந்தான் ஸ்ரீதர்.

அந்த வளைவில் திரும்பி வந்த இளம் பெண்ணை பார்த்ததுமே திடுக்கிட்டான்.

'இவள்.... இவள்.... வைஷ்ணவிதானே? இல்லை... சதா நான் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால்... இந்த பெண்ணின் முகம் வைஷ்ணவியை போல் தோற்றம் அளிக்கிறதா?'

கணப்பொழுதில் இந்த எண்ணம் தோன்றி மறைந்தது. சமயோசிதமாக 'சர்ரக்' என்று பிரேக் போட்டு காரை நிறுத்தினான்.

மயிரிழையில் வைஷ்ணவி தப்பி விட்டாள் என்று தெரிந்ததும் நிம்மதி பெருமூச்சு விட்டான் ஸ்ரீதர்.



"பயப்படத் தேவையில்ல ஸ்ரீதர்... இந்த பொண்ணு எதிர்பாராத அதிர்ச்சியிலதான் மயங்கியிருக்கா" குடும்ப மருத்தவரின் வார்த்தைகள்... கனன்ற மனதிற்கு பாலை வார்த்தன.

"டாக்டர் அவளை நம்ம வீட்டுக்கே கொண்டு போயிடலாம். வாங்க அவளை குழந்தையை வாரித் தூக்குவது போல் அள்ளி பின் சீட்டில் கிடத்தினான்."

அவனது பங்களாவை நோக்கி... அந்த கார் சீற்றத்துடன் விரைந்தது!

அரைமணி நேரம் நழுவியிருந்தது.

சிரமப்பட்டு விழிகளை திறந்தாள் வைஷ்ணவி. பாறாங்கல்லாய் இமைகள் இன்னமும் கனத்தன.

'என்னாயிற்று எனக்கு? எங்கிருக்கிறேன் நான்?'

சுற்றிலும் பார்வையாலே வலம் வந்தாள்.

கவலை படிந்த முகங்களுடன் தெரிந்த சிவானந்தமும் ஸ்ரீதரும்... அவளது பார்வைக்குச் சிக்கினார்கள்.

'ஸ்ரீதரா?' நான் அவரது வீட்டிலா இருக்கிறேன்? இங்கு எப்படி வந்தேன்?

ஹாஸ்டலுக்குப் போகும் வழியில் மயங்கி விழுந்து விட்டேன் போலும்! ஐயோ! பெரியப்பாவின் நண்பர் எனக்காக அங்கே காத்திருப்பாரே?

கவலை மனதில் முளை விட... சட்டென்று எழுந்து கொள்ள எத்தனித்தாள். துவண்டு மீண்டும் படுக்கையில் சரிந்தாள்.

பட்டினி கிடந்த உடம்பு... அசதி... பலகீனம்... எல்லாம் சேர்ந்து அவளைச் சோர்வடைய வைத்தன.

"மிஸ்.வைஷ்ணவி! உடம்பை அலட்டிக்காதீங்க... நீங்க முதல்லே சாப்பிடுங்க... நல்லா ரெஸ்ட் எடுங்க... பதட்டப்படாம மனசை ரிலாக்ஸ்டா வச்சுக்கிங்க"

"ஓகே. டாக்டர்" பலத்தை திரட்டி எழுந்து அமர்ந்தாள்.

டாக்டர் அறையை விட்டு வெளியேறியதும் அவரைத் தொடர்ந்து சிவானந்தமும் அவளைக் கனிவுடன் பார்த்து விட்டு இங்கிதமாக வெளியேறி விட்டார்.

ஆவி பறக்கும் இட்லிகளைத் தட்டில் ஏந்தியபடி அந்த வேலைக்காரி உள்ளே நுழைந்தாள்.

"வைஷீ ! முதல்ல சாப்பிடுங்க... சாப்பிட்டு முடிச்சதும் நாம்ப பேசலாம்" சூடான இட்லியைப் பிய்த்து வெங்காய சாம்பாரில் தோய்த்து வாய்க்குள் திணித்துக் கொண்ட போது... உண்மையிலேயே மனதிலிருந்த பாரம் இறங்கியிருந்தது. உரிமையாய் ஸ்ரீதர் அவளை 'வைஷீ' என்றழைத்தது இதமாயிருந்தது.

உள்ளம் கவர்ந்த காதலனின் பங்களாவில் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்ற நிம்மதி நிலவியது நிஜம்!

"ஆனால் இந்த நிம்மதி நீடிக்காதே? அவர் என்னிடம் என்ன பேசப் போகின்றார்? ஹாஸ்டலில், சேர்ந்து விடும்படி... அவரிடமே உதவி கேட்டுவிட வேண்டியது தான்!"

சாப்பிட்டு முடித்ததும்... புத்துணர்வும் தெம்பும் கைவரப் பெற்றவளாய் நிமிர்ந்தாள். சாப்பிட்ட தட்டையும் டம்ளரையும் எடுத்துக் கொண்டு வேலைக்காரி நகர்ந்ததும்... சொல்லி வைத்தாற் போல் உள்ளே நுழைந்தான் ஸ்ரீதர்.

சட்டென்று எழுந்து நின்றாள் வைஷ்ணவி.

"குழந்தை நல்லாயிருக்கானா? அவன் உடம்புக்கு இப்போ தேவலையா?" நலம் விசாரித்தாள்.

"உங்க புண்ணியத்துல ரொம்பவே நல்லாயிருக்கான். உட்காருங்க"

"இ.. இல்ல... நான் அவனைப் பார்க்கனுமே! இன்னமும் ஹாஸ்பிடல்லே தான் இருக்கானா?"

அவளது கரிசனமும் அக்கறையும் அவனைப் புல்லரிக்க வைத்தன.





"வீட்டுக்கே கூட்டிட்டு வந்துட்டோம். ஸ்பெஷலிட்ஸ், ஃபேமிலி டாக்டர், நர்சுங்க எல்லாரும் நல்லபடியா கவனிச்சுட்டு வர்றாங்க. வாங்க... அவனைப் பாருங்க" அவனை பின் தொடர்ந்தாள் வைஷ்ணவி.

அந்த பிரம்மாண்டமான அறையில் நிம்மதியாய் நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தான் சந்தீப். அவர்கள் உள்ளே நுழைந்ததுமே... இரண்டு நர்சுகளும் நாசூக்காய் வெளியேறினார்கள்.

பால் வடியும் பிஞ்சு முகத்தைப் பார்த்ததுமே... உள்ளுர

நெகிழ்ந்து போனாள் வைஷ்ணவி.

"இவனோட அம்மாவை எங்கே காணோம்? அன்னிக்குக் கூட அவங்களை நான் பார்க்கலையே?" மெல்லிய குரலில் கேட்டபடியே மிருதுவாக சந்தீப்பின் பாதத்தை வருடினாள்.

"வாங்க.. அந்த ரூமுக்கே போயிடலாம்" அவனது முகம் திடீரென்று வாடி விட்டது. குழப்பம் பூசிய முகத்தோடு அவனை மீண்டும் பின் தொடர்ந்தாள்.

---

## 14

---

அந்த அறையில் ... விஸ்வத்தின் ஆளுயர ஃபோட்டோவின் மீது சந்தன மாலை சாற்றப் பட்டிருந்தது.

"இவர் தான் எங்கண்ணா விஸ்வம்... என்று ஆரம்பித்து வத்சலா ஒன்றரை வயதுக் குழந்தையை விட்டு விட்டு ஓடிப் போனதிலிருந்து... சகலத்தையும் கூறி முடித்தான் ஸ்ரீதர்."

"மைகாட் கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாம நடந்திருக்காங்க... கேட்கவே ரொம்ப வருத்தமா இருக்கு... உங்க வேதனையை நான் கிளறி விட்டுட்டேன்னு நெனக்கிறேன். என்னை மதிச்சி... உங்க மனசை அழுத்திக்கிட்டிருந்த

விவரத்தை சொன்னீங்களே? நானும் பெரிய இக்கட்டில் மாட்டிட்டிருக்கேன் ஸ்ரீதர்..." என்று பீடிகை போட்ட வைஷ்ணவி... ரத்ன சுருக்கமாக தனது விவரங்களை அவனுக்கு தெரிவித்தாள்.

''என்னை ஹாஸ்டல்லே... நீங்களே வந்து சேர்த்து விடறீங்களா ஸ்ரீதர்?''

"ஊகூம் முடியாது. என்னால சேர்த்து விட முடியாது. உன்னையும் அங்க சேர நான் அனுமதிக்க மாட்டேன். வைஷு"

"ஏ.. என்னது" அவன் உரிமையாய் ஒருமையில் பேசியதைக் கேட்டதும் திகைத்துப் போய் ஏறிட்டாள்.

"சந்தீப்... அன்புக்கு ஏங்கித் தவிச்சுட்டிருக்கான். அவனுக்கு ஒரு நல்ல தாயா... என் அப்பாவுக்கு நல்ல மருமகளா... எனக்கு நல்ல மனைவியா இருந்து ... இந்த குடும்பத்தை நிர்வகிக்கனும் நீ"

"இல்ல.... இல்ல... நான் வந்து..." அவள் பேசி முடிப்பதற்கு முன் இடைபுகுந்தான் ஸ்ரீதர்.

கொஞ்சம் பொறு வைஷு" நான் சொல்லி முடிச்சுடறேன். நான் அன்னிக்கு செக்கை கொடுத்ததுக்கு உன் கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன். வத்சலா ஓடிப் போனதால.. இந்த காலத்து இளம் பெண்கள் பணத்தைத்தான் பிரதானமாக மதிப்பாங்கன்னு தப்பா நெனச்சுட்டிருந்தேன்.

கடவுள் உன்னை என் முன்னாடி அனுப்பி அந்தத் தவறான எண்ணத்தைப் போக்கிட்டாரு... உன்னைப் பார்த்த மாத்திரத்திலேயே... நான் என் மனசைப் பறிகொடுத்துட்டேன்.

உன் அட்ரசை கண்டுபிடிச்சு உன்னை... உன்னை நேரில் பார்த்து விஷயத்தைச் சொல்லணும்னு துடிச்சுட்டிருந்தேன். பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி... நீயே இங்க வரும்படியான சூழ்நிலை ஏற்பட்டுருச்சு

"ஐ லவ் யூ ஸோ மச் வைஷு"

பனியில் நனைந்த மலர்களைக் கூடையில் அள்ளி அப்படியே





தலையில் கொட்டியது போலிருந்தது.

"இ... இல்ல ஸ்ரீதர்..." திக்கி திக்கித் திணறினாள்.

"வைஷு" நீயும் என்னை நேசிக்கிறேன்னு... எனக்குத் தெரியும் என்ன திகைச்சுப்போய் பார்க்கிறே? நீ மயங்கி விழுந்ததும் உன் வீட்டுக்கு தகவல் சொல்றதுக்காக... உன் ஹேண்ட் பேக்கை துழாவினேன் டைரி கிடைச்சது.

அடுத்தவங்களோட அந்தரங்க சமாச்சாரத்தைப் படிக்கிறது தப்புதான் ஆனா நீ என் உயிரினும் மேலான தேவதையாச்சே? உன்னைப் பத்தித் தெரிஞ்சுக்கணும்கிற ஆர்வத்துல படிச்சேன்.

சந்தோஷத்துல திக்கு முக்காடிப் போயிட்டேன்டா. உன்னோட சுய கௌரவம் இடம் கொடுக்கலை அப்படித்தானே வைஷு"?

கிசுகிசுப்பான குரலில் பேசினாலும்... உயிரின் வேரை அசைத்துப் பார்க்கும் கம்பீரமான குரலில்... பொல பொலவென்று நொறுங்கிப் போனாள் வைஷ்ணவி.

சோக முலாம் பூசிய முகத்துடன் பரிதாபமாக அவளது விழிகளை ஊடுருவியனைக் கண்டு நெக்குருகிப் போனாள்.

"சரி... சாரி"

"அப்பாடா உள்ளே வரலாமா?... என்றபடி உள்ளே வந்தார் சிவானந்தம். ஸ்ரீதர் கல்யாணமே செய்துக்காம இப்படியே இருந்துவான்னு பயந்தேன். எங்க மனசுல பாலை வார்த்தாப்பல.. நீ வந்துட்டே சந்தோஷமா இருக்கும்மா..."

"நாளைக்கு காலையில காரை அனுப்பி உங்க பெரியம்மாவை இங்க வரவழைச்சுப் பேசிடலாம். சரியா? ஸ்ரீதர் என் மருமகளுக்கு எப்படி வேர்த்திருக்கு பாரு... மொட்டை மாடிக்கு அழைச்சுட்டுப் போ பௌர்ணமி நிலவைப் பாத்து கடலலைகள் ஆர்ப்பரிக்கிறதை அவ பார்க்கட்டும். அங்கே காத்து அள்ளிக் கிட்டு போகும்." சிரித்தார்.

சட்டென்று அவரது கால்களில் பணிந்தவளின் சிரத்தைத் தொட்டு ஆசிர்வதித்தார். ஸ்ரீதரும் நமஸ்கரித்தான்.

"அமோகமா இருங்க" இதுநாள் வரை இருந்த சோகம்

நீங்கி நிம்மதி மனதில் குடி புகுந்தது.

மொட்டை மாடி ! தூரத்தில் எங்கிருந்தோ எஃப் எம்.மிலிருந்து "நிலவு தூங்கும் நேரம்... நினைவு தூங்கிடாது..." ஜானகியின் இனிய குரல் தேனாய் கசிந்து கொண்டிருந்தது.

"வைஷ"! என் மனசே இருண்டு கிடந்துச்சு! பவுர்ணமி நிலவா நீ வந்தபிறகு தான்... என் வாழ்க்கையில வெளிச்சம் பிறந்திருக்கு... வைஷ" இன்னமும் நீ என் கிட்ட மனசு விட்டு ஒண்ணுமே சொல்லலையே?" அவளது மென்கரத்தைப் பற்றி தனது கன்னத்தில் பொருத்திக் கொண்டான் ஸ்ரீதர்.

"ஐ...ஐ லவ்.யூ ஸோ மச் ஸ்ரீதர்..." பவுர்ணமி நிலவு, கடலலைகள் சிலுசிலுக்கிற உப்புக் காத்து... இன்னிக்குத் தான் என் வாழ்நாள்லே நான் சந்தோஷமாக இருக்கேன்.

அவளது விழிகளில் ஈரம் படர்ந்தது. "இனி உன் கண்ணுல ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூட நான் பார்க்கவே கூடாது வைஷ"!" உரிமையாய் அவளை இழுத்துத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

(முற்றும்)

CPL 658383





## குறிப்புகளுக்காக...